உ

கடவுள் துணை.

காஞ்சிபுரம்

பச்சையப்பமுதலியார் சரித்திரம்.

இஃது

கோமளேசுவரன்பேட்டை,

சீனிவாசப்பிள்ளையவர்களால்

இயற்றி,

பல வித்துவான்கள் பாடிய பாக்களுடன்,

பச்சையப்பமுதலியாருடைய

தருமபரிபாலன சபையின் அக்கிராசனாதிபதி

திவான்பஹதூர்

பா. இராஜரத்தினமுதலியார், சி. ஐ. இ.,

அவர்கள் விருப்பத்தின்படி,

எட்டயபுரம் சமஸ்தான வித்வான்,

திருமயிலை - வி. சுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

[இரண்டாவது பதிப்பு.]

1911.

Copyright] விலை அணா 10. [Registered.

முகவுரை.

தர்மிஷ்டர் பச்சையப்பமுதலியாருடைய வள்ளன்மை ஹிமஸேது பர்யந்தம் ப்ரஸித்தமானது. இவர் திரட்டிவைத்த மூலதனத்தின் உதவியால், வடநாட்டில் காசித்திருப்பதியில், தருமபுரவாதீனத்து விசாரணையில் ஏழைகளுக்கு ஸதாவர்த்தி நடந்து வருகிறது. தென்னாட்டில் காஞ்சிமுதல் ராமேஸ்வரம் வரையில் முக்யமான க்ஷேத்ரங்களில் ஸதாவர்த்தி நித்தியகட்டளை தேசாந்திரி தளிகை தம்பதிபூஜை முதலிய தர்மங்கள், சென்னையிலுள்ள தர்மவிசாரணைச் சபையாருடைய ஆட்சியில் நடந்து வருகின்றன; காஞ்சீபுரத்திலும் சிதம்பரத்திலும் ஒவ்வொரு ஹைஸ்கூலும், சென்னையில் ஒரு காலேஜும் ஏற்பட்டிருக்கின்றன.

முதலியாருடைய மூலதனம் ஆதியில் சில வழக்காளிகள் கையில் சிக்குண்டு தர்மங்கள் நடவாமல் சிதைந்து வருகையில், கோமளேசுவரன்பேட்டையில் வீற்றிருந்த சீமான் ஸ்ரீநிவாஸ பிள்ளை என்பவர், சென்னைக்கு ஆட்வொகேட் ஜெனரலாக வந்த ஜார்ஜ் நார்ட்டன், ஜான்ப்ரூஸ் நார்ட்டன் என்பவர்களுடைய உதவியால் கோர்ட்டில் வ்யவஹாரம் நடத்தி, முதலியாருடைய மரணஸாஸநத்தில் கண்டிருக்கும் தர்மங்கள் ஒழுங்காக ஏற்பாடு செய்தார்கள். இங்ஙனம் செய்ததோடு, ஸ்ரீநிவாஸபிள்ளையானவர், முதலியாருடைய ஜீவசரித்திரத்தையும், பலவிடங்களில் உசாவியறிந்து, எல்லோரும் உணர்தலான எளியநடையில் இங்க்லிஷ்ரீதியாக எழுதி, முதலியாருடைய உருவப்படத்துடன் அச்சிட்டு உபகரித்தார்.

காலேஜின் ஐம்பதாவது வருஷோற்சவ காலத்தில், விசாரணைச் சபையில் ஒருவராக இருந்த திவான்பஹதூர், வெண்பாக்கம்-க்ருஷ்ணமாசாரியர் என்பவர், இந்தத் தமிழ்ச்சரித்திரத்தைத் தழுவி இங்க்லிஷில் சுருக்கமாக ஒரு வரலாறு எழுதி, ஆதியில் முதலியாருடைய வருஷோற்சவ தினங்களில் பல தமிழ்ப்புலவர்கள் முதலியாருடைய வள்ளன்மையைப் புகழ்ந்துபாடிய பாக்களையும் சேகரித்து அந்த வரலாற்றுடன் சேர்த்து அச்சிட்டு உபகரித்தார்.

தமிழிலும் இங்க்லிஷிலும் இங்ஙனம் அச்சிட்டு வழங்கிய சரித்திரத்தின் ப்ரதிகள் காணக்கிடைப்பது அருமையாதல் நோக்கி, தற்காலம் விசாரணைச் சபையில் அக்ராஸநாதிபதியான திவான்பஹதூர், பாக்கம்-ராஜரத்ந முதலியாருடைய விருப்பத்

திற் கிசைந்து, பல சிவதொண்டுகளோடு, திருமயிலை, திருவள்ளுவ நாயனாருடைய திருத்தொண்டையும் முயன்று செய்து வருபவரும், எட்டையபுரத்து ஸமஸ்தான வித்வானுமாகிய ஸ்ரீ - திருமயிலை, வி. சுந்தரமுதலியார் என்பவர், பழைய தமிழ்ச் சரித்திரத்தையும், தமிழ்ப்புலவர்களுடைய பாக்களையும் ஒருங்குசேர்த்து உள்ளபடியே இப்பொழுது அச்சிடுவாராயினர்.

இங்ஙனம் செய்ததனால், பல கனதனவான்கள் பச்சையப்பருடைய முன்மாதிரியை அநுஸரித்துத் தாங்களும் தற்காலத்திற்கேற்றவிதமாகப் பொதுநன்மைகளும் வித்யாதானமும் செய்வதற்கும், பச்சையப்பருடைய வித்யாதானம் இப்பொழுதும் இனிமேலும் திருப்திகரமாக நடப்பதற்கு அவருடைய மூலதனம் போதாமையால், தங்களால் இயன்ற அளவு மூலதனத்தை முதலியாருடைய மூலதனத்தோடு சேர்த்து அந்த வித்யாதானம் செவ்வையாய் நடந்தேறும்படி செய்வதற்கும், இது ஒரு தூண்டுகோலாக விளங்கும் என்பது நிச்சயம்.

தம்மளவிலே பொருள் முட்டுடையவராயினும் நண்பரானவர்களை ஒவ்வொரு தர்மகைங்கர்யத்தில் தூண்டியிருப்பதே மேற்கோளாக உள்ள சுந்தரமுதலியார் இங்ஙனம் செய்யாமற்செய்த உதவிக்குப் பச்சையப்பருடைய பிள்ளைகளாகிய எல்லோரும் நன்றி பாராட்டுவோமாக.

பச்சையப்பருடைய பல்லாயிரம் பிள்ளைகளில்

ஒருவனான

தி. செல்வக்கேசவராயன், M. A.

பச்சையப்பர் காலேஜ்.

உ

கடவுள் துணை.

பாயிரம்.

காஞ்சீபுரம் - பச்சையப்ப முதலியாரென்னும் புண்ணியவானுடைய தருமம் நடந்துவருங் கிரமத்தை அவருடைய தருமசபையார் அவர்பெயரால் - சென்னபட்டணத்தி லுன்னதமாகக் கட்டியிருக்கும் பெரியமாளிகையில் வருஷந்தோறும் யாவருங் கேட்டு மகிழும் வண்ணம் விளக்கஞ்செய்து முதலியார் ஆஸ்தியின் வருமானத்தில் சிலபொருள் வித்தியாவிஷயத்துக் குபயோகமாகச் செலவுசெய்து அவருடைய சரமதசைத்திதியைக் கொண்டாடும் மகோச்சவதினத்தில் அவ்விடத்தில் வந்திருந்த அனேக யூரோப்பு கண்டத்தார்களும், இந்து தேசத்தார்களும், இப்படிப்பட்ட தருமசிந்தையுள்ள - பச்சையப்ப முதலியார் பேர்தவிர அவர் சரித்திரம் இப்போதே விவரமாகத் தெரியாமலிருக்குமானால் இனி யிதுவுந் தெரியாமற் போகுமேயென்று பேசிக்கொண்டதை-ருத்ரோத்காரி(வரு) தைமீ ௧௦௨ பிறந்து யௌவன தசையை அடைந்தது முதல் தம்முடைய தகப்பனார்-கோ-முனியப்பிள்ளையவர்கள் வைத்த ஆஸ்தியினால் வரும் ஊதியத்தையுந் தமக்காக வைத்த ஆஸ்தியையுந் தமதுமுயற்சியால் சம்பாதிக்கப்பட்ட திரவியங்களையுந் தருமவிஷயத்திலேயே செலவுசெய்து இம்மைப் பயனாகிய புகழையும், மறுமைப் பயனுக்கேதுவாகிய அறத்தையுமே தேடிக்கொண்டு வந்ததுமல்லாமல்-பச்சையப்ப முதலியாருடைய தரும விசாரணைச் சபையிலே தலைவராயிருந்து அந்தத் தரும பரிபாலனத்திலும், வித்தியாபி விர்த்தியிலுமே தம்முடைய கால முழுமையுங் கழித்துக்கொண்டு வந்தவராகிய கோமளேசுவரபுரம்-சீநிவாசப்பிள்ளையவர்கள் கேள்விப்பட்டுக்கொண்டிருந்தபடி முதலியார் சரித்திரத்தை யெழுதவேண்டுமென்று விரும்பித் தமது சக்திக்கு அனுகுண்யமான வரையில் அனேகர் மூலமாக விசாரித்தவைகளையுந் தாம் அறிந்தவைகளையும் உதவியாகக்கொண்டு முதலியாருடைய பிறப்பையும், பாலியதசை விர்த்தாந்தத்தையுந் ததனந்தர யௌவன பிராப்தவிவகார பிரவர்த்தகத்தையுந், தக்ஷிண ராச்சியத்தில் அரசநீதி துணைக்காரணமாகச் சம்பாதித்த பொருட் பெருக்கத்தையும், அவர் செய்துவந்த தான தருமங்களையும், அவருக்குப் பின்பு இருந்த அவர் ஆஸ்தியின் தொகையையும், அவர் குடும்பஸ்தர்களுக்குள் உண்டான வழக்குகளையும், அவராலே குறிக்கப்பட்ட தருமங்கள் சிலதினம் வரையில் நடவாமல் நின்றிருந்ததற்குக் காரணத்தையும் பின்பு அந்த மகாபுரு

ஷன் செய்ய நினைத்திருந்தபடி அரி அராதி தருமத்தோடு நடந்து வருகிற வித்தியாபிவிர்த்தியையும், அவருடைய புகழ்ப்படத் தக்க தரும சிந்தையையும், இந்தத் தருமங்களுக்கு அவரால் சேறிக்கப்பட்ட மூலதனம் இவ்வகையாய் இவ்விடத்திலிருக்கின்ற தென்பதையும் தம்மால் கூடியமட்டில் விரிவாக எழுதினார்.

இந்தத்தேசத்தில் இவ்வாறு சரித்திரங்கள் எழுதுகிற வழக்கம் இல்லாமையால் அதற்குத்தகுந்த கருவிகளை அப்போது அப்போது சித்தஞ்செய்து வைக்கிறதுமில்லை. அதற்கு உதவியாகத் தக்க கடிதங்கள் யாரிடத்திலாவ திருந்தாலும் அவர்கள் அவைகளை அயலார் பார்க்க வொப்புகிறதுமில்லை. அவர்கள் அப்படிச் செய்வதற்குக் காரணங்களை விரிப்பதினால் பிரயோசனமில்லை. நற்காரியங்களுக்கே உபயோகியாயிருக்க வேண்டுமென்கிற ஆசக்தியையுடையவராயும், இந்தச் சரித்திரத்தில் கண்டிருக்கும்-போனி நாராயணப்பிள்ளையினுடைய பௌத்திரராகிய - அண்ணாசாமிப் பிள்ளையின் குமாரத்தியை விவாகஞ்செய்துகொண்டு அவருடைய சந்ததிபோலவே சகல சுதந்தரங்களுக்கும் உரியவராயுமிருக்கின்ற தோட்டக்காடு-வேங்கட நாராயணப்பிள்ளை யென்னுங் கனவான்-பச்சையப்ப முதலியாருக்கும், அவர் பத்தினிகளுக்கும், நாராயணப்பிள்ளைக்கும், இவர் சந்ததியாருக்கும், அந்தந்தக் காலங்களில் நடந்த சங்கதிகளைக்குறித்த சில கடிதங்களைக் காட்டத்துணிவுகொண்டார்-அது இந்தச் சரித்திரத்தை யெழுத மிகுந்த சகாயமாயிற்று.

கோ - சீநிவாசப் பிள்ளையவர்கள் இச்சரித்திரத்தை மிகுந்த பிரயாசம் எடுத்துக்கொண்டு எழுதினார். - இதை அவர் அச்சிற் பதிப்பித்துப் பிரசித்தப் படுத்துகிறதற்கு முன்னமே-பரிதாபி௵ பங்குனி௴ ௧௫௳க்குச் சரியான 1853௵ மார்ச்சி௴ 27௳ பரமபதமடைந்தார்.

இச்சரித்திரத்தை முழுமையும் பார்வையிட்டு முடித்து அச்சிற் பதிப்பிக்கும்படி இப்போதிருக்கிற தரும சபையார் (பு. சுப்பராயலு நாயக்கர், தி. வீராசாமிப் பிள்ளை, கு. பார்த்தசாரதி நாயக்கர், ஸ்ரீ. கு. சீநிவாசய்யர், பு. வீரப்பெருமாள் பிள்ளை, சி. ரங்கநாத சாஸ்திரியார், கு. புருஷோத்தம முதலியார், கொ. வெ. கன்னய செட்டியார்.) இச்சபையிலொருவராகிய இராயப்பேட்டையிலிருக்கும் - திருவல்லிக்கேணி - வீராசாமிப்பிள்ளையைக் கேட்டுக்கொண்டபடியால், இவர், முன்னம் பிள்ளையவர்கள் எழுதும்போது உதவியாயிருந்த-பச்சையப்ப முதலியார் கல்விச்சாலையில் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய மஹாவித்வான், காஞ்சீபுரம் சபாபதி முதலியார் உதவியைக்கொண்டு முழுமையும் பார்வையிட்டு அச்சிற் பதிப்பித்தனர்.

உ

கடவுள் துணை.

காஞ்சீபுரம்

பச்சையப்பமுதலியார்

சரித்திரம்.

சீர் பெருகுந் தொண்டை நாட்டிலுள்ள சென்னபட்டணமென்னும் மதராசுக்கு வடமேற்கே நாலுகாதவழித் தூரத்திலிருக்கும் பெரியபாளையத்தில் இங்கிலீஷ் 1754௵ காஞ்சீபுரம் பச்சையப்ப முதலியாருடைய சனனம்.

மதராசு யூநிவர்சிட்டித் தெலுங்கு பெரிய உபாத்தியாயர் சின்னைய சூரி யென்பவருடைய தகப்பனூர் பட்டணத்துக்கு மேற்கே 25 மைல் தூரமுள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸ்தலமென்னும் ஸ்ரீ பெரும்பூதூரிலிருக்கிற—இப்போது நூறுவயதுள்ள—பரவஸ்து திருவேங்கடஜீயர் தஞ்சாவூரில் பச்சையப்ப முதலியா ரிருக்கும் போது அவருடன் கலந்து பழகினவ ராகையால், இவர் முதலியாருடைய * வடிவம், வயசு, குணம், கல்வி, ஒழுக்கம், சௌரியம், உத்தியோகம், ஐசுவரியம், ஈகை, தர்மம், தானம், தயாளம், பரோபகார முதலியவைகளைத் தமக்குத் தெரிவிக்கும்படி கிடைத்த எதிர் பாராத பேருதவியானது, புண்ணியவானாகிய முதலியார் சரித்திரத்தைத் தாம் விசேஷமாக அறிந்துகொண்டு உலகத்தில் விளங்கும்படி யெழுதக் கடவுள கிருபை செய்தாரென்று இந்தச் சரித்திர மெழுதுபவர் அத்தியந்த சந்தோஷத்தையடைய அனுகூலமாயிற்று.

பச்சையப்ப முதலியாருடைய தகப்பனூர்பேர் விசுவநாத முதலியார். தாயார் பூச்சியம்மாள். சாதியில் அகமுடைய வேளாளர்.

---

* வடிவமானது உயர்வு, ஆசானுபாகு, விசால நேத்திர வக்ஷஸ்தலங்கள், சிவந்தவர்ணம், கச்சட்டை மத்தியில் நாலுவிரற்கடைச் சதுரமுள்ள மகாயோக லக்ஷணயாகிய மச்சம் என்னும் இவைகளையுள்ளது. முதலியாருடைய வடிவத்தை யறியும்படி, படங் கிடைத்த விந்தைபோல, இறந்து 60 ௵ ஆகியும் இவருடைய குணங்களையும், நடவடிக்கைகளையும் இப்போது யாவரும் அறியும்படி கடவுள் அனுக்கிரகஞ் செய்ததற்கு இவர் என்ன தவஞ் செய்தாரோ யாரறிய வல்லர்.

இவர்கள் பெரியபாளையத்துக்குத் தென்மேற்கே நாலுகாதவழி தூரமுள்ள காஞ்சிபுர மென்னும் ஸ்தலத்தில் வசித்துக்கொண் டிருந்தவர்கள். பச்சையப்ப முதலியார் கர்ப்பத்தி லிருக்கும் போதே பிதா இறந்துபோனார். பின்பு புருஷதிக்கில்லாத கர்ப்ப ஸ்திரீயாகிய இவர் தாயார், தன் குமாரத்திகள் சுப்பம்மாள் அச் சம்மாள் என்பவர்களை அழைத்துக்கொண்டு பெரியபாளையம் போய்ச்சேர்ந்து, அவ்விடத்தில்,ஆற்காட்டுச் சுபேதாருடைய காரி யஸ்தராய் அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்த ரெட்டி ராய ரென் னும் ஒரு மாத்துவர் தங்கள் குடும்பத்தாருக்கு விகித ராகை யால், அவராதரவி லிருந்தனர். பச்சையப்ப முதலியார் தமக்கு ஐந் தாம் வயதில் தெலுங்குபாஷை படித்துக்கொண் டிருக்கும்போது ரெட்டி ராய ரிறந்துபோனதினால், தன் சொற்பஆஸ்தியை விர்த்தி பண்ணவும், ஆதரிக்கவும், அவ்விடத்தில் வேறொருவரு மில்லாமல் பூச்சியம்மாள் மனம் வருந்தினர். அதைநோக்கி அந்த வூரிலிருந்த ராமுரெட்டி பாரியை வெங்கட்டம்மாள் முதலிய சிலபேர் இராஜ தானியாகிய பட்டணத்துக்குப் போனால் க்ஷேமமுண்டென்று சொல்லிச் சகாயங்களுஞ் செய்தனர். தன் குமாரன் பச்சையப்ப முதலியாரையும், யௌவன திசையுள்ள இரண்டு குமாரத்திகளை யும் அழைத்துக்கொண்டு பட்டணத்துக்குவந்து, போர் சென் ஜார்ஜ் என்னுங் கோட்டையின் வடமேற்கு வெளியைச்சேர்ந்த ஒற்றை வாடையில் சாமிமேஸ்திரி தெருவாகிய சிறிய சந்தின் வடபுற மேலண்டைக் கோடியிலுள்ள ஒரு வீட்டிற் குடியிருந்துகொண்டு, தன் ஆஸ்தியை விர்த்திபண்ணி ஆதரிக்கத் தகுந்த நம்பிக்கையும் யோக்கியதையு முள்ளவர்கள் யாரென்று பூச்சியம்மாள் விசாரி க்கு மளவில், இவர்கள் வீட்டுக்குச் சமீபத்தில் குடியிருந்த ஒரு வன், தன் எசமானராகிய போனி நாராயணபிள்ளை யென்னும் பெரியமனிதர் இந்தஅம்மாள் கோரிக்கைக் கனுகூலமானவரென்று தெரிவித்தான்.

நெய்தவாயல் நாராயணபிள்ளை யவர்கள் யாதவகுலத்திற் பிறந்து இந்தத் தேசத்தில் வியாபாரியா யிருந்த யூரோப் தேசத் தராகிய மேஸ்தர் போனி யென்பவருக்கும், பின்பு அவர் பாரி யைக்கும், வர்த்தக விஷயத்தில் துபாசித்தனஞ் செய்துகொண் டிருந்ததினால் போனி நாராயணபிள்ளை யென்னும் பேர் பெற்றார். இங்கிலீஷ் துரைத்தனத்தாருக்கு விகிதர். அக்காலத்துக்குத் தகு தியான பெரிய உத்தியோகங்களை இந்தத் தேசத்தாருக்குச் சிபா ரிசு மூலமாக நேரிடச்செய்த பரோபகார பிரபலர். இந்தப் பட் டணத்தை யடுத்த செங்கற்பட்டு ஜில்லாவில் நெதவாய லென் னுங் கிராமத்தைச் சுரோத்திரியமாக நபாப் நாளையில் சம்பாதித்து அது அவ்விடத்துத் தர்மச் சத்திரத்துக் கெப்போதும் உபயோக மாகும்படி செய்த புண்ணியவான். ஆகையால், இவரைப் பூச்சி

யம்மாள் கண்டு தன் கோரிக்கைகளைத் தெரிவிக்க, இவரும் அதற்கு விசுவாசத்துடன் சம்மதித்து, உடன்பிறந்தாளென்னு முறைமைகொண்டு இவளுடைய பொருளை விர்த்தியாக்கிப் பச்சையப்ப முதலியாருக்கு வித்தியாப்பியாசமுஞ் செய்வித்தார்.

பச்சையப்ப முதலியாருடைய பெரிய தமக்கை சுப்பம்மாள் புங்கத்தூர்த் தெய்வநாயக முதலியாரை விவாகஞ் செய்துகொண்டு அய்யாளம்மா ளென்னுங் குமாரத்தியைப் பெற்றுச் சில சொத்துக்களோடு தாயார்வீடு வந்து சேர்ந்தாள். அச்சம்மாள் கூடலூர்த் தெய்வநாயக முதலியாரை விவாகம் பண்ணிக்கொண்டு முத்தையா முதலியென்னும் ஒரு குமாரனைப் பெற்றிருந்து இறந்தாள்.

பச்சையப்ப முதலியார் நாராயணபிள்ளை முயற்சியினால் வாலிப திசையிலேயே உத்தியோகஞ் செய்யப் பிரவேசித்து, தேசாந்தர வஸ்துக்களை வாங்கிச் சில்லறைக்கு விற்கும் பீங்கான் கடையிற் சரக்குவாங்கவரும் யூரோப்தேசத்தவர்களுக்குங் கடைக்காரர்களுக்குந் தரகரித்தனஞ் செய்து, சம்பாதிக்கும் பொருளில் தம்முடைய தகுதிக்கதிகமாகத் * தர்ம தானங்கள் செய்தது போக மற்றதைத் தாயாரிடத்திற் கொடுத்துக் கொண்டிருந்தார். இப்படி யிருக்கும்போது முதலியார், தம்முடைய புத்தியின் கூர்மை சாக்கிரதை தைரியம் இவைகளை யறிந்த வடக்கேபோகும் இங்கிலீஷ் தண்டைச் சேர்ந்த ஒரு மிலிட்டரி துரையிடத்தில் சொற்ப உத்தியோகத்தைச் சம்பாதித்துக் கொண்டு, தம்முரியவர்களுக்குத் தெரியாமல் பட்டணத்துக்குக் காதவழி தூரத்தில் தண்டிறங்கியிருந்த பாலவாயற் சத்திரத்தண்டை போய்ச் சேர்ந்தனர். அவர் தாய் தமக்கைமாரும் நாராயணபிள்ளையவர்களும் இதை அறிந்தபொழுது அவர் இப்படிப் போவதை எவ்வளவும் ஒப்பவில்லை. ஆகையால், பிள்ளை யவர்களேபோய் அந்தத் தண்டின் தளபதி யனுகூலத்தினால் அவரைத் திருப்பிக்கொண்டு வந்தனர். பின் தெற்குச் சீமைக்கு அதிகாரியாய்ப்போன நிக்கிலீசு துரையுடன் முதலியார் துபாசியாய்ப் போய்க் கொஞ்சந் தனஞ் சம்பாதித்துக்கொண்டு பட்டணத்துக்கு வந்து, பிதாவினிடத்தில் புத்திரனுக்குண்டாயிருக்கும்பக்தியோடு அதனைப்பிள்ளையவர்களிடத்திற் கொடுத்தனர். தம்முடைய தமக்கை குமாரத்தி அய்யாளம்மாளை விவாகஞ் செய்துகொண்டனர். காஞ்சீபுரத்தில் ஏகாம்பரேசுவரர் கோவிலில் சிவகாமியம்மை ஸ்ரீபலி நாயக ரென்னும் இரண்டு விக்

* தர்மசிந்தை சிறுவயதிலேயே இந்த மகா புருஷனுக்குண்டாயிருந்ததற்குத் திருஷ்டாந்தமாக இறந்த பின்னும் எதிர்பாராத பெரும் புகழை யடைகின்றார்.

கிரகங்கள் வார்ப்பித்து, 1774ஞ மார்ச்சுமீ 27உ கும்பாபி ஷேகமுஞ் செய்வித்து, அன்றையதினமே அவ்விடத்தில் பங் குனியுத்திர கலியாண மண்டபத்துக்குங் கடைகால் முகூர்த்தங் கொண்டு அந்தத் திருப்பணியைப் பின்பு நிறைவேற்றினார்.

சென்னபட்டணத்தில் சேனைகளை வைத்துக்கொண்டு ஆற் காட்டு நபாபுடன் சேர்ந்திருக்குங் கும்பினியார் என்னும் இங் கிலீஷ் துரைத்தனத்தார், ஐதர், பிரஞ்சுதேசத்தார், நிஜாம் இந்த நான்கு துரைத்தனத்தாருந் தனித்தனியே ஒருவரொருகாலத் திலும், மற்றொருவ ரொருகாலத்திலும் தெற்கே மலையாளவரை யில் இருக்கும் இராஜாக்கள், பாளையப்பட்டார் என்னும் இவர்க ளுடன் யுத்தஞ்செய்து இவர்களைத் தங்களுக்குக் கீழ்ப்பணியும்படி பண்ணுகிறதும், அது மாறத்தக்கதாக மேற்கண்ட நால்வர்களில் ஒருவர் அவர்களைத் தங்களுக்கு உள்ளாக்கிக்கொள்ளுகிறதும், அந் தப் பாளையப்பட்டார் இவர்களிலொருவர் சகாயத்தினால் அது மாறுபடும்படி செய்து கொள்ளுகிறதுமாகிய இவ்வித யுத்தங்க ளால் நிலைதப்பி அலையுங்காலத்தில், இங்கிலீஷ் துரைத்தனத் தாரும் நபாப் அவர்களுஞ் சேர்ந்து ஒரேவிதமாயும், தனித்து வெவ்வேறாயும், அவர்களுடன் உத்தரப் பிரதி உத்தரங்களும் ராய பாரங்களும் நடத்தும் இந்த ராஜகாரியங்களில் சம்பந்தப்பட்ட கும்பினியாருடைய சிவில் மிலிட்டரிமுதலிய உத்தியோகஸ்தர்கள் சம்பாத்தியம் இவ்வளவவ்வள வென்றும், இதன் கிரமம் இப் படி அப்படியென்று மறியக்கூடாமையா யிருக்குமானால், இவர் களுக்கு எவ்வித லாபகாரியங்களிலும் முக்கிய உதவியாயிருக்கிற இந்தத் தேசத்தவர்களான * பெரிய துபாசிகளின் சம்பாத்தியத் தைச் சொல்லவேண்டுமா?

முதலியார் இப்படிக்கொத்த துபாசித் தனத்தி லிருக்கும் போது தர்மராய முதலியாரையும் புங்கத்தூர்ச் செங்கல்வராய முதலியாரையுஞ் சேர்த்துக்கொண்டு கும்பினியாருடைய ஜாகீரா கிய செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த பூந்தமல்லி, திருப்பாசூர் முதலிய பர்காணுக்களில் சர்க்கார்மேல்வார நெல் முதலானவை

* இவர்களில் சிலர் இங்கிலீஷ் மிதமாக எழுதத்தக்கவர்களும், சிலர் அவ்வளவு மில்லாமல் கொஞ்சங் கொஞ்சம் பேசத்தக்கவர்களுமா யிருந்தாலும், யாவரும் முதலியார் படத்திற் காணும் அலங்கார மாதிரி யாகப் பச்சைக்கல்முருகு, பெரியகடுக்கன், தோடா, ரத்தினமாலை, மோதி ரம் இவை முதலிய ஆபரணங்க ளணிந்து நெடு அங்கியின்மேல் சரிகை நடுக்கட்டுக் கட்டிக் கையில் கைப்புருமால் பிடித்துச் சால்வை போர்த் துக்கொண்டு பல்லக்கு காடி முதலிய வாகனங்களேறிச் சஞ்சரித்தவர் கள்.

களை ரொக்கக் * குத்தகை யெடுத்து 1776௵த்துக்கு முன்னும் பின்னுமாக நடத்தி விசேஷ லாபத்தை யடைந்தார்.

நபாப் வாலாஜாவவர்கள் தஞ்சாவூர்ச் சீமையைத் தம்முடையதாக்கிக் கொள்ளவேண்டுமென்றும், இங்கிலீஷ் துரைத்தனத்தார் அது கூடாதென்றுஞ் சொல்லிக்கொண்டிருக்கையில், இவ்விடத்துப் பிரஸிடெண்டு லார்ட்டு மக்கார்டினி யவர்களுடைய அனுமதியில்லாமலே சிவில் உத்தியோகஸ்தராகிய ஜோஸப் சலவன் துரையவர்களைத் தம்முடைய காரியஸ்தராகப் பங்காளத்துக் கவரன்மெண்டாரிடத்தில் ராயபாரம் நடத்தும்படி திவானுடன் கூட்டி 1781௵ மார்ச்சுமாசத்தில் நபாப் அனுப்பினார். அந்தத் துரை போய்க் கவர்னர் ஜெனரலைக் கண்டு, கர்நாடகதேசத்துக்கு நபாபே யதிபதியாகவும், இவருடைய ராசகாரியத்தில் கும்பினியார் பிரவேசியாம லிருக்கவும், பத்துப் பட்டாளங்களின் செலவு தவிர மற்றொன்றுங் கேட்கிற தில்லையென் றொப்புக்கொண்டு அவைகளை இவர் சேவகத்தில் வைக்கவும், இவருக்குப்பின் மூத்த குமாரருக் கில்லாமல் இளைய குமாரருக்குப் பட்ட முண்டாக்கவும், ஐதரைச் செயித்தபோது அவருடைய ராச்சியத்தி லொரு தேசத்தை நபாப் ராச்சியத்துடன் சேர்க்கவும், இங்கிலீஷ் துரைத்தனத்தாருக்கு இவர் கொடுக்கவேண்டிய கடன்களை மீயார்சல் செய்வதற்குக் கும்பினியார் சகாயம் பண்ணவும் ராயபாரம் நடத்தியதில், பங்காளத்துக் கவர்ன்மெண்டார் தஞ்சாவூர்ச் சீமையை நபாபுக்குக் கொடுக்கத் தங்களுக்கதிகாரமில்லை யென்று சொல்லி, இவர் கடன்காரர்களில் சிலருக்கு முக்கால் பங்கும் மற்றவர்களுக்கு முழுவதுங் கொடுக்கப் பத்திரங்கள் கொடுத்து அதை யிவர் தேசத்து வருமானத்தில் தீர்க்கும்படி யேற்றுக்கொண்டு, மற்றவைகளை யெல்லாம் சலவன் துரை கேட்டுக்கொண்டபடியே செய்து, ஐதர் முதலானவர்களுடைய யுத்தங்கள் முடிகிறவரையில் நபாபவர்கள் போஷணைக்கு வேண்டியதுதவிர மற்ற இவர் தேசவருமான முழுமையுந் தங்களுக்கே கொடுத்துவரவேண்டுமென்று தீர்மானித்து இவர் ஆஸ்தானத்தில் தங்கள் காரியஸ்தராயிருக்கும்படி இந்த ஸலவன் துரையையே நியமித் தனுப்பினார்கள். இவர் சென்னபட்டணத்துப் பிரஸிடெண்டவர்களுடைய அனுமதியின்றித் தாம் மேற்போட்டுக்கொண்டு போனதற்குக் குறைவு படாமல் பின்னும் மேன்மைபட்டோமென்கிற சந்தோஷத்தோடு வந்து,நபாப் வாலாஜா வவர்க ளாஸ்தானத்திற் பிரவே

* இது கும்பினிச் சர்க்காருக்கும், நவாப் இலாகா மனுஷர்களுக்கும், மத்தியில் நாலுவிதமான நஜர் இனும் மாசாந்தரச்சம்பளம், ஒருவனுக்குப் பணங் கொடுக்கும்படி சாட்டுதல் இவைகளு மல்லாமல் கடன் பத்திரங்களுக்கு வட்டி கொடுத்தலு மாகிய இவ்வித நடவடிக்கைகளையுள்ளது.

சித்திருந்தார். பங்காள கவரன்மெண்டாரால் நபாபவர்க ளேற்படுத்திக்கொண்ட காரியங்களிற் சில தகுதியல்லவென்று நடத்தாமல் சென்னபட்டணத்துப் பிரஸிடெண்டவர்க ளட்டி செய்ததால், அது நீங்கும்படி இவர் முன்னிலையில் நபாப் அவர்கள் முயற்சி பண்ணினார். இப்படிக்கொத்த பிரபல ராஜதந்திர யோகதிசையிலிருக்கின்ற ஸலவன் துரையவர்களுக்குப் பெரிய துபாசியாயிருக்கும் பாக்கியத்தையுடைய முதலியாரவர்கள் அதிருஷ்டத்தை யெவ்வளவென்று சொல்லலாம்!

மனதுக் கேற்றபடி யெல்லாம் நடத்துந் துரைத்தனமானது மாறி அடியோடே போகாமலும், எல்லாரும் பேதமின்றிச் சமானமாகிய சுதந்திர முள்ளவர்களாயிருக்கத் தக்கதாகக் குடிகளின் சம்மதியுட னேற்பட்டிருக்கும் ஓர் கிரமத்தை யனுசரித்து நடக்கும் இங்கிலீஷ் துரைத்தன முண்டாகிப் பூர்த்தியா யூன்றாமலு மிருந்தகாலத்தில், திருச்சினாப்பள்ளிச் சீமைக்கு ஏட்டு சிவில் உத்தியோகஸ்தராய் ஸலவன்துரையவர்கள் போனபோது முதலியார் கூடப்போய் அவருடைய காரியங்களை நடத்திவைத்தனர். 1783ல் இங்கிலீஷ் தண்டு கோயம்புத்தூர் ராச்சியத்தைப் பிடித்து டீப்புவினுடைய தேசத்தில் பிரவேசிக்க வுபாயங்களையும், அதற்கனுகூலமான கிரமங்களையும், ஸலவன் துரையவர்க ளேற்படுத்தித் தண்டின் தளபதி முதலியவர்களுக்குத் தெரிவிக்க, அவர்கள் மெச்சி அதின் பிரயோசனத்தையு மடைந்து சந்தோஷித்தார்கள். மைசூர் ராசாவை அடியோடே அடக்கி டீப்பு பிரபலித் திருக்கிறானென்கிற துக்கம் ராசாவுக்கும் ஜனங்களுக்கு முண்டாகும்படி தூதுகளை விடுவதில் ஸலவன் துரை சம்பந்தப் பட்டிருந்தாராயினும், தெற்கு ராச்சியத்திலிருந்த கும்பினியாருடைய ராணுவத்திற்குச் சேனாதிபதியாகிய கர்னல் புல்டன் துரை தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, திருநெல்வேலி என்னு மிந்த விடங்களிலிருக்கிற சேனைகளைச்சேர்த்துத் தண்டு விஸ்தாரமாகும்படி செய்ய நினைத்த காலத்தில், ஸலவன் துரையவர்கள் சிரத்தையோடு ஜாக்கிரதையாக வேண்டிய சாமக்கிரிகைகளைச் சேகரித்துக் கொடுத்ததுமன்றிச் சேனாதிபதியிடத்து அவ்விடத்து ஜனங்கள் அன்புகூர்ந்து விசுவசித்து நடக்கும்படி செய்ய எத்தனித்த போதும் முதலியார் முக்கியராய் முன்னின்று இந்தக் காரியங்களெல்லாங் கைகூடி வரத்தக்க முயற்சி பண்ணித் துரையவர்கள் புகழடையச் செய்தார்.

கூடியவரையில் தங்களதிகாரங்களைக் குரூரத்துடன் செலுத்திக்கொண்டிருந்த சமஸ்தானிகருக்கும் பாளையப்பட்டாருக்கும் முதலியார் ஹிதராய் அவர்கள் காரியங்களை நாள்தோறும் அனுகூலப்படுத்தி அவர்களுக்கு வேண்டிய பரபத்தியங்களைத்

தமது பேராலும் போனி நாராயணபிள்ளையவர்கள் பேராலுங்
கொடுத்துக்கொண்டிருந்ததினாலும், தஞ்சாவூர் ராஜா கும்பினியாரு
க்கு வருஷவாரியிற் செலுத்தவேண்டிய பொருளை ஒரேவிதமாயில்
லாமல் அத்தேசத்து நாணயங்களாகவும், பூவராகன்களாகவும்,
உண்டிகளாகவும் மாறிமாறிக் கொடுக்க நேரிடுவதால் முதலியார்
தென்தேசத்து நானாவித நாணயங்களை வட்டந்தள்ளி வாங்கிக்
கொண்டு பூவராகன்களும், பட்டணத்துக்கு உண்டிகளுங் கொடுப்
பதினாலும் நூற்றுக்குப் பத்து இருபது வீழுக்காடு மிகுந்த லாபங்
கிடைத்துக்கொண்டிருந்ததில் சம்பாதித்த பொன்பண முதலிய
நானாவித நாணயங்களான அபார தனத்தைக் கொல்லர்கள் பேரி
லும் உண்டிகளாகத் தபாலிலும் நாராயணபிள்ளையவர்களிடத்துக்
கனுப்புவதுடன் பெரிய மொத்தங்களுக்கு உண்டிகளு மெழுதிக்
கொண்டு கீர்த்தியுடன் தஞ்சாவூரில் தம்முடைய பெரிய மெத்தை
வீட்டில் வாசமாயிருந்தார். இங்கிலீஷ் பாஷையிலெழுதிய உண்டி
முதலாகிய கடிதங்களிலும் தமிழ்க் கையெழுத்தே யிருப்பத
னாலும் இதர முகாந்தரங்களினாலும், இங்கிலீஷ் பேசுவதே யில்லா
மல் எழுதவும் படிக்கவும் முதலியாருக்கு நன்றாகத் தெரியாதெ
ன்று நினைக்க இடமுண்டு. வஞ்சனை, சூது, அயலார் செல்வத்திற்
பொறாமை, பிறர்சொத்தி லிச்சை, ஒருவருக்குச் செய்யுங் கெடுதி,
முன்னே யிதமாகப் பேசிப் பின்னே தூஷித்தல், பாரபக்ஷ முத
லான தகாத குணங்களொன்று மில்லாமல் காரிய சாதகமாகும்
பொருட்டுக் கோபத்தைக் காட்டுவதும், ஏதாவது சொல்லிக்
கொள்ளவேண்டுமென்று ஏழைகளாயிருப்பவர்கள் வந்தால் அவர்
களுடனும் மரியாதையாகப் பேசித் தம்மா லாகவேண்டிய காரி
யம் நியாயமானதா யிருக்குமாகில் அனுகூலமாகும்படி செய்வ
தும், இயலாத பக்ஷத்திலும் அவர்கள் இவருடைய மரியாதை
வார்த்தைக்கே சந்தோஷப்பட்டுக்கொண்டு போகும்படி வசனிப்
பதும், விரோதஞ் செய்தவனும் வெட்கும்படி நன்மை செய்வது
மான உத்தமகுணங்களை யுடையவராய்ச் சாஸ்திர சம்பிரதாயங்
களை விசாரிக்கிறதும், கவிதாப்பிரசங்கங் கேட்பதும், * சங்கீதத்தி
னருமை யறிவதுமன்றி, லௌகிக காரிய மெவ்வகைப்பட்டதாக
நேரிட்டாலும் நித்தியகர்மானுஷ்டானங்களில் தவறுமலு மிருந்
தார். அப்படி யிருக்கையில், பிரதம பாரியைக்குச் சந்ததி யில்லா
மையால் சந்ததி விருத்திக்காக இரண்டாவது விவாகம் பண்ணிக்
கொள்ளலாமென்கிற தர்மசாஸ்திர வசனத்தை யனுசரித்துச்
சோழதேசத்தைச் சேர்ந்த வேதாரணிய மென்னும் ஸ்தலத்தி
லிருக்கும் ஒரு சோழிய வேளாளனுடைய குமாரத்தியாகிய பழ

---

* சங்கீதம் விருத்தியான தஞ்சாவூர்ச் சீமையில் பிரபுக்களுக்கும் பாடு
கிறதன்மை யுண்டாயிருப்பதுபோல் அவ்விடத்துக்குப் போனபின் முதலி
யாருக்கும் உண்டாயிருந்தது.

ளரியாயியம்மாளை விவாகஞ் செய்துகொண்டார். சமானயோக்கியதையுள்ள சக்களத்திகள் விவாகமான சிலநாள் வரையில் ஒற்றுமையாயிருந்து பின்பு படும்பாட்டை யெல்லாரு மறிவார்களே. அப்படியிருக்க, ஒருத்தி தனத்திலும், மற்றொருத்தி குலத்திலு முயர்வென்றால் இவர்கள் படும்பாட்டைச் சொல்லவேண்டுமா?

இரண்டு ஸ்திரீகளுடன் வாழ்கின்ற புருஷர் மனதுக்கு ஆற்றாமையா யிருக்குமென்று அதன் கெடுதியை விரிவாகச்சொல்லப் பயந்தால், அறியாமல் மிஞ்சிபகப்பட்டுக்கொண்டவர்கள் படுஞ் சங்கடம் இனி யுலகத்தில் வருஞ் சிறுவர்களுக்கு நேரிட வொட்டாமல் தடுப்பதற் கில்லை. ஆகையால், துணிவுகொண்டு வெளியிடலாயிற்று. ஸ்திரீக்குப் புருஷனைப் பார்க்கிலுங் காமம் எட்டுப்பங் கதிகமென் றிருக்க, நாற்பது வயதுக்குட்பட்டுக் கலவியி லிச்சையுள்ள * பாரியைக்கு மேல் மற்றொருத்தி யுண்டானால் அவள் கதியென்ன? இதுவேயன்றிச் சிலர் பரஸ்திரீகளுடைய சேர்க்கையுமுள்ளவர்களா யிருக்கிறார்கள். இதர தேசத்தார்கள் பரஸ்திரீகளுடன் கூடுந் துன்மார்க்கர்களைத் தூஷித்துத் தங்கள் கூட்டத்துக்குத் தகாதவர்களென்று நீக்கிவிடுவதை யறிந்தும், இந்தத் தேசத்துப் புத்திமான்கள் அப்படிக்கொத்த துன்மார்க்கர்களுடன் சிநேகிக்கிறார்கள். ஒரு ஊரில் குற்றஞ்செய்பவர்களே விஸ்தாரமானால் அது குற்றமாகக் காணாததுபோல் இந்தத் தேசத்தி லிவ்வித துன்மார்க்கஞ் செய்கின்றவர்க ளதிகமா யிருப்பதாலோ இது துன்மார்க்கமாகத் தோன்றாம லிருக்கின்றது!

இந்த ராச்சியத்தில் கலியாண முதலிய சம்பிரம காரியங்களுக்கு விசேஷக் குறிப்பாகத் தாசிகள் புருஷசையோக விரக கிரமங்களை வாயாற் சொல்லிக் கையாற் காட்டும் அபிநய கேளிக்கையை நடத்திச் சனங்கள் சுற்றிலு முட்கார்ந்து பார்த்துச் சந்தோஷிப்பது, வாலிபர்கள் அவர்கள்மீதி லிச்சைகொண்டு கெடுவதற்கு நிமித்தமா யிருக்கின்றது. வித்தியா வதிகளாயும், சௌந்தரியமுள்ளவர்களாயும், போக சாதுரிய சரச வுல்லாசிகளாயும், வஸ்திராபரணாலங்காரிகளாயும், பரிமள திரவியங்களைத் தரித்தவர்களாயும், மாதுரிய வசனமுடையவர்களாயு மிருக்கிற பொற்பாவை போன்ற இந்த ஸ்திரீகளுடன் யௌவனமுதல் புணர்ந்துபோகிக்கு மிவர்களுக்கு, எழுதவும் படிக்கவுந் தெரியாமல் மிருகம் போற் பயந்து, லொக்கு லொக்கென்று இருமிக்கொண்டு நித்திரை பிடிக்காமல் தடுமாறும் மாமியார் முதலிய கிழங்கள் தூங்குகிற வரையிற் காத்திருந்து பின் படுக்கை யறைக்கு வருங் குலஸ்திரீ

---

* புருஷன் எத்தனை ஸ்திரீகளுடன் கூடி யெவ்விதமாக நடந்தாலும் பதிவிரதா தர்மந் தப்பாமல் நடக்கிற புண்ணியவதிக ளனேக ரிருக்கிறார்களென்பதை யாவரு மெவ்வளவுஞ் சந்தேகிக்க வேண்டியதில்லை.

யுடன் புணரும் போகம் எப்படி ருசிக்கும்? வாலிபன் பரஸ்திரீகளுடைய சையோகத்தினால் வரும் கெடுதியை யறியாமல் முதலிற் பிரவேசித்து, அறிந்த பின்னும் தகுதியுள்ள பாரியை யில்லாக் குறைவைப்பற்றியும் மனித சுபாவ ருசியினாலுஞ் சகவாசதோஷத்தினாலும் அக் கெடுதியை நீக்கிக்கொள்ள மாட்டாமலிருந்து, பொருளும், புகழும், திடமு மிழந்தபின் வேசியர்கள் நீக்கி விடுவதினாற் கதிதப்பி முன்னே ருசிக்காத பாரியையிடத்துக்கு வந்து, கொண்டானை யல்லா லறியாக் குலமடந்தையாகிய இவள் ரோகஸ்தனை தனக்கு வெறுப்பில்லாமல் சர்வவித உபசாரபணிவிடைகளைச் செய்துவருகையில் * தான் முன்னே நடந்தவைகளை எண்ணித் தனக்குள் வெட்கமுற்று அநியாயமாய் இவளை வருத்தப்படுத்தினேமே யென்று துக்கிக்கிறான். ஆதலால், அன்னிய ஸ்திரீகளை வைத்துக்கொள்ளுகிறார்களென்கிற தோஷம் நீங்கும்பொருட்டு, அதற்கு மூலகாரணமாய் வாலிபத்திலேயே காமருசி யுண்டாகும்படி செய்விக்குங் கேளிக்கையை நிறுத்தவேண்டும். இதுவுமல்லாமல், புருஷனுக்கு மனைவியானவள் தயையில் மாதாவைப்போலவும், ஊழியத்தில் அடிமையைப்போலவும், ரூபத்தில் லட்சுமியைப்போலவும், பொறுமையில் பூமி தேவியைப்போலவும், போகத்தில் வேசியைப்போலவும், யோசனையில் மந்திரியைப் போலவு மிருக்கவேண்டுமென்று நம்முடைய நீதி சாஸ்திரங்கள் முறையிடுகிறபடி பெண்கள் திருந்துவதற்கேதுவாகிய கல்விகளையும், அவர்கள் நடந்துகொள்ளுங் கிரமங்களையும், பெற்றவர்கள் கற்பிக்கவேண்டும். இவ்வாறு கற்பிப்பார்களேயாகில் தங்கள் புருஷர்களுக் கிவர்கள் தகுந்த மனைவிகளாய் மேன்மேலும் ருசிக்கும்படி யாவதற்கென்னை சந்தேகம்?

விவேக சாலியாகிய தனால் சுந்தர ராமாநுஜ நாயக்கரென்னுங் கனவான் சென்னபட்டணத்துக் கடுத்த மேற்குத் திக்கிலிருக்கும் எழும்பூரில் 1809ஞு செப்டம்பர்மீ 25உயிற் பிறந்து செல்வமுடன் வளர்ந்து சுதேசபாஷை கற்றுக்கொண்டு காலேஜில் இங்கிலீஷ் படிக்கும்போது, ஸம்ஸ்கிருதமும் அப்பியசிக்கக் கோருகையில், சூத்திரர்களுக்குக் கற்பிக்கக்கூடாதென்று அவ்விடத்துப் பிரபல சாஸ்திரிகள் முதலிய பிராமணர்கள் பலவிதமாய் ஆக்ஷேபித்துத் தடுக்க, அதின் போர்டார் இத் தேசத்துப் பூர்வ ராஜ விருத்தாந்த கிரமங்களை விஸ்தாரமாக விசாரித்துச் சாஸ்திரிகள் சொல்வது அநியாயமென்று தீர்மானித்துக் கற்பிக்கும்படி செய்

* அனேகருக்கு இப்படி நேரிட்டதை இந்தச் சரித்திரமெழுதியவர் நன்றாய் அறிந்திருந்தும், அவர்கள் பெருமைக்குக் குறைவாகுமென்று பேர்களை எழுதவில்லை.

தது * அப்போது அத்தியந்தம் ஆச்சரியமாயிருந்தது. இப்படி நாயக்கர் வித்தியாப்பியாசம் பண்ணிக்கொண்டு வரும்போது கூடப் படிப்பவர்கள் வெட்கும்படி நாள்தோறும் அதுவே ஞாபகமாகப் பாடங்களைச் சிந்தித்து,அவர்களிலும் கல்வியில் தாம் அதிகரித்ததற் கடையாளமாகக் காலேஜ் போர்டாரிடத்தில் புஸ்தக வெகுமானம்வாங்கி, இந்த வித்தியாபிவிர்த்தியின் பலன் இப்படிப்பட்டதென் றெல்லாரு மறியத் தக்கதாக அதின் பிரயோசனத்தையு மடைந்தார். அதாவது, இந்த தேசத்து இந்துக்களுக்குக் கல்வித்திறமில்லாமையா லிவர்கள் இவ்விடத்து ஆபீசுகளில் இங்கிலீஷில் எழுதியவைகளைச் சரியொத்துப் பார்க்கின்ற 'எக்ஸாமின' ரென்னும் உத்தியோகத்துக்குப் பாத்திரர்க ளல்லரென்று அதுவரையிலிருந்த குறைவு அடியோடே நீங்கி இந்துக்கள் தகுந்தவர்களேயென்னும் பெருமை யுண்டாகும்படி அந்த உத்தியோகத்தை 1833ஷு கவர்ன்மெண்டாபீசிலடைந்து, நற்குணமுள்ளவரென்று அவ்விடத்து துரைகள் மெச்சிப் பின்பு ரெஜிஸ்ட்ரார் உத்தியோகமுங் கொடுக்கப் பெற்றுக்கொண்டிருந்தார். கேளிக்கையினால் இளைஞருக்கு நேரிடுகிற கெடுதியையும்,செல்வவானாகிய ஒருவன் இதை நடத்துவதால் செல்வமில்லா மற்றொருவனுந் தான் கொண்ட வேஷத்துக்குச் செய்தே தீரவேண்டுமென்று கடன் பட்டாவது செய்து கடன்காரனாய்த் தன் குடும்பத்தாரும் தானும் அன்னத்துக்கு அலையும்படி நேரிடுகிற கெடுதியையும் நீக்குவதற்காக, ஒரு ஆபீசில் பிரபலராய் 250 ரூபா சம்பளம் வருமானமுள்ள நாயக்கரவர்கள் தாமிந்தக் கேளிக்கையை நடத்தாமல் நிறுத்தினால் தமக்குக் குறைந்த சம்பளத்தில் இருப்பவர்களில் சிலருக்கு இதைச் செய்விக்க இஷ்ட மிருந்தாலும் உயர்ந்த சம்பளமுள்ளவரே நீக்கியிருக்க இல்லாத இவன் கடன் வாங்கிச் செய்தானேயென்று பிறரிகழ்வார்களென்றஞ்சிச் செய்யாம லிருப்பாரென்றும், இதைச் செய்யச் சம்மதமில்லாதவர்களைக் குறித் தொருவர் செய்யும் நிந்தனையைத் தாம் நடத்தாமலிருந்ததைத் திருஷ்டாந்தமாகச் சொல்லி நீக்கிக் கொள்ளுவார்களென்றும் நினைத்துத் தம்முடைய குமாரத்தியின் விவாகத்தில் கேளிக்கை நடத்தாமல் நிறுத்தினார். இதுவுமன்றி, ஒருவர் இறந்து போனபோது இரண்டு வாரம் வரையில் இந்த தேசத்தில் நடக்கிற வழக்கப்படி பந்துக்களும் அறிந்தவர்களுமாகிய ஸ்திரீகள் கூட்டங் கூட்டங்களாக வந்து, துக்கத்தை யடைந்திருப்பவர்களுக்குத் தேறுதல் சொல்லுதலைவிட்டு அதின் விர்த்திக்குக் கூர் சீவுவதுபோல் மார்புத் துணிகளை வாங்கி யிடுப்பிற் சுற்றி மார்பின்மேல் உபாய

* இப்போது வித்தியாசாலைகளை ஏற்படுத்தி நடத்திவருகின்ற தருமவான்களாகிய இந்துக்களின் மனம் பாரபக்ஷமில்லாமல் விசாலமாயிருக்கும்படி கடவுள் செய்ததால் ஸம்ஸ்கிருதபாஷை சர்வத்திர சாதாரணமாக எல்லோருங் கற்றுக்கொள்ளும்படியா யிருக்கின்றது.

மாயும் உறுத்தும்படியாயுங் கைகளா லடித்துக்கொண்டு வாய் வக்கணைக் கிசைவாகக் கால்களைத் தரையோடே யிழுத்திழுத்து வட்டமாகச் சுற்றிவருவதில் அடைவு தப்பினவர்களைக்கையாற் பிடித்திழுத் தப்பாற் றள்ளிவிடுகிறதும், ஒருவர் கையை மற்றொருவ ரிடுப்பின்மேல் சேர்த்து வட்டமாய் நின்றுங் கைகளை வாங்கிக்கொண்டு குதித்துக் குதித்தும் மார்பின்மேல் மோதி யறைந்து கூக்குர லிடுகிறதாகிய மாரிழவு கொடுக்கிறதும், துக்கத்துக்குரிய ஸ்திரீயானவள் மத்தியிலிருக்கும்படி இவர்களெல்லாரும் இளைப்பாறச் சுற்றி உட்கார்ந்துகொண்டு முன்னெற்றி மயிர்களைக் கைகளாற் கோதிக் கோதி யிழுத்துத் தங்கள் தங்கள் சாமர்த்தியம் வெளிப்படும்படி * பிராக்கணங்கள் பாடிச் சிலருக்குக் கண்ணில் தண்ணீர் வந்தும் வராமலும் அழுகிற மயிரிழவு கொடுக்கிறதும், கும்புகும்பாய்ப் பொறுத்துப்பொறுத்து வருவதால் துக்கத்துக்குரிய ஸ்திரீகள் அலண்டு அழச் சக்தியில்லாமல் சோர்வா யிருந்தால் வந்தவர்களை அவமானம் பண்ணுவதாக நேரிடுவதை நீக்கிக்கொள்ளுவதற்காகச் சிலரைவைத்து வருகிறவர்களோடு அழும்படி செய்கிறதும், குணவான்களாகிய புருஷர்கள் ஸ்திரீகள் அழுகிற இடத்துக்கு மறைப்பாகப்படுதாக்கள் கட்டித்தூரத்திலுட்கார்ந்து கொண்டிருக்க விசாரிக்க வந்த புண்ணியவான்கள் இவர்கள் துக்கந் தீரும்படி தேறுதல் சொல்லாமல் இறந்தவர்களுடைய அன்பு விசுவாசங்களை யெடுத்துப்பேசிப் பின்னும் மனம் நொந்து அழச் செய்கிறதுமல்லாமல் விளையாடிக் கொண்டிருக்கிற சிறுவர்களும் இதைக்கண்டு அழத்தக்கவாறு செய்கிறதுமாகிய கெட்ட வழக்கங்களை அடியோடே தடுக்கநினைத்து, நாயக்கர் தம்தமையனார்பாரியை யிறந்துபோனபோது உரியவர்களுக்குத் தேறுத லுண்டாகத்தக்க வகைகளைச் சொல்லி மூடத்தனமான வழக்கப்படி இதரர் தமது வீட்டில் வந்து அழுவதை நிறுத்தியபோது, சிலர் உங்கள் வீட்டில் சாவு நேரிட்டதா யிருக்கவில்லையென்று பரிகாசமாகச் சொல்லக் கடவுள் அப்படியே எந்நாளுஞ் செய்வாரென்று அவர்களைச் சந்தோஷிப்பித்தார். இவர் 1851௵ அக்டோபர்௴ 5௳க்குச் சரியான விரோதிகிருது௵ புரட்டாசி௴ 21௳யில் பரமபதஞ் சேர்

* பிராக்கணமாவது, ஒருவருக்கு மற்றொருவர்மே லிருக்குங் குறைவுகளுக்குங் குற்றங்களுக்கு மேற்றபடி அவர்கள் மனஞ் சுறுக்கிடப் பாடுகிறதும், சிலர் தங்கள் குடும்பங்களில் மருமக்கள்மார் குமாரர்கள் முதலியவர்கள்மேல் வெறுப்புங் கோபமுந் தோன்றியபோதெல்லாந் தங்களுக்குரியவர்களை நினைத்துக்கொண்டு சாவுநேரிட்ட வீட்டுக்கு முக்கியமாய்ப் போய்த் தங்க ளாராமை தீரும்படி பாடி யழுகிறதுமாம். பிராக்கணம் - ஒப்பாரி. விதம்விதமாய் இதரதேசத்தர்கள் சந்தோஷத்துக்குரியதாக ஸ்திரீ புமான்கள் சேர்ந்து ஆடுவதுபோல், இத்தேசத்து ஸ்திரீகள் துக்கத்துக்குரியதாக இப்பேய்க் கூத் தாடுகிறார்கள். வித்தியா விவேகத்தை இவர்க ளடைந்தபோதுதான் இந்தக் கெட்ட வழக்கம் ஒழியும்.

ந்தார். இந்தப் புத்திமான் இன்னமுஞ் சிலகாலஞ் சீவித்திருப்பாரேயாகில் இத்தேசத்து நன்மைக்கு முக்கிய சகாயரா யிருப்பாரென்பதை இச்சரித்திர மெழுதுபவர் உறுதியாகச்சொல்லவல்லர்.

முதலியார் தொண்டைநாடு முதல் சேரசோழபாண்டிய தேசங்களிலுள்ள அநேக புண்ணிய ஸ்தலங்களிலுங் காசி மகா க்ஷேத்திரத்திலும் பலவிதமான கட்டளைகளும், அன்னதானங்களும், தம்பதிபூசைகளும் நடப்பித்ததை இந்தச் சரித்திரமெழுதுபவர் விசாரித்ததில், இந்தப் புண்ணியவானைப்போல் தர்மஞ் செய்துகொண்டிருந்து இறந்த பின்னும் எதிர் பாராத புகழடைந்தவர் வேறொருவரு மில்லையென்பது விளங்கிற்று. அது இனிமேல் வருஞ் சரித்திரங்களிலுங் காணப்படும்.

முதலியாருக்கு அந்தரங்க இஷ்டமுள்ள யாதவகுலப் பிரபுவாகிய வாயலூர் குழந்தை * வீராப்பெருமாள் பிள்ளையவர்கள் சென்னபட்டணத்துக் கடுத்த † சிந்தாத்திரிப்பேட்டையில் சுங்குவார் அக்கிரகாரத்துக்கு வடமேற்கே உத்தரவாகினியாய் வரும் விருத்தக்ஷீர நதியின் கிழண்டைக் கரையில் ஒரு பெரிய மாளிகையில் வசித்துக்கொண்டிருந்ததால், தாமும் அவர் சமீபத்தில் வசிக்க விருப்பங்கொண்டு அந்த நதியின் மேலண்டைக் கரையில் கோமளேசுவரபுரமென்று சாம்பவமூர்த்தியின் பேரே தனக்குப் பேராகப்பெற்று ரிஷி ஆச்சிரமம்போல் வாசயோக்கிய முள்ளதாய் விளங்குகின்ற க்ஷேத்திரத்தில் பிள்ளைவீட்டுக் கெதிராக

---

* இவர் மதராசு பிரவிடெண்டுகளாகிய ஆர்சபில் கேமல், ரம்போல்டு, லார்டு மக்காற்டினி இவர்களுடைய வர்த்தகம், ராசகாரியங்கள் முதலியவைகளுக்குத் துபாசியாயும், அத்தியந்தம் விவேகமும் ஐசுவரியமு முள்ளவராயுமிருந்து, செங்கற்பட்டு ஜில்லாவில் ஸ்ரீ அரிகோடியென்னும் ஊரைச் சுரோத்திரியமாகச் சம்பாதித்து, அதை அனேக மார்க்கங்களில் தம்மாற் கட்டப்பட்ட தர்ம சத்திரங்களுக்கும், தேவஸ்தானங்களுக்கும் உபயோகமாகும்படி செய்த தர்மவான்.

† இந்தச் சிந்தாத்திரிப்பேட்டையில் மதராசு பிரவிடெண்டு மேஸ்தர் பின்கன் என்கிறவருடைய சகாயத்தினால் 1734௵ கேசட்டி ஆதியப்ப நாயக்கர் இங்கிலீஷ் தேசத்தாருடைய வர்த்தகத்துக்கு எழுத்துப்புடைவை முதலியவைகள் நெய்விக்கக் குடிகளேற்றி அரி அராதிகளாலயங் கட்டுவித்து நபாப் தமக்குக் கொடுத்திருந்த கடப்பாக்கத்தின் வருமானம் இந்தப்பேட்டையின் நிலவரி இவைகளால் தர்மம் நடத்திக்கொண்டிருந்து, 1779௵ இறந்துபோய், அவர் சந்ததியாருங் கடப்பாக்கச் சுரோத்திரியமும் போனபின், மதராசு பிரவிடெண்டவர்களுக்குத் துபாசியாய்ப் பிரபல கனயோக தர்மவானான அவர் மருமகன் கோமட்டி மங்கபதி நாயக்கரும், திட்டி வெங்கட்டராயலு நாயக்கரும் வம்ச பரம்பரையாகக் கோவில் தர்மம் நடப்பிக்கிறதற்காக இந்தப் பேட்டையை 1787௵ சர் ஆர்சபில் கேமல் பிரவிடெண்டவர்களால் சுரோத்திரியமாகப் பெற்றுத் தர்மத்தை நடத்திக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சந்ததியார் இப்போதுந் தர்மத்தைச் சிறப்பாக நடத்தி வருகின்றார்கள்.

*வீடு கட்டிக்கொண்டு, சிலதினம் இவ்விடத்திலும் அநேக தினங்கள் தஞ்சாவூரிலும் வாசம்பண்ணிக்கொண்டிருந்தார். இப்படியிருக்குங்காலத்தில் இந்தப் புண்ணியவான் சைவசமய தீக்ஷைகள் பெற்று நாயன்மார்க ளருளிச்செய்த தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இவைகளைப் பண்வரிசைக் கிரமத்துடன் பூஜாகாலத்தில் ஓதுவதுமல்லாமல் ராத்திரி காலத்தில் பதிகங்களை யாழில் அமைத்து வாசிப்பதும், தம்பிரான்களுடனிருந்து பெரியபுராணம், திருவிளையாடல் முதலான சைவபுராண காலக்ஷேபஞ் செய்வதும், தம்பிரான்கள் போசனஞ் செய்யும்படி தமக்கு வேறும் அவர்களுக்கு வேறுமாயிராமல் நல்ல அன்னமுந் திவ்வியமான பதார்த்தமுஞ் சமையல் செய்வித்து அவர்களுக்குப் படைக்கச்சொல்லுவதும், சிவனடியார்களைச் சிவஸ்வரூபமாக நினைப்பதும், அறுபத்துமூன்று நாயன்மார்கள் திருநக்ஷத்திரங்கள் மாதமாதம் வருகின்ற தினத்தில் சாம்பவமூர்த்திக்கு அபிஷேக முதலானவைகள் செய்வித்துத் தம்முடைய கிருகத்திலும் தம்பிரான்களிருக்கிற மடங்களிலும் மகேசுவர பூசைகள் நடத்துவதும், அந்தந்த நாயன்மார் சரித்திரங்கள் சுருக்கமா யிருப்பவைகளைப் பெரியபுராணத்திலும், விரிவா யிருப்பவைகளைப் புராணசாரத்திலுமாகச் சிரவணஞ் செய்வதும், எந்த ஸ்தலத்திலாவது திருப்பணி நிறைவேற்றவேண்டுமென்கிற விரதங்கொண்டிருக்குந் தம்பிரான்கள் ஞாபகப்படுத்துவார்களானால் அவர்களுக்கும், யாத்திரை போகின்றவர்களுக்கும் வேண்டிய பொருளுதவி செய்வதுமான சிவநேசத்தை யுடையவரா யிருந்தார். இவர் இப்படிப்பட்ட பக்தியை யுடையவரென்று கேள்விப்பட்டுக் காசி ராமேசுவர யாத்திரைபோகின்றவர்கள் இவரைப் பார்க்கவேண்டுமென்று வந்துகொண்டே யிருப்பதினால் எப்போதுந் தம்பிரான்கள் கூட்டம் நிறைந்திருக்கும்.

அமரசிங்கு மகாராஜாவுக்குப் பட்டமான சிலநாளைக்குப்பின் முதலியார் சென்னபட்டணம் வந்திருக்கையில், 1788-ளு கவர்னர் ஆர்சபில் கேமலவர்கள் இவரை யழைப்பித்துத் தஞ்சாவூர் ராஜா கட்டவேண்டிய பணங்கள் கிரமமாகச் சேரவில்லை, ஆதலால் நீர் அத்தேசத்தின் சாகுபடிவருமானங்களை ஏற்றுக்கொண்டு நமக்குப் பணங்களைக் கிரமமாகக் கட்டவேண்டுமென்று சொன்னார். ராசா வவர்களும் அப்படியே இவர்க்கெழுதினார். அதற்கு இவர் இவ்வளவு பெரிய காரியம் பார்க்கத் தமக்குச் சக்தியில்லையென்று சாக்குகள் சொல்லித் தப்பித்துக்கொண்டபின், உல்லியம் பீட்டிரி துரையவர்களைத் தஞ்சாவூர் ஸம்ஸ்தானத்துக்குப் போய்ப் பணங்கள் அட்டி படாமல் வருவதற்கு வேண்டிய காரியங்

* இந்த வீடு முதலியார் பெயர் எப்போதும் விளங்கும்படி சத்திரமா யிருக்கின்றது.

களைச் செய்யும்படி கவர்ன்மெண்டா ரனுப்பியபோது, முதலியா ரையும் மேஸ்தர் டிசோசாவையுங் கூடப்போகும்படி திட்டம் பண்ணிய பிரகாரம், பீட்டிரிதுரை யவர்களுடன் முதலியார் தஞ் சாவூருக்குப் போய் ராஜாவுக்கு லக்ஷம் வராகன் கடன் கொடுத் தார். அதை அவர் கும்பினியாருக்குச் செலுத்தியபின், இனி ராஜா பணஞ் செலுத்த வேண்டியதற்குச் சில புது ஏற்பாடுகளைச்செய் வித்துக்கொண்டு பீட்டிரி துரையவர்கள் சென்னபட்டணம் வந்து விட்டார். முதலியார் அவ்விடத்தில் முன்போலவே லாவாதேவி களை நடத்திவருங் காலையில், துபாசிகளென்னும் தனவான்களா கிய பச்சையப்பமுதலியார், சுப்பராவு, சின்னையா முதலியார் முத லானவர்கள் தஞ்சாவூர்ச் சீமையில் குடியிருந்துகொண்டு அபார மான வட்டியும் லாபங்களுங் கிடைக்குமென்கிற அபேக்ஷயி னால் ராஜாவுக்குக் கடன்கொடுத்து அதற்காகக் கிராமங்களை அடை மானம் வைத்துக்கொண்டு ராச்சியத்தி லுண்டாகிற தானியங் களைத் தங்கள் கடனுக் கீடாக வாங்கிக்கொண்டு அவைகளை விலை யுயர்த்தி விற்பதால், குடித்தனங்கள் கஷ்டப்பட்டு மெலிவதற்கும் ராஜா வீண் செலவுகள் பண்ணிக் கடன்காரராவதற்கு மிடமாய், இவருக்குப் பட்டமானது முதல் இந்த தேசம் இக் கெடுதியோடு அலைகின்ற தாகையால், இவர்களை யிந்த வூர்விட்டுப் போகும்படி செய்யவேண்டுமென்று அவ்விடத்திலிருந்த யூரோப் தேசத்தார் கவர்ன்மெண்டாருக் கெழுதினார்கள். அதை அனுசரித்து இப் படி லாவாதேவி பண்ணுந் துபாசிகளை அவ்விடத்தில் குடித்தன மிருக்கவொட்டாமல் சென்னபட்டணத்துக் கனுப்பிவிடவேண்டு மென்று 1791ஆ மேஸ்தர் ராம், மேஸ்தர் புல்டன் இவர் களுக்குக் கவர்ன்மெண்டார் கண்டிப்பா யெழுதினார்கள். அவர் கள் அதைப் பார்த்தவுடன் மேற்கண்ட துபாசிகளைப் பட்டணம் போகச்சொன்னபோது, முதலியார், 'நான் ஐம்பதினாயிரம் வரா கன்வரையில் ராசாவுக்குக் கடன் கொடுத்திருக்க அது வருவத ற்கு முன் போய்விட்டால் பணம் வராது; நான் விசேஷமான வட்டிகள் வாங்கவுமில்லை, குடித்தனக்காரர்களை வருத்தப்படுத் தவுமில்லை; சுப்பராவு, சின்னையா முதலியா ரிவர்கள்பேரில் பிரி யாது செய்ததுபோல, என்பேரில் எந்தக் காலத்திலேயும் எவ் வகையான பிரியாதும் யாருஞ் செய்யவுமில்லை; முன்னமே இவ்வி டத்திலிருக்கச் சம்மதமில்லாமற்போன நான் கவர்னர் கேமலவர்க ளுடைய கோரிக்கையால் வந்தேனே தவிர வேறில்லை; இப்படி யிருக்க நிஷ்காரணமாக என்னைப் போகச்சொல்வது நான் கிரம மாகச் செய்துவந்த லாவாதேவிகளுக்குக் கெடுதி' யென்று சொல்லி யும், பட்டணத்தில் கமிட்டியாருடைய விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்று நிர்ப்பந்தித்தபடியால், மார்ச்சிமீ சென்னபட்ட ணத்துக்கு வந்து, சீமைக்குப் போன ஜோஸப் ஸலவன் துரை அவர்கள் குமாரர் முதலிய சிலருக்குத் துபாசியாயிருந்தார். அப்

படி யிருந்துகொண்டு, சிதம்பரமென்னும் பூலோக கயிலாசமாகிய ஸ்தலத்தில் அனேக கட்டளைகளுந் திருப்பணிகளுஞ் செய்ய நினைத்தகாலத்தில் அவ்விடத்திலுள்ள தீக்ஷிதர்க ளிசைந்து நடவாததினால் வெறுப்புக்கொண் டிருந்ததை அந்த ஸ்தலத்தினிடத்தில் அதிக பக்தி யுள்ளவராயும், இப்பட்டணத்தில் பிரபலராயும், அபாரமான பூஸ்திதிகளைத் தஞ்சாவூர்ச் சீமையில் சம்பாதித்துத் தர்மத்துக்கே உபயோகித்த மகாபுண்ணியசாலியாயும், மிகுந்த ஔதாரியாயும், அத்தியந்தங் கேளீவிலாச விநோத விபவாநுபவராயுமிருந்த மணலி சின்னையா முதலியாரென்னும் பிரபு அறிந்து தீக்ஷிதர்கள் பச்சையப்ப முதலியாருடன் அனுகூலித்து நடக்கும்படி செய்தபின், இவர் சபாநாயகருக்கு ரதஞ்செய்வித்து நூதனமாகப் பிரமோற்சவமுஞ்செய்ய எத்தனித்தபோது, இந்த ஸ்தலம் சித்திரகூடமென்னும் விஷ்ணு சம்பந்தமு மானதாயிருக்கத் தீக்ஷிதர்கள் கோவிந்தராஜர் சன்னிதியின் பலிபீடத்தை யிடித்துக் கலகப்படுத்தி யிருப்பதால் உற்சவஞ் செய்யக்கூடாதென்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் அதிகாரிகள் முன்னிலையில் செய்த பலவித ஆக்ஷேபனைகளை யறிந்து, அப்போது பட்டணத்திலிருந்த பச்சையப்ப முதலியார் சின்னையா முதலியாருடன் கலந்துகொண்டு தகுந்த முயற்சிகளைச்செய்து, அத்தியந்தம் புண்ணியமுள்ளபிரபலரென்று அத்தேசத்துச் சனங்கள் கொண்டாடும்படி, 1791வரு ஜூன்மீ 28வ ரதசாரோகணஞ் செய்வித்து, ஆனித்திருமஞ்சன உற்சவ முதலியவைகளையும் நடத்தினார்.

தம்மைத் தஞ்சாவூரிலிருக்க வொட்டாமல் பட்டணத்துக் கனுப்பிவிட்ட அக்கிரமத்துகளை உல்லியம் பீட்டிரிதுரை முதலியவர்களுக்குத் தெரிவித்து நிரபராதியான தம்மைச் சென்னபட்டணத்துக் கழைப்பித்து இவ்விடத்தில் செய்த எவ்வித விசாரணையிலும் தம்மிடத்திற் குற்றமில்லாம லிருப்பதாலும், தமது தேகத்துக்கு இவ்விடத்து வாசம் அனுகூலமில்லாமல் நலிசெய்வதாலுந் தம்முடைய ஆரோக்கியத்துக் கொத்திருக்கிற தஞ்சாவூர்ச் சீமைக்கு மறுபடியும் போவதற்கு உத்தரவாக வேண்டுமென்று அக்டோபர்மீ 7வ எழுதிக்கொண்டபடி கவர்ன்மெண்டார் சந்தோஷத்துடன் உத்தரவு கொடுக்கப் பெற்றுக்கொண்டார். 1792வரு ஜூன்மீ பாரிசவாயு கண்டு அது நிவிர்த்தியாவதற்காகத் தஞ்சாவூருக்குப்போகும்போது, * அய்யாபிள்ளையை ஜோஸப் ஸலவன் துரை குமாரருக்குத் துபாசியாகச் சிபார்சுசெய்து, தாம் அவ்விடம் போய்ச் சேர்ந்து, மேஸ்தர் சிரேஞ்சுக்கு விகிதராய் அங்கே இரண்டுவருஷகாலமிருந்து, வாயு உபத்திரவங் கொஞ்சங் குணமானதால், தம்முடைய வியாபாரமாகிய ரொக்க லாவாதேவி உண்டிவகையரா கொடுக்கல் வாங்கல்களை முன்போலவே நடத்திக்கொ

* அய்யாபிள்ளை என்பவர் போனி நாராயணபிள்ளையினுடைய குமாரர். இவர் எவ்வளவும் பொய் சொல்ல அறியாத சத்தியவான்.

ண்டுவந்தார். அக்காலையில், மதுமேக உபத்திரவத்தோடு பேதியுங் கண்டு தேகம் நலிபட்டு மெலிந்து ஒருவகையாக ரோகங் குணமாய்க் காணப்பட்டும், மூளைமூலங் கண்டு உபாதியாயிருந்ததினால், சௌஸ்த நிமித்தமாகக் கும்பகோணத்துக்குப் பிரமாதீசனு மாசிமீ 29௳ போயினார். அவ்விடத்தில் தம்முடைய அக்கிரகார சமீபத்தில் முன் தாம் எத்தனம் பண்ணியிருந்த சத்திரத்துவேலையை நடத்திக்கொண்டு சில தினங்கள் வசித்திருந்துங் குணமாகாமையால், இனித் தேகம் நிற்கமாட்டாதென்கிற எண்ணங்கொண்டு, 1794௵ மார்ச்சிமீ 22௳ தம்முடைய மரணசாசனமாகிய உயில் என்னும் பத்திரிகையை எழுதிவைத்தனர். இறந்துபோவதற்கு ஒரு வாரத்துக்கு முன் அந்தமீ 24௳ கும்பகோணத்திலிருந்து நாராயணபிள்ளை யவர்களுக்குச் சுகஸ்த லிகிதமாக எழுதிய கடிதத்தினால் தமக்கு அந்திய திசாப்பிராப்தமாகுமென்பதை நிச்சயித்துக் கொண்டாரென்றும், பிறர் சொத்துக்கு இச்சைப்படாதவரென்றுந் தெரியவருகின்றது.

கடிதம்.

சிவமயம்.

தேவரீர் மாமா அவர்களுக்கு தங்கள் பச்சையப்பன் தெண்டனிட்டு விண்ணப்பம் - நாளது பங்குனிமீ ௰௪௳ வரைக்கும் யிடைத்தி ஆள்ளானவரும் கும்பகோணத்தில் க்ஷேமம் - யிதர்க்குமுன் தங்களுக்கு யெழுதி அனுப்பியிருக்குர கடதாசியினால் சகலமும் விசிதமா யிருக்குமே யிதர்க்குமுன்னெழுதிய காயிதத்தில் கொஞ்சம் பளுவா யிருக்குரதா யெழுதி யிருந்தேனே நேத்துயின்றைக்கும் கொஞ்சம் லகுவாயிருக்குது யினி சிவகடாக்ஷமெப்படி யிருக்குதுமோ அறியவேணும் தாங்களொன்றுக்கும் அதையிரியப் படத்தேவையில்லை திருவிழகிருபை செம்மையாயி கூட்டிவைக்கும்போலே யிருக்குது - பங்குனிமீ ௰௯௳ வரைக்கும் பொட்டியிருப்பு யிவ்வளவென்று தெரியும்படிக்கு கணக்கு அனுப்பிவிக்கவும் - இதுவுமல்லாமல் முன்னாலே நான் பட்டணம் வந்திருந்தபோது சிவகங்கையாருக்காக ௱-வருதப்பிள்ளை யவர்களண்டே ரெண்டாயிரம் பூவிராகன் கடன் வாங்கி யிருந்தேனே அதுக்கு உடனே ஆயிர விராகன் செலுத்திப் போட்டேன் - இன்னம் ஆயிர விராகனும் வட்டியும் செல்லவேணும் அதுவும் செலுத்திவிச்சுப் போடுகிறேனென்று அவருக்குச் சொல்லவும் - ஒருவேளை சரீரத்துக்கு அபாயம் வந்தாலும் அவருக்கு ஆயிர விராகனும் அவர் கணக்கா லுள்ளபிரகாரம் உள்ளவட்டியும் குடுத்துவிடவேண்டியது - அவருடனேயும் யிந்தச் சம்மதி சொல்லிப்போடவும்- மற்றபடி யிவடத்தில் ஞான் நடந்துகொள்ள வேண்டியத்துக்கு யின்னபடியென்று நிருபம் தயவுசெய்யவும்-

வேணும் விண்ணப்பம்-

மற்ற காரியங்க ளெல்லாம் ஞனெல்லாம் வறையரவுபண்ணி யிருக்கிரேனே யல்லாமல் வித்துவேச மிராது தங்கள் சித்த மறியவும்.

இதுதான் முதலியா ரெழுதிய அந்திய கடிதம்.

இந்தக் கடித மெழுதியனுப்பியபின், தஞ்சாவூருக்கு வட மேற்கே நாலுநாழிகை வழித்தூரமுள்ள காவேரிக்கரையில் காசி யிற் றுல்லியமாய்ச் சிவகணங்கள் மகிழத்தக்க பஞ்சநத மென் னும் மகத்துவமுள்ள திருவையாற்றில் நிரியாணத்தை யடைய வேண்டுமென்று கும்பகோணத்தி லிருந்துபோய்க் கலியுகாப் தம் 4894 சாலிவாகனம் 1715-க்குமேல் செல்லாநின்ற பிரமா தீசஹு பங்குனிமீ 21உ திங்கட்கிழமை அமாவாசைத் திதிக் குச் சரியாகிய இங்கிலீஷ் 1794ஹு மார்ச்சிமீ 31உயில் இந்த மானிட தேகத்தை விட்டுத் திவ்விய தேகம் பெற்றுச் சிவகணங் களி லொருவராய்ச் சாம்பவ மூர்த்தியின் கைலாசகிரியை அடைந் தது மன்றிப் புகழுடம்புகொண்டு இவ்வுலகத்திலுஞ் சீவந்தரா யிருக்கின்றார்.

உத்தரசரித்திரம்.

உலகத்தில் நடக்கும் விந்தைகள் தெரிந்தபோது, அதனால் நேரிடுங்கெடுதியைத் தடுக்கும்பொருட்டு வெளியிட்டால் அது யாவருக்கும் உபயோகமாகுமென்பதைக் குறித்தே யல்லாமல் ஒருவருக்கு எவ்வளவும் எவ்வகையிலும் எவ்விதக் குறைவுஞ் சொல்ல நினைத்தன்று இதனடியில் விரிவா யெழுதியது. அறுபது எழுபது வருஷங்களுக்கு முன் முதலியார் விஷயமாக நடந்த கடிதங்களை யாராய்ந்து பார்த்ததில் தெரியவந்ததாவது: இவருடைய இரண்டாவது பாரியாளாகிய வேதாரணியமென்று பெயர் வழங்கப்பட்டிருந்த பழனியாயி யம்மாளை விவாகஞ்செய்து கொள்ளும்போது ஆபரணங்க ளிட்டுப் பதினாயிரம் வராகன் ரொக்கங் கொடுக்கிறதாக ஓலைச்சீட்டொன்றெழுதிக் கொடுத்திருந்ததால் அவளைக்குறித்துத் தம்முடைய மரணசாசனத்தி லொன்று மெழுதாமல் அவள் பெண் குழந்தைக்கு மாத்திரம் அஞ்சாறு வயதானபோது ஐயாயிரஞ் சிபிச்சக்கரப் பணத்துக்குள் கலியாணமும் நகையுஞ் செய்யும்படியாக வெழுதியிருக்கிறார்; முதலியார் தமது நிரியாண திசையை நோக்கித் திருவையாற்றுச் சத்திரத்திற் போயிருந்த காலத்திலும், இளையாள் எதிர்வீட்டில் வேறாகவே யிருந்ததால், இவள் மூத்த பாரியாளுடன் கலந்து வாழ்ந்துகொண்டிருந்ததாக எவ்வளவுங் காணவில்லை. அவர், மரணசாசனத்தில், "என் சகோதரி குமாரன் முத்தையா விவேக சூனியனா யிருப்பதால் அவன் ஜீவனாம்சத்துக்கு ஐயாயிரம் வராகனுக்குள்ள வட்டி மாத்திரங் கொடுத்துக்கொண்டு வருகிறதென் றெழுதி யிருந்தார். அந்தத் துக்கத்தினாலும், அவர் ஆஸ்தியிற் பாதி இரண்டாவது பாரியாளுக்குக் கிடைக்கும்படி செய்தால் தனக்கும் லாபமுண்டென்கிற துன்மார்க்க வெண்ணத்தினாலும் அவள் வகைராக்களுடன் கலந்துகொண்டு, தன் பெரிய தாயார் சுப்பம்மாள், அவள் குமாரத்தியாய அய்யாளம்மாள் இவர்களுக்கு விரோதியாய், முதலியா ரிறந்த மூன்றாம்நாளே மூத்தாள் வகைராக்களைத் தஞ்சாவூருக்குப் போகவொட்டாமல் அர்த்த ராத்திரியில் அந்த முத்தையா என்பவன் கலகஞ்செய்தான். அவர்கள் சிரமத்தோடு தப்பி, அவ்விடம்போய்ச் சேர்ந்தனர். அதன்பின், இறந்துபோன பச்சையப்பமுதலியார் வைத்த நாலுலக்ஷம் வராகனுக் கதிகமான ஆஸ்தியில் இளைய பாரியாளுக்குப் பங்கு கொடாமல் மூத்த பாரியாள் அபகரித்துக்கொண்டாளென்று, அமரசிங்கு மகாராசாவின் சமஸ்தானிகர்களிடத்தில் பிரியாது கொடுத்தான். கர்னாட முதலிய சமஸ்தானிகர், ஒருவன் மிகுந்த யோக்கியனும் பிரமாணிக்கனுஞ் சமஸ்தானத்துக்கு அதிக உபயோகமான காரியங்களைச் செய்யு

முபகாரியுமா யிருந்தவனானாலும், இறந்தானென்றால் அவன் குடும்பஸ்தர்களையும் அன்னத்துக் கலைய விடுகிற முக்கிய சுவபாவ முள்ளவர்களாகையால், கும்பினியார் பிரவேசித்திருக்கிற தேசத்தில் அவ்வளவு செய்ய வாய்க்காவிட்டாலுங் கலகப்பட்டிருக்கிற சொத்துக்களைக் கூடுமான வரையில் அபகரிக்க நல்ல சமயமுண்டாயிற்றென்று அந்தச் சமஸ்தானிகர் அத்தியந்த துன்மார்க்கச் சந்தோஷ வெண்ணங்கொண்டு அவைகளை முத்திரித்து, நானாவித அலைச்சல் செய்தார்கள். இவ்வித அலைச்சலினால் *மூத்தாள் பேய் போல் அலைந்து தடுமாறிக் கண்ணுந் தண்ணீருமாய்க் கலங்கிப் புருஷன் போனதுபோலவே ஆஸ்தியுங் கொள்ளையாய்ப் போகின்றதென்று பயந்து, நாராயண பிள்ளைக்கு அப்பொழுது ஒரு கடிதம் எழுதினாள். அக் கடிதத்தைப் பார்ப்பவர்களுக்கு அது இப்போதுந் துக்கந் தரத்தக்கதா யிருக்கின்றது.

க டி த ம்.

தேவரீர் மாமா அவர்கள் திவ்விய ஸ்ரீ சரணார விந்தங்களிலே அடியேன்-அய்யாளம்மாள்-சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு விண்ணப்பம்.

நாளது - பங்குனிமீ உருவ வரைக்கும் நாலும் யெங்கள் தாயாரும்-தஞ்சநகரில் சுகமே யிருக்கிறோம்- இதர்க்குமுன்-உசவ தங்களுக்கு யெழுதியிருக்கிற காயிதத்தினாலே சகலமும் தெரிந்திருக்குமே யெங்களை தாங்கள் வளத்து சகல பெருமைப்படுத்தி யியல்பா யிருந்ததில் யெங்கள் பாக்கியத்தினாலே வங்கிஷ உத்தாரணாய் திருவவதாரம் பண்ணியிருந்த தெய்வத்தை யிளந்துபோட்டு யிப்பத் தெருவிலே நிற்கும்படியாய் யெங்கள் தலையிலே விதிச்சுது யென்னமென்றால்- நேத்தைதினம் திருவையாத்தில் நம்முட சத்திரத்திலே யிரங்கியிருந்தோம் அதுக்கு யெதிர்வீட்டிலே-வேதாரணியத்துச் சோழியச் சிறுக்கியும் அவளைச் சேர்ந்தபேருமாயிருந்தார்கள்- ராத்திரி யிருபது நாழியிலே பிறப்பட்டு சத்திரத்துக்குள்ளே வேதாரணியத்தாளைச் சேர்ந்த பசகள் வந்து யெங்களையெல்லாம் காபுராப்படுத்தி ஆசத்தி புரிச்சுக் கொடுக்கச் சொல்லி யில்லாத றத்தாந்தம் பண்ணினார்கள்- யினிமே யிவடத்திலிருக்கக் கூடாதென்று- தஞ்சாவூருக்குப் போக நாலும் யெங்கள் தாயாரும் சரஞ்சாமானை யெல்லாம் முசத்தி பண்ணிக்கொண்டு பயணம் பிரப்பட்டோம் யிதில் அந்த சிறிக்கியைச் சேர்ந்த

* இத்தேசத்தில் பெண்டுகளுக்குப் படிப்பில்லாமையினால் அவர்கள் எவ்வளவு வயதுள்ளவர்களானாலும் உலக விவகாரதிசை தங்கள் யோக்கியதை இவைகளை யறியாமல் குழந்தைகளைப்போலப் பரதவிப்பது இயல்பா யிருக்கின்றது.

பசகளும் நம்முட முத்தயா வென்கிற பிள்ளையாண்டானும் கூடிக் கொண்டு யெங்களை தஞ்சாவூருக்குப் போகவொட்டுகிற தில்லை யென்று மரிச்சுப் பண்ணின லெச்சை யின்னபடியென்று யெழுதிரதல்ல- யிந்தக் கூசல் ஊர்க் காவல்காரனுக்குத் தெரிஞ்சு அவன்வந்து யெல்லாரையும் கண்டிச்சு யெங்களைப் போகச்சொல்லி மனுஷியரையுங் கூட்டி யனுப்பிவிச்சான்- பிர்ப்பாடு தஞ்சநகரம் வந்து சேர்ந்தோம்- யெங்களுக்கு யெதுராளியாயி முத்தயா தானே யேர்ப்பட்டு- ஸ்ரீ-சிவராயர்பாவா - சங்கரராயரவர்கள் முதலாகிய பெரியமனுஸ்சாளுடனேயும் தெரிவிலே திண்ணையிலே யிருக்கிறபேர்களுடனேயும் யெங்கள் மாமா-னாலு லெச்சம் ஆர லெச்சம் சம்பாரிச்சு யிவர்கள் கையிலே குடுத்துப் போட்டுப்போனான்- யிவாள் யிளைய பெண்சாதிக்கு குடாமல் யென்னையும் தெருவிலேவிட நினைக்குரார்களென்று வாயிலே வந்ததையெல்லாம் சரிப்போனபடி பெனத்திக்கொண்டு கொட்டடியிலே யிருக்குற கணக்கப்பிள்ளை காரியக்காரரை மரிச்சு தன்னுத்தரவல்லாமல் ஒரு காரியமும் பார்க்கத் தேவையில்லை யென்றும்- கும்பினிபாராக் கொண்டுவந்து வக்குரோ மென்றும் யில்லாத காபுராபண்ணுகுரான்- யிந்தயேழைமையினாலே-வேதாரணியத்து சோழியச் சிறிக்கியு மவளைச் சேர்ந்தப் போக்கிரிப் பசகளுமாயி கூடிக்கொண்டு மரிக்கிரதும்- மூலைக்கி மூலைபோயி அரமனையிலேயும்-ஸ்ரீ-சிவராயரவர்கள் முதலாகிய பேர்களுடனேயும் சாதிகாறர் வழியிலேயும் பிராதி பண்ணிக்கொண்டு- னாலு லெக்ஷம் அஞ்சு லெக்ஷம் சம்பாரிச்சு வச்சாரென்றும்- தங்களுக்கு பங்கு பாதி குடுக்க வேணுமென்றும் யில்லாத துராக்கிறுதங்க ளெல்லாம் செயிது வெழியே யிருக்குரார்கள். னாங்கள் பெண்பளையும் அம்பலமா யிருக்கிறோம் யிவடத்திலே திக்காருமில்லை யெல்லாரும் கிண்டிவிட்டு வேடிக்கை பாத்து அகப்பட்டதை சுத்திக்கொண்டுபோர வேலைமேலே யிருக்குரார்கள்- இப்படிக்கெல்லாம் பரதேசி பக்ஷமாயி தெருவிலே விழுந்து யெங்கள் கெதி யிப்படி முடிந்துது- தங்களைவிட யெங்களுக்காதரவு ஆரு சகலத்துக்கும் தங்களை பார கர்த்தாவாயி யேர்ப்படுத்திப் போனார்களே யெல்லா ஆதிக்கமும் தங்களிதாச்சே ஆகையால் யிது காரிய பாகங்களுக்கெல்லாம் தாங்கள் பெரிய யோசினை பண்ணி- கறனல்-மக்கிசுவெலுக்கும்- ஸ்ரீ-பாவா சிவராயரவர்கள் சங்கரராயர் முதலாகிய பேருக்கும் தாக்கிதி அனுப்பிவிக்க வேண்டியது- யிந்த காயிதமெழுதர தறணத்தில் நடந்த சமாசாரம் முத்தயாவும் வேதாரணியத்துச் சோளிச்சியைச் சேர்ந்தபேருமாயி போயி- ஸ்ரீ-சரிக்கில் சிவராயருடனே சொல்லி னாலு பாராசனம் கூட்டிக் கொண்டுவந்து பணப்பொட்டி யிருக்குர கொட்டடியிலே ஒரு பாராசனமும்- மாடியின் பேரில் பொட்டி சறஞ்சாமா னிருக்குற யிடத்தில் ஒரு பாராசனமும் கொல்லை வாசலிலே ஒரு பாராசனமும் வைத்து நம்முட

கணக்கப் பிள்ளை காரியக் காரரை யெல்லாம் பிடிச்சு பாராவிலே போட்டு வீடுவிட்டு ஒருத்தரும் வெழியே போகக் கூடாதென்றும் யெங்களுடனே ஒருத்தரும் வந்துபேசக் கூடாதென்றும்-யிப்படிக்கெல்லாம் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டுயிருக்கையில்-ஈ-சங்கரராயரும் பின்னையும் ரெண்டு கிரகஸ்தாளும் வந்து அரக்கு முத்திரையுங் கொண்டுவந்து கையிப்பெட்டி காயிதப்பெட்டி யெல்லாம் சோதிச்சு சீட்டுனுட்டுக ளெல்லாம் யெடுத்து பாத்துப் பதிஞ்சுகொண்டார்கள்- மேல்நகை நட்டெல்லாம்பாத்து யெழுதவேணு மென்றும் கொட்டடியளுக்கெல்லாம் முத்திரை போடவேணு மென்றும் யேற்பட்டார்கள்- யிதிலே யெங்கள் தாயார் வெழிப்பட்டு யிப்படிக்கெல்லாம் நீங்கள் கல்லத்து பண்ணவேண்டியதென்ன- மகாராசா சொத்தாவது பின்னை யொருத்தர் சொத்தாவது ஙுங்களபகரிச்சு யிருக்குரோமா-ஆருக்காகிலும் கடன் குடுக்கவேணுமா- யெங்கள் வீட்டில் புளுக்கையாய் வளர்த்தபயல் பேச்சைக் கேட்டுக்கொண்டு யிப்படிக் கெல்லாம் அபமானம் பண்ணுநீர்களல்லவா யெங்களுக்கு காபந்து யெசமானங்களில்லையா- சகலமும் நீங்கள் ஒப்புக் கொள்ளுங்கோள் ஙுணும் பெண்ணுமாயி பட்டணம் போரோமென்று வெழிப்பட்டாள்-பிர்ப்பாடு- சங்கரராயர் சொன்னது அந்த முத்தயா வென்கிறவன் துஷ்டன் அவனுடனே வேதாரணியத்தாரும் சேர்ந்திருக்கிறார்கள்-ராத்திரிகாலங்களிலே அபவேளையிலே வந்துவிழுந்து ஒரு சோராபரி பண்ணி பெட்டி போசனையை அபகரிச்சுக்கொண்டு போனால் மகாராசா சமஸ்தானமாச்சுதே- ஈ-பிள்ளையவர்களுக்கு ஙுங்க ளென்ன உத்தரவு சொல்லுகிறதென்று உபாயமாயிப் பேசினார்- அதுக்கு நீங்களும் அந்தப் பயலுமாயிவந்து காபுராபண்ணி-பந்துபஸ்து பண்ணவேண்டிய தென்னவென்று கேட்டத்துக்கு அவன் சகலத்துக்கும் காபந்தென்றும் ஒருத்தருக்கும் யெனையல்லாமல் சம்மந்தமில்லை யென்றும்- வேதாரணியத்தாளுக்கு பங்கு பாதி தீத்து குடுக்கவேணுமென்றும் விபகாரம் வந்து சொன்னபடியினாலே சென்னபட்டணத்துக்கு - ஈ - பிள்ளையவர்களுக்கு யெழுதி அனுப்புகுரோம் அவா ளுத்தரவு வருகிற வரைக்கும் பாராயிருக்கட்டு மென்று போயிவிட்டார்- யெங்கள் பிளைப்பு யிப்படிக்கு முடிஞ்சுது- யினிமேல் ஒரு ஙுழிகை யிவடத்திலே யிருக்கத்தக்கதில்லை யிந்தகாயிதங் கண்ட தக்ஷணம் தாங்கள் பிறப்பட்டு வந்தால் உத்தமம்- அல்லாதபட்சத்துக்கு அந்த புளுக்கையனுக்கு சிகிச்சையும் பண்ணிவிச்சு மேல் பணங்காசு தடங்கல் பட்டிருக்கிரத்துக்கு ஙுங்களும் - ஈ - முதலியாரவர்களும்- நேமகம் பண்ணியிருக்குர காரியகாரரிருந்து காரியம் பார்க்கும்படியாயும் துரையளுக்கு சரிக்கில் முதலாகிய பேருக்கு தாக்கிதி அனுப்பி விச்சு கருமாதி யிவடத்திலே முடித்துக்கொண்டு வருகிறத்துக்கும் அவிடத்திலே தானேவந்து முடிக்கிரத்துக்கும் வகை விபரமாயி

உத்தரவு அனுப்பிக்க வேண்டியது- யெங்கள் மான பிராணனெல்லாம் போயிருக்கிறோம்- அதர்க்கான பந்தோபஸ்தாயி தாக்கிதியனுப்பிவிச்சு ஞங்கள் பயணப்பட்டால் ரெண்டு பாரா கும்பினி சிபாயிகள்கூட வரும்படியாயி- கறனலுக்கு-உத்தரவுவாங்கி அனுப்பிவிக்கவேண்டியது- யிந்தப்படிக்கி தாங்கள் நடப்பியாவிட்டால் யெங்கள் பிராணன் வச்சுக்கொண் டிருக்குர தில்லே.

மேல் தங்களுக்கு யுக்தமானபடி பாத்து நடப்பிவிச்சுக்கொள்ளவேண்டியது- வேணும் விண்ணப்பம்.

ஒரு புளுக்கைச் சிருக்கி பேச்சையும்- நம்முட வீட்டில் வளந்த பயல் பேச்சையும் கேட்டுக்கொண்டு பெரிய மனுஷெனெல்லாம் யிப்படிக்கி நடப்பி விக்கிரது சருவத்திராளுக்கும் ஞாயமாயிருக்குமா- தாங்களிதுக்கு முயற்சி பண்ணி அனுப்பியாவிட்டால் யெங்க ளமாள் பிராணநிராது.

இவை.

சென்னபட்டணத்தில் மகாராஜராஜஸ்ரீ பிள்ளையவர்கள்- போனி-நாராயணபிள்ளை யவர்கள் சமக்ஷத்தில் கொடுப்பது.

மூத்தாளாகிய அய்யாளம்மா ளெழுதிய கடிதத்தைக் கண்டவுடன், நாராயணபிள்ளை தம்முடைய வல்லமையினால் இளையாள் கலகம் முன்போல நேரிட வொட்டாமல் ஜாக்கிரதை செய்து இவர்களைப் பட்டணத்துக் கழைப்பித்துக்கொண்டு, மூத்த பாரியை கர்த்தவியத்தில் பச்சைப்ப முதலியாருக்குக் கோமளேசுவர புரத்தில் அபாரமாகச் செலவழித்துக் கர்மாந்தரஞ் செய்வித்தார்.

மேயர்சு கோர்ட்டில், முதலியார் மரணசாசனத்துக்கு நாராயணபிள்ளையவர்கள் புரோபேட்டு என்னும் ஜயபத்திரிகை பெற்றுக்கொள்ளும்போது, இது சரியான உயிலல்ல ஆதலால் முதலியார் ஆஸ்தியிற் பாதி யெனக்கு வரவேண்டுமென்று பழனியாயி தன்னுடைய அட்டரணி சித்திரப்பிள்ளை முன்னிலையில் வழக்குத் தொடுத்தும், 1794-ஞ் மேமீ 13உயில் நாராயணபிள்ளை பக்ஷத்தில் ஜயபத்திரிகை கொடுத்துக் கோர்ட்டுச் செலவு சித்திரப்பிள்ளை கொடுக்கும்படி கோர்ட்டார் தீர்த்த தீர்ப்பை யொப்புக்கொள்ளாமல் சீமைக்கு அப்பீல் பண்ணிக்கொண்டாள். அவ்விடத்திலும் முன் தீர்ப்பே காயமாயிற்று.

இந்த விவகார விசாரணையில் நடந்த ஆச்சரியமுள்ள ஒரு விந்தை உலகம் இப்படிக் கொத்ததா வென்று யோசிக்கத்தக்கதாக விருந்ததால் அதை வெளியிடுவது அத்தியந்த முக்கியமென் றெழுதலாயிற்று. அதாவது, இந்தத் தேசத்தார் தங்கள் பாரியைகளைப் பேரிட்டழையாமல் குறிப்புப் பெயரிட்டழைப்பது வழ

க்கமா யிருப்பதால், முதலியாருந் தம்முடைய இரண்டாவது பாரி யையின் பெயரைச்சொல்லி யழையாமல் அவள் பிறப்பிடமாகிய வேதாரணிய மென்னும் ஊர்ப்பெயரே அவளுக்குக் குறிப்புப் பெயராக அழைத்துக் கொண்டிருந்த வழக்கப்படி, மரணசாசன மாகிய உயிலிலும் என் இரண்டாவது பாரியை வேதாரணியமென் றெழுதியிருப்பதால், மேயர்சுகோர்ட்டில் பழனியாயி பச்சையப்ப முதலியார் பாரியையல்லள் தாதப்பிள்ளை யென்பவன் பாரியை யென்று பிரதிவாதிகள் சொல்லவும், அதற்குச் சரியாக அவனும் கோர்ட்டில்வந்து பழனியாயி தன்பாரியையென்று சாக்ஷிசொல்ல வும், விவகார விஷயத்தில் சங்கடம் நேரிட்டது. வேதாரணிய மென்று குறிப்புப் பெயர்கொண்ட இந்தப் பழனியாயி முதலியா ருடைய இரண்டாவது பாரியை யென்பதற்கு எவ்வளவுஞ் சந் தேகமில்லை யென்று அத்தியந்தம் ஊர்ச்சிதமாயும், நிச்சயமாயுஞ் சொல்லத் தக்கதாய் அனேக முகாந்தரங்க ளிருப்பதுமன்றி, முதலியாரிறந்த நாலாம்நாளே மூத்த பாரியை நாராயணபிள்ளை யவர்களுக் கெழுதிய இதிற் கண்டிருக்கிற கடிதத்தில் இந்தப் பழ னியாயியை வேதாரணியத்துச் சோழியச் சிறுக்கி யென்றும் இரண்டாவது பாரியையென்றும் எழுதப்பட் டிருக்கிறதினால் அதைப் படிப்பவர்களுக்குஞ் சந்தேகந் தோன்றுது.

பழனியாயி தான் தொடுத்த வழக்கு இவ்வாறு பிரயோ சன மில்லாமற் போகவே, மேலைக் கெப்படி யாகுமோ வென் றலோசித்துச் சித்திரப்பிள்ளை யென்பவனையே தனக்கு எக்சிகி யூட்டராக்கித் தன் பெண் குழந்தைக்கு ஆஸ்தியைச் சேர்க்கும் படி உயிலெழுதி வைத்து 1794ஸு கடைசியி லிறந்துபோய் விட்டாள். பின்பு, சித்திரப்பிள்ளை முதலியா ரெழுதிக் கொடுத் திருக்கிற ஓலைச் சீட்டின்படி பழனியாயிக்கு அதுவரையில் சேர வேண்டிய பதினாயிரம் வராகனுக்குள்ள வட்டி வரவேண்டுமென்று நாராயணபிள்ளை அய்யாபிள்ளை யிவர்கள்பேரில் வழக்கிட்டுக் கோர்ட்டாப்பு கச்சேரியில் பிரியாது பண்ணினதால், அக்காலத் தில் தர்மகர்த்தர்களாய்க் கோர்ட்டிலிருந்த இந்து பெரிய மனிதர் கள், முன் மேயர்சு கோர்ட்டில் இந்த வழக்குக் குரியவர்கள் இன் னாரென்கிற நிச்சய மின்றிச் சந்தேகப்பட் டிருப்பதனால் இத் தேசவழக்கத்தின்படி திருவொற்றியூர் வட்டப்பாறை நாய்ச்சியார் கோவிலில் பிரமாணிக்கம் பண்ணுகிறவர்கள் பக்ஷத்தில் தீர்ப்பு செய்யப்படுமென்று தெரிவித்து, நானுவித அலம்பலுக் கிடமுண் டாக்கி, இவ் விவகாரத்தில் பழனியாயிக்கு ஆதிதொடங்கிச் சகா யம் பண்ணிவந்த ரோபக் துபாசி நாகப்ப செட்டியார் முன்னிலை யில் சித்திரப்பிள்ளைக்குக் கொஞ்சம் பொருள்கொடுத்து அவன் சல்லியத்தை நீக்கிவிட்டார்கள். இவனுடன் ஊர்போய்ச் சேர்ந்த முதலியார் பெண் குழந்தையுஞ் சில நாளி லிறந்துபோய்விட்டது.

முதலியார் தமக்கை சுப்பம்மாள், அவர் பெண்சாதி அய்யாளம்மாள் இவர்களிருவரும், அதுவரையில் தங்கள் ஆஸ்தியிற் செலவழிந்தது போகப் பிள்ளையவர்களிடத்தில் நின்ற ரொக்க விருப்புப்பூவராகன் 116,300-க்கும், லாவாதேவியில் வரவேண்டிய பாக்கி அசல் பூவராகன் 120,214-க்கும் கணக்குத் தீர்மானமும், தர்மங்களைச் சூரிய சந்திரர்களுள்ள நாள்வரைக்கும் பிள்ளையவர்களும் அவர் வம்சஸ்தர்களும் நடத்தும்படி உடன்படிக்கையும் 1796௵ ஜனவரி௴ 9௳யில் செய்துகொண்டு, அத்தியந்த சுந்தரவுன்னதமாக விருக்கும்படி சிதம்பரத்துக் கீழண்டைக் கோபுரம் * முதலியார் கட்ட வெத்தனித்தது நிறைவேறுவதற்குமுன் தமக்கு அந்தியதிசை நேரிட்டதால், அதற்குச் செல்லுமான திரவியங் கொடுத்துக் கட்டும்படி உயிலிலெழுதின பிரகாரம் அந்தத் திருப்பணியைப் பிள்ளையவர்களுத்தரவின்படி நிறைவேற்றி, அவருடைய சம்ரக்ஷணையிற் கோமளேசுவர புரத்திலுந் தெற்கேயிருக்கும் புண்ணிய ஸ்தலங்களிலுமாக வாசம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். முத்தையா முதலி தனக்கு மிகுந்த ஆஸ்தி கிடைக்காமல் சகல பாக்கியத்தையுங் கைம்பெண்டாட்டிகள் அனுபவிக்கும்படி நேரிட்டதேயென்கிற பொறாமையினால் அவர்களைத் தூஷித்துக்கொண்டு, தஞ்சாவூரிலிருக்கும் முதலியார்வீட்டில் தன் சமுசாரத்துடனிருந்தான். சுப்பம்மாள், தேகஜாட்டியத்துடன், கும்பகோணத்திலிருந்து கோமளேசுவர புரத்தில் முன் தன்னுடைய தம்பி கட்டிய வீட்டுக்கு வந்துசேர்ந்து, 1802௵ ஜனவரி௴த்தில் சிவபதஞ் சேர்ந்தாள். நாராயணபிள்ளை விஸ்தாரமாகத் திரவியஞ் செலவழித்துத் தஞ்சாவூரிலிருந்துவந்த முத்தையா முதலியைக் கொண்டு கர்மாந்தரஞ் செய்வித்து, அடுத்த நவம்பர்௴த்தில் தாமும் பரமபதஞ் சேர்ந்தார். இவர் முதலியாருக்கும் அவருடன் பிறந்தாளுக்குஞ் செலவழித்ததைப் பார்க்கிலு மதிகமாக, இவர் கர்மாந்தரத்துக்கு அய்யாபிள்ளை லக்ஷம் வராகன் வரையில் விரயம் பண்ணினார். விபரமாவது:

இறந்துபோன ஆத்மாவுக்குக் கண் தெரியக் கண்ணாடி, காது கேட்கவும், வாய்பேசவும் மணி, வைதரணியென்னும் நெருப்பாற்றில் நடக்குந் தர்ம ஸ்வரூபமுள்ள கோவின் வாலைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு அந்த ஆற்று நெருப்பிற் படாமல் கடப்பதற்

---

* இந்தத் தர்மவான் புண்ணிய ஸ்தலத்துக்கு அழகாயிருப்பதுமல்லாமல் தூரத்திலிருப்பவர்களுங்கண்டு தரிசித்து முத்தியடையவும் ஏதுவாயிருக்குமென்று நல்ல மனதுடன் இக் கோபுரத்தைக்கட்ட நினைத்தாராகையால் இவரெண்ணத்தின்படி நிறைவேறச் செய்தருளியது மன்றித் தேசாந்தரங்களிலும் இவர்பேர் விளங்கும்படி கடவுள் திருவுளங் கொண்டது இனிவருஞ் சரித்திரங்களினாற் றெரியவரும்.

குக் கோதானம் இவை முதலிய சில தானங்கள் இந்தத் தேசத்தார் முக்கியமாகத் தங்கள் சக்திக்கேற்ற மட்டில் கொடுப்பதிலும் விசேஷமாக, கறுப்புப் பட்டு வஸ்திரங்களுடன் விலையுயர்ந்த பலவித ஆபரணங்களணிந்து யானையுங் கொடுத்துத் தானம் வாங்கினவனை அதன்மேலேற்றிப் புகை மத்தியில் போகும்படி செய்கிற * கஜதானமும், ஒரு கன்னியை விலைக்கு வாங்கி அவளுக்கும் தானம் பெற்றுக் கொள்ளுகிறவனுக்கும் வஸ்திராபரணங்களலங்கரித்து வீடு முதலிய சகல வஸ்துக்களுடனுஞ் ஜீவனாம்சத்துக்குப் போதுமான தனத்துடனுங் கொடுக்கிற ஸ்திரீ தானமும், ஒரு சேங்கன்றையுங் கிடாரியையுங் கிரயத்துக்கு வாங்கி யதேச்சையாய் மேய்ந்துகொண்டுதிரியும்படி விட்டுவிடுகிற † ரிஷபோச்சருச்சனமும், ஒரு பிராமணச் சிறுவனுக்குக் கர்ம யோக்கியதை யுண்டாகும்படி செய்விக்கப் பொருள் கொடுக்கும் உபநயன தானமும், பிரமசாரியானவன் தன் குலத்தில் ஒரு கன்னிகையைச் சம்பாதித்து விவாகம் பண்ணிக்கொண்டு கிருகஸ்தனாய் வாழ்வதற்கு வேண்டிய பொருளைக் கொடுக்கிற கன்னிகா தானமும், பிராமணர்கள் நித்திய கர்மானுஷ்டானங்களுக்குக் குறைவுவராமல் ஜீவனம் பண்ணுகிறதற்குக் கொடுக்கும் பூதானமும், ஏறிக்கொண்டு சஞ்சரிப்பதற்குக் கொடுக்கின்ற வாகன தானமும், இன்னமு முள்ள பலவித தானங்களுங் கொடுத்ததுமன்றி மற்றப் பிராமணர்களைக் கும்பலாகச் சேர்த்து, அந் நாளிற் பூவராகனென்று வழங்கிய குண்டு வராகன்களைக் கைகொண்ட வரையில் பிடியாயுஞ் சில்லறைகளாயும் பூரிகொடுத்து ஆலண்டு அய்யாபிள்ளை வீடுபோய்ச் சேர்ந்தார். பின் இவர்க் குரியவர்கள் அரைவராகனுங் கால்வராகனுமாக இராத்திரிகாலம் வந்துங்கொடுத்தார்கள்.

நம்முடைய தேசத்தார்க்கு இறந்துபோன பிதாவினிடத்திலிருக்கும் விசுவாசத்தினால் செல்வமில்லாதவனுந் தன் தகப்பனார் செவ்வையாகப் பிழைத்தவராதலால் கடனாவதுவாங்கிப் பிதிர்கர்மஞ் சிறப்பாகச் செயய வேண்டுமென் றெண்ணி நடத்திப் பிற்பாடு கடன்கொடுத்தவன் வந்து கேட்டால் கொடுக்க வகையில்லாமல் திருடனைப்போல் பதுங்கி வருத்தமடைந்து, நமக்குள்ள மட்டிற் செய்யாமல் வீணில் கடன் வாங்கி என் செய்தோமென்று எண்ணாததுமெண்ணுகிறான். கொஞ்சம் செல்வமுடையவனோ வென்

* இந்தத்தானம் வாங்கிக் கொள்ளுகிற பிராமணன் தன் குலத்துக்குரிய சந்தியாவந்தன முதலாகிய ஒழுக்கங்களிற் றவறாதவனாயிருந்தால் தான் வாங்கிக்கொண்ட தானப்பொருளைத் தன்போலிருக்கிற பிராமணர்களுக்குத் தானமாகக் கொடுத்துக் காயத்திரி ஜபத்தினால் தோஷ நிவிர்த்தி செய்துகொள்ளுவான். இவ்வாறு செய்யாவிட்டால் அந்தத் தோஷம் நிவிர்த்தியாகாது.

† இவைகண்ட பயிரையெல்லாம் மேயலாம்.

ருல் பேய்த்தனமாகத் தனக்குள்ளதை யெல்லாஞ் செலவழித்து விட்டுப் பின்பு ஜீவனும்சத்துக் கொன்றுமில்லாமல் விதனப் படுகிருன். செல்வ மில்லாதவன் கொஞ்சம் புத்திசாலியாயிருந்து தனக்குள்ள மட்டிற் செய்ய எத்தனித்தால் தாய் முதலானவர்கள்செய்யுந் தொந்தரவினுல் தன்சக்திக் கதிகமாகச் செலவழித்துக் கடனுக்குள் ளாகிறுன். இப்படிக்கெல்லாஞ் செய்யாமல் தன் ஆஸ்திக்குஞ் சம்பாதனைக்குந் தகுந்தபடி பிதிர்கர்மத்துக்கும் லோபமில்லாமல் செய்ய வேண்டும். அபாரமான திரவிய முள்ளவன் எவ்வளவு செலவழித்தாலுஞ் செலவழிக்கலாமேயென்ருல், அவன் அப்படிச் செலவழிப்பதைவிட்டுத் தானுதிகள் செய்யவேண்டிய மட்டிற் செய்து, தன் குடும்ப சம்ரக்ஷணைக்குப் போதுமான முதல் வைத்துக்கொண்டு மேல்அதிகமுள்ள ஆஸ்தியை அசையாப்பொருளாக வேறுபடுத்தி, அதன் வருமானத்தைக் கொண்டு தானதர்மங்கள் நீடுழியாக நடக்கும்படி செய்தால் புண்ணியமும் புகழுந் தன் சந்ததிதோறும் மாருமல் விர்த்தியாகிக்கொண்டிருக்கும். ஒருவன் சம்பாதிக்கும் பொருளை நாலு பங்காக்கி, ஒருபங்கு தன் சம்சார சம்ரக்ஷணைக்கும், ஒருபங்கு தர்மத்துக்கும், மற்ற இரண்டு பங்கு தனக்கு ஏதாவது சங்கடம் நேரிடுங்காலத்தில் உதவுதற்கும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சாஸ்திரம் சொல்லுகின்றதே தவிரத் தனக்குக் கிடைக்கும் பொருளையெல்லாந் தர்மத்துக்கே செலவழிக்கும்படி சொல்லவில்லை. ஆதலால், நாம் அந்தக் கிரமத்தில் நடப்பதே உத்தமமா யிருக்கின்றது.

நாராயணபிள்ளை இறந்தபின் அய்யாபிள்ளைமுதலியாருடைய சமஸ்த தர்மங்களையும் நடத்துகையில், இவரனுமதி பெற்றுக் கொண்டு முதலியார் பெண்சாதியாகிய அய்யாளம்மாள் துந்துபிஞு தைமாசத்தில் திருவிடைமருதூரில் தன் தாயார் பெயரால் அக்கிரகாரங்கட்டிப் பிராமணர்களுக்குத் தானமாகக் கொடுத்தாள். கும்பகோணந் தாலுக்காவைச்சேர்ந்த பட்டீசுவரம் குவாரசுவாமி பண்டாரத்தின் மகன் சிவசிதம்பர மென்பவனை ஐந்நூறு பொன்னுக்குவாங்கிச் சுவீகாரபுத்திர னுக்கிக்கொண்டு விவாகமுஞ் செய்வித்தாள். அய்யாளம்மாளுடைய கிரியாணகாலத்தில் பஞ்சநத அய்யனென்பவன் செய்த துர்மார்க்க வேடிக்கை உலகமறிவதற்காக எழுதப்படுகின்றது. ஒருநாள் ராத்திரி அய்யாளம்மாள் பிராமணர்கள் சூழ்ந்துவரக் கும்பகோணத்துச் கோவிலுக்குள் போகும்போதுகுதிகாலில் தேள்கொட்டினுற்போல் சுறுக்கிட்டு இன்னதென்று தெரியாமல், சிலர் விஷக்கல் மிதித்தாளென்றும், ஆகாதவர்கள் சூனியம் வைத்தார்களென்றும் பலவாருக நினைத்துப் பலமான மந்திரங்கள் ஜபதபங்கள் பண்ணி நானுவிதப் பற்றுகளைப் போட்டு மருந்துங் கொடுத்து, ரோகத்தின் காரணத்தை யறிந்து கொள்ள யோக்கியதை யில்லாத வைத்திய மூடர்களும், மந்

திரப் பிரஷ்டர்களும் கூடிப் பலவிதச் சிகிச்சை செய்துஞ் சௌக்கியப் படாமையினால், இனி அம்மாள் பிழைக்கமாட்டா ளென்கிற குறிப்புத் தெரிந்துகொண்டு முதலியா ரிறந்தபின் பதின்மூன்று வருஷகாலம் அய்யாளம்மாள் வீட்டில் காரியஸ்தனாயிருந்த பஞ்சநத அய்யன் இந்த அம்மாளுடைய ஆபரணங்களையும், ரொக்கங்களையும் ரகசியமாக அபகரித்துக் கொள்வதற்காக வீட்டிலிருந்த மனுஷியர்களையெல்லாம் வெளியில் துரத்தஒருஉபாயமெடுத்தான். தனக்குச் சரமதசை நேரிட்டதென்றறியாத அம்மாளுக்கு இடம்பேதித்தால் குணமாகு மென்று இந்தப்பாவி போதித்துக் கானுபத்திரவத்துடன் அகோரமான கூக்குர லிடுகிறவளை ராத்திரிகாலத்தில் பல்லக்கின் மேல் திருவிடை மருதூருக்குக் கொண்டு போகும்படி செய்து தானுங்கூட வருவதுபோல் சாடை காண்பித்துப் போகாமல் வீட்டிலிருந்த ஆபரணமுதலிய ரொக்கங்களையெல்லா மெடுத்து டோலியில் வைத்து ரகசியமாகத் திருவையாற்றிலிருக்குந் தன்சொந்த வீட்டுக்கு ரவானாப் பண்ணிக்கொண்டு போய்ச் சேர்ந்தான். அம்மாள் மறுநாள் அனேகரை யனுப்பி வரவழைத்தாலும் போகாமல் தாமதஞ் செய்து கொண்டே யிருந்தவன் அம்மாளுக்குப் பிரஞ்ஞை தப்பியிருக்கின்ற தென்று சீட்டெழுதிக் கோவில் யானை மீதில் துரிதமாக அனுப்பியதைப் பார்த்தபின்பு திருவிடை மருதூருக்கு வந்து, சாகக்கிடக்கிற பிணத்தைப் பல்லக்கின்மே லெடுப்பித்துக் கொண்டு போய் அன்று ராத்திரி கும்பகோணத்தில் சேர்ந்தான். 1817ளு பிப்ருவரிமீ 27உக்குச் சரியான பிரபவளு மாசிமீ 18உயில் இந்தப் புண்ணியவதி சிவபதஞ் சேர்ந்தாள். இச் சேதி இந்த அம்மாளுடன் கூடவிருந்த காமு என்பவள் தஞ்சாவூரிலிருக்குந் தன் தகப்பனாகிய முத்தையா முதலிக்குத் தெரிவிக்க, அவன் சமுசாரத்துடன் கும்பகோணத்துக்கு விரைவாக வருவதற்கு முன்னே, பஞ்சநத அய்யன் சிவசிதம்பர மென்பவனைக் கொண்டு தகனஞ் செய்வித்தான். பின்பு, கிரயத்துக்கு வாங்கிச் சுவீகாரம் பண்ணிக் கொள்ளலா மாகையால் சிவசிதம்பரமே கர்மம் பண்ணத் தக்கவனென்றும், திக்கில்லாத அம்மாளாஸ்தி தனக்குக் கிடைக்கவேண்டுமென்கிற எண்ணத்தினால் இறந்தவளுக்குக் கர்மம் தான் செய்யவேண்டுமென்று வந்த முத்தையா செய்யக் கூடாதென்றும் அவ்விடத்தி லிருந்த அதிகாரிகளால்தீர்மானமாயிற்று. மறுமீ 27உயில்அய்யாளம்மாள் கர்மாந்தரத்தை அய்யாபிள்ளையினுடைய அனுகூலத்தினால் நிறைவேற்றி அவருத்தரவின்படி பட்டணத்துக்குவந்து, பஞ்சநத அய்யன், காமு, சிவசிதம்பரம், இவன் பாரியை இவர்கள் கோமளேசுவர புரத்திலிருக்கும் முதலியார் வீட்டிலும் முத்தையா பட்டணத்திலுமாக விருந்தனர். பஞ்சநத அய்யன் அய்யாளம்மாள் நாள்போலவே தனக்குச் செல்வங் கிடைக்கவேண்டு மென்னும் எண்ணங்கொண்டு சுவீகார புத்திரனாகிய சிவசிதம்பரத்துக்கே

ஆஸ்தி சேரத் தக்கதென்று அய்யாபிள்ளையுடன் சொல்லிக்கொண்டான். அவர் அதற் கனுகூலமாய்த் தர்மத்துக்கு வைத்த லக்ஷம் வராகன்தவிர ஆஸ்திவேறே யதிகமாயில்லை யென்றும், அந்தத் தர்மத்தை வம்சபரம்பரையாகத் தாங்களே நடத்தத் தக்கவர்களென்றும், வீணில் இருதிறத்தாரும் வழக்காடிக் கெட்டுப்போக வேண்டாமென்றும் நயபயமாக முத்தையா முதலியுடன் சொல்லிக்கொண்டு, இந்தக் கும்பல்களுக்கெல்லாம் போசனச் செலவு கொடுத்துக் காலஹரணம் பண்ணிக்கொண்டு வந்தார். அபார தனமுடையவனிறந்தபின்பு அவன்ஆஸ்தி திக்கில்லாமலிருக்குமானால்அதைக் கூடினமட்டும் அபகரிக்க அபேக்ஷை கொள்ளுகிறதன்மை இந்தத் தேசத்தி லதிகமா யுண்டாயிருக்கிறதற்கு அனுகூலமாய்,ஸ்திரீகள் சுத்த மூடர்களாயும், மகராசன் பிள்ளைகள் படிப்பில்லாமல் விவேக சூனியர்களாயு மிருப்பதால், முதலியார் ஆஸ்தியின் திசையை யறிந்த மணலி சின்னையாமுதலியார் சிவசிதம்பரத்தை முன்னிட்டு அய்யாபிள்ளை யிடத்திலிருக்கிற ஆஸ்தியை வாங்கவேண்டுமென்று கோமளேசுவர புரத்திலிருந்தவனை ராத்திரிகாலத்தில் ரகசியமாக அழைப்பித்துக்கொண்டு, அவனைக் கைக்குள் வைத்திருந்த பஞ்சநத அய்யனை அனுதையாக்கி முத்தையா முதலியையுந் தாம் கலந்துகொண்டால், அய்யாபிள்ளைக் கிடமிராதென் றெண்ணி, அதற்கேற்ற சில முயற்சிகள் செய்துவந்தார். பஞ்சநத அய்யன் பிள்ளைக்குக் கூடினமட்டு மனுகூலனா யிருந்தாலுந் தன் எண்ணம் அடியோடே கெட்டுப்போகின்ற தென்கிறபயத்தினால் சின்னையா முதலியாரிடத்திற் சேர்ந்து தடுமாறிக்கொண்டிருந்தான். இப்படிக் கொத்த மோசஞ் செய்தானென்கிற துவேஷத்தினால், முதலியார் ஆஸ்தியைப் பஞ்சநத அய்யன் அபகரித்தானென்று அய்யாபிள்ளை வகைராக்கள் வாரண்டு வாங்கிக் கோமளேசுவரபுரத்தில் முதலியார் வீட்டிலிருந்தவனைப் பிடித்துக் கோர்ட்டுக் கிடங்கில் வைக்க, சின்னையா முதலியார் ஜாமீன்கொடுப்பித்து விடுவித்தார். பின், மணலியில் சிவசிதம்பரத்துட னிருந்துகொண்டு இந்த மகாபாவி மது மேகரோகத்தினா லுபத்திரவப்பட் டிறந்தான். காமு கோமளேசுவர புரத்துக்கு வந்தபின் அவ்விடத்திலிருக்குஞ் சில ரனுகூலத்தினால் முதலியார் வீட்டில் சீல் என்னும் அரக்கு முத்திரை போட்ட அறைகளைத் திருட்டுத்தனமாகத் திறந்து உள்ளேயிருந்த ஆபரணங்களை யபகரித்து கொண்டு சந்தோஷத்துட னிருக்கும்போது, மணலியில் தடுமாறிக் கொண்டிருந்த சிவசிதம்பரமும் இறந்தான். இவன்மாமனார் தன்மகளுக்குத் தன் புத்திரனைச் சுவீகாரஞ் செய்வித்து அவர்களுக்கு முதலியா ராஸ்தி சேரவேண்டு மென்று அலைந்துகொண்டிருக்கையில், இவன் மகளுமிறந்து இவனுந் தடுமாறித் தொலைந்தான். 1809ஞ அக்டோபர் மாசத்தில் அய்யாபிள்ளை யென்னும் புண்ணியவான் பரமபதஞ் சேர்ந்தார்.

இப்பட்டணத்தில் யாரும் நிகரில்லாமல் இங்கிலீஷ் பாஷை யைச் சாதீகமாகப் பேசத்தக்க வல்லமை யுள்ளவராயும், இராச காரியங்களில் இங்கிலீஷ் துரைத்தனத்தாருக்கு உபயோகமானவ ராயும், இந்தத்தேசத்துக் கவர்னர்களுக்கு ஆப்தராயும், தஞ்சா வூர்த் தொல்ஜா மகாராசாவுக்குப் பட்டங்கட்டினபோது கும்பினி யார் தர்பில் தாமும் போயிருந்து தகுந்த சந்திசெய்வித்த சக்தியை யுடையவராயும், பாரிஷ் பாஷையில் தமக்குள்ள வல்லமைக்கு மெச்சிக காஞ்சிபுரத்துக்குச் சமீபத்தி லிருக்கும் அம்பிகிராமத்தை நபாப் வாலாஜா அவர்கள் ஜாகீராகக் கொடுக்கப் பெற்றவராயும், பிரபல ஜமீன்தாரர்களுக்கெல்லா முபகாரியாயும், கீர்த்தியே ஆஸ்தி யென்று நினைத்து நடப்பவராயும், ஆந்திர திரவிட சமஸ்கிருத வித்துவானுகியும், யாவரும் புகழத்தக்க மகா யோகவானுகியு மிருந்த பவழந் தாங்கல் தெளிசிங்க பிள்ளை யென்னுந் தயாள குணமுள்ள புண்ணியவான் போனி நாராயணபிள்ளையவர்கள் பிர தம குமாரத்தியை விவாகம் பண்ணிக்கொண்டிருந்ததால், அய் யாபிள்ளை யிறந்துபோனபோது அவர் குமாரர் அண்ணுசாமி பிள்ளை பாலிய ராகையால் அந்தக்குடும்பத்துக்குத் தாம் ஆத ரவாய் அவர் காரியங்களை நடத்திவந்தார். முத்தையா முதலி பச்சையப்ப முதலியார் குடும்பஸ்தர்களில் தாமொருவனே சீவந் தனு யிருக்கிறபடியால் தன்னை அவர் ஆஸ்திக்குப் பாத்தியஸ் தனுக்கிச் சொத்துகளைக்குறித்துத் தன்னுடன் நாராயண பிள்ளை யினுடைய வார்சுதாரர்கள் கணக்குத் தீர்மானம் பண்ணிக் கொள்ளும்படி செய்யவேண்டுமென்று இந்தப்பிரபுவுடன் நானு விதமாகச் சொல்லிக் கொண்டும் அது கூடி வராமையினுல், நாராயணபிள்ளை பேரரும் அய்யாபிள்ளை புத்திரருமாகிய நெய்த வாயல் அண்ணுசாமி பிள்ளையவர்கள்பேரில் தன் அம்மான் பச் சையப்ப முதலியார் ஆஸ்தி அஞ்சுலக்ஷம் வராகன் வரையில் தனக்குச் சேரவேண்டுமென்று சென்னபட்டணம் சுப்பிரீங்கோ ர்ட்டில் 1810௵ ஆகஸ்டு௴ 11ௗயில் வியாச்சியந்தொடங்கினுன். அண்ணுசாமிபிள்ளை பிரதியுத்தரம் சொல்வதற்குமுன் 1811௵ ஜூலை மாசத்தில் முத்தையாமுதலி இறந்துபோய்விட்டான். கோமளேசுவர புரத்தில் தனியே குடியிருந்த காமு என்பவள், இரண்டாவது பாரிசை குமாரன் அய்யாசாமியும் தானும் பச் சையப்ப முதலியார் ஆஸ்திக்குப் பாத்தியஸ்தர்களென்று சிலரு டைய உபாய தந்திரங்களினுல் மரண சாசனமென்கிற உயிலொ ன்றை யேற்படுத்திச் சாகக்கிடந்த தகப்பனிடத்திற் கையெழு த்து வாங்கிக்கொண்டாள். பின்பு கடைசிபாரியாள் சிவகங்கை காமு இவர்களிருவருடன் அண்ணுசாமிபிள்ளை சந்தி சமாதான ங்கள் நடத்திக்கொண்டிருக்கையில், காமு அய்யாசாமியைத்தன்னி டத்தில் வைத்துக் கொண்டு தன் தகப்பன் உயிலை யனுசரித்து அவன் கொண்டுவந்த வழக்கை அண்ணுசாமிபிள்ளைபேரில் நட

த்தினதால், அவர் 1812ஹு ஜூன்மீ 6உயில் பிரதியுத்தரஞ்சொல்லி வழக்கு நடக்கும்போது, 1814ஹு பிப்ருவரிமீ 22உயில் இவர்களுடன் உடன்படிக்கைபண்ணிக்கொண்டார். அந்தச் * சந்தி சரிப்படாமல் 1816ஹு பிப்ருவரிமீ 14உயில் திக்கற்ற முதலியார் ஆஸ்தியென்று ரூ. 42,080-க்கு கம்பேனிப் பத்திரங்களையும், ரூ. 200,000-க்கு இதரர்கள்பேரில் வரவேண்டிய பாக்கிப்பத்திரங்களையும், தஞ்சாவூர் ராசா பச்சையப்ப முதலியாரிடத்தில் கொது வைவைத்த ஆபரணங்களையும் அண்ணுசாமிபிள்ளை கோர்ட்டில் பொதுக்கட்டினார். இதுவரையில் ஏறக்குறைய நடந்துவந்த முதலியாருடைய சிவதர்மங்கள் அடியோடே நின்றுபோயின. ஆனால் சமஸ்தசெலவும்போகவருஷமொன்றுக்கு 700-ரூபாய்800-ரூபாய் வருமான முள்ளதாய்த் தஞ்சாவூர்ச் சீமையில் முதலியாருக்குச் சுரோத்திரியமாக மகாராசாவாற் கொடுக்கப்பட்ட தென்னங்குடி யென்னுங் † கிராமம் கும்பகோணத்துக்கடுத்த திருப்பனந்தாளில் இருக்கும்காசிதம்பிரானவர்கள் வசத்திலிருந்ததால் அதன் வருமானத்தைக்கொண்டு அவர் சிதம்பரத்தில் சாயரக்ஷைக் கட்டளையை மாத்திரம் நடத்திவந்தார். இந்த ஆதீனத்தார் வாரணாசி யென்னுங் காசிமகா க்ஷேத்திரத்திலுந் திருப்பனந்தாளிலும் மடங்கட்டிக்கொண்டு அபாரமான பூஸ்திதிகளின் வருமானங்களினால் இந்து சம்பந்தமான அனேகதேசத்தார்களுடைய தர்மங்களை அவ்விடத்திலும் இவ்விடத்திலும் நெடுங்காலமாக நடத்தி வருகின்றவர்கள். இந்த மகான்கள் வசத்தில் முதலியாருடைய கிராமஞ் சேர்ந்திருந்ததால் அவர் தர்மங்களி லொன்றுவது நடந்தது.

இத்தேசத்தி லிருக்குஞ் செல்வமுடையவர்களிற் சிலர் தங்கள் சிறுவர்களைச் சிறுவயதில் விளையாடுகிற சுபாவத்திலிருந்து நீக்கிக் கண்டிப்பாக நிர்த்தாக்ஷிண்யத்துடன் வித்தியா விஷயத்தில் கஷ்டப்படுத்திக் கல்விகற்பித்தால் விவேக முடையவர்களாய் நன்மை தீமைகளையறிந்து யோக்கியர்களுடன் சேர்ந்து ஒருதொழில் செய்யவுந் தகுதியுள்ளவர்க ளாவார்களென் றெண்ணமல் ஆசையினால் செல்வஞ் செல்லமென்று அருமை பாராட்டி வளர்த்து அந்தச் சிறுவர்க ளிஷ்டப்படி நடக்க விட்டுவிடுகிறார்கள்.

* சிவதர்மத்தில் முதலியாருக் குண்டாயிருந்த உறுதியையும், தமக்குச் சந்ததி யில்லாததால் கடவுளே யிதைக்காப்பாற்ற வேண்டுமென்று நம்பியிருந்தா ரென்பதையும், அக்கடவுள் இவர்கோரிய தர்மத்தை நடத்துவதிலும் அதிகமாக இவர் புகழ் உலகத்தில் மேன்மேலும்விளங்கும்படி செய்வதையும் உலகத்தோ ரறிந்து நடக்க அனுகூலமாக இந்தச் சந்தி சரிப்படாமல் தமொறும்படி செய்த அவாருளை யாரறியவல்லர்!

† அந்தக் கிராமத்தை சுப்பிரீம் கோர்ட்டு உத்தரவின்பிரகாரம் ட்ரஸ்டீகள் முதலியார் தர்மச்சொத்துடன் சேர்த்துக்கொண்டார்கள்.

இதுவுமல்லாமல் அண்டை யசலி லிருப்பவர்கள், அவனுக்கென்ன ஆகர்ப்ப சீமான், வைத்துக்கொண்டு தின்றாலும் ஆஸ்தி பத்துத் தலைமுறைக்குப் போதுமானதென்று புகழ்ந்து பேசுகிறார்கள். இவ்வகையினால் அவர்கள் மூடர்களாய் யவ்வனத்திலேதானே துன்மார்க்கங்களில் வியாபிக்கிறார்கள். நன்மார்க்கத்தில் சீவனம் பண்ண யோக்கியதை யில்லாத சில போக்கிரிகள் அவர்களுக்கு நேசர்களாய்ச் சேர்ந்து வேசிகள் வியாபாரத்துக் கனுகூலங்களுங் கடனுகப் பொருளுங் கிடைக்கும்படி செய்து தாங்கள் சீவனம் பண்ணுகிறார்கள். தங்களைக் கெடுக்கவந்த மோசக்காரரென் றறியாமல் அவர்கள் துர்ப்போதனைக் குட்பட்டு அந்தச் சிறுவர்கள் பிதிரார்ச்சிதங்களை யெல்லாஞ் செலவழித்துக் கடன்காரர்களாகித் தேகாரோக்கியமுந் தப்பினபோது, முன்னிருந்த நேசர்களும் யவ்வன சேஷ்டையினால் நேரிட்டமாதர்களும் அடியோடே நீங்கிவிடுகிறார்கள். சிறுவர்களோவென்றால், கல்வித்திற மில்லாமையினாலும் யோக்கியர்கள் நேச மில்லாமையி னாலும் பெரிய உத்தியோகங் களுக்குத் தகுந்தவர்க ளாகாம லிருப்பதுமன்றி ஆதியில் ஐசுவரிய வான்களின் புத்திரர்களாய்ச் சிரமப்படாம லிருந்த சுகுமாரத்தினாலும், வெட்கத்தினாலுஞ் சிறிய தொழில்களைக் கஷ்டப்பட்டுச் செய்யமாட்டாமலுந் தபிக்கிறார்கள். இப்படிப்பட்ட சிறுவர்களிலொருவன் முத்தையாமுதலியி னிரண்டாவதுபாரியை குமாரன் அய்யாசாமி. அவன்நடத்திய வேடிக்கையைக் குறித்து இதனடியி லெழுதி யிருப்பதைப் பார்த்தால், வித்தையில்லாத சிறுவன் நடத்தையிப்படிக்கொத்த தென்றும், அவனுக்கு வருங் கெடுதி இன்னதென்றும், பிறர்நகைக்கும்படியான தன் கிருத்தியத்தைத் தானறியா திருப்பது அவன் இயற்கையென்றுந் தெரியலாம். காமு, தன் தகப்பனிறந்தபின் அய்யாசாமியைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு அவனெப்படிக் கெட்டாலுந் தனக்கு அக்கறை யில்லாமல், வியாச்சியமாடி அண்ணுசாமி பிள்ளை யிடத்தி லிருக்கிற முதலியார் ஆஸ்தியை வாங்கி அவனுந் தானும் பங்கிட்டுக்கொண்டால் போதுமென்கிற வெண்ணத்துடன் இந்தச் சிறுவனுக் கிஷ்டமானபடி யெல்லாஞ் செய்து, தன்தகப்பன் அண்ணுசாமி பிள்ளைபேரில் கொண்டுவந்த வழக்கை உயில் மூன்னிலையில் நடத்திவருகையில், கஷ்டப்பட்டுச் சீவனம் பண்ண யோக்கியதை யில்லாத சிலர் அய்யாசாமி யிடத்தில் சேர்ந்து, இதுவரைக்குங் காமு நடத்திய சப்பிரமங்களைவிட அதிக வேடிக்கை விநோதங்களை யுண்டாக்கி அதற்குக் கடன் கொடுக்கும் அயோக்கியர்களையு மேற்படுத்தி, காமுவுக்குப் பங்கு ஏன் கொடுக்கவேண்டும் நீயே முதலியார் ஆஸ்தியெல்லா மனுபவிக்கலாமென்று பேராசையைக் காட்டி, அவளிடத்தி லிருந்த இவனை வெளிப்படுத்தினார்கள். இவன் முன் காமுவுடன் கலந்துகொண்டு பிள்ளைபேரில் நடத்திய வியாச்சியத்துக்குச் சர்வவிதத்

திலு மாறுதலாக, லாயர்துபாசி பாலியப்பமுதலி துர்ப்போதனையினால் தன் தகப்பன் உயில் பொய்யெனவும், தான்தெரியாமல் அசத்தியம் பண்ணினதாகவும், முதலியார் ஆஸ்தி முழுமையுந் தனக்கே வரவேண்டுமெனவும் அண்ணாசாமி பிள்ளை காமு இவர்கள்பேரில் கோர்ட்டிலே வேறே வழக்கிட்டான். அதற்குப் பிரதிவாதிகள் காலோசிதமான பிரதியுத்தரஞ் சொன்னார்கள். இத்தேசத்தில் ஐசுவரியவான்களுடைய பிள்ளைகளுக்கும் வியாச்சியங்களுக்குங் கடன்கொடுத்து விஸ்தார லாபத்தைச் சம்பாதிக்கவேண்டுமென்கிற நினைப்புள்ள சிலரிடத்திலும் லாயர்வீட்டிலுந் திரிந்து சேவைபண்ணுங் கூக்கு ராமசாமி நாயக்கர், பாலியப்பமுதலி யிவர்கள் மூலமாகக் கடன்வாங்கி நடத்திய வியாச்சியத்தின் வேடிக்கையாவது: சூப்பிரீங் கோர்ட்டில் விவகாரங்கள் இத்தனை நாளையில் இவ்வளவு விரயத்தில் தீருமென்கிற ஏற்பாடு எவ்வளவு மில்லாமையால், இவன் வியாச்சியமும் அப்படித் தடுமாறிக்கொண்டு, மேலு மேலுங் கடன்கிடையாமல், அலைந்துகொண்டிருந்தது. அப்போது, முன் கடன் கொடுத்தவர்கள் இவனுக்கு அதிக பீடுகாலம் வருவதற்குமுன் தங்கள் பணத்தை வாங்கிக்கொள்ளவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு இவனைக் கோர்ட்டுக் கிடங்கில் வைத்தார்கள். பின்பு, பாலியப்பமுதலி யிறந்துபோனார். கூக்கு ராமசாமி நாயக்கர் இவ்விடத்தைவிட்டு மற்றொருதேசத்துக்குப்போய்விட்டார். அய்யாசாமி, தன் வைப்பாட்டி, அவள் பிள்ளை இவர்களுடன் சிலநாள் கிடங்கிலிருந்து, பிரமாதி௵ ஆவணிமீ 26௳ இறந்தான். காமு தன் யவ்வனம்மாறியதால் கோர்ட்டில் வழக்கை நடத்தத்தக்க ஆதரவின்றிக்கஷ்டதசையி லிருந்தே அடுத்த புரட்டாசிமீ 22௳ இறந்துபோனாள். பச்சையப்பமுதலியார் முத்தையாமுதலிக்காகக் கவுண்டாண்டு ஜெனரலாபீசில் வைத்த சொத்தின் வட்டி மாசம் ஒன்றுக்கு 30-ரூபாயாக-இப்போதும் பற்றிக்கொள்ளுகிற முத்தையா முதலியினுடைய அஞ்சாவது கடைசிபாரியை சிவகங்கையென்பவள் அண்ணாசாமிபிள்ளை பேரில் தொடங்கிய வழக்கும் நடவாம லிருந்தது. முதலியாரிறந்த தினமுதல் 47௵ பரியந்தம் மேயர்சுகோட்டு, ரிகார்ட்டுசுகோர்ட்டு என்று ஒன்றின் பின் மற்றொன்று உண்டாகிப்போயும், முதலியார் ஆஸ்தியைச் சேர்ந்த வழக்குப் போகாமல் விஸ்தாரஞ்செலவு பிடிக்கின்ற சூப்பிரீம் கோர்ட்டில் நடக்குமேயாகில், எவ்வளவு நஷ்டங்களை இந்த ஆஸ்தி யடையத்தக்கதாயிருக்குமோ அதை நினைக்கும்போது இதைப் படிப்பவர்கள் மனது ஆராமைப்படாம லிராது. பச்சையப்ப முதலியாருடைய ஆஸ்திக்குப் பாத்தியஸ்தர் இந்த உலகத்தி லில்லாமையால், அண்ணாசாமிபிள்ளையவர்கள் கோர்ட்டில் பொதுக் கட்டியது அவ்விடத்திலேதானே யிருந்தது. சூப்பிரீம் கோர்ட்டு லாயர்துபாசிகளில் மிகுந்த வல்லமையுள்ள வொருவர், இப்படிக்கொத்தவியாச்சியங்களில பிரவே

சித்துப் பிரபலமான லாபங்களைப் பெற்று மகாராசனாகி நெடுநாளாகப் பச்சையப்ப முதலியாருடைய ஆஸ்தியின் விவகாரங்களை யறிந்திருந்தவ ராகையால், தான் கற்றிருக்கிற வுபாயங்களினால் கோர்ட்டிலிருக்கும் அந்த ஆஸ்தியை வெளிப்படுத்திப் பங்கிட்டுக் கொள்ளும்படி அண்ணாசாமிபிள்ளை யவர்களுடன் நானாவித சந்திகள் நடத்தினார். அவர், தாங்களே வம்ச பரம்பரையாகப் பச்சையப்ப முதலியாருடைய சிவதருமங்களை நடத்தத்தக்கவர்களாயிருக்க, வீணில் ஒருவருக்குப் பங்கு கொடுப்பானேனென்று ஒப்பாததால், பிள்ளைமீதில் பகையைச் செலுத்த எத்தனித்த காரியம் மாறாடி, ஒருவனைக் கொலைசெய்து புதைக்க வெட்டிய பள்ளம் அனேகர் ஜீவனம் பண்ணும்படி அமிர்தமயமாய் அடக்கக்கூடாத நீர்த்தாரைகளையுடைய கசமானதுபோல, வேறே பிரபலமான காரியத்துக் குபயோகமானது இனிவருஞ் சங்கதிகளாற் றெரியலாம்.

அண்ணாசாமிபிள்ளை யவர்கள் லாயர் துபாசி தாற்பரியத்துக்கு அனுகூலிக்காதபடியால், அவர் பயப்படும்படி, லக்ஷம் வராகனுக்கு வரும் வட்டியில்ராமேசுவர முதல் காசிவரை சிவதருமம் பண்ணும்படி முதலியார் உயிலில் எழுதியதை எக்ஸிகியூட்டர்கள் நடத்தவில்லையென்று விவகாரகிரமத்தை யனுசரித்து முதலியாருடைய தருமத்துக்குச் சம்பந்தமானவர்கள் வழக்காடவேண்டியதாகையால், சிதம்பர தேவஸ்தான தீக்ஷிதர்கள் முன்னிலையில் எக்ஸிகியூட்டர்களுடைய வார்சுதாரராகிய அண்ணாசாமிபிள்ளை பேரில் லக்ஷம் வராகனுக்கும் அதனுடைய வட்டிக்கும் சுப்பிரீம் கோர்ட்டில் அட்வோகேட் ஜெனரல் மூலமாக 1822௵த்தில் துபாசி வியாச்சியங் கொண்டுவந்தார். அதற்குப் பிள்ளை அந்த வருஷம் ஆகஸ்டு௴ 22௳ தொடங்கி எதிர்வழக்காடினார். 1826௵ பிப்ருவரி௴ 3௳யில் சுப்பிரீம் கோர்ட்டார் பண்ணிய முதல் டிக்கிரியில், பச்சையப்ப முதலியார் உயிலில் சிவதருமத்துக்கு ஏற்படுத்திய கிரமத்தை விசாரித்துத் தருமங்கள் நடத்தியதாகக் காணுஞ் ஜாபிதாவிற் கண்ட வருஷாந்தர மொத்தங்கள் எவ்விடத்தில் எந்த வகையாகச் செலவாக வேண்டுமோ அதைத் தெரிவிக்கும்படியாகவும், முதலியார் ஆஸ்தியைச் சேகரிக்கும்படியாகவும் மேற்படி கோர்ட்டு ஈக்விற்றி மேஸ்டருக்கு உத்தரவுசெய்தார்கள். முன் இருந்த அட்வோகேட் ஜெனரல் இவ்விடத்தை விட்டுப் போ[illegible]
டார். அவருக்குப் பதிலாகச் ஜனங்களுக்குக் கல்வி[illegible]
யாகவேண்டுமென்றே எப்போதும் இடைவிட[illegible]
நேரிட்டபோதெல்லாம் முயற்சிசெய்துகொண்டி[illegible]
காரியாகிய ஜார்ஜ் நார்ட்டன்துரை இந்தத் தேச[illegible]
புண்ணியவசத்தால் 1828௵த்தில் வந்தார். [illegible]
யவர்கள்பொதுக்கட்டினகும்பினிப்பத்திர[illegible]

முதலியாருக்குத் தஞ்சாவூர் ராஜாபேரில் வரவேண்டிய கடன்களிலும், ராஜா கொதுவைவைத்த நகைகளின் விக்கிரயத்திலும், மத்தியகாலத்தில் சேர்ந்தவட்டியிலும் வந்த பொருளில் கோர்ட்டுச் செலவு முதலியவைகள்போக மிகுதி நாலு லக்ஷத்து நாற்பத்தேழாயிரத்து இருநூற்றறுபத்தேழு ரூபா இருப்பதாக 1832ஷுத்தில் ஏற்பட்டது. சிவதர்மஞ் செய்யும்படி முதலியார் உயிலில் பொதுவா யெழுதியிருந்ததைக் கோவில்களிலுஞ் சத்திரங்களிலும் எக்ஸிகியூட்டர்கள் நடத்தியதாகத் தெரிவித்த விபர ஜாபிதாவிற் கண்ட இடங்களாவன:

1. சிதம்பரம் சபாபதி சுவாமிக்கு அன்னம் பழ முதலாகிய சாமான்களைக்கொண்டு செய்யப்பட்ட கட்டளைக்கும், அவ்விடத்தில் உற்சவ காலத்திலும், தினந்தோறும் ஏழைகளுக்குச் செய்யும் அன்ன தானத்துக்கும் வருஷம் 1-க்கு ...	வராகன்	1120.
2. சிகாழியில் சட்டநாத சுவாமிக்கு அநேக சாமான்களைக் கொண்டு சாயரக்ஷையில் தினந்தோறுஞ் செய்யவேண்டிய கட்டளைக்கு		120.
3. திருவிடைமருதூரில் மகாலிங்க சுவாமிக்குப் பிரதி தினஞ் சாயந்திரஞ் செய்யவேண்டிய கட்டளைக்கும்;		
4. மேற்படி யூரிலிருக்குஞ் சத்திரத்தில் ஏழைகளுக்குக் கொடுக்குஞ் சதாவர்த்திக்கும்;		
5. மேற்படியூரில் வாசஞ்செய்யும் பிராமண தம்பதிகளுக்கு வருஷந்தோறுஞ் செய்யுந் தம்பதிபூசைத் தர்மத்துக்கும்		410.
6. கும்பகோணத்தில் சார்ங்கபாணி சுவாமிக்கு வருஷத்தில் ஒருதரஞ் செய்யும் ஜேஷ்டாபிஷேக தர்மத்துக்கும்;		
7. மேற்படியூரில் செய்யும் பிராமண தம்பதிபூசைத் தர்மத்துக்கும்		100.
8. திருவையாற்றில் பஞ்சநத சுவாமிக்கு அநேக சாமான்களைக்கொண்டு செய்யுந் தினக்கட்டளைக்கும்; ...		
[illegible] மேற்படி யூரிலிருக்குஞ் சத்திரத்தில் தினந்தோ[illegible] ஏழைகளுக்குச் சதாவர்த்தி கொடுக்குந் தர்[illegible];		
[illegible]இருக்கும் மடத்திற்செய்யும் மகேசு[illegible]த்தாசையாகச் சம்பந்தமூர்த்தித் [illegible] கொடுக்கும் வருஷாந்தர தர்மத்[illegible]		390.

11. ஜம்பு கேசுவரத்தில் அகிலாண்டேசுவரி யம்மைக்குச் செய்யும் அர்த்தஜாமக் கட்டளைக்கு ... 120.

12. ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதசுவாமி கோவிலில் ஏழைகளுக்குக் கொடுக்குந் தளிகைத் தர்மத்துக்கு ... 240.

13. தஞ்சாவூரில் ஸ்ரீகாமாக்ஷி அம்மை கட்டளைக்கு ... 120.

14. திருவாரூரில் ஏழைகளுக்குத் தினந்தோறுங் கொடுக்குஞ் சதாவர்த்தி தர்மத்துக்கு ... ... 240.

15. மதுரையில் மீனாக்ஷி அம்மைக்கு நித்தியக் கட்டளைக்கும்; ... ...

16. மதுரைக்குச் சமீபமான அழகர் கோவிலில் ஏழைகளுக்குத் தினந்தோறுங் கொடுக்குந் தளிகைத் தர்மத்துக்கும் ... ... 360.

17. பிரசித்தமான ஆவுடையார் கோவிலில் செய்யுஞ் சாயரக்ஷைக் கட்டளைக்கு ... ... 120.

18. இராமேசுவரக் கோவிலில் செய்யுஞ் சாயரக்ஷைக் கட்டளைக்கு ... ... 120.

19. சிதம்பரத்துக்குச் சமீபத்தி லிருக்குஞ் சுப்பம்மாள் சத்திரத்தைச் சேர்ந்த குமஸ்தா தோட்டக்காரர் பிராமணர் முதலானவர்கள் சம்பளத்துக்கு... 100.

20. திருப்பனந்தாள் கோவிலில் தினந்தோறுஞ் செய்யும் அர்த்தஜாமக் கட்டளைக்கு ... ... 120.

21. காசியில் ஏழைகளுக்குக் கொடுக்குஞ் சதாவர்த்தி தர்மத்துக்கு ... ... 240.

22. பெரிய காஞ்சீபுரச் சத்திரத்தில் தினந்தோறும் ஏழைகளுக்குக் கொடுக்கும் சதாவர்த்தி தர்மத்துக்கும்; ... ...

23. மேற்படி யூரிலிருக்கும் ஏகாம்பரேசுவரர் கோவிலில் தினந்தோறுஞ் செய்யும் அர்த்தஜாமக் கட்டளைக்கும் ... ... 360.

24. திருவல்லிக்கேணிக்கோவிலில் தினந்தோறும் ஏழைகளுக்குக் கொடுக்குந் தளிகைத் தர்மத்துக்கு ... 120.

25. சின்னக் காஞ்சீபுரம் வரதராஜசுவாமி கோவிலில் ஏழைப் பிராமணர்களுக்குக் கொடுக்குந் தளிகைத் தர்மத்துக்கு ... ... 120.

26. திருவொற்றியூர்ச் சத்திரத்தில் ஏழைகளுக்குத் தினந்தோறுங் கொடுக்கும் சதாவர்த்தி தர்மத்துக்கு ... ... 240.

27. திருவண்ணாமலைக் கோவிலில் தினந்தோறுஞ் செய்யும் அர்த்தஜாமக் கட்டளைக்கு ... ... 120.

28. திருமுல்லைவாயில் கோயிலில் தினந்தோறுஞ் செய்யும் உச்சிக்காலக் கட்டளைக்கு ... ... 120.

1832ஞு அக்டோபர்மீ 30உயில் கோர்ட்டிலான டிக்கிரியை யனுசரித்து இந்துமத சம்பந்தமான ஒன்பதுபேரைத் திரஸ்டீஸ்களென்னுந் தருமபரிபாலன சபையாராக நியமித்துத் தர்மம் நடத்துவதற்குச் சட்டங்களுஞ்செய்து, அட்வோகேட் ஜெனரல் ஜார்ஜ் நார்ட்டன் துரையென்னும் புண்ணியவான் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்தார். அது பாதாளப் பிரவேசமான பொருள்போல மறைந்து அப்படியாவதற் குண்டான காரணமுந் தன்னைப் போலவேயாக நெடுங்காலம் ஆலசியப்பட்டிருந்தது. இந்த ஆலசியமானது இவர் ஆதிமுதல் கோரிக்கொண் டிருக்கிற நற்காரியமாகிய வித்தியா விஷயத்தை விர்த்திசெய்யத் தெய்வ சங்கற்பத்தினாலுண்டாயிற்று. இதன் பிரயோசனத்தை யறியாமல், தர்மம் நடக்கவில்லையென்று அநேகர் ஆராமைப்படும்படி நேரிட்டிருந்த விந்தையை யென்னென்று சொல்லலாம். ஜனங்கள் வித்தையைக் கொள்ளை யிடும்படிசெய்ய இத் தேசத்துக்குக் கடவுள் அனுப்பியது போல வந்த தயாளமுள்ள லார்ட் எல்பின்ஸ்டோனவர்களிடத்தில், சமயங்கள் நேர்ந்தபோதெல்லாம், அவர் மனதிலூன்றும்படி இந்தத் தருமத்தை விஷயமாக்கி ஜனங்களுக்கு வித்தியாபிவிர்த்தியாவதே தன் பிரயோசனமாக நினைத்துப் பிரயாசை யெடுத்துக் கொள்ளுகிற ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்கள், முதலியார் தருமம் வெகுகாலமாக நின்றிருப்பதால், வட்டியினால் விர்த்தியடைந்த மொத்தத்தில் அந்தத் தருமத்துக்குரிய லக்ஷம் வராகன்போக மற்றதை இத் தேசத்தின் வித்தியாபிவிர்த்திக்கு உபயோகமாக்க வேண்டுமென்று பலவிதத்திலுந் தெரிவிக்க, அந்த லார்டு அதனை யிப்போதே நடத்துவே னென்றார். ஒன்பது வருஷத்துக்குப் பின் தர்மத்தை நடத்த எத்தனித்ததால், வட்டியில் ரூபா 314,239 விர்த்தியாய் அசல் ரூபா 447,267 உடன்சேர்ந்து ரூபா 761,506 ஆயிற்று. இந்த மொத்தத்தில், சென்னபட்டணம் சுப்பிரீம்கோர்ட்டு அதிகாரத்துக்கு வெளிப்பட்ட காசி தர்மத்துக்கு ஏற்படுத்திய ரூபா 38,545 போக நீக்கு நின்ற அசல் ரூபா 722,961-ல் சிதம்பரம், திருவல்லிக்கேணி முதலாகிய விடங்களில் தர்மங்களுக்கு ரூபா 333,200 போக நீக்கு நின்ற ரூபா 389,761-க்கு வரும் வட்டியில், வருஷம் 1-க்கு 4,200 ரூபா வெளியில் வித்தியாபிவிர்த்திக்கும், மற்ற மிகுதி சென்னபட்டணத்தில் வித்தியாபிவிர்த்திக்கும், சிலாசாசனங்களுக்கும், சத்திரக் கட்டடங்களுக்கும், வித்தியா விஷயத்துக் குபயோகமான கட்டடங்களுக்கும் வைக்கப்பட்டது.

தஞ்சாவூர் ஜில்லா சீகாழித் தாலுக்காவி லிருக்கும் வருஷம் 1-க்கு சுமார் ரூபா 700 ரூபா 800 வருமானமுள்ள முதலியாருடைய சுரோத்திரியமாகிய தென்னங்குடிக் கிராம வருமானம் முதலியார் சீவித்திருந்த காலத்திலும், அவருக்குப் பின்பு அவர் குடும்பஸ்தர்காலத்திலும் நடப்பித்த தர்மங்களுக்கும், முதலியாராலே ஆதரிக்கப்பட்டிருந்தவர்களுக்கும், முதலியாருடைய தர்மச் சொத்தினை யடையப் பாத்திரர்களாயிருக்கிற ஏழைகளுக்கும் உபயோகிக்கும்படி நியமிக்கப்பட்டது.

தர்மம் நடவாத ஆலசியமானது மகத் காரியமாகிய வித்தியாபிவிர்த்திக்கு ஏதுவானதால், ஒருகாலத்திலும் ஒன்றும் நிறைவேறவில்லையென்று யாவராலு மறிவதற்கரிய கிருபையுடைய ஒன்றுன கடவுளைநோக்கி நோகலாகாது. திரஸ்டீஸ்கள் காஞ்சீபுரம், சிதம்பரம், சென்னபட்டணம் இம் மூன்றிடங்களில் வித்தியாபிவிர்த்திக்குச் சென்றதுபோக மிகுதியிருந்த பொருள்களினால் ஒரு பெரிய மாளிகை கட்ட நினைத்து அஸ்திவாரஞ் செய்த கிரமமாவது :

சிவதர்ம பரிபாலன தேசோபகாரியாகிய கோவூர் ஏகாம்பர முதலியாரென்னுங் கண்ணியவானுடைய கிருகத்தில், பச்சையப்ப முதலியார் பள்ளிக்கூடத்து வித்தியார்த்திகளும், இந்தத் தேசத்துக் கனவான்களும், வித்தைக்கே யெந்நாளும் பிரயாசை யெடுத்துக் கொள்ளுகிற அட்வோகேட் ஜெனரல் ஜார்ஜ் நார்ட்டன் துரை யவர்களும், மாளிகை கட்டுவதற்குப் பிளான் முதலியவைகளை யேற்படுத்திய கேப்டென் எ. டி. லட்லோ என்னும் எஞ்சினீர் துரையவர்களும், இங்கிலீஷ் தேசத்துச் சில கண்ணியவான்களுங் கூடியிருந்து, மகாராஜஸ்திரீயாகிய நமது அன்புள்ள க்வீன் விக்டோரியா, கவர்னர் ஜெனரல் லார்டு ஆர்டிங்கு, இந்தத் தேசத்தில் வித்தியாபிவிர்த்திக்கு உபகாரியாகிய லார்டு எல்பின்ஸ்டோன், ஜார்ஜி நார்ட்டன், திரஸ்டீஸ்கள் இவர்களை ஆந்திர, திராவிட, சமஸ்கிருத வித்துவான்கள் கவிபாடிப்புகழவும், பச்சையப்ப முதலியார் தர்மம் நீடூழிகாலம் விர்த்தியாக வேண்டுமென்று வாழ்த்தவும், முதலியார் பள்ளிக்கூடத்தின் சிறுவர்களி லொருவன் வித்தியாபிவிர்த்தி யுபயோகத்தை விரிவா யெழுதிக்கொண்டுவந்து வாசிக்கவும் நடத்திய சந்தோஷக் கோலத்துடன், பச்சைப்பா வென்னும் பெயரையுடைய கொடிகளை முன்னே பிடித்துக்கொண்டு போகும்படி சுபவாத்திய கோஷங்களுடன் அனைவரும் புறப்பட்டு அஸ்திவாரஞ் செய்யுமிடத்தி னருகே போனவுடன், 1846-வது௵ அக்டோபர்மீ 2௳ சாயந்திரம் வாத்தியங்கள் முறை முறையே அபாரகோஷத்துடன் முழங்கவும், எல்லோரும் உற்சாகமாகக் கொண்டாடிக் களிப்படைந்து கொடிகளைச் சுழற்றிச் சுழற்றிக் கைகளைத் தட்டவும் பார்ச்சுமெண்டு என்னுந் தோலின்மேல் இங்

கிலீஷ், தமிழ், தெலுங்கு மூன்று பாஷைகளிலும் எழுதுவித்த *சாசனத்தையும், பொன்வெள்ளி தாம்பிரங்களினாலுண்டாகி இந்தத் தேசத்தில் வழங்குகிற இங்கிலீஷ் நாணயங்களையும், நவரத்தினங்களையும் ஒரு சீசாவிற்போட்டு முத்திரித்து அதைத் தலைக்கல்லென்னும் மூன்றடிச் சதுரமும் ஓரடி உயரமுமுள்ள இரண்டு கருங்கல்லுகளின் மத்தியில் அரையடி ஆழமும் முக்காலடிச் சதுரமுமாகத் துளைத்திருந்த பள்ளத்துக்குள் நொறுங்காமல் ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்கள் வைத்து, ஒன்றின்மேல் மற்றொன்றைக் கவிழ்த்து, மேலே சுண்ணாம்புபோட்டு, வெள்ளியினாற் செய்த கொல்லர் கருத்தி இவைகளினால் தேய்த்துந் தட்டியுமானபின் இந்தத் தர்மமுண்டாகிய விர்த்தாந்தத்தையும், இந்தத் தேசத்தில் வித்தை விர்த்தியாய் வருகின்ற கிரமத்தையும், விஸ்தாரமாக அவராற் கூடியமட்டும் பெருங்குரலிட்டெல்லோருங்கேட்க இங்கிலீஷ் பாஷையில் பிரசங்கித்தவை தமிழில் மொழிபெயர்த்து இதனோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன.

---

* சாசனம்.

சாலிவாகனசகாப்தம்-௲எ௱௬௰௮.

கலியுகாப்தம்.........௪௲௯௱௪௰௭.

இதற்குமேற் சொல்லாநின்ற

பராபவஹூ புரட்டாசிமீ ௰௮உ க்குச் சரியான

கிறிஸ்து - ௲௮௱௪௰௬ஹூ அக்டோபர்மீ ௩உயில்

இங்கலாண்டு தேசத்துக்கும் - இந்துதேசத்துக்கும் - இங்கிலீஷ் தேசத்தைச்சார்ந்த மற்றத்தீவாந்தரங்களுக்கும் ராஜஸ்திரீயாகிய விக்டோரியா அரசாட்சி செலுத்திக்கொண்டுவரும் ஒன்பதாவது ஹூ-த்தில் லார்டு - வைகவுண்டு ஆர்டிங்கு - கவர்னர் ஜனலாயிருக்குங் காலத்தில் - காஞ்சீபுரம் - பச்சையப்ப முதலியார் இறந்துபோகுங்காலத்தில் தர்மத்துக்குவைத்த தனத்தினால் திரஷ்டீசுகளென்னுந் தர்மவிசாரணைக் கர்த்தர்களில் தலைவராகிய - கோமளேசுவரபுரம் - ஸ்ரீனிவாசபிள்ளை - மற்றவிசாரணைக் கர்த்தர்களாகிய - லால்பேட்டை - வெங்கடபதிநாயக்கர் - அக்கம்மாபேட்டை - வெங்கடாசலசெட்டியார் - மண்ணிப்பாக்கம் - சோமசுந்தர முதலியார் - சித்தேரி - அருணகிரி முதலியார் - தநால - சுந்தராமாநுஜ நாயக்கர் - திருவல்லிக்கேணி - வீராசாமிபிள்ளை - புதுச்சேரி - ராஜரத்தின முதலியார் - இவர்கள் முன்னிலையிலும் - சென்னப்பட்டணத்தில் வாசஞ்செய்யாநின்ற அநேக இந்து பெரிய மனிதர்கள் முன்னிலையிலும் மேற்படி பச்சையப்ப முதலியாரவர்களுடைய வித்தியாசாலைக்குத் தலைவராயும் - சென்னப்பட்டணத்தில் சுப்பிரீம் கோர்ட்டு அட்வோகேட்டு ஜனலாயுமிருக்கும் - ஜார்ஜி நார்ட்டன் துரையவர்களால் இந்த வித்தியாசாலைக்கு அஸ்திவாரம் போடப்போட்டது.

ஜார்ஜ்

நார்ட்டன் துரையவர்கள்

பிரசங்கம்.

பச்சையப்பமுதலியார்
தருமவிசாரணைக்கர்த்தர்களாகிய
ஸ்ரீநிவாசபிள்ளையவர்களுக்கும்,
மற்றக்கண்ணியவான்களுக்கும்,

இந்த நல்ல சமயத்தில் என்னுடைய மனப் பூர்வமான இஷ்டத்தோடு நான் உங்களுக்குச் சில சங்கதிகள் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கட்டடத்தி னருகில் வந்திருக்கிற மகாஜெனங்களெல்லோருங் கேட்கும்படி பேசவேண்டுமாகில் இடிமுழக்கம் போன்ற தொனியுடன் பேசவேண்டும். ஆகையினால் என் சமீபத்திலிருந்து கேட்பவர்கள் நான் சொல்லுஞ் சங்கதிகளை யெல்லாம் மற்றவர்களுக்குச் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். உங்களுடைய சுயபாஷை எனக்குத் தெரியுமானால், அதிலேயே பேசலாமென்கிற ஆசையெனக்கிருக்கின்றது. இப்படிப்பட்ட சம்பிரமங்களைப் பார்ப்பதினா லெனக்குண்டாகிய ஆனந்தத்தை வெளியிட்டுச் சொல்லத்தகுந்த வுறுதியான சொற்கள் அகப்படவில்லை. இன்றையதினங் கொண்டாடுகிற சிறப்பினால் இந்து சமூகத்தார் இனி யடையப்போகிற பெருமைகளைக்குறித்து என்மனம் பூரிக்கின்றது. இவ்வளவும் உபயோகமில்லாமல் வேடிக்கையார்த்தமாகவே செய்வீர்களாகில் உங்களில் நாமொருவனாக வந்திருக்க மனமிருக்கமாட்டாது. நாமெல்லோருமிவ்விடத்திற்கூடிய பெரிய நிலையானகாரியங்களுக்குள் முக்கியமானதொன் றுண்டு. அது நாம் எவ்வளவு சிறப்பும் வேடிக்கையுஞ் செய்தபோதினும் எல்லோருக்கும் விருப்பமானதாகவேயிருந்து இன்றையதினத்தைப் புத்திரபவுத்திராதிகள் நினைத்துக்கொண்டிருக்கும்படி செய்விக்கும். உபகாரசிந்தையுள்ள சில தருமவான்கள் கல்வி விஷயமாக வைத்துப்போன திரவியத்தைக்கொண்டு மகாவுன்னதமான கட்டடமொன்று கட்ட அஸ்திவாரம் போடும்பொருட்டு இந்தத் தேசத்தார் அனந்தந் திரளாகக் கூடிக் களிப்புடன் கொண்டாடுவதன் மத்தியில் இவ்வளவு பெரியசபை கூடும்படி இந்தியாவுக்குள்ளே யிதற்கு முன் யாதொரு சமயமும் நேரிடவில்லை. இந்தத் தரும வரும்படியும் இத்தருமங்களை நடத்திவருவதுமாகிய இவையெல்லாம் உங்களைச் சார்ந்தவைகள். இப்படி வரும்படிகளை யூரோப் தேசத்தாராவது கவர்ன்மெண்டாராவது செய்விக்கவுமில்லை. மேலும் இவைகள் அவர்

களுடைய உதவிக்கு எதிர்பார்த்திருக்கவுமில்லை. இன்னும் அனேக தருமக்கட்டடங்கள் சந்தேகமில்லாமல் கட்டப்படுவனவா யிருந்து அவைகளெல்லாம் இந்த நகரத்திலுள்ளவர்களுடைய பெருமைக்காதாரமா யிருந்தபோதிலும்,இந்த ராச்சிய முழுவதுந் தேடினாலும் இதற்கொப்பான தருமஸ்தாபிதங் கிடையாது. அதேனென்றால்,இப்போது சிறப்பாக நடத்திவருகிற தருமத்தைப்போலத் தருமங்களைச் செய்யச் சிந்தையுடையவர்கள் உங்களில் அனேகர் இருப்பதுமன்றிப் பச்சையப்ப முதலியார் தம்முடைய திரவியத்தில் இத் தேசத்தாருடைய கல்வி விஷயமாகவைத்த மிகுந்த பொருளைச் செவ்வையாகப் பரிபாலனஞ்செய்தவற்குப் பிரயாசையெடுத்துக்கொள்ளத் தக்கவர்கள் உங்களுக்குள் இல்லாமற்போகவுமில்லை. இந்தத் தேசத்தாருக்கு இப்படிப்பட்ட உபகாரங்களைச் செய்து வருவதற்காக உங்களிடத்தில் மிகுந்த மதிப்பையும் நன்றியறிதலையும் பெற்ற சில புண்ணியவான்களுடைய பெயரை நான் இந்தச்சமயத்தில் எடுத்துச்சொல்லாமல் விடுவேனாகிலென் மனதுக்குத் திருப்தியாயிருக்கமாட்டாது. உங்களுக்குள் அக்கிராசனாதிபதியாயும் என் இஷ்டராயுமிராநின்ற ஸ்ரீநிவாசபிள்ளை நானறிந்த மட்டில் இப்படிப்பட்ட தருமவான்களுக்குள் மகா பிரபலராயிருப்பது உங்களுக்குத்தெரியுமே. இவரோடு நான் பழக்கமான இந்த 15வருஷகாலமாக உங்கள் தேசாபிமான விஷயத்தில் பாடுபட்டுக்கொண்டுவருகிறார்.இவர் நெடுங்காலமாகத் தனக்கு ஒழிவான சமயங்களிலும், மற்றக்காலத்திலும் இந்தத்தேசத்து வித்தியாபிவிர்த்தி செய்விப்பதிலும், ஒருமைப்பாடு செய்விப்பதிலும் வேண்டிய முயற்சி செய்துவருகிறார். அனேகரால் நன்கு மதிக்கப்பட்டு விசுவாசிக்கப்பட்டிருப்பதே இவருக்குப் பிரதிபலனாகவிருக்கின்றது. இவர் இத்தேசத்தாராகிய உங்களுக்குள் ஒருவராக வாழ்ந்துகொண்டு இவர்வாழ்நாள்தோறும் உங்களுடைய மாறாத அன்பைப்பெற்றிருப்பது எப்படிக்கொத்த பாக்கியம். இந்தப்பிரகாரம் உங்களுக்கு உபகாரங்களைச் செய்துகொண்டிருக்கும்படி இவரிடத்தில் தயிரியத்தைத் தூண்டுவித்து இவரோடொப்பாகப் பிரயாசையெடுத்துக்கொள்ளுகிற என்னைப்பார்க்கிலும் இவரே அதிர்ஷ்டவான். எங்கள் தேசத்தார் உங்கள் விஷயமாக அநுதாபப்படுகிறதுபோல நானும்படுகிறேனென்று பெருமையாகச்சொல்லமாட்டேன். ஏனென்றால், நான் உங்களோடு கூடியிருந்து என்னுடைய வாழ்நாட்களைப்போக்குதற் கில்லாமையால் என்னுடைய பெயரும் ஞாபகமுங் காலாந்தரத்தில் உங்களைவிட்டு மறைந்துபோம். இன்னும் இதைவிட நான் துக்கப்படுவது யாதெனில், இந்து சமூகத்தருக்காக நான் செய்துவரு மிப்படிப்பட்ட முயற்சிகள் ஒருவேளை இவ்விடத்திலிருக்கிறஎன்னுடையதேசத்தாராகிய பிரபலவான்களுக்குமுன் பழிப்புக்குள்ளாக்குவிக்குமோ யாதோ, ஆனால் அவர்கள் தகுந்த காரணமில்லாமல் எண்ணமாட்டார்க

ளென்று நினைக்கிறேன். ஆனாலும் நான் இப்படிப்பட்ட யோசனைகளினாலே அச்சப்பட்டிருக்கிறேனென்று நீங்கள் நினைக்கவேண்டாம். அப்படிக்கில்லை. நான் முன் நடந்துகொண்டதையும், என் மனச்சாக்ஷியையும் ஆராய்ந்து பார்க்குமிடத்தில், இத் தேசத்தாருக்கு யாதொரு பிழையுஞ் செய்யவில்லையென்று மனப் பூர்வகமாயறிந்துகொள்ளுகிறேன். நான் முயன்ற காரியங்க ளெல்லாவற்றுள்ளும் உங்களுக்குண்டாகிய சுதந்தரத்தை விர்த்திசெய்வித்தேன். நான் என்னைக்குறித்து அதிகமாகச் சொல்லிவிட்டேன். உங்களெல்லோருக்கும் உண்மையான சினேகராயும், இந்தத் தரும விசாரணை திரஸ்டீஸ்களுக்குத் தலைமையாயு மிருந்து இறந்து போன இராகவாசாரியரைக் குறித்து நான் சொல்லவேண்டும். அவரை நீங்கள் நேசித்திருந்ததைவிட நான் அதிகமாக நேசித்திருந்தேன். அவர் இப்போதிருந்தால் இன்றைய தினம் நடக்கிற ஆடம்பரத்தைப் பார்த்து அதிக சந்தோஷப்படுவார். அன்றியும், உங்களுக்குள் சிறந்தவராய் மேன்மையான நேட்டிவ் மேஜிஸ்திரேட்டு என்னும் உத்தியோகத்தை யடைந்து, அவர் காலமெல்லாம் வித்தியா விஷயங்களை விர்த்திசெய்வதிலும், இந்தத் தரும காரியங்களை ஊர்ஜிதப்படுத்துவதிலும் போக்கினார். அவருடைய பேர் உங்களுக்குள் அழியாமல் வழங்கிவரக்கடவது. இன்னும் இப்படிப்பட்ட தகுதியுடையவர்களை எடுத்துச் சொல்வேன்; ஆனால் பொழுதில்லை. எப்படி யிருந்தபோதிலும், வெகுவாகப் புகழ்பெற்றிருக்கிற இந்தத் தரும ஏற்பாடுகளைக்குறித்துக் கொஞ்சம் சொல்லுவேன். பச்சையப்ப முதலியாரென்பவர் தரும சிந்தையோடு தம்முடைய மிகுந்த ஆஸ்தியைத் தேவஸ்தானங்களுக்கும், மற்றத் தருமங்களுக்குமாகச் செலவழித்தார். அவருக்குச் சந்ததியாவது மற்றப் பாத்தியஸ்தர்களாவது இல்லாமற் போனபடியால், அவருடைய குலதர்மப்படி தன் சொத்துகளை எல்லாம் சத்திரம் சாவடிகள் கட்டுவதற்காகவும், ஏழைகளுக்கு அன்னதான வஸ்திரதானங்கள் செய்வதற்காகவும் வைத்து இறந்து போனார். அப்படிப்பட்ட தருமங்களுக்கு நானாவது மற்ற எந்த யூரோப்பியனாவது, தெரிந்தாவது தெரியாமலாவது, இடையூறு செய்யக்கூடாது. அவைகளெல்லாம் நீங்களே ஒருவருடைய சகாயம் எவ்வளவும் இல்லாமல் நிர்வாகஞ்செய்து பரிபாலனம் பண்ணும்படியா யிருக்கின்றன.

பச்சையப்ப முதலியாருடைய அபிப்பிராயத்துக்கும், இந்து மகாஜனங்களுடைய வழக்கத்துக்கும் ஒத்தாற்போல் சுப்பிரீம் கோர்ட்டாரவர்களுடைய ஏற்பாட்டின்படிக்கு இந்தத் தேசத்து நல்ல வித்தியா விஷயத்துக்காக நான்கு லக்ஷம் ரூபா வரையிலும் கொடுக்கப்பட்டது. இவ்வளவு பெரிய மொத்தப் பணத்தைச் சேதப்படுத்தவொட்டாமலும், அபகரிக்கவொட்டாமலும் இந்த

விஷயத்துக்காகக் காப்பாற்றுகிற நிமித்தம் நான் எவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டேன். மேற்படி முதலியார் பெயரால் தருமப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதில் எவ்வளவு என்னுடைய ஒழிவுகாலங்களைச் செலுத்திவந்தேன். அது எல்லோருக்கும் நன்ருகத் தெரியும். இப்படி நான் செய்தது சிலர் பழி சொல்லும்படியிருந்தபோதிலும், அது வெளிக்கு வருமாகில், எனக்கு அதனால் பெருமையும் திருப்தியும் உண்டாகும். இந்தத் தர்ம வித்தியாசாலைகள் கோர்ட்டு ஆப் டிரக்ட்டர்களுக்கு ஒப்பாகவிருப்பதுமன்றி, இந்தக் கவர்ன்மெண்டாரும் இதற்கு வேண்டிய சகாயங்கள் செய்யும்படியாக அவ்விடத்திலிருந்துவந்த உத்தரவை அப்போது இவ்விடத்திலிருந்த கவர்னரும் சந்தோஷமாக ஒப்புக்கொண்டார். அதனினும் சிறந்தது யாதெனில், இந்தியாவுக்கு வந்த ஜட்ஜிகளுக்குள்ளே மகா கியாதாவாயும், மகா பண்டிதராயுமிருந்த ஸர் ராலே பால்மர் என்பவர் சூப்பிரீம் கோர்ட்டுக்கு ஜட்ஜியாகவிருந்த காலத்தில், இந்த வித்தியா தர்மங்களும், மற்றத் தருமங்களும் கோர்ட்டாருடைய தீர்ப்பு முன்னிலைக்கு உத்தரவாயிருக்கின்றனவென்று யாவரும் அறியவேண்டுவது யுக்தமல்லவா? இன்னும் அவர் இந்த வித்தியாசாலைகள் ஏற்படுத்தி நடத்திவருகிற கிரமங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளும் புத்திமதிகளும் சொல்லி உதவிசெய்தாராதலால், நல்லவர்களும், இத் தேசத்தாருக்கு அனுகூலமாகியவர்களும் கொண்ட அபிப்பிராயத்தின்படி நாம் நடந்துகொள்ளவில்லை என்கிற பயம் நமக்கு வேண்டுவதில்லை. பள்ளிக்கூடத்து ஏற்பாடுகளையும் சிக்ஷாக்கிரமங்களையும் ஒழுங்கு செய்வதற்கு நன்ருக வடித்தெடுத்த யூரோப் தேசத்தாருடைய சகாயம் முக்கியமாகவேண்டியது. அதற்காக நானும், இன்னும் மிகுந்த உபயோகமுள்ளவராகிய யூநிவர்ஸிற்றி என்னும் சகல சாஸ்திரப் பள்ளிக்கூடத்துக்குத் தலைமை உபாத்தியாயராகிய பவல் துரையவர்களும் இருக்கிறோம். அவரும் இதோ வந்திருக்கிறார். இப்போது சொல்லிவருகிற வித்தியாப்பியாசம் வெகு நன்ருயிருக்கின்றது. இந்தக் கிரமப்படி இந்த ஸ்கூலுக்குத் திறமையுள்ள பிரின்ஸிப்பலாகிய யூயிங்கு துரையவர்கள் நடத்துவார்களென்று நம்புகிறேன். அவருடைய சிந்தையும் சாமர்த்தியமும் நானறிவேன். வித்தியா தர்மங்கள் இப்படிப்பட்டனவாகவிருக்கின்றமையால், 600 சிறுவர்கள் வரைக்கும் உபயோகமான கல்வியை எளிதில் அடைந்து அதனால் மரியாதையான ஜீவனங்களைச் சம்பாதிக்கும்படியிருக்கிறதினால், தர்மங்களுக்குள்ளே இதை முதலான தருமமென்று சொல்லவேண்டும். அனேகர் இம்மாதிரியான பயனடைந்து பிறரும் தங்களைப்போல் ஆகும்படியான அளவிடக்கூடாத நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள். இன்னும் இப்படி அனேகவாயிரம்பேர் ஆகப்போகிறார்கள். ஆகி இந்தக் கல்வியினால் உண்டாகும் பெரும் பயன்களை

இந்து ராஜ்ஜியம் முழுவதும் வியாபிக்கச் செய்யப்போகிறார்கள்.
சிறப்படைய வேண்டுமென்று விரும்புகிற சாமர்த்தியமுள்ள
பிள்ளைகளுக்குத் தைரியத்தை ஊட்டுவிக்கவேண்டிய தூண்டுகோ
லில்லாமற் போகவில்லை. மதராஸ் யூனிவர்ஸிற்றி என்னும் சகல
சாஸ்திரப் பள்ளிக்கூடத்து எல்லாப் பிரிவுகளிலும் பச்சையப்ப
முதலியாருடைய தருமச் சம்பளம் ஏற்படுத்தி யிருக்கின்றது.
அதைக்கொண்டு மிகுந்த எளியவனும் ஆதரவில்லாதவனும் படித்
துக்கொண்டு பள்ளிக்கூடத்துப் பெருமைவகித்துச் சமஸ்தானத்
தில் பெரிய உத்தியோகத்தையும் அடையத் தகுதியுடையவனாக
லாம். இத்தனை சீக்கிரத்தில் இவ்வளவும் உங்கள் முகாந்தரமாக
உண்டாகிய உற்சாகமான கோரிக்கைகள் அல்லவா? இத் தேசத்தா
ருடைய வித்தியாபி விர்த்திக்கு வேண்டிய முகாந்தரங்கள் உறுதி
யானவைகளாகவும் நிலையானவைகளாகவு மிருக்கின்றன. இதனால்
உங்கள் எல்லோருக்கும் தேசாபிமானம் உண்டாயிருக்கின்றது.
திரஸ்டீஸ்களாகிய நீங்கள் பிரயாசை எடுத்துக்கொண்டதுபோல
இத் தேசத்தார் நிமித்தமாக உபகாரஞ்செய்து மனச் சந்தோஷத்
தோடு பிரயாசை எடுத்துக்கொண்டு மாறாத செய்நன்றி உணர்
தற்குப் பாத்திரவான்களாகத் தக்கவர்கள் இல்லாமற்போகவில்லை.
தர்மகாரியங்களுக்காக வைத்திருக்கப்பட்ட பணங்களை உங்கள்
கையில் கொடுக்கவும் அதை நீங்கள் பரிபாலனம் பண்ணவும் பூர்
த்தியான நம்பிக்கை உடையவர்களாய் இருக்கிறீர்களென்பது இந்
தியா முழுதிலும் இருக்கிற எல்லோருக்குந் தெரிந்திருக்கின்றது.
எளியவர்களிடத்தில் நீங்கள் வைத்திருக்கிற தர்மசிந்தையைப்
போல் அன்னிய பிரயோஜனமான முயற்சியுஞ் சத்தியத்தில்
வைத்திருக்கிற சிரத்தையும் தெரியவருகின்றது. மேலும் தகுந்த
உற்சாக மிருக்குமேயாகில் இதர தேசத்தாரைப்போலவே தங்
கள் தேசத்தினிடத்தும் மகா அபிமான முண்டாயிருக்கும். இவ்
விடத்தில் கூடியிருக்கிற பச்சையப்ப முதலியார் வித்தியார்த்தி
களுக்குச் சில சொற்கள் சொல்லவேண்டுமென்று கோருகிறேன்
ஆனால் அவர்கள் என் சொல் கேட்கப்படாத அவ்வளவு தூரத்தி
லிருக்கிறார்கள். ஆகையால், இங்குச் சமீபத்திலிருக்கிற நீங்கள்செய்
துவரும் உபகாரத்தை யறிந்து அதற்குத் தகுதியாய் அவர்கள்நட
ந்துகொள்ளவேண்டுமென்றும், அவர்கள் செவ்வையாகப் படித்துக்
கொண்டால் என்னைப்போல அனேக அபிமான கர்த்தர்கள் அவர்க
ளுக்குக் கிடைப்பார்களென்றும் நான் கோருகிறதாகநீங்கள் சொல்ல
வேண்டும். பச்சையப்ப முதலியார் வித்தியார்த்திகளுக்கு
மிகவும் சிறந்த ஒருவர் எழுதிய பத்திரிகையைப் படித்த
சந்தோஷத்தோடு கேட்டேன். அந்தச் சிறுவர் எழு
பிராயங்கள் அவருக்கு ஒப்பான பள்ளிக்கூடத்து
கள் கவனிக்கத் தக்கவையாயிருக்கின்றன. ஆனால்
செய்த சிறப்பின் வரிசைக் கிரமங்களுள் ந

யுள்ள ராணியாகிய விக்டோரியாவினிடத்தில் வைத்திருக்கிற இத்தேசத்துக் குடி மரியாதையாகிய அன்புக்கும், இந்த ராஜ்ஜியத்தில் பிரிட்டிஷ் துரைத்தன ஏற்பாடுகளிடத்தில் வைத்திருக்கிற விசுவாசத்துக்கும் அடையாளமாக நீங்கள் செய்த மரியாதைகளைக்காட்டிலும் வேறொன்றும் எனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்திருக்கமாட்டாது. இப்படிப்பட்ட குணங்களை உங்களிடத்தில் நான் தூண்டுவிக்கவேண்டுமென்று எனக்கு எப்போதும் இச்சையுண்டு. இப்படிப்பட்ட இச்சைகள் துரைத்தனத்தார் பெருமைக்கு மியல்பாகவே இருக்கவேண்டுவதென நான் யோசிக்கின்றேன்; அன்றியும், இந்தப் பெரியதேசத்தினுடைய செல்வம் ஓங்கச்செய்ய உதவுமென்றும் எண்ணுகிறேன். இன்றையதினம் நடந்த மகோற்சவத்தைக் குறித்துக் கொஞ்சம் சொல்லப்போகிறேன். அப்படிச் சொல்லுவதற்கு முன்னமே இந்த ஸ்தானத்தில் கட்டப்போகிற மகா உசிதமான கட்டடத்துக்காகப் பிளான் போட்டுக்கொடுத்த கேப்டன் லட்லோ துரையவர்களுக்கு நீங்கள் மிகவும் பாத்தியப்பட்டவர்களா யிருக்கிறீர்களென்று நான் தெரியப்படுத்துகிறேன். இவர் சொந்த உத்தியோக அலுவலில் மிகவும் பிரவேசித்திருந்தபோதிலும், இந்தக் கட்டடத்தைச் சேர்ந்த விவரங்களில் சாஸ்திரோக்தமான ஆலோசனைகளைச் சொல்லியிருக்கின்றார். இந்த ஸ்தாபித ஏற்பாட்டின் பெருமைக்குத் தகுதியாகவே முடியுமென்று எண்ணுகிறேன். இது நெடுங்காலம் நிலையாயிருந்து, கடைசிக்காலத்திலிருக்கிற சந்ததியார் தங்கள் நாளையில் இந்தத் தேசத்தில் விர்த்தியாயிருக்கும் கல்வி முதலிய நன்மைகளைப் பார்த்து, இவையெல்லாம் பச்சையப்ப முதலியார் தர்ம வித்தியாசாலையால் உண்டாகிய பிரயோஜனமென்று நினைப்பதற்கு ஓர் அடையாளமா யிருக்குமென்று நம்புகிறேன். ஆகையினாலே, இந்தத் தர்மவித்தியாசாலைக்குத் தலைவராகிய சீனிவாசபிள்ளையவர்கள் பேராலும், மற்றக் கண்ணியவான்களுடைய பேராலும் பச்சையப்ப முதலியாருடைய பேர் என்றைக்கும் அழியாதிருக்கும்படி இத்தேசத்து ஜனங்களுக்கு உபயோக மாகத்தக்கதாக இந்தக் கட்டடத்தை நான் சமர்ப்பிக்கிறேன்.

இந்தத் துரையவர்கள் கோரியபடியே ஈசுவரனுங் கிருபை செய்ய, நூதனமாக இந்தத் தேசத்துக்கு வந்தவர்களும் பச்சையப்ப முதலியாரை யறிவதற்கும், அவர்பேரால் பட்டணத்திலுண்டிருக்கின்ற ஒரு பெரிய பாடசாலையின் காரியங்களை நடத்து ... ஆயிரம் பேராகிலும் உள்ளடங்கி அதில் நடப்பதை ...தும் மறைப்பில்லாமற் சமமாய்ப்பார்ப்பதற்குங் கேட்ப ...டிக் கொத்தது இப்பட்டணத்துக் கில்லாமலிருந்த ...தற்கும் அனுகூலமாய், வேலைசெய்த சனங்களுக்கு ...ம் நேரிடாமல் மூன்றரை வருஷத்துக் குள்ளாக

வே நிறைவேறிய இந்தக் கட்டடமானது பூமிக்குள் அஸ்திவாரம் சாதிஅடியால் 20-அடி ஆழமும், 8-முதல் 6-அடிவரையில் சுவர்க் கனமும், பூமி மட்டத்துக்குமேல் அடியில் $4\frac{3}{4}$-முதல் நுனியில் 3-அடி வரையில் சுவர்க்கனமும், முதல் அந்தஸ்து 16-அடி உயர மும், உள்ளளவு தெற்கு வடக்கு 65-அடி நீளமும், கிழக்கு மேற்கு 45-அடி அகலமு முடையதாய், மத்தியில் தூண்கள் வளை வுகள் ஒன்று மில்லாமல் இருப்புக் கைகள்வைத்து இவைகளுக்கு மேல் யூரோப் சிலேட்டுப் பலகைகளால் மூடப்பட்டுச் சாசுவத மாய் இத்தேசத்தி லிதற் கொப்பில்லையென்று சொல்லத் தக்கதாக முதலியார் பெயரையே தன் பெயராகக்கொண்டிருக்கும் 'பச்சை யப்பாஸ் ஹால்' என்னும் ஒரு மாளிகையும், அதற்கருகில் 600-சிறுவர்கள் வாசிக்கும்படியாய் 12-அறைகளும், விராந்தாக்களுமாக வகுத்திருக்கும் மூன்று அந்தஸ்துகளையுடைய ஒரு பாடசாலை யும் உள்ளன. இவற்றின் கிருகப் பிரவேசத்தில் நடந்த சம்பிரம மாவது :

1850ளு மார்ச்சிமீ 20உயில் கவுன்ஸிலர்களும், கமான்றர்-இன்-சீப் முதலாகிய அனேக ஸிவில் மிலிட்டரி துரைகளுந் துரை சானிகளும், இப்பட்டணத்து ஸாவுகாரர்களும், பெரிய மனுஷர்க ளும், ஆயிரம்பேருக் கதிகமாய்ச் சூழ்ந்துவரத் தக்கதாக இத்தே சத்துக் கவர்னராகிய ஸர் ஹென்றி பாட்டிஞ்சர் மெத்தையின் மே லேபோய் இந்த ஹாலின் கதவைக் கையால் திறந்து உள்ளே பிர வேசிக்கும்போது ஜயத் தொனியிட்டு எல்லோருங் கைதட்ட இங் கிலீஷ் தேசத்தார் கீதங்களைப் பாடினபின் கவர்னரவர்கள் அக் கிராசனத்தில் வீற்றிருந்தார். இந்தக் கட்டடத்தின் கிரமத்தை யெழுதிக்கொண்டுவந்து இஞ்சினீர் கேப்டன் இச்சன்சன் படித் தார். இந்த மாளிகையி னுபயோகத்தையும், வித்தையினால் வரும் பலனையும், அதற்குத்தகுந்த முயற்சிகளைத் தேச ஜனங்கள் அக் கறையாகச் செய்யவேண்டுமென்பதையுங் குறித்து அப்பொழுது சேர்ந்திருந்தவர்க ளனைவருங் கேட்டுக் களிக்கும்படி யதிகமான வல்லமையோடு விரிவாக ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்கள் இங்கி லீஷ் பாஷையில் பிரசங்கித்தவை தமிழில் மொழிபெயர்த்து இதிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அப்போது அக்கிராசனாதிபதியாயிருந்த கவர்னர் ஸர் ஹென்றி பாட்டிஞ்சர் துரையவர்களை நோக்கி ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்கள் சொல்லியது.

மகாகனம்பொருந்திய ஐயா,

இந்தத் தேசத்தார் பெரிய சமூகமாகக் கூடிய இந்தக் காலத்தில் எல்லோருங் கேட்டுக் கிரகிக்கும்படி இந்த மகோற்சவத்திற்குத் தகுதியான கல்வி விஷயமாய் ஒருபிரசங்கஞ்செய்ய என்னைக் கேட்டுக் கொண்டார்களாகையால், நாமெல்லோருஞ் சமமாக விரும்புகிற வித்தியாப்பியாச விஷயத்தில் பயன்பட வேண்டுமென்கிற இந்தத் தேசத்தாருடைய இஷ்டத்தை நான் மனப்பூர்வகமாய் ஒத்துக்கொள்ளுகிறேன். நான் இந்தக்கல்வி நிமித்தமாக வெகுநாள் பிரயாசை யெடுத்துக்கொண்டு ஞாபகத்தை யெல்லாஞ் செலுத்தினவனானபோதிலும், இப்போதிவர்கள் எனக்குநியமித்த வேலையைத் தெளிவாக விவரித்துச் சொல்லப் பாத்திரவானல்லனாயிருப்பது எனக்கு முக்கியமான சங்கடமாயிருக்கின்றது. ஆகிலும், நான் சொல்லப்போகிற சங்கதிகள் உலகவழக்கத்துக்கும், உபயோகத்துக்குந் தகுதியாகவிருக்குமென்றும், புத்திமான்களாயும், படித்தவர்களாயும், பூரணமான கல்வியையடைந்த சிறுவர்களாயுமிராநின்ற எல்லோராலுந் தெளிவாயுணரப்படுமென்றும் நான் நம்பும்படியான தைரியங்கொள்ளுகிறேன்.

கல்வியின் உபயோகம் இப்படிப்பட்டதென்றும், அதன்பயன் இவ்வளவென்றும் அறிந்து கொள்வதே அதை விர்த்தி செய்வதற்கு உண்மையான ஆதாரமாயிருந்தபோதிலும், அக்கல்வியினுடைய எதார்த்த பாவத்தையும் முடிவையும் யோசித்துணர்ந்தவர்கள் மிகுதியாக என்முன் இருக்கிறதாய்க் காணப்படவில்லை. கல்விப்பொருள் இப்படிப்பட்டதென்றும், அதன் பயன் இவ்வளவென்றும் நுட்பமாகத் தெரிந்துகொள்ளாவிட்டால் அதனிடத்தில் ஊற்றமும் மனப்பூர்த்தியான முயற்சியுமுண்டாகமாட்டா. நாம் பூர்த்தியாகத் தெரிந்துகொள்ளாத விஷயத்தில் சந்தோஷமடையமாட்டோம். கல்வி, சாஸ்திரமுதலியவைகளை விர்த்தி செய்வதினால் இத் தேசத்தாருடைய செல்வத்தை யுயர்த்தும்பொருட்டு இத் தேசத்தில் தனவான்களாயும், பிரபலர்களாயுமிருப்பவர்களுடைய கூட்டுறவை நாம் விரும்புவோமாகில், இதுகாரியத்தில் அவர்களுடைய இஷ்டத்தைப் பெற்றுக்கொள்ள முந்திப் பிரயத்தனஞ்செய்யவேண்டும். இப்படிக்கொத்த அபிப்பிராயத்தினால் கல்வியைக்குறித்துச் சொல்லவேண்டிய பிரசங்கத்தில் விவரமான சங்கதிகளையெல்லா மொழித்துவிட்டு அதன் முக்கிய தாற்பரியமின்ன

தென்றும் அதனாலுண்டாகும் பயன் இப்படிப்பட்டதென்றும் நான் சுருக்கமாகச் சொல்வேன்.

இந்தச் சபைகூடியிருக்கிற இடத்தைச் சுற்றிப் பார்ப்பீர்களானால், கல்விப்பயனாற் சிறந்ததாகவும், பெருமைபெற்றதாகவு மிருக்கிற ஒன்றைக் காணலாம். மேலும், இதோ உங்களுக்கு முன்னே உத்தரவாதமான அலுவலையும் அதிகாரமான தொழிலையுமுடைய சில புருஷர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய உத்தியோகத்தன்மை பிறரை நடத்தத்தக்கதும், அடக்கியாளத்தக்கதும், வெகு ஜன சவுக்கியத்தை விளைவிக்கத்தக்கதும், தேசநன்மைக்காக அனேகர்களைப் பிரயாசைப்படச் செய்யத்தக்கதுமா யிருக்கின்றது. அவர்களுடைய அனுபவம் சிறந்ததாகவும், இதரர்களுடைய அனுபவத்திற்கு வேறுபட்டதாகவு மிருக்கக் காண்பீர்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட நிலை எவ்வாறு கிடைத்ததென்று நீங்கள் பொறுமைப்படலாமானாலும், அவர்களுடைய தொழில்களில் நீங்கள் பழகியிருக்கிறீர்களா, அல்லது அவைகளைக் கற்றுக்கொள்ளத் திறமையுடையவர்களா யிருக்கிறீர்களா, அல்லது இனிமேல் பழகிவருவீர்களா, உண்மையாய் யோசித்துப் பாருங்கள். இந்தத் தேசத்தாருடைய அபேக்ஷைக்குத் தகுதியாய்க் கண்ணியமான சகல உத்தியோகங்களும் சிறந்தபெருமைகளும் முடிவில் நேரிடப் போகின்றனவென்று உங்களுக்குக் காட்டத்தக்கவர்களில் நான் ஒருவனாயிருக்கிறேன். ஆகிலும்,இப்படிப்பட்ட உண்மையான பிரயோஜனமானது படிப்படியாகவே கிடைக்கவேண்டும். ஆனால், இதுவரைத்தன ஒழுங்கையுந் தேசத்தாருடைய ஸ்திதியையும் அனுசரித்திருக்கவேண்டும்; யாவையினு முக்கியமாய் உங்களுடைய கல்வித்திறத்தையே யனுசரித்திருக்கவேண்டும். ஆதலால், இந்த விஷயத்தில் நீங்கள் மோசம் போகாதீர்கள்.

என்னைச் சூழ்ந்திருக்கின்ற யூரோப் தேசத்துக் கனவான்கள் கல்வியினால் அடைந்திருக்கிற பயன்களை நான் காட்டவேண்டுவதில்லை. இந்தச் சபையிலும், நீங்கள் நாள்தோறும் செய்துவரும் பழக்கத்திலும், இத்தேசத்தார்களில் அனேகர் நன்றாக வாசித்தவர்களையும் காண்கிறீர்கள். இவர்களில் வெகுபேர் சிறந்த கல்வியை யடைந்து பெருமைபெறத் தக்க மேன்மையான தொழில்களில் பிரவேசித்திருக்கிறார்கள். நான் கேள்விப்பட்டபடி, சுயமாயும், மகா சாமர்த்தியமாயும், சந்தோஷப்படத்தக்கதாயும் எழுதிய விண்ணப்பப் பத்திரிகை உங்களில் ஒருவனால் வாசிக்கப்பட்டதை நீங்களும் கேட்டீர்கள். இப்படி படித்தவர்களுக்கும் அவர்களைச் சூழ்ந்திருக்கிற படியாத பெரிய கூட்டத்திற்கு முண்டாயிருக்கிற விவேக வித்தியாசத்தையும், சத்காலக்ஷேபத்தையும், எண்ணத்தின் விகற்பங்களையும் நீங்கள் காணாமற்போகமாட்டீர்கள். எல்லாருக்கும் பொதுவாகிய சுபாவங்களையும் சாமர்த்தியங்களை

யும் கடவுள் கொடுத்திருப்பதைக் கண்டிருக்கிறீர்கள். மேலும், மனிதன் தன் அக்கிரமத்தினால் அவருடைய எத்தனங்களைத் தடுக்கலாமென்று நீங்கள் சொல்லக்கூடாது. பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் ஏற்பாடாயிருக்கிற சட்டத்தினால் நாம் எல்லோரும் தோழமையாயிருக்கின்ற குடிகளைப்போலே சமானமான சுதந்தரங்களைப் பெற்றிருக்கிறோம். எல்லாருடைய கல்வியையும் விவேகத்தையும் விர்த்திசெய்வதினாலே உயர்ந்த உத்தியோகத்துக்கும், ஒருமைப்பாடான வாழ்க்கைக்கும் வழிகாட்டுவது நம்முடைய துரைத்தனத்தாருடைய பிரபலமான எண்ணமாயிருக்கின்றது.

உற்சாகத்தை விளைவிக்கும்படியான இந்தச் சங்கதியைக் குறித்து இன்னும் விவரித்துச் சொல்ல எனக்கு இஷ்டமுண்டு. ஆனால், இப்போது ஒருவனைக் கல்வியானது மற்றொருவனினின்று இப்படி உயர்த்திக் காட்டுகின்றதென்றும், மேலும் அந்தக் கல்வி தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் வெகு ஜனங்களுக்கும் இப்படிப்பட்ட பிரயோசனங்களைக் கொடுக்கிறதென்றும் விவரித்துச் சொல்வது என்னுடைய முக்கிய அலுவலா யிருக்கின்றது.

நமக்காவது, நம்மோடொத்த பிறப்பினர்க்காவது மிகவும் உபயோக முள்ளவைகளைக் கற்பது கல்வியின் நோக்கமாம். திறமையோடு பளுவை நிரவி எடுத்துக்கொண்டுபோகிற ஒருகூலிக்காரனை ஒருவிதத்தில் கற்றவனென்று யோசிக்கவேண்டும். ஆனால், அவன் ஒரு உபாத்தியாயரைப் பார்த்து, இவர் வித்தியார்த்திகள் ஜீவனும் சத்துக்குச் சம்பாதித்துக்கொள்ளும்படியான உழைப்புகளை நன்றாகவும் நாளுக்குநாள் மேலாகவும் கற்பித்துக் கொடுக்கிறாரென்றும், சௌக்கியத்துக்கும் செல்வத்துக்கும் மூகாந்தரங்களைத் தேடிக்கொள்ளுவதற்கு உபயோகமான தொழில்களில் பிரவேசிக்கச் செய்யும்படி கற்பிக்கிறாரென்று மாத்திரமே பிசகாக நினைப்பான். ஆனால், எவ்வளவாவது நன்றாக யோசித்து விசாரணை செய்வார்களாகில், பள்ளிக்கூடங்கள் மேற்சொன்ன விஷயங்களைக் கற்பிப்பதற்கு மாத்திரமே ஸ்தாபிக்கப்பட்டன வல்லவென்றும், கைத்தொழிலின் திறமையினும், ஆயுதத் தொழிலின் சாமர்த்தியத்தினும் வேறுபட்டிருக்கிற கல்வியின் முயற்சிக்காகவும் பயனுக்காகவும் ஸ்தாபிக்கப்பட்டனவென்றும் தெரிந்துகொள்வார்கள். பள்ளிக்கூடத்தில் கற்பிக்கப்படுவது மேற்கண்ட தொழில்களை அனுசரித்திருக்கமாட்டாது. விவேகத் திறத்தை அனுசரிக்காமல் அற்பமான தொழில்களில் ஜீவனத்திற்குத் தேடிக்கொள்வதைவிட வேறொருவிதமும் தெரியாத ஒருவனை நாம் கற்றவனென்று ஒருபோதுஞ் சொல்லக்கூடாது. மேலும், எல்லோரும் முன்னதாகக் கல்வியறிவை விர்த்தி செய்துகொள்ளாமல் கவனிக்கக் கூடாதனவாயும், பிரவேசிக்கக்கூடாதனவாயு மிருக்கிற சில தொழில்களுண்டென்றும், அப்படி முன்னதாகக் கற்றுக்கொண்ட வித்தையும் அத்தொழில்

களுக்கு நேரான சம்பந்த மில்லாததாகவும் இருக்கின்றதென்றும் நீங்கள் அறிந்துகொள்ளலாம். கல்வி என்னப்பட்ட சப்தத்தைத் தெளிவாகக் கண்டறியாமற் போனபோதிலும், அந்தக் கல்வியென்னும் சொல்லில் ஒரு விசேஷமான பொருளும் பயனும் இருக்கிறதாக எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டியது. கல்வியின் முதற் பிரயோஜனம் விவேக சாமர்த்தியங்களைச் சாதகப்படுத்தி விர்த்தி செய்வதும், இரண்டாவது உறுதியான ஞானத்தை விளங்கச் செய்வதுமா யிருக்கின்றது.

ஒருவன் உழவுத்தொழில் கற்றுக்கொள்வதுபோலவும், ஒரு கருணீகன் எழுதக் கற்றுக்கொள்வது போலவும், ஒரு சிறுவன் பள்ளிக்கூடத்துக்குச் செல்வதன் முக்கிய நோக்கமானது அவனுக்கு உபயோகமுள்ளனவாயும் வழக்கத்துக்கு வேண்டியனவாயு மிராநின்றவைகளைக் கற்றுக்கொள்வதே யென்பது எல்லாருடைய அபிப்பிராயமுமா யிருக்கின்றது. நிலையானதாய்த் தற்காலத்திற்கு உபயோகமா யிருக்கின்ற கல்வியை மாத்திரங் கற்பிப்பதுவே பள்ளிக்கூடத்துச் சிக்ஷையில் முக்கியமானதா யிராமல், சிறுவர்களுக்கு அறிவின் திறத்தை விர்த்தி செய்வதும், பெரியவர்க ளாகும்போது செல்வமடைந்து நாகரிகமான வாழ்க்கையில் பிரபலப்படும்படி விவேகமுயற்சியில் பழக்கப் படுத்துவதும் அதனுடைய முக்கிய நோக்கமா யிருக்கின்றது.

ஒரு சிறுவன் அனேக கோடிகாலம் வருத்தப்பட்டு வாசித்த வித்தையினுடைய முக்கியமான அனந்தஞ் சங்கதிகளில், கொஞ்ச மறக்கிறதும் ஒருவேளை முழுது மறக்கிறதுமுண்டு. நுட்பமாக ஒன்றை யோசித்தறியவும் தெளிவான தர்க்க நியாயங்களை ஆழ்ந்து விசாரணை செய்யவும் வழக்கப்படுத்திக்கொண்டால் மறந்துபோவதரிது. அவன் கற்ற இலக்கண விதிகளும், தேசங்கள் பட்டணங்கள் முதலானவைகளினுடைய இடங்களும், சரித்திரங்களின் தேதிகளும், இலக்கணநூலின் விவரங்களும் வழுவிப் போனபோதிலும், அவசியமான காலத்தில் அவைகள ஞாபகத்திற்குவந்து உபயோகப் படுவதுமன்றி அவனுக்கு நேரிட்ட காரியங்களின் ஞாபகத்தைப்போலவும் மனதில் உறுதிப்பட்டிருக்கும். ஆதலால் ஒன்றைஅறியும்படியானவல்லமையையும்,உண்மையைக் கண்டறியத்தக்க முயற்சியையும், மேலுமேலுங் கற்றுக்கொள்ளவேண்டிய நிர்வாகத்தையும், ஒன்றைக் கண்டறியுஞ் சூட்சும புத்தியையும், முகாந்தரங்களை நிதானித்தறியுஞ் சக்தியையும், இன்னும் மனதிற்குண்டான சகலவித நற்குணங்களையும் நிரந்தரமாக விர்த்திசெய்துகொள்ளலாம். இதனால் ஒருவனுடைய மனது கல்விக்குத்தானே யாதாரமாகின்றது; அன்றியும் நிலைத்து நிற்கிற நீர்போலல்லாமல் தன்னிலேயூறுகின்ற ஊற்றைப்போலாகின்றது. நிலையான கல்விப்பயிற்சிகளும், விவேகப் பழக்கங்களும் ஒருமைப்

பட்டவைகளே. ஆகிலும், கல்வி மார்க்கத்தினால் விவேகங்கள் விர்த்தி யடைகின்றன வென்பது யாவருக்குந் தெரியும். ஆனால் அப்படியல்லாமலும், சீக்கிரமாகக் கிரகிப்பதும், தெளிவாக நியாய முணர்தலும், நிதானமுள்ள சிந்தனையும், கல்வியின் யுக்தியான மார்க்கங்களால் விர்த்திசெய்யப் படலாம். ஆதலால், ஒரு சிறுவனுக்கு உலகப் பழக்கத்தினால் வரும் அறிவைப் பார்க்கிலும் கல்விப் பழக்கத்தினால் வரும் அறிவு கொஞ்சமா யிருந்தபோதிலும், அதனாலே மனோசக்தியாகிய முக்கியமான பயனை அடையலாம்.

தர்க்கம், கணக்கு, ஆத்ம விசாரணை, அளவின் விகற்பம், தொகைகளின் விகற்பம், ஞாபகவிர்த்தி, விவேகவிர்த்தி இரக்கமுடைய குணவிர்த்தி, சகல மனிதருக்குங் கடவுள் அளித்திருக்கின்ற நல்லுணர்ச்சி முதலானவைகள் சரித்திரத்திலும், சாஸ்திரத்திலும், தத்துவத்திலும் உண்மையைக் காட்டமாட்டாவென்றும், உதவியான தொழிலைக் கற்பிக்க மாட்டாவென்றும் நீங்கள் எண்ண வேண்டுவதில்லை. அப்படிக்கொத்த நூல்களில் அடங்கிய சங்கதிகள் உங்களுக்குத் தெரியவில்லையென்றே எண்ணவேண்டும்.

கணக்கு சகலவிதமான தொழில்களுக்கும் வர்த்தக வியாபாரங்களுக்கும் முக்கியமாய்வேண்டும். ஆனால், இப்படியே க்ஷேத்திர கணிதத்தினுடைய பிரதம சிக்ஷையானது எஞ்சினீர் உத்தியோகஸ்தனுக்கு அவசியமாக வேண்டும். ஆனால் அந்தக் கணக்கில் அதிகப் பழக்கமும் அவசரமாகச் சொல்லுதலும் உபயோகமில்லை. இந்த நூல் சில சாஸ்திரங்களுக் காதாரமும் அனேக சாஸ்திரங்களுக்கு முக்கிய பிரயோசனமுமானதா யிருக்கின்றது. ஆனால் அந்த க்ஷேத்திர கணித சாஸ்திரத்தைப் பூர்ணமாக அப்பியாசஞ் செய்திருக்கிறவர்கள் சிலருண்டோ வில்லையோ, இந்த நூல் சில சாஸ்திரங்களோடு எவ்வளவுஞ் சம்பந்தப் படவில்லை. இப்படிப் பட்ட நூலைப் படியாத அனேக பூர்ண வித்துவான்களு மிருக்கிறார்கள். அப்படியிருக்க, இப்படிப் பட்டதைக் கற்கவேண்டியதேனென்றால், இது உலக வழக்கத்திற்கும் இதர சாஸ்திரங்களுக்கும் எவ்வளவு உதவியாகலா மென்பதைக் குறியாமல், இதையும் இதற்கொப்பான இன்னும் சில நூல்களையும் படித்தால், எல்லோருக்கும் எப்போதும் அறிவுவிளங்கிக் கிரகிக்கிற தீக்ஷணிய புத்தியுண்டாகி நீதிவிசாரணை வல்லமை நிச்சயமா யுறுதிப்பட்டுச் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கு முண்டான வேறுபாட்டை யறியச் சீக்கிரத்தில் வல்லவர்க ளாகின்றோம்.

இப்படிப்பட்ட கல்வி யறிவினால் ஒருவன் மற்றொருவனிற் சிறந்திருக்கிறான். விவேகமானது கல்வியை விர்த்தி செய்வதினால் பெருமை யடையலாம். அந்தக் கல்வியின் உயர்வு தாழ்வு இவ்வளவென்று யோசிப்போமாகில், அது மனிதனுக்கும் மிருகத்துக்கும் இடையில் இராநின்ற வித்தியாசத்துக்குச் சற்றேறக்குறைய

நிகரா யிருக்கலாம். அப் பிரகாரமே மனிதர் அறிவின் இயற்கையையும், அது பயன்படும்படி செலுத்தும் உறுதி மார்க்கத்தையுங் கற்பிக்கத்தக்க புத்தகங்களைப் படிப்பதும், கவி கற்பனைக் கதைகள் முதலானவைபோல் நம்முடைய நானாவித இச்சைகளை விளைவிக்கும் வீணான புத்தகங்களை வாசிப்பதும் நம்முடைய வாழ்க்கைக்கு உபயோக மில்லாதனவாயினும், அப்படிப்பட்ட படிப்பினால் உயர்ந்தோர் பிறரையடக்கி நடத்தும்படி திறமை யுள்ளவர்க ளாகின்றார்கள். பலரும் தம்மை இச்சிக்கும்படியாகவும் எல்லோரும் அதிசயிக்கும்படியாகவுஞ் செய்து கொள்ளுகிறார்க ளாதலால், பாலிய சிக்ஷையினுடைய முக்கிய தன்மை எப்படி யிருக்கவேண்டுமென்றால், லாபமான தொழில்களுக்குத் தற்காலத்தில் உடனே உபயோகப்படுகிற கல்வி சாஸ்திரங்களைக் கற்பிக்காமல் உலகத்தில் உயர்வாயும் கண்ணியமாயு மிராநின்ற தொழில்களுக்கு மனதை விர்த்திசெய்து விவேகத்தை உயர்த்தும்படி நாம் ஞாபகத்தில் வைக்கத்தக்கதா யிருக்கவேண்டும். கல்வியாவது இப்படிப்பட்டதென்றும், அதனால் கற்பிக்கப்படும் உறுதியான விவேகம் இத்தன்மை யுடையதென்றும் நான் எடுத்துச் சொல்லுகிறேன்.

சிறு பள்ளிக்கூடங்களிலுஞ் சர்வசாஸ்திர பள்ளிக்கூடங்களிலுஞ் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட சிக்ஷையானது ஜீவன அலுவல்களுக்குத் தற்கால உபயோகமானதா யிராமற் போனபோதிலும், அவ்விடங்களி லடையுங் கல்வி உண்மையானதும், உபயோகமானதும், மேலான சவுக்கியத்திற்கு ஆதாரமானது மாயிருக்கின்றது. மேலும், பள்ளிக்கூடங்களிலாவது மற்ற இடங்களிலாவது சிறுவர்களுக்கு அல்லது பெரியவர்களுக்குக் கற்பிக்கும் எல்லாக் கல்விகளிலும் அந்தந்தப் பாஷைகளின் முக்கிய கருத்தைச் சொல்விப்பது முதன்மையாயிருக்கின்றது. அப்படிச் சொல்விக்கவேண்டிய காரணம் விசிதமாயிருக்கலாம். பாஷைக ளிப்படிப்பட்டனவென் றறிந்தால், அது எல்லாக் கல்விகளுக்குந் திறவுகோலாயிருக்கும். மனிதருடைய இருதயத்தில் உண்டாகாநின்ற எண்ணங்களும் உணர்வுகளும் நீதி காரணங்களும் பேசுகிற அல்லது எழுதுகிற அடையாளங்களினால் தெரியப்படுகின்றனவல்லவா? மேலும், பாஷையின் மூலமாக நாம் பிறரோடு சம்பாஷணை செய்யும்போது, கடவுளால் சிருஷ்டியாயிருக்கப்பட்ட பொருள்களின் நிலைமையும் அவைகளை உபயோகப்படுத்திக்கொள்ளும் தந்திரம் முதலிய யாவுந் தெரியவருகின்றன. ஆதலால், பலமும் அர்த்த புஷ்டியும் விஸ்தாரமான சொற்களுங் கூடிய ஒரு பாஷையைப் பூர்ணமாகக் கற்பது கல்வியில் கிஞ்சித் ஞானமடைய விரும்புகிறவர்களுக்கு முக்கியமாக வேண்டியது. மேலும், ஒரு பாஷையை

மையான அறிவின் மிகுதியும், நம்முடைய அறிவை யடக்கியாளும் படியான வல்லமையும், பிறருடைய இஷ்டங்களை நம்முடைய வழிக்குத் திருப்பும்படியான சக்தியும் உண்டாகும். அவரவர்கள் கற்ற வித்தைகளினு லல்லது வேறு விதத்தினுல் நாம் படித்தவர்களுக்கும் படியாத மூடருக்கு மிருக்கிற வித்தியாசங்களைத் தெளிவாகக் காட்டமுடியாது.

உலகத்தில் வழங்கி வருகின்ற நானுவித பாஷைகளிற் சில பாஷைகள் மாத்திரம் மற்றவைகளினும் மிகவுஞ் சிறந்தவைகளாயிருக்கின்றன. மேலே நான் எடுத்துக்காட்டிய எல்லாப் பாஷைகளினுடைய முடிவும் பயனும் முற்றும் உணரப்படாத பூர்ணமுடையவைகளாயு மிருக்கின்றன. இதனுல், நாம் சமஸ்தமான கல்விச் சாலைகளிலும் இரண்டொரு பாஷைகளை மாத்திரம் மிகுந்த உழைப்பெடுத்துக்கொண்டு கற்பிக்கவேண்டுங் காரணம் இன்னதென்று காணலாம். இந்தியா தேசத்தில் இங்கிலீஷ் பாஷையையுந் தேச பாஷைகளையுங் கற்பிக்க ஏற்பட்ட சிக்ஷை இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட் டிருப்பதுவே இதற்குப் போதுமான திருஷ்டாந்தம்.

உலகத்திற் சொல்லப்பட்ட பாஷைகளைப் போலவே இங்கிலீஷ்பாஷையும் ஸாஹித்தியத்திலுஞ் சாஸ்திரத்திலுந் தத்துவத்திலும் தக்கதா யிருக்கின்றதென்பது எல்லாருக்குந் தெரியும். ஆயினும், ஒருபொழுதும் யூரோப் கண்டத்தில் வழங்குகிற மற்றப் பாஷைகளினும் மேற்சொல்லிய விஷயங்களில் உயர்ந்ததாகச் சொல்லப்படாது. ஏனெனில், எந்த எண்ணத்தைக் கருதி ஓர் உயர்ந்த பாஷையைக் கற்பிக்கின்றூர்களோ அதற்கு அது உதவியாகலாம். ஆனுல், நாம் எல்லோரும் தோழமையான குடிகளாகையால், நாம் கீழ்ப்படவிருக்கிற ராஜாங்கத்தின் முக்கிய பாஷையாகிய இங்கிலீஷ் பாஷையானது எல்லோருக்கும் பொதுவான பாஷையா யிருக்கின்றது. சிறந்த கல்விக் குண்டான சம்பூர்ணத்தையடைய எவ்வளவு காலம் செல்லுமோ அவ்வளவு காலமட்டும், இப்படிப்பட்ட வலுமையும் அர்த்த புஷ்டியும் நாகரிகமுமுள்ள பாஷையின் மூலமாகத் தேசபாஷைகளின் குறைவுகளை நிவிர்த்திக்கவேண்டும்.

கிழக்குத்திசையில் வழங்குகிற சகல தேசபாஷைகளும் அறிந்த யாராவது ஒரு நிமிஷ மாத்திரஞ் சிந்தித்துப் பார்ப்பார்களாகில், மேலே நான் சொன்ன பயன்களைத் தருவதற்கு ஏற்றதாயிருப்பது ஒரு பாஷையு மில்லையென்று கண்டறியலாம். மனிதர்கள் எழுத்தினுலாவது, சொல்லினுலாவது தங்கள் மனதிற்றோன்றியவைகளை வெளியிற் சொல்லுவதற்குமுன் ஓர் உறுதியான பாஷைக்கு முதற் கருவிகளாகிய நினைவுகளையும் அபிப்பிராயங்களையுங் கொள்ளவேண்டும். ஆதலால், யூரோப்தேசத்து நூல்களையும், சாஸ்திரங்களையும், தத்துவத்தையும், ஸாஹித்ய விவரங்களை

யும் தெளிவாக உணர்த்தும்படியாய் இத் தேச பாஷைகளில் வாசகநடையில் எழுதிய புத்தகங்களுண்டா? தக்கசொற்களடங்கிய ஒரு பாஷையை இத் தேசத்தார்கள் கற்றுக்கொள்ளுகிற வரைக்கும் தங்கள் புத்தியில் நுழையாதவைகளும் எட்டாதவைகளுமாகிய சொற்களை எப்படிச் சேகரிக்கமாட்டுவார்கள். இத் தேசத்தார்களுக்குள் நன்றாகவும் விசிதமாகவும் வாசித்துணர்ந்த புத்திமான்களில் அனேகர் ஒன்றைச் சிந்திக்கும்போது இங்கிலீஷ் பாஷையில் யோசிக்கிறதாகச் சொல்லக்கேட் டிருக்கிறேன். தங்கள் மனதில் தட்டுகிற யுக்திகளையெல்லாம் இத் தேச பாஷைகள் தெளிவாய்க் காட்டமாட்டா. மேலும் இந்தப் பாஷைகள் இங்கிலீஷ் பாஷையைப்போல் தோற்றிய யுக்திகளைத் தெளிவாக விவரிக்க மாட்டா. இங்கிலீஷிலும் இத் தேச பாஷைகளிலும் பூர்ணப் பிரக்ஞையடைந்த ஒரு பண்டிதன் இங்கிலீஷைத் தேச பாஷைகளில் மொழிபெயர்க்கும்போது, இந்தப் பாஷைகளில் தகுந்த சொற்கள் இல்லாமையால், வாக்கியங்கள் தோறும் மயங்கி நிற்பான். ஒரு பாஷையிலுள்ள கருத்தும் அபிப்பிராயமும் மற்றொரு பாஷையிற் பேர்த்தெழுதும்போது தெளிவாகும்படி சுலபமான சொற்களைக்கொண்டு தெரிவிக்கவேண்டும். இங்கிலீஷ் ஜாதியில் நாகரிகமில்லாமல் மூடர்களாயிருந்த முன்னோர்கள் தாங்கள் கற்ற சுலபமான பாஷையும் நாகரிக மில்லாத வசனங்களும் போதுமென்று சும்மாவிருந்துவிடுவார்களாகில், அதில் இப்போது கற்கிற சகல கலைகளுக்கும் அது வழியா யிருக்குமோ வென்று யோசித்துப் பாருங்கள். இங்கிலீஷ் பாஷா சரித்திரத்தையும், அந்தப் பாஷை ஏற்பட்ட கிரமத்தையும் அறிந்த எல்லோரும் மேற்சொன்ன விதமா யிராமல் வேறுவிதமா யிருக்கக் காண்பார்கள்.

ஆகையினாலே, சுதேசபாஷைகளைக் கற்றுக்கொள்ளாமல் திரஸ்கரித்து நீக்கிவிடலாமோ வென்றால், நான் அப்படிச் சொல்லவில்லை. அப்படிச் செய்யவுங் கூடாது. நான் தேசபாஷாபிவிர்த்திக்கு உதவிசெய்கிற தில்லையென்று சிலர் எண்ணியிருப்பதற்குச் சரியாக இவ்விடத்தி லிருக்கிறவர்களி லொருவரும் என்னிடத்தில் அபவாதத்தை ஆரோபிக்காமலிருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். நான் இப்போது தலைமையாயிருக்கிற வித்தியாசாலையில் தேசபாஷாபிவிர்த்தி செய்யவேண்டியதற்கு உபாயமான பங்கீடுகளை ஏற்படுத்த எனக்கு நல்ல ஆலோசனை சொல்லும்படியானவர்களோடுகூடி யோசிப்பதில் வெகுகாலம் போக்கினேன். அவைகளை விர்த்தி செய்யவேண்டிய காரணமென்னவெனில், இங்கிலீஷ் சாஸ்திராப்பியாசிகளினாலே அந்தப்பாஷை கற்கப்படும், விர்த்தி செய்யப்படும், விரிவாக்கப்படும், சீர்திருத்தப்பட்டு மிருப்பதுமன்றி அதில் அனேக கிரந்தகர்த்தாக்களுடனே நாமும் சகாய

மாய்க் கூடி இடைவிடாது விர்த்திசெய்துகொண்டு வருகிறேமா கையால், அதுபோலவே அந்தந்தத் தேசத்தார் அந்தந்தத் தேசத் துக்குரிய பாஷைகளை நுணுக்கமாக ஆராய்ந்து பூர்ணமாயறிய வேண்டியது. ஒரு தேச பாஷையை நீக்கிவிடப் பிரயத்தனஞ் செய்வது எவ்வளவும் நினைக்கக் கூடாத வேலையாயும், அயுக்த மானதாயு மிருக்கின்றதென்று எனக்குத் தெரியும். ஆகையால் அந்த பாஷையைக் கற்கவேண்டியது அவசியமென்று நான் நிரம் பவும் உறுதியாகச் சொல்லுவேன்.

தேசபாஷைகளை விர்த்தி செய்யவேண்டியதற்கு நான் சொல் லும் உபாயத்திற்கும் இன்னும் மற்றவர்கள் சொல்லுகிறதற்கும் வித்தியாசமிருக்கலாம். ஆனால், நான் சொல்லும் அபிப்பிராயம் மிகுந்த உறுதியானதாயிருக்கும். இத்தேசத்து உபாத்தியாயர்கள் சாதாரணமாக நடத்திவருகிற தேசபாஷையின் சிக்ஷையானது நியாயமாகத் தகுதியும் உபயோகமுமுள்ளதா யிருக்கிறதாக எனக் குத் தோற்றவில்லை. அப்படிக் கற்பித்தலின் பயன் எப்படிப்பட் டதோ அதுவும் அவர்களுக்குத் தெரியவில்லை. சொற்களையும் வாக்கியங்களையுஞ் சொல்லும் சித்திரத்திற்காக நான் அதிசயிக்க வில்லை. அவைகளைச் சொல்லிப் பிள்ளைகளைக் கலவரப்படுத்தும் உபாத்தியாயருடைய சாமர்த்தியத்தை நான் நம்பவும்மாட்டேன். ஒருபாஷையின் பொருள்களைத் தெளிவான சொற்களைக்கொண்டு சொல்லாமல் மறைத்துக் காட்டுகிறவர்கள் பாஷையினுடைய பய னானது நாம் நினைக்கும் அபிப்பிராயங்களைத் தெளிவாகக் காட்டு வதற்குத்தானென்று உணராதவர்களாயிருக்கவேண்டும். சிலநாளை க்கு முன் என் கையளவு நீண்ட ஒரு சொல்லை நான் கண்டு அதை எழுதிய அவமதிக்கு அதிசயப்பட்டேன். தேச பாஷையையா வது மற்றப் பாஷையையாவது கற்பிக்கவேண்டிய முறை எப் படிப்பட்டதெனில், கலவரப்படுத்தாமலும் வருத்தப்படுத்தாம லும் ஒரு அருத்தத்தைத் தெளிவாகக்காட்டி உறுதிப்படுத்துவிக் கிற இலக்கண விதிகளைக்கொண்டு விவரித்துச்சொல்லிப் போதிக்க வேண்டும். தேசபாஷைகளைச் சாக்கிரதையோடு உழைத்துக் கற் பதினுலுண்டாகும் பயன்களை விஸ்தாரப்படுத்தி விர்த்தியடைகிற தற்குத் தகுதியாகப் பல மொழிகளைக்கொண்டு செழுமையாக்கி, இன்னுமதிகமாகத் தெளிவுபடுத்திப் பொருள்வன்மை சொல்வன் மை உண்டாக்குவிக்கலாம். இப்படிப்பட்ட விஷயங்களை ஒரே காலத்திற் பெறுவதற்குக்கூடாது. தேசபாஷையோடு சில சிறந்த பாஷைகளையும் கற்பதினுலும், அவைகளிலுள்ள நல்ல பொருள் களைப் படிப்படியாகக் கீழ்த்திசைப் பாஷைகளுக்குள் கலக்கச் செய்வதினுலுமன்றி அது சிறப்படைய மாட்டாது.

பள்ளிக்கூடங்களில் கற்பித்துக்கொண்டுவருகிற உபயோக மான கல்வியின் வேறு பிரிவுகளையும், அவைகளின் பிரயோசனத்

தையுஞ் சொல்லுவேன். அவைகளில் சில எல்லோருக்கும் உபயோகமானவைகளாயிருக்கின்றன. அவை எவையென்னில், எழுதுந்திறமை, கணக்குக் கூட்டும் விரைவு, நல்ல தொனியோடும் உச்சரிப்போடும் பேசுந்திறமை என்றிவை. மேலும், முக்கியமாக நம்முடைய தேச சரித்திரமும், பூகோளசாஸ்திரமுங் கற்கவேண்டும். இதைக் கற்பதினால் நாம் இருக்கிற உலகம் இன்னவிதமாயிருக்கிறதென்றும், அதனுடைய கமனங்களை உண்டுபண்ணுகிற காரணம் இப்படிப்பட்டதென்றும், அதனுடைய தேசப்பிரிவுகள் துரைத்தனப் பிரிவுகள் எல்லைகள் முதலானவைகள் இவையென்றும் அறியலாம். இப்படிப்பட்ட படிப்புகள் ஜீவன அலுவல்களுக்குத் தற்காலம் வேண்டியவைகளல்லாத போதிலும், நம்முடைய சற்காலக்ஷேபமான சிந்தனைகளில் விருப்பத்தை உண்டு பண்ண மூலமாயிருக்கும். இன்னும் இன்னும் படிக்கவேண்டுமென்கிற ஞாபகமே ஓர் ஆனந்தமாயிருக்கும். இயற்கையை உணர்தலும், பொருள்களின் தத்துவங்களை ஆராய்ந்தறிதலும் மனத்திருப்தியை உண்டாக்குகின்றன. இந்தக் கல்விகளெல்லாம் உண்மையான பெருந்தன்மையையும், கண்ணியத்தையும், கல்விமானென்கிற அழியாத கீர்த்தியையும் கொடுக்காநின்ற சாஸ்திரவித்தைகளைக் கற்கிறதற்கு வழி காட்டுகின்றன.

இப்போது நான் சொல்லிக்கொண்டுவந்த கல்வியினது அருத்தமும், முடிவும், பயனுஞ் சரியென்று உங்களில் யாராவது ஒப்புக்கொள்வீர்களாகில், பூர்த்தியாய்க் கற்றுணர்ந்த கல்விமானுக்குண்டாகிய நிசமான யோக்கியதையையும் ஒப்புக்கொள்வீர்கள். அவன் தன்னுடைய கல்வியின் யோக்கியதைக்குத் தகுந்தபடி கவுரவத்தையும், இந்த விவேகமுள்ள துரைத்தனத்தாரிடத்தில் பெரிய உத்தியோகத்தையும் எதிர்பார்க்கலாம். ஆனால் அவன் எண்ணப்படியே நடக்குமா, எல்லாரும் யோக்கியதையைப் பற்றியே தயவுவைக்கிறார்களா, கல்விமான்களெல்லாருமே தனவான்களுங் கனவான்களுமாகின்றார்களா, அப்படியிருக்கமாட்டாது என்று தெரியாமையால், பிறர் சொல்லுகிறதைக்கேட்டு நீங்கள் நம்பவேண்டாம். ஆகிலும், நான் சொல்லுகிற ஒரு நிசத்தை நீங்கள் மனதில் உறுதியாக எண்ணவேண்டும். அது எதுவென்றால், கல்வியின் திறமைக்குத் தகுந்தபடி உத்தியோக பிரபலத்தையுஞ் சிறந்த மதிப்பையும் அளவிடக்கூடாத காரிய சித்திகளையும் மற்றொரு விதத்தினாலே பெறக்கூடாத பிரயோசனங்களையும் ஒரு கல்விமான் சகசமாக அடைவதுமன்றி, மற்ற வெளிச் செல்வங்களினாலே யடையக்கூடாத பரிசுத்தமான ஆத்ம சவுக்கியங்களையும் அடைகிறானென்று நீங்களறிய வேண்டும்.

கல்வியை விர்த்திசெய்ய வேண்டுமென்று நிசமாக விரும்புகிறவர்களும், விவேக சாலிகளாயிருக்கிறவர்களும், அந்தக் கல்வி

அநேகநன்மைகளை உண்டுபண்ணுகிறதாகச் சொல்லும் பயன்களுள் முக்கியமாகச் சொல்லவேண்டிய தொன்றுண்டு. அது யாதெனில், வெளியரங்கமாயுண்டாகும் நன்மைகளேயல்லாமல் மனதிலுண்டாகும் இஷ்டங்களுஞ் சுகங்களுமாம். நன்றாக வாசித்தவன் ஆராய்ந்து பார்க்கும்போதெல்லாம் அவனுக்குத் தோற்றுகின்ற சலனமில்லாத மனோஸந்துஷ்டிகளை நமக்கு யார் இவ்வளவென்று அளவிட்டுச்சொல்லுவார்கள். சத்தியமாகவே அவன் தனக்சொப்பான மனுஷகணத்தோடு சகல சுபாசுபங்களையுஞ் சமுசார துக்கங்களையும் வியாதிகளையும் உலகவியற்கையான இன்பதுன்பங்களையும் அனுபவிக்கவேண்டியிருந்தபோதினும், நாகரிக வாழ்க்கைக்கு இடுக்கண்களாகிய பெரியோரைப்பழிக்குங் குணமும், ஈடானவர்களை யிகழ்தலும், கீர்த்தி பெருமையில்லாமற் போதலும், வீண் எண்ணமும், மந்தபுத்தியும், இன்னுஞ் சில இப்படிப்பட்ட துர்க்குணங்களும் அவனை அணுகா. பின்னும், சத்தியவானுஞ் சற்குணவானுமாயிருப்பானாகில் மேற்படி குணங்கள் நோக்கவே மாட்டா. எப்படிப்பட்ட சுக துக்கங்கள் நேரிட்டபோதிலும் கல்விமானானவன் தரித்திரம் வந்தபோது பொறுமையினையும் செல்வம் வந்தபோது சந்தோஷப்படும்படியான விவேகத்தையும் கைவிடமாட்டான். ஆனால் ஒரு கல்வியற்ற மூடனுக்கு இவ்வாறு நடந்துகொள்ளத்தெரியாது. கல்விமான் தான் இருக்கும் இடத்திலேயே சொற்பசெலவுசெய்து வெளிச்செல்வங்களுக்கு எவ்வளவும் ஒப்பிடக்கூடாத செவிச்செல்வத்தைச் சம்பாதித்துக்கொள்வான். அவன் படித்த புத்தகங்களும், அவனுடைய அறிவும், சிந்திப்பும் அவனை இடைவிடாமல் சூழ்ந்திருக்கும். இவைகள் அவன்போகிற இடமெல்லாம் பின்சென்று வெளித்தேசங்களில் ஆனந்தமுண்டாக்கி, சுதேசத்தில் நல்வரவு கொண்டாடச்செய்யும். நித்திரைசெய்யப்போம்போது ஆனந்தத்தையும், விழித்துக் கொள்ளும்போது சந்தோஷத்தையும் விளைவிக்கும். இவைகள் அவனுக்கு ஓர் அங்கமாகின்றன. எவ்வளவு வெளிச்செல்வமுடையவனானாலும், மனோசம்பத்தை யிழக்கத்தக்க எண்ணமுடைய கல்விமான் எவனாகிலுமுண்டா? இல்லை. பூர்வம் இருந்ததாகத் தெரியவருகிற முனிவர்களில் மகா ஞாதாக்களாயிருந்த அதிக தரித்திரர்களும் பிறரிடத்திற் பெற்றுக்கொள்ளுங் கேள்விகளினாலும், தாங்கள் தத்துவத்தை உணரும்பொருட்டுத் தனிமையான விசாரணைசெய்வதினாலும், ஏகாந்தமாகத் தாங்களே நிஷ்டைசெய்து கொள்வதினாலும் மனித இயற்கைக்கு இயல்பாகிய அறிவுக்கெட்டாத ஞானத்தையடைந்து, உலக சுகதுக்கங்களைக்குறித்து மனங்கலங்காமலும், அகாலமரணம் அநியாயமாகத் தங்கள் மேல் விதித்தபோதிலும் அப்படிப்பட்ட அந்த மரணாவஸ்தைக்குக் கூட மனஞ் சலியாமலும் அனுபவித்தார்களல்லவா?

இவ்வாறு கல்வியினால் உண்டாகும் குணங்களையும் பயன்களையும் சுருக்கமாகச் சொன்னேன். இத்தன்மையாகிய காரியங்களுக்கும் பயன்களுக்குமாகவே நாம் கூடியிருக்கிற பாடசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த வித்தியாசாலை ஓர் அளவுக்கு உட்பட்டதும் ஆரம்ப சிக்ஷைக்குள் அடங்கியதுமாய் இருந்த போதிலும், இனிப் பிற்காலத்தில் இதனால் உண்டாகப்போகிற பெரிய பிரயோஜனம் இப்படிப்பட்டதென்று யார் சொல்லக் கூடும்? இது யாருடைய உதவியை நோக்கியிருக்கின்றது? உபகாரமுள்ள கவர்ன்மெண்டாரையும் நோக்கியிருக்கவில்லை. இன்றைய தினம் சிறப்பாகச் செய்த தர்மத்தையும் சார்ந்ததன்று. என்னைப் போல் பேச வருகிறவர்களையும் சார்ந்திருக்கமாட்டாது. பின்னை எப்படியென்றால், உங்களுக்கு வேண்டியவைகள் இப்படிப்பட்டவையென்று நன்றாக அறிந்து அப்படி வேண்டியவைகளைச் சேகரித்துக்கொள்ள வேண்டுமென்கிற உறுதியான தீர்மானங்களையே நோக்கியதா யிருக்கின்றது. இந்த வித்தியாசாலைக்குள்ளாகச் சொல்விக்கும் ஆரம்ப சிக்ஷை அளவற்ற மதிப்புடையதா யிருந்தபோதிலும், இத்தேசத்திலுள்ள வெகுஜன உதவிக்காகவும் ஆதரவற்றவர்களுக்காகவும் நீங்கள் செய்துவரும் உபயோகமான கலவிப்பயிற்சியின் முயற்சியானது எவ்வளவு விஸ்தாரமானதா யிருந்தபோதிலும் இந்தமட்டில்தானே நீங்கள் சும்மா இருந்து விடலாமென்று யோசிப்பது எனக்கு இஷ்டமில்லை. கல்வியானது நாளுக்குநாள் விஸ்தாரமாய் வியாபிக்கவேண்டும். ஜீவாதாரமாகக் கற்றுக்கொண்ட சிறந்த கல்வியின் ஒவ்வொரு அம்சமும் ஆத்மாவுக்கு நிலையான இன்பத்தைக் கொடுக்கும். இவ்விடத்தில் நீங்கள் சிலர் செய்துவருகிற முகாந்தரத்தினாலே வெகுபேர் கல்விச்செல்வத்தையடைந்து, அதனால் தாங்கள் அடைந்த பிரயோசனங்களைப் பின்னாலே யுணர்ந்து, அதற்குக் கைம்மாறாகத் தாங்களும் இப்படிப்பட்ட உபகாரிகளாய்ச் சிரத்தையுடன் கல்விப்பயிற்சிக்கு வேண்டிய தருமங்களைச் செய்பவர்களுக்குள் கலந்து கொள்வார்கள். இத் தேசத்தார் தங்களுக்கு நாகரிகமுஞ் செல்வமும் பெருகப் பெருக இவைகள் எந்தக் காரணத்தினா லுண்டாயினவென்று தெளிவாய் அறிந்து கொள்வார்கள். அப்போது நீங்களும் உங்களுடைய பின்னோரும் இப்படிப்பட்ட அநேக வித்தியாசாலைகளை அபிமானித்து நடத்திவருவதில் உங்களுடைய நற்சிந்தைகளுந் திரவியங்களும் உதவியாகக் காண்பீர்கள். இப்போது இந்த வித்தியாசாலை யிருக்கிற கிரமமானது, நானூறுபிள்ளைகளுக்கு ஆரம்ப சிக்ஷை சொல்லுவிக்கப் போதாத வரும்படியுடைய ஒரு தருமப் பள்ளிக்கூடமாகத்தா னிருக்கின்றது. இனி உத்தரோத்தரம் நாலாயிரம் பிள்ளைகள் படிக்கும்படியான பாடசாலைக்கு இதுவே பீடமாகலாம். இருபதினாயிரம் பிரஜைகள் அடங்கிய ஒரு செல்வமுள்ள இராஜதானிக்குத் தகுந்த விசாலமுடைய கட்டடமாக

லாம். இப்படி எப்போதாகும்? தகுந்த காலம்வந்து ஒத்துக் கொண்டு, அந்தக் காலத்தில் உங்களுடைய நிஜப் பிரயோசனங் களைக் கண்டறிந்து அவைகள் நிமித்தமாகத் தகுந்த முயற்சி நீங் கள் செய்தாலல்லது வேறொன்றால் இத்தன்மையாகிய எண்ணங் கள் நிறைவேறுமோ? ஒருவன் எளியவனாயிருந்தபோதிலுந் தனி கனாயிருந்தபோதிலுந் தன் பிள்ளைகளும் பிள்ளைகளுக்குப் பிள்ளை களுந் தன்னைக் காட்டிலுஞ் செல்வவான்களாவது கல்வியின் பலத் தினாலென்று தன் திருஷ்டிக்கு முன் நடக்கிற சில திருஷ்டாந்தங் களினாலே யறியலாம். அப்படியாக ஒன்றுக்குப் பத்து பலனாகப் போகிற நன்மைகளுக்குக் கொஞ்சம் பணம் உதவி செய்ய ஒரு வனுக்கு மனமுண்டாகும். அப்படிப்பட்டவர்கள் இந்தப் பாட சாலைக்குள் தாராளமாக நுழையலாம். எவ்வளவு கொடுத்தாலும் பிரியமா யிருக்கும்படியான கல்விக்குக் கிஞ்சித்துச் சம்பளங் கொடுக்கவேண்டுமென்கிறதேயொழிய, இவ்விடத்தில்படிப்பவர்க ளுடைய தொகையைச் சுருக்கவும் இவ்விடத்தில் கற்பிக்குங் கல் வியைச் சூக்ஷ்மமாக்கவும் வேண்டுமென்கிற தில்லை.

ஆதலால், இந்தச் சிறந்த கட்டடம் விர்த்தியடைந்தாலும் அல்லது க்ஷீணமடைந்தாலும் அது உங்களைச் சார்ந்தது. உலகச் சரித்திரத்தில் இந்த மாளிகை யில்லாமற் போம்படியான காலம் எவ்வளவு சீக்கிரம் நேரிடுமோ, அதோடுகூட இந்தத் தரும ஏற் பாடுகளும் அழிந்துபோகுமோ என்னவோவென்று கவலை யுண் டாயிருக்கிறது. அல்லது லோக சங்கார கால வரைக்கு மிருந்து முடிவிற் பொடியாய் நொறுங்கிப் போகலாமோ? இந்தக் கட்டடம் இப்போது இருக்கிறபடிக்கிருந்து தேசத்தார் ஈனர்களாகி இதைக் காப்பாற்ற முடியாமற்போமோ? அல்லது தேசத்தார்கள் பெரு மைக்கு உதவியாகிய சகலகாரியங்களிலும் பிரபலப்பட்டு இந்தக் கட்டடம் போதாதென்று சொல்லும்படி நேரிடுமோ வென்ன வோ? பிரிட்டிஷ் துரைத்தனத்திலே எந்த எண்ணத்தின்படி முடி யுமோ? விதித்த காலம் வரும்போது இந்தக் கட்டடம் எந்தக் கார ணத்துக்காகக் கட்டப்பட்டதோ அப்படிப்பட்ட கல்வி விஷயங் களை விஸ்தாரப் படுத்த உங்களுக்குப் பிற்காலத்தி லிருப்பவர்கள் இதன் அஸ்திவாரத்தின் மேல் வேறொரு கட்டடங் கட்டப் பார் க்க நேரிடக்கடவ தாகுக.

இப்போது நான் பேசிக்கொண் டிருக்கிற இடத்துக்கு அடியி லிருந்து நல்ல சுப லக்கினத்திலே என்னுடைய அபாத்திரமான கையினாலே போடப்பட்ட அந்தக் கல்லு தோண்டி யெடுக்கப் பட்டு அதின்மேல் எழுதியிருக்கிற பிரார்த்தனை இப்படிக் கொத்த தென்று சொல்லி என்னுடைய பிரசங்கத்தை முடிக்கின்றேன். அது யாதெனில், இவ்விடத்தில் வைத்திருக்கப்பட்ட சாசனமா னது ஒரு காலத்தில் மனிதருக்குத் தோற்றப்படுமாகில் அது

அதிக நாகரிகமும் அன்னியோன்னிய வாழ்க்கையுஞ் சவுக்கியமு முடையவர்களாய்த் தாங்களும் அன்னியர்களும் கலந்து சமாதானமா யிருக்கத் தக்கவர்களுக்குள் அகப்பட்டிருக்கக் கடவதாகுக என்பதே.

கவர்னரவர்களும் இந்தப் பிரசங்கத்தை யொத்துக்கொண்டு இந்தக் கட்டடத்தின் பெருமைகளையும் இதை உபயோகிக்கும் பிரதம தினத்தில் தாம் வந்திருக்கும் படியான பாக்கியந் தமக்குக் கிடைத்த தென்பதையும் எடுத்துப் பேசித் திரஸ்டீஸ்கள் தருமங்களை நடத்துந் தன்மையினையும் சிறுவர்களைப் படிப்பிக்குங் கிரமத்தையும் புகழ்ந்து, அவர்களுக்கு விசேஷ சன்மானமும் பண்ணினார். இவைகள் விவரமாய் இத்தேசத்தின் நியூஸ் பேப்பர்களில் பிரசித்தப்பட் டிருக்கின்றன.

தஞ்சாவூர்த் தொல்ஜா மகாராஜா முன் முதலியார் நிற்கின்ற வடிவமாயும், மத்தியில் சர்க்கில் தத்தாசி அப்பாவென்பவர் துபாசித்தனம் பண்ணுகிற முறைமையாகவும் முதலியார் உருவமுள்ள ஒரு சிறிய படமானது அந்த மாளிகையின் பாக்கிய வசத்தால் திரஸ்டீஸ்களுடைய கிருஷி முன்னிலையி லகப்பட்டுச் சீமைக்கனுப்ப, அதைப் பார்த்து பெரிய கடுக்கன், தோடா, ரத்தினமாலையணிந்துகெட்டடங்கியின் மேல் மஞ்சள்சாலுவை போர்த்துக்கொண்டிருக்கிற அலங்காரத்துடன் சில பர்வத சமீப ஆலயத்தின் முன்னிற்குந் திருக்கோலமாய் ஒரு சிறுவனுக்குக் கல்வியின் உபயோகத்தைத் தெரிவித்து அவனுக்கொரு புஸ்தகங் கொடுப்பதுபோலச் சுந்தர விலாசமுள்ளதாக முதலியாருருவம் எழுதிவந்த ஆறடி உயரமும், நாலடி யகலமுமுள்ள படத்தை மாளிகையிற் கட்ட, முதலியார் புகழ் எல்லாருடைய காதுக்கும் இன்பங் கொடுத்துக் கொண்டிருப்பதுபோல அம்மாளிகையும் அதற்குள் அவர் உருவமும் பார்க்கிறவர்களுடைய கண்களுக்கு இன்பங் கொடுக்கத் தக்கவைகளா யிருக்கின்றன.

காஞ்சீபுரம்

பச்சையப்ப முதலியார் சரித்திரம்

முற்றிற்று.

இஃது

யூநிவர்ஸிற்றியென்னுஞ்

சகலசாஸ்திரசாலைத் தமிழ்த்தலைமைப்புலமை

மழவை மகாலிங்கையரவர்கள்

பாடிய விருத்தம்.

பாண்டியர்க்குச் சங்கமொரு மூன்றினுமார் புலவர்களும்
பாய்நீர் வெள்ள
மீண்டிவரு காவிரிநா டுடையார்க்குக் கம்பன்முத
லியல்வல் லோரும்
தூண்டியசீர்ப் பாமாலை சூட்டியது போற்காஞ்சி
தோய்ந்து வாழும்
ஆண்டகையாம் பச்சையப்பற் கியனீதி சபாபதிமா
லணிந்திட் டானே.

சிவமயம்.

காஞ்சீபுரம் மஹாவித்வான்

சபாபதிமுதலியார்

இயற்றிய

காஞ்சீபுரம்

பச்சையப்பமுதலியார்

நீதிமாலை.

பொருட்பால்.

1. இறைமாட்சி.

அஞ்சாமை யீகை யறிவுட னூக்கமு மாயவெல்லாம்
எஞ்சாமை யாநல் லியல்புக ளுள மிசைமன்னவர்
தஞ்சார்பு பெற்று மகிழ்பவ னாமென்ப தண்வயலில்
செஞ்சாலி நீள்கச்சி வாழ்பச்சை யப்பச்சிந் தாமணியே. (௧)

2. கல்வி.

எண்ணென்று சொல்லப் படுபவு மற்ற வெழுத்தென்பவும்
நண்ணுந் தனக்கிரு கண்ணெனப் பெற்ற நலமுடைய
அண்ணலென் றேயறி வாள ருரைத்திடு மாறுநின்றோன்
மண்ணவர் சூழ்கச்சி வாழ்பச்சை யப்ப வரோதயனே. (௨)

3. கல்லாமை.

அரங்கென்ப தின்றிவட் டாடுதல் போல வறிவினிற்றான்
நிரம்பிட நூல்பல கல்லா னவையிடை நின்றொன்றனைத் [டூர்
திரம்பெறச் சொல்லினுங் கொள்ளா வுணர்வுடைச் செல்வன்கண்
வரம்பெறு சீர்க்கச்சி வாழ்பச்சை யப்ப வரோதயனே. (௩)

4. கேள்வி.

காதுக் குணவெனுங் கேள்வியில் லாதவக் காலத்தினில்
ஓதப் படும்வயிற் றுக்குச் சிறிதிங் குதவுவன்காண்
சீதக் கலைமதி சூடும் பிரானருள் சேர்ந்திடுமெய்ப்
போதத்தி னன்கச்சி வாழ்பச்சை யப்பப் புரவலனே. (௪)

5. அறிவுடைமை.

எப்பொருள் யார்சொலக் கேட்பினு மப்பொ ளின்பயன்றன்
மெய்ப்படல் காணுந் திறஞ்சே ரறிவினை மேவினனால்
இப்புவி போற்று மரியர னூர்தளி யேய்ந்திலங்கும்
ஒப்பதில் லாக்கச்சி வாழ்பச்சை யப்ப வுரவினனே. (௫)

6. குற்றங்கடிதல்.

முன்னர்த்தங் குற்றத்தை யாராய்ந் தறிந்து முனிந்துளத்தில்
பின்னர்ப் பிறர்குற்றங் காணவல் லாருக்குப் பேசுகுற்றந்
துன்னிட லின்றென் றுணர்ந்ததை நீக்கிய தூயவன்காண்
கன்னல் வளர்கச்சி வாழ்பச்சை யப்பநற் காவலனே. (௬)

7. பெரியாரைத்துணைக்கோடல்.

தக்கா ரினத்தின னாய்த்தானு நீதி தவறலிலான்
எக்காலு மொன்னலர் செய்துன்ப மெய்தில னென்றெண்ணியே
மிக்கா ரினத்தை யுடையவ னாகும் விகிர்தன்கண்டீர்
திக்கார் புகழ்க்கச்சி வாழ்பச்சை யப்பச் செய்துங்கனே. (௭)

8. சிற்றினஞ்சேராமை.

செப்பிய நல்லினந் தீமையை நீக்கிடுந் தீயினந்தான்
அப்பொழு தேதுன்ப நல்குறு மென்றறி னந்நல்லினம்
எப்பொழு துந்துணை யாகப் படைத்த வியல்பினன் காண்
இப்புவி வாழ்த்துகச் சிப்பச்சை யப்ப னிருநிலத்தே. (௮)

9. தெரிந்துசெயல் வகை.

தாந்தேர்ந்து கொண்ட வினத்துடன் செய்யத் தகும்வினையை
ஆய்ந்தேபின் றுழுமெண் ணிச்செய வல்லர்க் கரியதென [ன்
ஏய்ந்தோர் பொருளின் றெனவெண்ணித் தான்செ யியல்பினன்வா
போந்தே தொழுங்கச்சி வாழ்பச்சை யப்பப் புரவலனே. (௯)

10. வலியறிதல்.

தங்களுக் குள்ள பொருளி னளவினைத் தாந்தெரிந்தே
அங்கதற் கேற்புற வாழா தவர்செல்வ மப்பொழுது
தங்குதல் போன்றுபி னில்லாகு மென்பதைத் தானுணர்ந்தோன்
மங்கல மார்கச்சி வாழ்பச்சை யப்பனிம் மாநிலத்தே. (௧௦)

11. காலமறிதல்.

ஒருவனிஞ் ஞால முழுவது மாள வுளத்துன்னினும்
வருமவன் கையிடத் தாங்கதற் குச்செய் வகையதனைத்
தெருளுறு கால மறிந்திடத் தோடுறச் செய்மினென்பான்
அருணிறை கச்சியில் வாழ்பச்சை யப்ப னவனியிலே. (௧௧)

12. இடனறிதல்.

ஆழும் புனலின் முதலை யிருப்பி னனைத்தினையும்
போழும் புனலின் புறத்தின் முதலை பொருந்தினது
தாழும் படிமற் றவைவெல்லுந் தன்மையைத் தானறிந்தோன்
வாழும் புகழ்கச்சி யான்பச்சை யப்ப வரோதயனே. (கஉ)

13. தெரிந்துதெளிதல்.

ஒருவன் குணங்களை யாராய்ந்து குற்றமு மோர்ந்துபின்னவ்
விருவகை யுள்ளுங் குணமே மிகவுள னென்னிலவன்
மருவு வினைக்குரி யானெனத் தேரு மதியினன்காண்
பொருவிறென் கச்சியில் வாழ்பச்சை யப்பப் புரவலனே. (கங)

14. தெரிந்துவினையாடல்.

இந்த வினையினை யிந்தக் கருவியி னிவனே
எந்த வகையினுஞ் செய்து முடிப்ப னெனவெண்ணியே
அந்த வினையை யவன்கண் விடுக்கு மறிவன்கண்டீர்
சந்த மிகுகச்சி வாழ்பச்சை யப்பத் தயாநிதியே. (கச)

15. சுற்றந்தழால்.

சுற்றத் தொருவற் குளசெல்வ மாறித் துயருறினும்
மற்றவற் குந்தனக் கும்முள தாம்பழ மைக்குணத்தை
முற்றக்கொண் டாடு நலமுடை யானென முன்னநின்றோன்
நற்றவர் சூழ்கச்சி வாழ்பச்சை யப்பனிந் நானிலத்தே. (கரு)

16. பொச்சாவாமை.

தீரா வறுமை யறிவைக் கெடுக்குந் திறமென்னவே
சோரா வொருவன் புகழை மறதி தொலைக்குமென
ஓரா வருமம் மறதியை நீக்கு மொருவன்கண்டீர்
காரார் பொழிற்கச்சி வாழ்பச்சை யப்பக் கருணையனே. (கசு)

17. செங்கோன்மை.

இறைதான் செலுத்துஞ்செங் கோலது காக்கு மியல்பென்னவே
அறமான வைக்கு மறைகட்குங் காரண மாகிநின்று
குறையா நிலையினிற் காப்பவ னுமெனக் கூறுவரால்
நிறமாருங் கச்சியில் வாழ்பச்சை யப்ப நிருபனையே. (கஎ)

18. கொடுங்கோன்மை.

மேலே விளைவதெண் ணாது முறைதபும் வேந்தனத
னாலேமு னீட்டும் பொருளையும் பின்னரு மப்பொருண்முன்
போலே வரத்துணை யாங்குடி தன்னையும் போக்குமென்பான்
சேலேய் வயற்கச்சி வாழ்பச்சை யப்பச் சிரோமணியே. (கஅ)

19. வெருவந்த செய்யாமை.

கடியசொல் குற்றத்தின் மிக்கதண் டம்மிவை காவலன்றன்
நெடிய பகைவெலற் கேற்ற முரணெனு நீளிரும்பை
மடிய வராவு மரமா மெனச்சொலும் வாய்மையன்காண்
அடியர் புகழ்கச்சி வாழ்பச்சை யப்ப னவனியிலே. (௧௯)

20. கண்ணோட்டம்.

ஒருவன்கண் ணிற்கணி யுங்கல மாதல்கண் ணோட்டமென்றே
மருவிய வக்கல மின்றேலந் நாட்டம் வளர்புண்ணென
அருமையி னோர்ந்தக் கலன்பூண் டிருக்கு மறிவன்கண்டீர்
தருவளர் கச்சியில் வாழ்பச்சை யப்பத் தயாநிதியே. (௨௦)

21. ஒற்றடல்.

ஒற்றும் புகழ்பெற்ற நூலு மெனுமிவை யோரிரண்டும்
கொற்ற மிகுமர சன்றன் விழியென்றுட் கொள்கவென
முற்று முணர்ந்தவர் சொல்வது தேர்ந்த முதல்வன்கண்டீர்
நற்றவர் சேர்கச்சி வாழ்பச்சை யப்ப நராதிபனே. (௨௧)

22. ஊக்கமுடைமை.

ஊக்க முடைமை நிலையா மொருவற் குடைமைமற்றை
ஆக்க முடைமைநில் லாதென வூக்கத்தை யாய்ந்துணர்ந்து
காக்கு நிலையுடை யானென யாருங் கழறுவரால்
மாக்கவி னார்கச்சி வாழ்பச்சை யப்ப மகிபனையே. (௨௨)

23. மடியின்மை.

படிதனை யாள்பவர் செல்வம்வந் தாலும் பயனடையார்
மடியுடை யாரெனி னுள்ளத் துணர்ந்தம் மடியதனைக்
கடியு முணர்வினன் கண்டீ ரறம்பல காதலிக்கும்
குடிமலி கச்சியில் வாழ்பச்சை யப்பக் குணநிதியே. (௨௩)

24. ஆள்வினையுடைமை.

கருமை முகடி யொருவன் மடியின்கண் காணிபெற்று
மருவு மடியில் லவன்முயற் சிக்கண் மலர்மகளாந்
திருமகள் வாழுமென் றோர்ந்தாள் வினையுடைத் தீரன்கண்டீர்
பொருவி லுயர்கச்சி வாழ்பச்சை யப்பப் புரவலனே. (௨௪)

25. இடுக்கணழியாமை.

வினைசெய்யுங் காலத னுக்கிடை யேவந்து மேவிடருக்
கினைதல்செய் யாதவ ரவ்விட ருக்கிட ரெய்துவிப்பார்
எனவறிந் தோர்சொல வெண்ணி யிடருக் கிடங்கொடுக்கான்
தனமலி கச்சியில் வாழ்பச்சை யப்பத் தயாநிதியே. (௨௫)

26. அமைச்சு.

நூனெறி யான்வினை செய்யுந் திறத்தை நுனித்தறிவ
னேனுமப் போது நடக்கு முலகத் தியற்கைதனைத்
தானறிந் தேசெய் பவனமைச் சுக்குத் தகுவனென்பான்
ஞான மிகுகச்சி வாழ்பச்சை யப்ப நராதிபனே. (உசு)

27. சொல்வன்மை.

சொல்ல நினைத்திடுஞ் சொல்லைப் பிறிதொர்சொல் லாகிவெல்ல
வல்ல தொருசொலில் லாமை யறிந்துதன் வாய்மொழியைச்
சொல்லு முணர்வின னென்றுரைப் பாரிந்தத் தொல்லுலகில்
பல்லற மார்கச்சி வாழ்பச்சை யப்பனைப் பாவலரே. (உஎ)

28. வினைத்தூய்மை.

கொடிய வினைசெய் தொருவன் பிறரழக் கொண்டபொருள்
கடிதி னவனழப் போய்விடு நன்மையிற் கண்டபொருள்
மடியினும் வந்து பயன்தரு மாறு வகுத்துணர்ந்தோன்
படியி லுயர்கச்சி வாழ்பச்சை யப்பநற் பார்த்திபனே. (உஅ)

29. வினைத்திட்பம்.

உருள்பெருந் தேர்க்கச்சின் கண்ணுணி போல வுறுவினைக்கண்
மருவு விறலுடை யாரை யுடைத்திந்த வையமதால்
உருவுகண் டங்கவர் தம்மை யிகழ்த லொழிகவென்பான்
பொருவில் கச்சியில் வாழ்பச்சை யப்பப் புரவலனே. (உகூ)

30. வினைசெயல்வகை.

வினைசெயும் போது பொருளிடங் காலம் வினைகருவி
எனுமிவை யைந்தையு முன்மயக் கம்மற வெண்ணிச்செயும்
நினைவினர் தங்களை நன்காய்ந் தறிந்துபி னேசிப்பவன்
வனையு மெழிற்கச்சி வாழ்பச்சை யப்ப மகிபதியே. (௩0)

31. தூது.

சுற்றத் தவரிடத் தன்பு மருவுதல் சொல்லமைச்சு
பெற்றுக் களிக்க வமைந்த குடியிற் பிறந்திடுதல்
வெற்றி யரசர் விருப்புறும் பண்பிவை மேவினரை
யுற்றவன் கச்சியில் வாழ்பச்சை யப்ப னுலகினிலே. (௩௧)

32. மன்னரைச்சேர்ந்தொழுகல்.

மிகநீங் குவது மிகச்சேர் வதுமின்றி வெந்நெருப்பில்
தகவே யமர்ந்துடல் காய்கின் றவரெனச் சந்ததமும்
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழு கும்மறி வாள னெனவுரைப்பார்
[illegible]

33. குறிப்பறிதல்.

தன்குறிப் பின்னிக ழும்மா றறிந்து தருமதனால்
நன்குபிறர்தங் குறிப்பறி வாரை நலத்துணையாப்
பொன்பதி யாதியி லேதேனு மீந்து பொருந்துவன்காண்
மன்புகழ் சேர்கச்சி வாழ்பச்சை யப்ப மகிபதியே. (௩௩)

34. அவையறிதல்.

தேனென்ற சொல்லின் றொகையுணர் தூய்மைச் செயலதனால்
தானொன் றுரைத்திடுங் காலப் பொழுதைச் சவையதனை
யேநன் றறிந்துபி னாராய்ந்து சொல்லு மியல்பினன்காண்
மானின் றருள்கச்சி வாழ்பச்சை யப்ப மகிபதியே. (௩௪)

35. அவையஞ்சாமை.

கற்றா ரவையிடைத் தான்கற்ற வற்றைக் களிப்புடனே
மற்றுங் கவர்கொளச் சொல்லி மிகுபொருள் மற்றவர்பால்
உற்றே யறிந்துகொள் ளும்முணர் வாள னுவந்துதினம்
தற்றேவர் சேர்கச்சி வாழ்பச்சை யப்ப நராதிபனே. (௩௫)

36. நாடு.

குன்றா விளைவினைச்செய்பவர் நல்லறக் கொள்கையினர்
பொன்றாத செல்வ முடையவர் நாளும் பொருந்திடமே
துன்றா தரவு தருநாட்டில் வாழுஞ்சுகமுடையோன்
மன்றார் தருங்கச்சி வாழ்பச்சை யப்ப மகிபதியே. (௩௬)

37. அரண்.

மணிநீரும் வெள்ளிடை யான நிலனும் வளமலையுந்
தணிவா நிழலுடைக் காடு முடையது தானரணென்
றெணிநாளும் வாழு மியல்பின னென்ன வெடுத்துரைப்பார்
அணியாருங் கச்சி நகர்ப்பச்சை யப்ப வரசனையே. (௩௭)

38. பொருள்செயல்வகை.

தெளிவுடை யோர்சொ னெறியில் வருபொருள் சேர்த்துமிக
ஒளியத ருவற வேசெய்து மின்பங் களுமொருங்கே
எளிய பொருளவை யாமாறு பெற்ற வியல்பினன்காண்
அளிமிகு கச்சியில் வாழ்பச்சை யப்ப வருட்கடலே. (௩௮)

39. படைமாட்சி.

எலியாம் பகைதிரண் டார்கலி போன்றொலித் தேறிடினும்
வலியார நாகத்திற் கெய்திடு மேதமென் மற்றதுதான்
சலியா வுயிர்த்த வளவே யெலிப்பகை தான்கெடுமென்
[illegible] றுரைத்திடுமே. (௩௯)

40. படைச்செருக்கு.

வையத்தைச் சூழும் புகழ்வேண்டி யேயுயிர் வாழ்குதலைக்
கையற விட்டிடும் வீரர் கழல்கட்டல் காரிகைநீர்த்
தைய வெனவெடுத் தக்கூறுந் தீர னவனியிலே
மையறு சீர்க்கச்சி வாழ்பச்சை யப்ப மகிபதியே. (௪௰)

41. நட்பு.

அறிவுடை யார்நட்பு கள்பிறை போல வனுதினமும்
நிறைதருந் தன்மைய மூடர்க ணட்பு நிறையதிபின்
குறைவது போற்குறை யும்மெனத் தேர்ந்த குணத்தினன்காண்
பொறிமகிழ் கச்சியில் வாழ்பச்சை யப்பப் புரவலனே. (௪௧)

42. நட்பாராய்தல்.

மூட ரொடுநட்புச் செய்வதை நீக்கியம் மூடரையுங்
கூடுத லின்றிப் பிரிகுத லேநல்ல கொள்கைதரும்
பீடுறு மூதிய மாமென வெண்ணுறும் பெற்றியன்காண்
பாடல்கொள் கச்சியில் வாழ்பச்சை யப்பநற் பார்த்திபனே. (௪௨)

43. பழமை.

பழமை யெனச்சொல்வ தியாதெனக் கேட்கிற் பழமையினோர்
கிழமையிற் செய்தவற் றைச்சிதை யாமனக் கேண்மையுளந்
தழுவ வவற்றிற் குடம்படு நட்பெனச் சாற்றுவன்காண்
செழுமை மிகுகச்சி வாழ்பச்சை யப்பசிந் தாமணியே. (௪௩)

44. தீநட்பு.

ஆசை மிகுதியி னுண்பவர் போல்பவ ராயிடினும்
மாசு மிகுத்த குணத்தவர் நட்பு வளர்தலினும்
நாச மடைத லைலமென விட்டவ னங்கையுமை
பூசை புரிகச்சி வாழ்பச்சை யப்பப் புரவலனே. (௪௪)

45. கூடாநட்பு.

பலநல்ல நூல்களைக் கற்ற விடத்தும் பண்பதனால்
நலமென மேவி நடத்த லரிதாநண் ணார்க்கெனவே
உலக முரைப்பதை நன்றாய்ந் தறிந்த வுணர்வினன்காண்
இலகிய சீர்க்கச்சி வாழ்பச்சை யப்ப னிருநிலத்தே. (௪௫)

46. பேதைமை.

பெருமை பெறச்செய் வகையறி யாப்பெரும் பேதையொரு
கருமஞ் செயப்புகு மேலக் கருமமுங் கட்டழிய
ஒருமையிற் றானுந் தளைபூ ணுவனென வோர்ந்தவனம்
அருமை யுணர்கச்சி வாழ்பச்சை யப்ப [illegible] ([illegible])

47. புல்லறிவாண்மை.

புல்லறி வாள னொருவனுக் கோகை பொருந்திமிகு
நல்ல பொருளளிப் பானெனிற் கார ண நாடிலொன்றும்
இல்லை பெறுமவ னல்வினை யன்றியென் றோர்ந்தவன்காண்
சொல்லணி கச்சியில் வாழ்பச்சை யப்பத் துரந்தரனே. (சஎ)

48. இகல்.

துன்ப மதிற்றுன் பெனுமிகல் நீங்கித் துலையுமெனில்
இன்ப மதின்மிகு மின்பங்க ளெய்துமென் றெண்ணியுளத்
தன்புடன் யாவ ரொடுநட்பு கொள்ளு மறிவன்கண்டீர்
பொன்பதி சேர்கச்சி வாழ்பச்சை யப்பப் புரவலனே. (சஅ)

49. பகைமாட்சி.

வலியா ரொடுபகை மேவுத னீங்கி வலிகுறைந்த
மெலியா ரொடுபகை மேவலை நாளும் விரும்புமவன்
நலிவான தின்றிச் சயமடை வானென நன்குணர்ந்தோன்
பொலிவாருங் கச்சியில் வாழ்பச்சை யப்பப் புரவலனே. (சகூ)

50. பகைத்திறந்தெரிதல்.

பகையென்று சொல்லப் படுகின்ற தீமை பயப்பதனை
நகைவிளை யாட்டதி னாயினும் வேண்டுத லன்றன்றெனுந்
தகைபெறு நீதிநன் னூல்சொலுந் தன்மையைத் தானறிந்தோன்
திசைபுகழ் கச்சியில் வாழ்பச்சை யப்பத் திறலினனே. (ருo)

51. உட்பகை.

மனமொரு மித்த விலாரொடு கூடி மகிழுமது
தினமு மொருகுடி சைக்கு ளரவுடன் சேர்ந்திருத்த
லெனவுயிர்க் கீறு வருமென வோரு மியல்பினன்காண்
தனமிகு கச்சியில் வாழ்பச்சை யப்பத் தயாநிதியே. (ருக)

52. பெரியாரைப்பிழையாமை.

எரியாற் சுடப்படி னும்முய்தல் கூடுறு மேதமிலாப்
பெரியா ரிடைக்குற்றஞ் செய்தே யொழுகும்ப் பேதையர்கள்
அரிதாகு முய்குத லென்ன வறிந்த வறிவினன்காண்
விரிவார் புகழ்க்கச்சி வாழ்பச்சை யப்ப விரகினனே. (ருஉ)

53. பெண்வழிச்சேறல்.

நாணின்றித் தன்மனை யாளே வியதொழி லன்றெனவே
பேணிச் செயுமவ னாண்மையி னானுடைப் பெண்டன்மையே
பூணும் பெருமை யுடைத்தெனத் தேர்ந்த புகழுடையோன்
[illegible]

54. வரைவின்மகளிர்.

பொருள்தரு வாரை விரும்புத லின்றிப் பொருள்தன்னையே
கருதி விரும்புங் கணிகையர் பொய்ம்முயக் கம்பிணத்தை
இருள்கொ ளறையிற் றழுவுவ தொக்குமென் றெள்ளுவன்காண்
பெருமை மிகுகச்சி வாழ்பச்சை யப்பப் பெயரினனே. (௫௪)

55. கள்ளுண்ணாமை.

யாது செயினு முவந்திடு மன்னைமுன் பேனுமது
வாத லருந்திக் களித்தலின் றதெனி லாற்றுகுற்றம்
யாதும் பொருப்பெரி யோர்முன் களித்தலென் றாகுமென்பான்
போத மிகுகச்சி வாழ்பச்சை யப்பப் புரவலனே. (௫௫)

56. சூது.

தன்னை விரும்பு மவர்க்குத் துயர்பல தந்துமுனம்
மன்னு புகழையும் போக்கிடுஞ் சூதின் வறுமையது
துன்ன வளிப்பது வேறொன் றுமின்றெனுஞ் சூழ்ச்சியன்காண்
பொன்னின் மிகுகச்சி வாழ்பச்சை யப்பப் புரவலனே. (௫௬)

57. மருந்து.

முன்னுண்ட தற்ற படியைக் குறிப்பின் முழுதுணர்ந்து
பின்னுண் பவனுட லுக்கு மருந்தெனப் பேர்பெறுதாம் [ண்
அன்னது வேறொன்றும் வேண்டாவென் றோர்ந்த வறிவினன்கா
தன்னிகர் கச்சியில் வாழ்பச்சை யப்பத் தயாநிதியே. (௫௭)

---

58. குடிமை.

கோட்டமில் செம்மையு நாணு மொருங்கு குடிப்பிறந்தோர்
மாட்டன்றி மற்றையர் பாலியல் பாக மருவுமெனல்
நாட்டினி லெங்குமின் றுமென வோர்ந்த நலத்தினன்காண்
பாட்டியல் கச்சியில் வாழ்பச்சை யப்பநற் பார்த்திபனே. (௫௮)

59. மானம்.

குடிப்பிறந் தார்க்கு நிறைசெல்வ மானது கூடிலெவ
ரிடத்தும் பணிவது வேண்டும் வறுமைய தெய்திடுமேல்
அடுத்த வுயர்வது வேண்டுமென் றோர்ந்த வறிவுடையோன்
தொடுத்த புகழ்க்கச்சி வாழ்பச்சை யப்பத் துரந்தரனே. (௫௯)

60. பெருமை.

பெருமை யுடையர் வறுமை யுறினும் பிறர்செயலுக்
கருமை யுடைய செயலையுஞ் செய்குவ ராமெனவே
கருதி யருமைச் செயல்செய்ய வல்லனிக் காசினியில்
தருவை நிகர்க்கச்சி வாழ்பச்சை யப்பத் தயாநிதியே.

61. சான்றாண்மை.

சால்பெனும் பொன்னள வோர்தற்குக் கட்டளை தான்வினவில்
மேலவர் பாற்கொள்ளுந் தோல்வியைத் தம்மின மிகமெலிந்தோர்
பாலினுங் கொள்ளுத லாமென வோர்ந்திடும் பண்பினன்காண்
மால்பரி கச்சியில் வாழ்பச்சை யப்ப மகிபதியே. (சுக)

62. பண்புடைமை.

அறத்தொடு நீதி தனையும் விரும்புத லாலடுக்கும்
பிறர்க்குந் தமக்கும் பயன்படு வார்தம் பெரும்பண்பினைச்
சிறக்கு முலகர்கொண் டாடு முறைமை தெரிந்ததனை
மறக்க கிலான்கச்சி வாழ்பச்சை யப்ப மகிபதியே. (சுஉ)

63. நன்றியில்செல்வம்.

ஈட்டும் பொருளைவைத் துண்ணுத லோபி யிரும்புவியில் [மிங்
கூட்டொ டிருப்பினுஞ் செத்தவ னப்பொருள் கொண்டொன்று
நாட்டிற் செயத்தக்க தில்லாமை யாமென நன்குணர்ந்தோன்
பாட்டி னுயர்கச்சி வாழ்பச்சை யப்பனிப் பாரகத்தே. (சுங)

64. நாணுடைமை.

மேலவர் தங்கட்கு நாணினைக் காவலின் மேவலின்றி
ஞால மதனைக்கொள் ளாரெனக் கூறுத னன்குணர்ந்தே
ஏலவொவ் வாத கருமத்தி னாணு மியல்பினன்காண்
மாலமர் கச்சியில் வாழ்பச்சை யப்ப மகிபதியே. (சுச)

65. குடிசெயல்வகை.

குற்றங்கள் செய்தலில் லாது தனது குடியதனை
முற்று முயரச்செய் தேதன்னை நாளுமிம் மூதுலகோர்
சுற்ற மெனப்பெற வேண்ட வொழுகுறுந் தூய்மையினன்
கற்றவர் சூழ்கச்சி வாழ்பச்சை யப்பக் கருணையனே. (சுரு)

66. உழவு.

வறுமை யுடையமென் றேசொலிச் சோரு மடியினரைப்
பொறுமை யுடைய நிலமகள் பார்த்திடிற் புன்னகைசெய்
துறுமென வெண்ணி மடிவிட் டுழுதொழி லுற்றவனால்
மறுவகல் கச்சியில் வாழ்பச்சை யப்ப மகிபதியே. (சுசு)

67. நல்குரவு.

வறுமை யெனச்சொலும் பாவி யெவரையும் வந்தணுகி
மறுமைப் பயனுட னிம்மைப் பயனையு மாற்றவொட்டா
துறுகைப் பொருள்கொடுத் துக்காத் தளிக்கு மொருவனெங்கும்

68. இரவு.

இரக்க வருமவ ருள்ள மகிழ்ந்துள் ளுளேயுவக்கப்
புரக்கும் பொருண்மிக வின்சொ லுடன்தந்து போற்றலன்றிக்
கரக்கும் வகைகற்றி லாச்செல்வ மேவிய கன்னன்கண்டீர்
பரக்கும் புகழ்க்கச்சி வாழ்பச்சை யப்பனிப் பாரகத்தே. (௬௮)

69. இரவச்சம்.

நன்னீர் பெரும விறக்கு நிலையினை நண்ணும்பசு
தன்னுவி போற்றிட நீர்போ யிரப்புறுந் தன்மையவர்
இன்னு வதற்கிளி வானது வேறிலை யென்பவன்காண்
பொன்னீடு கச்சியில் வாழ்பச்சை யப்பப் புரவலனே. (௬௯)

70. கயமை.

சொல்லப் பயன்படு வார்கணல் லோர்கள் சுவைக்கன்னல்போற்
கொல்லக் கயவர் பயன்படு வாரெனுங் கொள்கைகண்டு
நல்லிப் புவியின் மெலியவர் யாவர்க்கு நல்குவன்காண்
செல்வப் புகழ்க்கச்சி வாழ்பச்சை யப்பத் திவாகரனே. (௭௦)

பச்சையப்பமுதலியார் நீதிமாலை

முற்றிற்று.

இயற்றமிழாசிரியராகிய

முகவை இராமாநுஜகவிராயர்

பச்சையப்பவள்ளன்மீது

புதுவதுபுனைந்த

பஞ்சரத்நமாலிகை.

பாயிரம்.

நவமணி மாலைசொல நாநேர்ந்த காலைத்
தவவவன் பேரூர்சீர் மெய்சார்ந்து—புவனிமிசை
வாதிக்கப் பஞ்சரத்ந மாலைசொலப் புக்கோம்யாம்
வீதித்துப் பச்சையப்பன் மேல்.

சீர்தெரிந்த நாட்டனற் சீநிவா சப்பெருமான்
பார்புரந்து பச்சையப்பன் பற்றலர்பா—லேர்கிறந்தா
னிங்கிலாண் டானநக னெல்லையில்பா வாணர்கடம்
பங்கிலாண் டைந்தருவாம் பண்பு. (௧)

காத்துப் படைத்தழித்தான் காமர் பொருளறப்பால்
பூத்துத் தரித்தரித்தான் பூம்புகழ்மை—யேத்துபுகழ்
மூவராம் பச்சையப்பன் முன்போன் றியற்பெயரோன்
றாவலர்ந்தத் தத்தானு மாம். (௨)

மருவினிமை யின்மையுணர் மால்சீநி வாசப்
பொருவில்பேர் பூண்டளித்த பொற்பா—னுரிமைபெற
நாவலர்க்கெ லாமினித்தா னானிலமெ லாமணந்தான்
காவலனாம் பச்சையப்பன் காண். (௩)

நீர்முறையி னெவ்வுயிர்க்கு நேர்ந்துதவி செய்கையினாற்
பேர்முறையும் பச்சையப்ப னாப்பெற்றா—னோர்முறையிற்
பஞ்சையப்ப னாமெலிந்தான் பங்கயத்தோன் காவலனாய்
மிஞ்சினஃகி னீரோ விடம். (௪)

கரிபரிதே ராளுடையாய் காமருவு கையோய்
பொருவில்புகழ்ப் பச்சையப்ப பூப—தரியலரூர்
சீர்நா லுலகுமறந் தேசநல மின்பிகழ்தோஞ்
சேரலரைக் கையரைத்தே வை. (௫)

பஞ்சரத்நமாலிகை முற்றிற்று.

உ

காஞ்சீபுரம்

பச்சையப்பமுதலியார்

பொன்மாலை.

மஹாவித்வான்

காஞ்சீபுரம் சபாபதிமுதலியார் பாடியது.

(1845)

காப்பு.

நேரிசை வெண்பா.

சீராருங் காஞ்சிநகர்ச் செம்மல்பச்சை யப்பவேள்
பேராரும் பொன்மாலை பேசவே—வாராரும்
மும்மதத்த ருல்வாயன் மோதகமேந் துங்கையன்
செம்மலர்த்தாள் போற்றுநெஞ் சே.

நேரிசை வெண்பா.

உலக மகிழு முயர்தலங்க ளின்கண்
இலகு தரும மியல—நலமுடனே
நண்ணியதாற் காஞ்சி நகர்ப்பச்சை யப்பனும்
புண்ணியவா னீட்டியசெம் பொன். (௧)

சிவஸ்தலத்தைக் குறித்தது.

பூதலமேத் துந்தில்லைப் புங்கவர்தம் பூசைக்கு
மாதமு நாற்பான் வராகன்று—னீதமுற
ஈயப் பெறுங்காஞ்சி யெங்கள்பச்சை யப்பமால்
நேயமொடு வைத்த நிதி. (௨)

தில்லைமன்று ளாடி திருவிழா வுக்காக
நல்ல வறுநூற்று நாற்பதாச்—சொல்லும்
வராக னளிக்கு மகிழ்ப்பச்சை யப்பன்
பராவிமுன் வைத்த பணம். (௩)

சிதம்பரம் கோபுரத்தைக் குறித்தது.

தாபதர்போற் றுந்தில்லைத் தற்பரனுர் தங்கோயிற்
கோபுரங் கீழ்த்திசையிற் கோலமுடன்—சீர்பெறவே
கட்டுவித்த தாமெங்கள் காஞ்சிநகர்ப் பச்சையப்பச்
சட்ட மனத்தான் றனம். (௪)

இந்திரன் றன்னிடத்தி லேயிருந் தம்பலத்தைச்
சந்ததமுங் காணச் சமைத்ததெனு—விந்தையொடு
கோபுரங் கட்டக் குலவியதாற் பச்சையப்பப்
பாப ரகிதன் பணம். (௫)

நாளும் வளர்ந்தவன்ற னன்மனைவி கற்பென்ன
நீளு நிலைக்கோ புரந்தில்லை—ஆளுமனற்
கண்ணுதலார் கோயிலின்கட் கட்டியதாற் புண்ணியமுன்
பண்ணுபச்சை யப்பன் பணம். (௬)

நல்லவர்கள் நேசம்போல் நாளும் வளர்ந்தரன்வாழ்
தில்லை யினிற்கோ புரஞ்சேர்ந்து—சொல்லுமவன்
புண்ணியம்போ லோங்கிப் பொலியவே கட்டியதால்
அண்ணல்பச்சை யப்பனிதி யம். (௭)

ஆங்கவன் றேடு மரிய புகழ்போல
ஓங்கப் புலியூ ருயர்சபையின்—பாங்கர்மிகும்
இச்சை தருங்கோ புரமொன் றியற்றியதால்
பச்சையப்பப் பூபன் பணம். (௮)

நடேசர் தேரைக்குறித்தது.

மன்றுடை யாற்கு மணித்தேரொன் றாக்கியதால்
நன்றிகொளுந் தேவரெலா நாணவே—பொன்றிகழு
மாட மலி காஞ்சிநகர் வாழ்பச்சை யப்பனரன்
ஆடல்பணி வான்றனிதி யம். (௯)

நடேசர் ஆபரணத்தைக் குறித்தது.

தில்லைமன்று ளாடி திருமேனி மேற்பூண
நல்ல பணிகள்பல நல்கியதால்—சொல்லும்
எழிலுடையான் காஞ்சியில்வா ழெங்கள்பச்சை யப்பன்
பழியஞ்சித் தேடும் பணம். (௧௦)

செல்வமிகு சீகாழித் தேவன்மகிழ் பூசைக்கு
மல்லன்மிகு பத்து வராகன்றான்—சொல்லித்
தருமாதம் பச்சையப்பச் சாந்த குணனுங்
கருவாளி வைத்தகன கம். (௧௧)

கூறு மிடைமருதிற் கோலமுடன் வாழும்வெள்ளை
ஏறுடையான் பூசைக் கிருபதெனத்—தேறும்
வராகன் மாதாந்தம் வழங்குமால் யாரும்
பாராவுபச்சை யப்பன் பணம். (கஉ)

திருவையாற் றீசன் றிகழ்பூசைக் கென்றே
இருபதுவ ராக னினிதின்—வருமாதக்
கட்டளையா நல்குமாங் காஞ்சிநகர்ப் பச்சையப்பன்
சட்டமொடு வைத்த தனம். (கங)

சம்பு வனத்திலமர் தாயகிலாண் டேச்சுரியின்
வம்பகல் பூசைக்கு மாதாந்தம்—நம்புறவே
பத்து வராகன் பரிந்துதவும் பச்சையப்பன்
பத்தியுடன் வைத்த பணம். (கச)

தஞ்சைநகர்க் காமாக்ஷி தன்பூசை நன்கியல
அஞ்சுட னஞ்சு வராகன்றன்—செஞ்செவே
திங்க டொறுமுதவுஞ் செல்வனும் பச்சையப்பன்
பொங்கமுடன் வைத்த பொருள். (கரு)

ஆவுடையார் கோவி லரனார்தம் பூசைக்குப்
பூவரா கன்பத்துப் பொங்கமுடன்—மேவவே
மாதமு நல்குமெங்கள் வள்ளல்பச்சை யப்பன்கைச்
சாதனத்தோ டுற்ற தனம். (கசு)

திருப்பனந்தா ளீசன்மகிழ் செய்பூசைக் காக
ஒருப்பட் டொருபதுவ ராகன்—விருப்பமொடு
மாதந் தொறுமுதவும் வள்ளல்பச்சை யப்பனரன்
பாதந் தொழுவான் பணம். (கஎ)

நத்து மதுரைமீ னாக்ஷி மகிழவே
பத்து வராகன் பரிவாக—ஒத்துதவும்
மாதந் தொறுமெங்கள் வள்ளல்பச்சை யப்பனென்றும்
பூதலமேல் வாழ்வான் பொருள். (கஅ)

இராமேச் சுரத்துறையு மெம்பெருமான் பூசை
பராவி னெடுநிகழப் பத்து—வராகன்வரு
மாசந் தொறுமுதவும் வள்ளல்பச்சை யப்பன்மிகு
நேசமொடு வைத்த நிதி. (கசு)

அருணா சலப்பரம னாரா தனைக்கு
வருமாதம் பத்து வராகன்—தருமாலோ
தொண்டைமண்ட லத்திசையே தோய்காஞ்சிப் பச்சையப்பன்
பண்டைநாள் வைத்த பணம். (௨௦)

ஏகாம் பரநாத ரின்பமுறு பூசைக்கு
வாகாகப் பத்து வராகன்றான்—மாகாதல்
கொண்டளிக்குங் காஞ்சிநகர்க் கோன்பச்சை யப்பனலங்
கண்டுமுன் வைத்தகன கம். (௨௧)

திருமுல்லை வாயிலுறை தேவனுக்கு மாதம்
ஒருபதுவ ராக னுதவும்—பெருவளங்கள்
சேர்காஞ்சிப் பச்சையப்பச் செவ்வேள் புகழென்னுந்
தார்மார்ப னீட்டுந் தனம். (௨௨)

விஷ்ணுஸ்தலத்தைக்குறித்தது.

காசாம்பூ வண்ணமால் காதல்கொள்ஸ்ரீ ரங்கத்தில்
தேசாந் தரிதளிகை செய்தளிக்க—மாசாந்தம்
ஏத்து மிருபான் வராக னுதவுமிசை
பூத்தபச்சை யப்பன் பொருள். (௨௩)

சோலை மலையழகர் தூயசந்நி திக்கணென்றும்
சாலவரு தேசாந் தரிதளிகை—பாலிக்க
மாச மிருபதுவ ராகன் வழங்குமால்
போசனிகர் பச்சையப்பன் பொன். (௨௪)

சீர்பெருகு மத்திகிரித் தேப்பெருமா ளின்பமுறச்
சார்ததி யாரா தனைநிகழ—நேர்பெறவே
மாதமும் பத்து வராகன் வழங்குமால்
பூதியணி பச்சையப்பன் போன. (௨௫)

திருவல்லிக் கேணிதனிற் றேசாந் தரிகள்
பருகு தளிகை பரிவாய்ப்—புரியமா
தந்தொறுமீ ரைந்துவரா கன்றருமால் பச்சையப்பன்
தொந்தமுற வைத்தசுவ ணம். (௨௬)

சாருந் திருக்குடந்தைச் சார்ங்கபா ணிக்கினிது
சீருடன் ஜேஷ்டாபி ஷேகமது—நேருடனே
செய்யவைம்ப தென்னத் திகழ்வரா கனுதவும்
பொய்யில்பச்சை யப்பன் பொருள். (௨௭)

தம்பதி பூசையைக் குறித்தது.

இடைமருதி னிற்றம் பதிபூசைக் கென்றே
அடைவுட னைம்பான் வராக—னடைபெறவே
ஆண்டுதொறு நல்குமெங்க ளண்ணல்பச்சை யப்பனருள்
பூண்டபுக ழாளன் பொருள். (௨௮)

நம்புகும்ப கோண நகர்தன்னி லாண்டுதொறுந்
தம்பதி பூசை தயங்கவே—ஐம்பதென
ஓதும் வராக னுதவுமால் பச்சையப்பச்
சாதுரிய பூபன் றனம். (௨௯)

சதாவிர்த்தியைக் குறித்தது.

காசிமுதற் சேதுமட்டுங் காதலுட னேகுபர
தேசிகட்கா தாரமாச் சீர்த்ததே—மாசில்புகழ்
நண்ணிய காஞ்சி நகர்பச்சை யப்பனும்
புண்ணியவான் வைத்த பொருள். (௩௦)

இடைமருதி னிற்சதா விர்த்திக் கிருபான்
தடையில் வராகன்மா தாந்தம்—அடைவிற்
கொடுக்கப் பெறுங்காஞ்சிக் கோன்பச்சை யப்பன்
தொடுத்துமுனம் வைத்தசுவ ணம். (௩௧)

ஐயாறு தன்னில்வரு மாதுலர்க்கு நாளுளும்
நையாச் சதாவிர்த்தி நல்கவே—பொய்யாது
மாத மிருபதுவ ராகன் வழங்குமாம்
போதமுணர் பச்சையப்பன் பொன். (௩௨)

திருவாரூ ரிற்சதா விர்த்திக்கு மாதம்
இருபதுவ ராக னினிதே—தருமாம்
மதிதோறுங் காஞ்சிநகர் வாழ்பச்சை யப்பன்
பதிவோடு வைத்த பணம். (௩௩)

ஏந்துபுகழ்க் காஞ்சியினி லென்றுஞ் சதாவிர்த்தி
போந்தவெளி யோர்க்குப் புரிந்தளிக்கத்—தேர்ந்திரண்டு
பத்து வராகன் பரிந்தளிக்கு மாதாந்தம்
புத்திதரும் பச்சையப்பன் பொன். (௩௪)

திருவொற்றி யூரிற் றிகழ்சதா விர்த்திக்
கிருபதுவ ராக னினிதே—தருமாதம்
விச்சைபல கற்றுணர்ந்தோன் மேதினியின் மிக்குயர்ந்தோன்
பச்சையப்பப் பூபன் பணம். (௩௫)

தேங்குபுகழ்க் காசியினிற் சேரு மிரவலர்கள்
தாங்களிக்க நல்குஞ் சதாவிர்த்திக்—கோங்கிருப
தென்னும் வராக னினிதளிக்கும் பச்சையப்பன்
தன்னமின்றி வைத்த தனம். (௩௬)

சுப்பம்மாள் சத்திரத்திற் சொல்லுஞ் சதாவிர்த்தி
தப்பா தியலமா தாந்தமும்—வைப்பாகப்
பத்து வராகன் பரிந்துதவும் பச்சையப்பன்
சத்தியமோ டிட்ட தனம். (௩௭)

மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகளாதீன மடத்தைக் குறித்தது.

சந்த மிகுமதுரை தன்னில்வளர் ஞானசம்
பந்தர் மடத்துக்குப் பன்னுவரு—டந்தோறும்
முப்பது வராகனை முன்னி யுதவுமால்
தப்பில்பச்சை யப்பன் றனம். (௩௮)

காஞ்சீபுரம் கல்யாணமண்டபத்தைக் குறித்தது.

அண்ணறிருக் காஞ்சிநக ரத்தனே கம்பன்மகிழ்
வண்ணமிகு கல்யாண மண்டபமொன்—றெண்ணாந்
தழைக்கவே கட்டியதாற் சார்பச்சை யப்பன்
புழைக்கைநேர் வான்வைத்த பொன். (௩௯)

கும்பகோண அக்கிராரத்தைக்குறித்தது.

சந்த மிகுகுடந்தை தன்னிலே நால்வேத
அந்தணர்கள் வாழுமக்கி ராரங்கள்—விந்தை
மனமகிழக் கட்டியதால் மால்பச்சை யப்பன்
கனமுடனே யிட்டகன கம். (௪௰)

கல்வியைக் குறித்தது.

நேய மிகுஞ்சிறுவர் நீதியுடன் பல்கலைகள்
ஆய வினிதி னமைந்ததால்—தேயமெங்குந்
தேக்கியசீர்க் காஞ்சிநகர்ச் செல்வனும் பச்சையப்பப்
பாக்கியவான் வைத்த பணம். (௪௧)

பரியுஞ் சிறுவருளப் பாலிருளை நீக்கும்
இரவி யெனலாகு மென்ப—விரவுமணிச்
சோதிமிகு காஞ்சித் தொன்னகர்வாழ் பச்சையப்ப
நீதிமா னிட்ட நிதி. (௪௨)

வடகலையுந் தென்கலையும் வாய்த்த வடுகும்
இடமுளவிங் லீஷு மினிதின்—றிடமுடனே
சொற்சிறுவர் கற்றுணரத் துன்னியதாற் பச்சையப்பச்
சற்குண மேரு தனம். (௪௩)

சிறுவர் சொல்வதைக் குறித்தது.

நல்ல வழியறிந்து நாங்க ணடக்கும்வகை
கல்வி யறிவெமக்குக் காட்டியதாற்—செல்வமொடு
பத்திதருங் காஞ்சிநகர்ப் பச்சையப்பப் பூபனும்
சத்தியவான் வைத்த தனம். (௪௪)

எழுபிறப்பு மெங்களுக் கின்பம் பெருக
விழுமிய கல்வி விளைக்கும்—செழுவிய
மையுலாஞ் சோலை வளர்காஞ்சிப் பச்சையப்பன்
பொய்யறியான் வைத்த பொருள். (௪௫)

விலங்குகள் போல விவேக மிழந்து
கலங்கியுழ லாதவண்ணங் கல்வி—யிலங்கவே
நங்கட் களித்ததா னற்காஞ்சிப் பச்சையப்பன்
சங்கநிதி யொப்பான் றனம். (௪௬)

கண்ணுடைய ராகியாங் காதலொடு வாழும்வகை
நண்ணும் பொருட்கல்வி நல்கியதால்—பண்ணின்மொழி
விந்தைமகிழ் காஞ்சிநகர் வேள்பச்சை யப்பனும்பர்ப்
பைந்தருவை நேர்வான் பணம். (௪௭)

எவ்வூரு மெந்நாடு மெங்களதே யாம்வண்ணம்
அவ்வியமில் கல்வி யளித்ததாற்—செவ்வி
விதுரனைநேர் காஞ்சிநகர் வேள்பச்சை யப்பப்
பதுமநிதி போல்வான் பணம். (௪௮)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்க வெந்தாயர்
ஆன்ற பொருட்கல்வி யளித்ததால்—தோன்றுபுகழ்
வண்ணமிகு காஞ்சிநகர் வாழ்பச்சை யப்பனெங்கள்
கண்ணனையான் வைத்தகன கம். (௪௯)

என்றும்பொய் யாவிளக்க மெங்க ளகந்தனிலே
மன்னுமஞ் ஞானவிருண் மாற்றுமால்—நன்னலஞ்சேர்
தீர்த்தமுதன் மூன்றுந் திகழ்காஞ்சிப் பச்சையப்பப்
பார்த்தன்முனம் வைத்த பணம். (௫௰)

கற்றா ரவையிற் கலந்தியா மிருக்கும்வகை
வற்றாத கல்வி வழங்கலா—லூற்றாந்
தந்தையென லாயதுசீர் சால்காஞ்சிப் பச்சையப்பச்
சுந்தரன்முன் வைத்தசுவ ணம். (௫௧)

எங்க ளறியாமை யிருந்த விடத்தறிவு
தங்க வறுமை தரித்திடத்தே—பொங்குசெல்வம்
நண்ணவே செய்யு நகர்க்காஞ்சிப் பச்சையப்பத்
தண்மையுளான் றேடுந் தனம். (௫௨)

பொருளைக் குறித்தது.

தருமமே செய்யுந் தகுதிபெற்ற தம்ம
மருவு முறைமையறங்கள் வாய்ப்பப்—புரிதருநல்
வண்ணமிகு காஞ்சியினில் வந்ததநற் பச்சையப்பத்
தண்ண மனத்தான் றனம். (௫௩)

புணையாய வன்பிறவிப் பொங்காழி நீந்தித்
திணியார் கரையேறச் சேர்க்கு—மணியாரும்
வாளாம் விழிமடவாய் மால்காஞ்சிப் பச்சையப்பத்
தாளாளன் றேடுந் தனம். (௫௪)

நிலையாகுஞ் செல்வ நிலையா மறங்கள்
கலையாது செய்யினெனக் காட்டுந்—தலைமாலை
பூண்ட நடராசன் பொன்னடிக்கே யன்புளத்துப்
பூண்டபச்சை யப்பன் பொருள். (௫௫)

பூவேந்தர் முன்போற் புரப்பா ரிருப்பாரேல்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதனை—மாவேந்து
பாரோர்க்குக் காட்டியதாற் பச்சையப்ப வள்ளன்முனம்
நேராக வைத்த நிதி. (௫௬)

பாருளீர் செல்வம் படைத்தா லறம்பலவுஞ்
சீருடன் செய்யிலுங்கள் செல்வமெனத்—தேருறவே
காட்டியதாற் பச்சையப்பக் காவலனன் னாவலர்தம்
பாட்டினிசை கொண்டான் பணம். (௫௭)

செப்பு மிரவலர்முன் றேடிப் புதைத்துவைத்த
வைப்பென்ன விந்நாள் வயங்கியதால்—ஒப்பின்
றலகில்புகழ் சேர்காஞ்சி யண்ணல்பச்சை யப்ப
னிவ்வுலகிற் றேடு நிதி. (௫௮)

நாவலர்கள் பாடிவரு நற்கவிபோ லெஞ்ஞான்று
மேவி யுலகில் விளங்குமால்—தேவர்
விரவிமகிழ் காஞ்சிநகர் வீறுபச்சை யப்பன்
பரிவினொடு வைத்த பணம். (௫௯)

வந்தவர்க் கெல்லா மகிழ்ச்சிதரு மேருவெனும்
அந்தமலை செண்டா லடிபட்டு—நொந்தன்
றுபயோக மாயதுசீ ரோங்குபச்சை யப்பன்
சுபமுடையான் றேடுசுவ ணம். (௬௰)

என்றும் வளர்மதிவா னிந்துவைப்போற் றேயாமல்
மன்னுதரு மப்பயிர்வா னோங்கவே—துன்னி
வளர்க்குமாற் காஞ்சிநகர் வள்ளல்பச்சை யப்பன்
றுளக்கமின்றித் தேடுசுவ ணம். (௬௧)

நல்வழிக்கா மற்றைபோர் நாடோறு மீட்டுபொருள்
அல்வழிக்கா மீதென்ன வற்புதமே—சொல்வழிதேர்
நீதுநெழிற் காஞ்சியில்வாழ் நேயமிகு பச்சையப்பன்
பூதலமேற் றேடியசெம் பொன். (௬௨)

போகமற்றை மூன்று பொருடனையும் யாவர்பொருள்
சால வுதவுமால் தாழ்குழலாய்—ஞாலமிசை
நாதமறை மாவளரு நற்காஞ்சிப் பச்சையப்பப்
போதமுளான் றேடியசெம் பொன். (௬௩)

போலத் தனையிட்டும் புண்ணிய சாலிகட்குச்
சாலப் பயனீ தனமுளதோ—நீலமிடற்
றெம்மா னுறைகாஞ்சி யேந்தல்பச்சை யப்பனுஞ்
சம்மான முள்ளான் றனம். (௬௪)

கள்ளர்களுங் காகாது காமுகர்கட் காகாது
கொள்ளையிடும் வஞ்சகர்க்குங் கூடாது—வெள்ளைநிற
நீற்றணிசேர் வேணியனை நேசித்து நாளுநும்
போற்றுபச்சை யப்பன் பொருள். (௬௫)

தேவருக்காம் வேதியர்க்காம் செந்நாப் புலவர்க்காம்
ஆவலுறு மிரவ லர்க்குமா—மேவுபுகழ்
மிக்கதிருக் காஞ்சியில்வாழ் வேள்பச்சை யப்பன்சீர்
தக்கருணை சாலி தனம். (௬௬)

திருமால் வளருந் திருப்பாற் கடல்போல்
ஒருநாளும் வற்றும லோங்கும்—தருவாரும்
விண்பார் பரவும் வியன்காஞ்சிப் பச்சையப்பன்
பண்பாய்ந்து வைத்த பணம். (௬௭)

வாரமுட னும்பரெலாம் வாழவே மன்னியபொன்
மேரு மலைபோல் விளங்குமால்—சீரின்
இலகுதிருக் காஞ்சியில்வா ழெங்கள்பச்சை யப்பன்
புலவர்மகி ழத்தரும் பொன். (சுஅ)

அன்னையுமை யைத்தவத்தா லன்றுமக ளாப்பெற்ற
பொன்னின் மலைபோல் பொலியுமால்—சொன்னலமே
இச்சைகொள்வோன் காஞ்சியினி லென்றுமகிழ் வோன்புகழ்சேர்
பச்சையப்பப் பூபன் பணம். (சுகூ)

ஊழூழி தோறு முயருங் கயிலைபோல்
ஏழோடு மேழுலகு மேத்தவே—தாழாமல்
ஓங்குமெழிற் காஞ்சியில்வா ழுத்தமனும் பச்சையப்பன்
பாங்குடன் வைத்த பணம். (எ0)

பச்சை நிறமால் பசுக்களுக் கன்றேந்தும்
பொச்ச மிலாமலையே போலுமால்—வெச்சென்
இகலிலான் காஞ்சிநக ரெங்கள்பச்சை யப்பன்
சகலகலை தேர்வான் றனம். (எக)

என்னும் படையவனை யெய்தி விடாப்பகையாத்
துன்னும் வினையைத் தொலைக்குமால்—முன்னும்
பலதளிகள் சூழ்காஞ்சிப் பச்சையப்ப னென்ன
நிலவுபுக ழாள னிதி. (எஉ)

வித்தையெனும் வெற்பறிவாம் வேலை யிடைச்சுழலச்
சத்துவமா லாமையெனத் தாங்குமால்—அத்திகிரி
மாலுண் மகிழ்காஞ்சி வள்ளல்பச்சை யப்பவேள்
சாலமுன மீட்டு தனம். (எந)

திருவள் ளுவர்தமது சித்த மகிழக்
கரவிலா தாதுலர்கள் கையில்—விரவுமால்
கற்றவர்கள் வாழுமெங்கள் காஞ்சிநகர்ப் பச்சையப்பன்
பற்றியசீ ராளன் பணம். (எச)

மாயவனை யொப்பாகு மண்ணினொடு விண்ணளவுந்
தாயினிது நீண்டளிக்குந் தன்மையா—னேயமிகப்
பூண்டபச்சை யப்பனும் புண்ணியவா னன்பினொடு
காண்டகவே வைத்தகன கம். (எரு)

பிறந்த விடம்போலப் பெட்பினந்தன் வீட்டில்
சிறந்திருந்த கண்ணனெனச் சீரோ—டறந்தழைய
வேந்தர்பொக்கி ஷத்தில் விரவுமெங்கள் பச்சையப்பச்
சாந்தகுண முள்ளான் றனம். (எசு)

வம்மின் புலவீர் வறுமையும்மை விட்டோடச்
செம்மையுடன் செய்துமெனச் செப்புமால்—மும்மையினும்
புண்ணியமே செய்யும் புகழ்கொள்பச்சை யப்பமால்
கண்ணிமுனந் தேடுகன கம். (எஎ)

இளமையுடன் செல்வமிந்த யாக்கைநிலை யின்றும்
பளகிலற மேநிலையாப் பாரில்—உளதென்ன
எல்லார்க்குங் காட்டியதா லேந்துபுகழ்ப் பச்சையப்பச்
சல்லாபன் வைத்த தனம். (எஅ)

இந்திரன் சோலைதனக் கீர்ம்புனற் காவிரிநீர்
வந்ததென வேயறங்கள் வாய்ப்பாகச்—சந்ததமும்
ஓங்கப் பெருகு முயர்காஞ்சிப் பச்சையப்பன்
பாங்குபெற வைத்த பணம். (எகூ)

ஆகுந் தருவி லறமாந் தழைதழைத்துப்
போகங் கனியாப் பொலிந்ததால்—மாகம்
பரவியசீர்க் காஞ்சிநகர்ப் பச்சையப்ப னென்னும்
கரவிலான் றேடுகன கம். (அ0)

மற்றவனுக் கேசொந்த வைப்பாகக் கண்டுவந்து
மற்றவர்கள் தேடுநிதி வல்லார்கள்—பெற்றிடவே
கண்டற் புதமடைந்தேங் காஞ்சிநகர்ப் பச்சையப்பத்
தண்டமிழ்தேர் பூபன் றனம். (அக)

ஆய்ந்த புகழ்மயிலை யண்முமே லேலசிங்கன்
வாய்ந்தபொருள் போற்றரும மன்னுமா—றேய்ந்ததால்
பாடுசீர்க் காஞ்சிநகர்ப் பச்சையப்ப பூபனென்று
நீடவே வைத்த நிதி. (அஉ)

எல்லா வறமு மியற்றுதல்கண் டாங்கதனை
இல்லாளாக் கத்திருமா லின்புற்றான்—கல்லாரை
நேசித்தி டான்காஞ்சி நீடுபச்சை யப்பன்றனம்
பூசித்த லாற்றேடும் பொன். (அங)

மன்னறங்கள் செய்தல்கண்டு வானவர்கள் போற்றிசெயும்
பொன்னு மினிதாகப் போற்றுமே—வன்ன
மலிமாட மார்காஞ்சி வள்ளல்பச்சை யப்பன்
பொலிவாகச் சேர்த்துவைத்த பொன். (அச)

இந்த வுலகி லிலங்குதல்கண் டிந்திரனார்
அந்தப் பெயர்த மணிநகர்க்குத்—தந்தமென்று
சாற்றுவர்கள் காஞ்சிநகர்ச் சாதுரிய பூபனெனப்
போற்றுபச்சை யப்பமால் பொன். (அரு)

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிருவென்ன—யாரும்
மகிழ்வுடனே பேச வளருமா லும்பர்
புகழ்பச்சை யப்பவேள் பொன். (அசு)

போல விளங்காப் பொருளு மொருபொருளோ
சாலப் பொருளீட்டுந் தன்மையீர்—வாலுணர்வோர்
நாவேந்து கீர்த்திபெறு நல்லபச்சை யப்பனும்
பூவேந்தன் றேடும் பொருள். (அஎ)

என்னு மொருபானு வெங்கு முழலாமல்
துன்னுந் தருமமுளை தோன்றவே—மன்னியதால்
சுந்தரஞ்சேர் காஞ்சிநகர்த் தோன்றல்பச்சை யப்பமுக
சந்திரன்முன் வைத்த தனம். (அஅ)

தாயொக்கு மன்னமிடுந் தன்மையா லீன்றெடுத்த
சேயொக்கு நற்கதியிற் சேர்த்திடலால்—வேயொக்கும்
தோளியர்சூழ் காஞ்சிநகர்த் தோன்றல்பச்சை யப்பனும்
ஆளியனன் றேடுநிதி யம். (அகூ)

திருவினொடு மேவுதலாற் சிதரனும் பூவின்
மருவுதலால் வேதாவாம் வாய்ப்பத்—தருமம்
புரிதலா னல்லோனாம் பொய்யில்பச்சை யப்பன்
பரிவினொடு வைத்த பணம். (கூ0)

நிதிக்கோ னரன்றோழ னென்னுங் குபேரன்
மதிக்கோ ரிலச்சைவரு மாண்பாற்—கதிக்குமாம்
உம்பரெலாம் போற்று முயர்காஞ்சிப் பச்சையப்பன்
கம்பமின்றி வைத்தகன கம். (கூக)

அறத்தொடு சீர்த்தியையு மாக்குதல்கண் டீர்நீர்
திறத்தொடு சேர்த்தபொரு ளெல்லாம்—வறத்தெடுத்து
வித்துப்போ லாக விரும்பற்க பச்சையப்பப்
புத்தியுளான் றேடியசெம் பொன். (௯௨)

சிலர்தேடி வைத்திழக்குஞ் செம்பொருள்போ லாது
புலவர் புகழப் பொலிவாய்—நலவழிக்கே
யானதா லெங்கள்பச்சை யப்பகுணா சீலனுந்
தானமலை போல்வான் றனம். (௯௩)

இருவகையாம் புண்ணிய மெந்நாளும் வளர
மருவியதாற் காஞ்சிநகர் வாழும்—பெருமையுளான்
அண்ணல்பச்சை யப்பமா லன்புடையான் மெய்ஞ்ஞானக்
கண்ணுடையான் றேடுகன கம். (௯௪)

இடைவள்ள லைப்போல வெய்தினோர்க் கெல்லாந்
தடையின்றி நல்கத் தருமாற்—கொடையிற்
குமுணனைநேர் பச்சையப்பக் கோதில்பெய ரானந்
தமரனையான் வைத்த தனம். (௯௫)

ஆல்போற் பலவுயிர்கட் காதார மாகியதால்
வேல்போல் விழியுடைய மெல்லியலாய்—மால்போலக்
காக்கு மருளுடையான் காஞ்சிநகர்ப் பச்சையப்பன்
நீக்கமன்றி வைத்த நிதி. (௯௬)

சென்னபட்ட ணக்கவர்னர் சேரெல்பின்ஸ் டோனுளில்
துன்னுவித்யா சாலை துலங்கவே—மன்னியதால்
மாதவர்வாழ்த் துங்காஞ்சி வள்ளல்பச்சை யப்பனல்ல
ஆதரவின் வைத்தநிதி யம். (௯௭)

ஜார்ஜிநார்ட் டன்துரையின் சார்பினு லெவ்வறமும்
நேர்மை யொடுநிகழ நீடியதாற்—சீர்பெருகு
வானவர்போற் றுங்காஞ்சி வள்ளல்பச்சை யப்பமா
ருனினிது வைத்த தனம். (௯௮)

மேருமுத லாயவொன்பான் மேருவென வோங்கியசீர்த்
தீர மிகுமுதன்மைச் செல்வருளம்—நேரில்கச்சிப்
பச்சையப்ப வேள்தரும மாகும் பயிர்தழைய
வைச்சபெரு வேலியின்மன் னும். (௯௯)

பங்குனிய மாவாசை பார்த்தனிகர் மற்றவன்றான்
சங்கரன் பாதந் தனிற்சேர்ந்த—துங்கநா
ளாக மறையோர்க் களிக்க நிறைந்ததாற்
போகங்கொள் பச்சையப்பன் பொன். (௧௦)

வாழ்த்து.

வாழ்கமறை வேதியர்கள் வாழ்கபுவி மன்னவர்கள்
வாழ்க பலகலைகள் வாய்மைநெறி—வாழ்கபுவி
வாழ்கபச்சை யப்பனெனும் வள்ளறரு மஞ்சபையோர்
வாழ்கவெந் நாளு மகிழ்ந்து.

தனிச்செய்யுள்கள்.

நாராயண உபாத்தியாயர் பாடியது.

நேரிசைவெண்பா.

காட்டும் பரம பதமோ கயிலையோ
நாட்டுமதி வேணியனு நாரணனும்—வேட்டுறலால்
விச்சையப்பன் புள்ளி விரும்பநிறைக் கும்பொருளான்
பச்சையப்பன் கச்சிப் பதி. (௧)

ஆசிரிய விருத்தம்.

பெருஞ்சீர்மை பெறவறியா வுலுத்தரிடை
யிருப்பதொரு பெருமை யன்றென்
றரும்பேரு முருவுமொழித் தறமகளுங்
கலைமகளும் அகன்று ரின்பந்
தருஞ்சீத முகிலனைய கச்சியில்வாழ்
பச்சையப்பத் தலைவ நீயிங்
கிருஞ்சீனி வாசனெனப் பிறந்ததனாற்
பிறந்துமணந் திருக்கின் றாரே. (௨)

அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் பாடியது.

நேரிசை வெண்பா.

நாமகளும் பூமகளும் நற்காஞ்சிப் பச்சையப்பக்
கோமகனைச் சென்றடைந்த கொள்கைகண்டு—மாமுளரிக்
கண்ணன் விதியென்று கரையலுற்றான் பாற்கடலிற்
கண்ணன்மா லாய்க்கிடக்குங் காண். (௧)

ஆசிரிய விருத்தம்.

குசையேறு பரிநகுலன் காஞ்சிநகர்ப் பச்சையப்பக்
குரிசில் கீர்த்தி
பசையேறு புகவரியற் பாவேறி யருட்குருவிற்
பருவ நோக்கித்
திசையேறிக் கடல்வரைவா ரணம்வாசி கோளொடுமுத்
தேவர் மாதர்
விசையேறு நதியிவற்று ளொவ்வொன்றைத் தன்னுருவா
விளக்கிற் றுலோ. (௨)

புரசை பொன்னப்பல முதலியார் பாடியது.

நேரிசை வெண்பா.

இச்சை யுடனே யெவரும் புகழ்காஞ்சிப்
பச்சையப்பப் பூபனையே பாடுமின்—விச்சையுளீர்
நம்மை யிலம்பாடு நணுகாது நற்பொன்னை
யிம்மையிலே யீவா னியைந்து.

சேலம் பொன்னம்பலக் கவிராயர் பாடியது.

விருத்தம்.

திருவிலங்கை ராவணனு னல்லார்க ளிடாதையா
திருக்கத் திண்பார்
வருவிலங்கை ராமனென வுலகிருந்து புலவோர்கண்
மனங்க ளிக்கப்
பொருவிலங்கைத் தலைகமுற வருள்சுரக்கும் பச்சையப்பப்
புயலே நின்போன்
மருவிலங்கைத் தோம்புவினை யென்றுமன நொந்திருந்தார்
வள்ளி யோரே. (௧)

வள்ளியோர் பக்கமுற விருந்துமிகுந் தோகைதனில்
வதிந்தன் போடு
விள்ளுவோர் மகிழ்வுடைய வாறுமுகங் கொண்டுநல்லார்
மெய்யைக் கண்டு
துள்ளியா னந்தமுற வந்துபுல வரைப்போற்றுந்
தூய வேளை
யுள்ளியே யவன்குணத்தை யுற்றபச்சை யப்பவுனை
யுரைக்கற் பாற்றே. (௨)

வெள்ளலூர் நாராயணசாமி நாயகர் பாடியது.

வெண்பா.

பொங்கொளிசேர் செங்கதிரோன் பூவுலகிற் சூழிருளை
இங்ககலச் செய்யு மெழிலேபோல்—எங்கும்
புகலரிய பச்சையப்பன் பொன்னுங்கும் பானு
அகவிருளை நீக்கு மலர்ந்து. (க)

விருத்தம்.

கச்சியில்வாழ் பச்சையப்பன் கனகமாம் பாரதியைக்
கவின்சே ரொன்பான்
உச்சிதமா மீகாம ருய்த்திடவே நல்குரவா
மோத நீந்திப்
பொச்சமிலாப் புலவர்களும் பாரதியாம் புணையதனைப்
புகுந்திப் பாலர்
அச்சமுறு மஞ்ஞானக் கடல்கடக்கப் புவியினிடத்
தசைத்திட் டாரே. (உ)

பாரதப்பிரசங்கம் கோபாலகிருஷ்ண பிள்ளை பாடியது.

கட்டளைக்கலித்துறை.

அரிவேங் கடங்கொண் டயன்பா ரதிகொண் டரன்சடைகொண்
டரிதா யிருந்திட வெப்புவ னத்து மடைந்துமிகத்
திரையோ டெழுந்தது மும்மணி யொத்தவன் செய்யகச்சிப்
புரிமேவு பச்சையப் பேந்திர வள்ளல் புகழ்க்கடலே. (க)

விருத்தம்.

அருளடுத்த வைந்தருக்க ளிடத்திற் சென்றோ
மகங்குழைந்தோன் றும்மிலையென் றரும்பிக் கண்ணீர்
மருளடுத்து வெளிகொள்ளக் கண்டிங் குன்பால்
வந்தனமென் றுரைக்குமுன மகிழ்ந்து நோக்கி
யிருளடுத்த மலர்ப்பொழில்சூழ் கச்சி வாழு
மிறைவனெழிற் பச்சையப்பேந் திரனெந் நாளும்
பொருளடுத்த சொற்புலவர் களிக்கப் பொன்னைப்
பொழிகின்றா னவனிகரார் புவிமீ தம்மா. (உ)

கலித்துறை.

உலகோர் புகழ்பச்சை யப்பவசிகா மனோது மதிப்
புலவோர்கலி மாவலியாற் கவரும் பொருள் பொருந்தத்
தலமீ தளித்தருள் செய்தனன் கோமளந் தங்குமுயர்
வலனுர்ந்த நற்சீனி வாசனென்றே நிதம் வாழ்த்துறவே. (௩)

விருத்தம்-சிலேடை.

சக்கரந் தாங்கிப் புகழ்த்தனு வெடுத்துச்
சாற்றிய கடன்மதித் திலகு
மிக்கநல் வரையைக் கரந்தரித் துறுபொன்
விளங்குற வரங்கமுற் றியம்புந்
தக்கவன் பூரகம் படைத்துரை போதகம்
பரித்தறி ஞரைக் காத்துத்
திக்கெலாந் துதிக்கக் கச்சிவாழ் பச்சையப்ப
மாலினைத் தினம் புகழ்வாம். (௪)

ஆசிரிய விருத்தம்.

மணவாள னரியகடன் மேலுற்ற தான்முதன்
மைந்தனலரோ னுனதான்
மற்றொரு சுதன்கருப் புக்குரிய னுனதால்
வருதமைய னுட்களங்கம்
அணவலாற் பெற்றதா யலைதலை யடைந்ததா
லவருற வொழித்துநீங்கி
அறநெறியி னீட்டுநிதி யம்படைத் துப்புக
ழடைந்ததிக போகமேவிக்
குணமான நிஷ்களங் கம்பெற்று நிலைதனிற்
குலவலா லிவ்வேந்தறன்
கொள்கையே கொள்கையென வந்துசெந் திருவுறுங்
கோலமே வியமகீபன்
மணமார்ந்த சோலைசூழ் கச்சிநக ரதிபனம்
வள்ளலாம் பச்சையப்ப
மகராச னைப்புகழ்ந் தால்வறுமை நீங்கிநாம்
வாழலாம் பாவலோரே. (௫)

இராமசாமி கவிராயர் பாடியது.

நேரிசை வெண்பா.

படிமுழுது மோரடியாற் பண்டளந்தா னென்பர்
ஒடிவறுசீர் கொள்ளுவண வூர்தி—அடிகளால்
தாவி யளந்ததிசை தங்குபச்சை யப்பனேச்சொற்
பாவுலக மூன்றும் படர்ந்து. (க)

கட்டளைக்கலித்துறை.

பள்ளப் புனல்வளை மேதினி யோர்துதி பச்சையப்ப
வள்ளற் பெரும்புக ழேதிருப் பாற்கடல் வான்கயிலை
அள்ளற் கமலத் தயனூர்தி யோடயி ராவதம்வெண்
டெள்ளுற்ற தண்மதி யம்மிவை யாகத் திரிந்ததுவே. (உ)

வெண்பா.

மூச்சகமு மேத்துபுகழ் மொய்யொளிசெய் கச்சிநகர்ப்
பச்சையப்ப னென்னும் பருமணியை—யிச்சையினு
லொப்பிட்டுச் சொல்லவே யொன்றுமிலா தொண்புலவர்
செப்பிட் டுவப்பார் தினம். (ங)

கலித்துறை.

மருங்கந் தரங்கர் மாதேநற் கச்சி வளநகர்வா
மூருங்கந் தரத்த ரடிக்கன்ப னும்பச்சை யப்பனெனுங்
கருங்கந் தரந்தம் பொன்மாரி பெய்திடக் காசினியி
லொருங்கந் தரத்தமிழ்ப் பைங்கூ ழுவகையி னோங்கியதே. (ச)

சந்திரசேகர முதலியார் பாடியது.

நேரிசை வெண்பா.

ஈனர்கடை செல்லாமே யில்லாமை சொல்லாமே
மானமற நின்றுமுகம் வாடாமே—தீனரைப்போற்
பிச்சையப்ப வென்னுமே பெற்றுய்ய லாம்புலவீர்
பச்சையப்ப னல்கும் பரிசு. (க)

தஞ்சை-சீராம கவிராயர் பாடியது.

வெண்பா.

அம்புவியிற் றண்புகழ்க்கோ ராதரவில் லாமையைக்கண்
டும்பருல கெய்தியவ னுன்னிறேன்—செம்பொனைக்கொண்
டீட்டிபுகழ் கூட்டியெங்க ளேந்தல்கச்சிப் பச்சையப்பன்
நாட்டிவைக்கப் பாதலத்தி னன்கு. (க)

நேரிசை வெண்பா.

மூச்சகமும் போற்றநிறை மூதறிவி னோர்பரவுங்
கச்சியப்பன் றுளிணைக்குக் காதலுறும்—விச்சைமிகு
பச்சையப்பா நற்புலவர் பாவினத்திற் றுனுனக்கிங்
கிச்சையப்பா வின்க ணிசை. (உ)

கட்டளைக்கலித்துறை.

பிறந்துமண் மீதிற்கு பேரனென் றேநிதி பெற்றுமிகச்
சிறந்து பலவறஞ் செய்தின்ப வீட்டினைச் சேரவிப்பார்
துறந்துநற் காஞ்சிப் பதிவரு பச்சையப் பேந்திரனை
யிறந்துங் கொடையிற வாமலிருந்த திருநிலத் தே. (ங)

கலித்துறை.

சிலைவாய்ந்த வேள்கச்சி வாழ்பச்சை யப்பச் சிந்தாமணிதா
னலமாக் கொடுப்ப தனைக்கண்டு பைந்தரு நாங்கொடுப்ப,
திலையா மெனக்கிளை விட்டங் தரத்தினி லேகியென்று
நிலையா தலையுற்றுப் பஞ்சமதாகி நிகழ்கின்ற தே. (ச)

கனகசபை உபாத்தியாயர் பாடியது.

ஆசிரிய விருத்தம்.

சீர்பரவுங் காஞ்சிநகர்ச் செம்மல்பச்சை யப்பன்முனந்
திரளாத் தேடும்
ஏர்பரவும் பொருளையெலா மிணையிலரி யரன்பூசைக்
கிடையூ றின்றிப்
பேர்பரவச் செயுமெங்கள் மெம்பர்களின் பெருங்கொடையின்
பெற்றி கூறின்
நீர்பரவச் செயுமேக நிகராகா தெனவுலக
நிகழ்த்து மாதோ. (க)

கட்டளைக்கலிப்பா.

நீடுமாமணிக் கோபுரம் நீண்மதின்
நிலவுகாஞ்சி நகர்ப்பச்சை யப்பமால்
தேடுசெம்பொன் சிவனரி யாலயத்
திருப்பணிக்குஞ் சிறந்திடு நற்கவி
பாடுசெந்தமிழ் வாணர்க்கும் யோகர்க்கும்
பாரில்யார்க்கும் பகுந்து கலியிருள்
ஓடுமாறருள் செய்திடு மெம்பர்கள்
உலகில்நீடூழி காலமும் வாழியே. (உ)

கூவம் - திரிபுராந்தக முதலியார் பாடியது.

விருத்தம்.

மூவருள் பச்சை யென்போன் முதற்குண னுதல் போலுந்
தாவிலாக் கோளிற் பச்சை தான்சுப னுதல் போலும்
மேவுறு மணியிற் பச்சை விளக்கமுற் றிருத்தல் போலும்
பூவுல கதனிற் பச்சை யப்பமால் பொலிவு ளானே. (க)

விருத்தம்.

சத்துருவும் வியந்தடையத் தானமருள் பச்சையப்பச் சார்வபூமன்
பெற்றபுகழ் உலகமெலாம் பிறங்கியதால் வலாரியயன் பிருந்தைகேள்வன்
அத்தனயி ராவதத்தோ டனம்பாலா ழியும்வெள்ளி யசலமின்ன
பித்துறக் காணுதயர்வ ரெனிலென்னு லவன்பெருமை பேசற்பாற்றே. (உ)

சி-கருணைச் சிவப்பிரகாச ஐயர் பாடியது.

கலித்துறை.

உம்பர்க்கு நான்மருப் பும்பற் கிரைக்கு முதவுமன்றிப்
பைம்பொற் றருவைந்து மற்றவர்க் கென்ன பயக்குமரி
யம்பற் கினிய கச்சிப்பச் சையப்ப னவனொருவ
னிம்பர்க்கு மும்பர்க்கும் யாவர்க்கு நல்கு மிதமுறவே. (க)

விருத்தம்.

அவனிலிரும் பொருள்படைத்து மளகையிறை நிதிக்கோனென் றும்பேர் பெற்று

மூளமுருகிச் சிறிதுமுத வாமலான் ரேழுமென்ன
வுரைக்க லானான்
வளமலிகச் சிப்பச்சை யப்பனிதி படைத்துமன்றின்
மருவு நீலக்
களன்மகிழப் பெருதுதவி யடித்தொண்டா யினனிதுநற்
கருமந் தானே. (உ)

அஷ்டாவதானம்-வீராசாமி செட்டியார் பாடியது.

வெண்பா.

பொன்மாரி பெய்யப் பொழிற்காஞ்சிப் பச்சையப்ப
நன்மா முகின்முழங்கி நண்ணியதால்—என்மாட்டு
வாழுமிடிக் கோடையே மாய்வுறநீ நின்றலைமேல்
வீழுமிடிக் கோடி விலகு. (க)

கலித்துறை.

இரப்போ ரகப்பங் கயப்போ தலர விரும்பொருளேக்
கரப்போர் வதனச் சசியொளி மாறக் கலையுணரா
நிரப்போ ரவிச்சை யெனுங்கங்கு னீங்க நிதிக்கதிர்பாய்
தரப்போந் ததுபச்சை யப்பமெய்ப் பானு தரணியிலே. (உ)

விருத்தம்.

வயஞ்சேர்விசய னவிபீமன் மடைய
னெடுமா தவன் மாயன்
மார னனங்கன் மதிகளங்கன்
மன்னுஞ் சேடனஞ் சுடையோன்
பயஞ்சேர் சுரர்காக் கவடுளது
பார்வன் புடைய தாதலினுற்
பைங்கட் பொதும்பர் பாலனங்கள்
பயிலும் பதும வயலோடு
கயஞ்சேர் கச்சிப் பதிவாழுங்
கமல நயனன் குணசைலங்
கல்விக் கடலாம் பச்சையப்பன்
கருதற் கரிய மறுவற்ற
நயஞ்சேர் வீரந் திறல்கருணை
நண்ணும் வடிவு முகமறிவு
நல்லவீகை பொறைக் கொப்பு
நாமே வேறெங்கு மில்லவதுவே. (ங)

கலித்துறை.

தார்தந்த தோட்கச்சி வாழ்பச்சை யப்பன் சகலருக்குந்
தேர்தந்தி வாம்பரி பொன்மணி யாவுந் தினமுந்தந்து
வார்தந்த கொங்கைப் பரமாத ருக்குத்தன் மார்புங்கொடும்
போர்தந்த வர்க்குப் புறமுந் தானிப் புதுமையென்னே. (ச)

சந்தவிருத்தம்.

மேருவைச்சிவ ஞர்வளைத்ததும் விந்தநீண்மலை மண்புக
விரதமாமுனி வன்புரிந்ததும் வீறுமந்தர வெற்பினை
வாரியிற்சுரர் சுழலவுய்த்தது மாதவன்புய ரூவுகோ
வர்த்தனந்தலை கவிழவேந்திய வண்ணமுங்கிர வுஞ்சம்வேள்
சூரடுஞ்சுடர் வேலெறிந்து துணித்தவாறுமை நாகமாந்
துன்னுமால்வரை வேலையூடு தொடர்ந்தொளித்தது நாவலீர்
பார்துதித்திடு கச்சிமேலிய பச்சையப்ப வுதாரனற்
பணைகொடோளிணை நிகருறாததோர் பான்மையாலென வோர்மி [னே.

ஒரு புலவர் பாடியது.

வெண்பா.

கொடுத்தா ரிசையைக் குறைத்தான் கொடாது
விடுத்தாரை யாதுசெய்தான் மின்னே—யடுத்தாரைப்
பொன்னுசை கொள்ளப் பொருத்தினுன் பச்சையப்ப
ஞென்னு மிவன்சீ ரினி. (க)

விருத்தம்.

வள்ளல்பலர் முன்னிருந்தும் புலவர்தரித் திரம்நீங்கி
வாழ்ந்த தில்லை
தெள்ளுதமிழ் வழுதியர்கோன் சங்கமொரு மூன்றுஞ்
செழித்த துண்டோ
கிள்ளியியற் றுறுசிவன்மால் தருமந்தா னிறைவேறுங்
கிளர்ச்சி யெங்ஙன்
அள்ளுமிசைப் பச்சையப்ப னிம்மூன்று குறையினையு
மகற்றி னானே. (உ)

வெண்பா.

மிடியெனுஞ்சொல் தன்பொருளை விட்டிழந்து வீணாப்
படியின்முயற் கொம்பினது பண்பிற்—கொடியிடையாய்
நின்றதென்பர் பச்சையப்ப னீணிதிய வாரிதிறந்
தொன்று மனிதர்க் குதவவே. (ங)

புரசை-பொன்னம்பல முதலியார் பாடியது.

வெண்பா.

காரியென்று மோரியென்றுங் கன்னனென்று முண்ணென்றும்
பாரியென்று நாமம் படைத்தோர்கள்—சீரியன்ற
கச்சியில்வாழ் பச்சையப்பக் காவலனந் நாளிருந்தால்
வச்சையர்போ லேமருவு வார். (க)

விருத்தம்.

தன்னை யடைந்த புலவருக்குத் தக்க நிதியந் தருதற்கா
வுன்னியேயா மொழிந்தாலு மொழியலா மென் றுளங் கொண்டு
மன் னுகச்சிப் பச்சையப்ப மான்முன் னவரை மருவு வித்த
விந்நல்குரவி னுதவிதனை யென்னென் றியம்பப் பெறுவே மால்.()

பெள்ளனூர்-நாராயணசாமி நாயகர் பாடியது.

வெண்பா.

மாவுறைகச் சிப்பச்சை யப்பமணிச் சீர்ச்சுடரை
நாவலரோ டொன்பதின்மர் நாடியே—பூவுலகிற்
கண்ணிருளே யன்றிக் கருத்திருளுஞ் சீத்தலினால்
விண்மணியெற் றென்றார் வியந்து. (க)

கலித்துறை.

காவே சுரபி எனுங்கொடை யாளனற் கச்சிநகர்க்
கோவேந்தர் மெச்சுந் துரைப்பச்சை யப்பனைக் கோதறுசீர்
நாவேறு பாவலர் பாமாலை சூட்ட நயந்தபுகழ்ப்
பூவேறு கோதை மணந்தன ளாலிப் புதுமையென்னே. (உ)

விருத்தம் - சிலேடை.

ஏராரும் பச்சையப்ப னென்னலானு மிசைப்பதத்தான்
மூவுலகு மளத்தலானும்
பாராரும் பஞ்சவருக் கொத்தலானும் பயன்றருசீர்த்
திருவுறையும் பண்பினானும்
பேராரும் புலவர்களுக் கமுதமீயும் பெட்பானுங்
கச்சிநக ருடைமையானும்
சீராரும் பச்சையப்பப் பூபன்றன்னைச் சீநிவா
சனைநிகராச் செப்பலாமே. (ங)

சின்னைய உபாத்தியாயர் பாடியது.

வெண்பா.

பைம்பொழில் சூழுங்கச்சிப் பச்சையப்பப் பூபன்றன்
செம்பொருளென் னுங்கடலிற் சென்றுவந்து—மெம்பர்களா
மேகங்கள் வாரியதை மென்புலவராம் பயிர்கள்
சோகந் தவிர்த்த சொரிந்து. (க)

சேலம்-பொன்னம்பலக் கவிராயர் பாடியது.

கலித்துறை-சிலேடை.

பெரிய வரையடுத் தாறுதலை யுற்றுப் பேருலகம்
பாரவிருந் தளித்தங் கமலனைப் பகைத்து விபு
தரைநிதம் போற்றுகச் சிப்பச்சை யப்பனைத் தாரணியில்
திருவளர் வேற்படை யானென்பர் கல்வியிற் றேர்ந்தவரே. (க)

விருத்தம்.

கருவிடத்தைக் கண்டமட்டி லொறுத்தானை யுலகளிக்கக்
கருத்த ராகி
யருமறைக்கு ளிருந்தபொரு ளனைத்தையும்பண் டாக்கிவைத்த
வறிஞன் றன்னைத்
தருமனைப்போல் ஏழைக்கு வந்தானைப் பார்வதிவள்
ளலைத்தண் காஞ்சி
புரமிருக்கும் பச்சையப்ப னைப்பரம னென்பர்கலை
புகல்வல் லோரே. (உ)

ஷை கவிராயர் பாடிய

பச்சையப்பமுதலியார் புகழ்மாலை.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

குருக்கத்தி கொன்றை வனச்சிம்பு ளுக்குமாக் கோட்டினிலே
தருக்கித் திரிகுயி லுக்கும் பிறந்திபத் தைச்சிதைத்துச்
செருக்கித் திகழொரு கோட்டானை வாழ்த்திச் செகத்தினிலே
திருக்கச்சிப் பச்சையப் பன்புகழ் மாலையைச் செப்புவனே. (க)

அவையடக்கம்.

முள்ளுவ தென்றிக ழாதுமண முன்னி மூவுலகோர்
கொள்ளுவர் தாழையை யென்கவி புன்மொழி கொண்டிடினும்
வள்ளறிருக் கச்சிப் பச்சையப்பன் பெயர் வாய்ந்ததனால்
விள்ளரும் பாவலர் காவலர் நாளும் விரும்புவரே. (உ)

புகழ்மாலை.

உலகுக்கு மூலம் பரனென்ப ரப்பர னுன்பொருளால்
தலமுற்றுஞ் சீரிற் பொலிந்தன னென்னிலித் தாரணியில்
நலமுற்றும் பெற்றவ னீதான் றிருக்கச்சி நாட்டிறைவ
இலகுத் தவச்செல்வப் பேறுடைப் பச்சையப் பேந்திரனே. (௩)

ஒருதொண்டற் காக வழக்கிட்டுப் பித்தனென் றோர்பெயர்பெற்
றரிதிற் பிழைத்த வநாதிக்கு நின்கல்வி யஞ்சவையால்
பரிவுற்ற தொண்டர் பலரா யினருன் பணமுலகி
லிருமைக்குஞ் சால்புடைத் துக்கச்சிப் பச்சையப் பேந்திரனே.()

பரமனுக் காலமெண் ணுதளிக்குந் திருப் பாற்கடனல்
வரகுண நின்செல்வ வாரிகண் டேங்கினன் மந்தரத்தா
னுரனற மொத்துண் டலையவ ரற்கமு தூட்டினையே
இரவலருக் கன்னை யேகச்சிப் பச்யைப் பேந்திரனே. (௫)

சிவனைப் பிரம்புகொண் டோச்சிய வேந்துஞ் சிலையதனால்
துவளப் புடைத்த விஜயனுங் கைதவன் பேடிகொண்டு
தவருற்ற நாமம் பெறுதெங் குறினுநின் சால்புருவா
லவமுற் றிடுவர்கண் டாய்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (௬)

இறப்பைத் தருவிட முண்டிற வாம லிருந்துலகில்
கறைக்கண்ட னாகிப் பலிக்குழல் கின்றமுக் கட்பகவன்
சிறக்குமுணவு பெற்று னெனினின் செல்வஞ் செப்பவரா
இறைக்கு மறிதுகண் டாய்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (௭)

மாதரை நீக்கித் துறவுற்ற கச்சி மகேசனொரு
மாதுமுலைச் சுவட் டோடு வளைத்தழும் பும்வதிந்து
தோதக மின்றிச் சுகித்தது நின்பொருட் டோற்றமன்றோ
ஈதற் குரியவ னேகச்சிப் பச்சையப் பேந்திரனே. (௮)

திகம்பர னாகி யிரந்துண்டு தோலுடை சேர்த்தசிவன்
நகந்தரு மாதைப் புணர்ந்தின்ப முற்றார்த்த நாரியென்றே
நிகழ்ந்தது நின்பொருட் டோற்ற மன்றோவிந்த நீணிலத்தில்
அகம்புற மொத்தவ னேகச்சிப் பச்சையப் பேந்திரனே. (௯)

தனதன் பரமனுக் குத்தோழ னாகியுந் தன்கணவை
யிலையொரு வாம லிருந்தன னீயந்த வீசனன்பின்
மனனைச் செலுத்திச் சிறந்துகல் விக்கண்ணை மாநிலத்தோர்க்
கினிமை யுடனளித் தாய்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (௧௦)

சாக்கியன் பாண்டியன் பார்த்தன் கல்வேத்திரஞ் சான்றவிலால்
தாக்கின ரீசனை நீயந்த நாளினிற் றுணிருந்தால்
ஏக்கமொன் றின்றி யிருப்பான் சிவனிந்த நாளிலரற்
காக்கம் பெருக்கிய வாகச்சிப் பச்சையப் பேந்திரனே. (௧௧)

ஈரா றொருசுதர் செய்யன்பு கண்டு மெழிற்கங்கையைச்
சேரா துமைமுனம் விட்டன னின்றொண்டைத் தோர்ந்துகங்கை
சீராரச்சென்னியிற் சேர்த்தனனென்னி லுன்செய்கையைப்போல்
ஏரான தெங்கு மிலைகச்சிப் பச்சையப் பேந்திரனே. (௧௨)

சொல்லரு மாலினு நீரினு மேவித் துளக்கமுற்றுச்
செல்வியை மார்பினி லேற்றித் திரிந்து சிறுத்தசுரன்
வல்லவை சேர்ந்துமண் மூவடி வேண்டிய மால்களிக்க
இல்லம் பெருகிற் றுன்னாற்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (௧௩)

இரணிய நாமம் பரவா தெழிற்ப்ரக லாதனனு
மூரணிலன் மாலுரு மாறிலன் மோன முனிவர்களுஞ்
சரணில்லை யென்று தவிக்காரக் காலத்துன் சார்பிருந்தால்
அரணம் பெருகுந் திருக்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (௧௪)

தராதல மேத்துந் தசரதன் சோகந் தனிலழுந்திச்
சுராதிபன் றன்னை யடையா னிளவல் சுகன்னியுட
னிராகவன் காடுறை யானுன்ற னீதியந் நாளிருந்தா
லிராவணன் மீறில னேகச்சிப் பச்சையப் பேந்திரனே. (௧௫)

பாறயிர் வெண்ணெயை யாதரித் தண்டர்கள் பாடிசென்று
வீறுறுமேனித் தழும்பேறக் கட்டுண்ட வித்தகற்குக்
கூறிய வன்னவை யார வருந்தக் கொடுத்தனையே
ஈறிலின் பத்துத் திருக்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (௧௬)

ஒருமைந்தன் சென்னியு மற்றொரு மைந்த னுடலுமற்றுத்
தெருமந்த தாளெடு மாறுயி லின்றித் திதிநடத்திப் [கண்
பெருமநின் னாற்றல்கண் டத்தொழி லொப்பித்துப் பெண்சுகங்
டரிதிற் றுயின்றனன் காண்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (௧௭)

கோலுங் கலையமுங் கம்பளமுங் கொண்டு கோகுலத்தின்
மாலின்பின் சென்றவ னின்பொருட் டோற்றத்தி னல்வயிரச்
சிலமுடியைப் பெற்றுச் செல்வப் பிள்ளை யிராயப்பெய
ரேலத் திகழ்ந்தனன் காண்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (௧௮)

பஞ்சவர் தூதுவ னாகி யலியுருப் பார்த்தனுக்கு
மஞ்சு தவழ்கொடித் தேர்ச்சா ரதியென வாய்ந்துபிழைத்
தெஞ்சிய மாலுக்குத் தேரும் விழாவு மியற்றிநிதம்
அஞ்சலென வளித் தாய்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (௧௯)

பொன்னை விரும்பிய மான்மோகினியுருப் பூண்டுலகில்
மன்னிய வூர்தொறுஞ் சென்றும் பயனை வதிதலின்றித்
தன்னை மறந்தவ ருறுஞ் சமையத்துச் சான்றபொன்னை
இன்ன லறவளித் தாய்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (உ௦)

பூமியிற் சோலை மலைக்கள்ள னின்பொருட் டோற்றத்தினால்
நாமமழக னென் றேற்றது மன்றி நகைவதிந்த
சேயம் பலவடைந் தானெனி னீமண்ணி றேடிவைத்த
ஏமமளக் கரி தாங்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (உ௧)

சக்கரச் செல்வ மடைந்தும் வைகுந்தந் தனிலழுந்தி
ஒக்கல் பரிவுற நீரிழி வுற்றிவ் வுலகினிலே
குக்கிக்கு மண்ணுண்ட மாலுக்குச் சோறு கொடுத்தனையே
இக்குத் தலைவ திருக்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (உ௨)

வாணியை வாயில் வைத்தும் பிரமன்புவி வாழ்க்கையற்றுச்
சேணி லிருந்தன னீயந்த வாணியைச் சேர்த்துலகில்
காணருங் காட்சியைக் கண்டும் புகழ்ப்பெருங் காயமுற்றுப்
ஆணவ மாதி யகல்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (உ௩)

அச்சைப் படைத்ததை யாதரி யாம லலையவிட்ட
கொச்சைப் பதும னல ருறவேதின் குணங்குறித்து
மெச்சுங் கவியச்சி லார்ந்தில் லறத்தினன் மேன்மைதந்த
தெச்சகத் தும்பொருந் துங்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (உ௪)

பிரமனின் றோற்றங்கண் டச்சமுற் றங்கலைப் பெண்ணையொரு
வருமறியாமற் றன்வாயி னில் வைத்த வகையறிந்து
சிரங்கொண்டு பாரதி பைக்கல்விச் சங்கத்திற் சேர்த்தனையிவ்
வருமை யறிபவர் யார்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (உ௫)

உலகொர் மிலேச்ச ரசத்திய நூலை யுரைத்தலைக்கண்
டலர்வாய்ந் தருந்தலை நாலுற் றிருந்த வயன்களித்து
மலர்வாய்ந்து நான்கு திசைமுக நோக்குற்று வாய்ந்தனனின்
பலமார்கல் விச்சவை யாற்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (உ௬)

கணப்பொழு துந்துயி லின்றிப் பணத்தைக் கடிதிற்குவித்
துணச்சகிக் காதிறந் தோர்போக மண்ணி லுறைந்தவருன்
னிணக்க மறிந்து பயப்பட்டுப் பேழை யிருப்பிடஞ்சென்
றெணித்திறந் தார்கள் திருக்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (உ௭)

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளெ...
குரவ னுரைத்த வியலறியா தார்த்தங் கோடிதொ...
திருமையு மற்றெவ ரின்றுன்ற னலவ் வியலை...
திருமையும் பெற்றனர் காண்கச்சிப் பச்சை...

கல்லாரைப் பாடிக் கடைவாசற் காத்துக் கருத்தழிவுற்
றில்லாரைப் போற்பல வற்றுக்கு மேக்கற் றிருந்தகவி
வல்லார் சதமகன் போல்வாழ்ந் தனருன்றன் மாண்பொருளால்
எல்லாரு மேத்துந் திருக்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (௨௯)

முதலெழு வள்ளன் முதலெழுந் தாரென்றிம் மூவுலகும்
றாதல்வ தறிந்து முதலோ வெழாமன்முன் னான்முறையே
நிதந்தரு மஞ்செயப் பொன்னைவைத் தப்பின்னு நீணிலத்தோ
ரிதம்பெற நின்றனையேகச்சிப் பச்சையப் பேந்திரனே. (௩௰)

அட்டதிக் கும்புக ழுந்தனம் வண்மை யருள்சிறந்த
இட்டர் வளமை யிவையவ தரித்த விப்பரிலே
எட்டுணை யுங்குறை யாமற் பயனையெல் லாமடைந்தாய்
இட்டுவக் கின்ற திருக்கச்சிப் பச்சையப் பேந்திரனே. (௩௧)

பொருள்வாழி யப்பொரு ளைப்பாது காக்கும் புனிதர்களின்
றெருள்வாழி கல்விச் சபைவாழி யச்சபை சேர்ந்தசெல்வர்
உருவாழி நிற்புகழ் நாவலர் வாழி யுனக்குதித்த
அருள்வாழி வாழி திருக்கச்சிப் பச்சையைப் பேந்திரனே. (௩௨)

புகழ்மாலை முற்றிற்று.

ஆ. சுப்பிரமணியக்கவிராயர் பாடியது.

வெண்பா.

நல்லோர்க் குதவவிரு நன்னிதியுண் டென்றுவிண்ணிற்
பல்லோர் சொலக்கேட்டோம் பார்த்ததிலை—யெல்லோருங்
காண வளிப்பதாற் கச்சியில்வாழ் பச்சையப்பன்
நீணிதிய மொன்றே நிசம். (௧)

அச்சுத உபாத்தியாயர் பாடியது.

வெண்பா.

தேசுறுநன் மீனமதி சேருமமா வாசையினின்
மீசுரர்க்கும் பூசுரர்க்கும் வீறுகவி—யீசுரர்க்கு
முள்ளுவப்பப் பச்சையப்ப னல்கொண் பொருளரற்கும்
விள்ளலில் வில்லாக விளங்கும். (௧)

பச்சையப்ப னில்லாவி பாவரியி னும்பரிவா
[illegible] னும்பா வலர்க்கிரங்கி—மெச்சுமுவா
[illegible]யம்பவிளங் குங்கச்சிப்
[illegible]ருபா. (௨)

தரங்காபுரம். சண்முகக்கவிராயர் பாடியது.

விருத்தம்.

அகலிட மெலாமளந்த வரிமரு மாதர்கண்
மோகனு மென்றாடி
யிகலிவே றிடத்திருக்க வென்னரித்தன்
னணையவனு லினைதலானுந்
தருமரானுர் பெண்சலங்கொண் டதனாலுந்
தனையரங்கந் தனைத்தலானும்
புகலிடங்கச் சிப்பச்சை யப்பனென்றே
மலர்மாது போந்தண்மன்றே. (க)

பூங்காவனக்கவிராயர் பாடியது.

விருத்தம்.

தலமெலாம் புகழ்கச்சிப் பச்சையப்பன்
கொடைக்கிணைநீ தானேவல்லை
புலவரெலா முகிலேசெல் செல்லெனவப்
பேரதனைப் பூண்டுமேலும்
அலகிலாப் பயப்பிடித்து வல்லிடிபட்
டுடல்கருகி யகல்விண்ணோகிச்
சொலவரிய மலைக்கணினீர் பொழிந்துதவி
யெந்நாளுஞ் சுழலுமாதோ. (க)

மஹாவித்துவான்

காஞ்சிபுரம். சபாபதிமுதலியார் பாடியது.

கட்டளைக்கலித்துறை.

எங்கும் விளங்குறக் கண்டு மதித்தர னென்றதிலோர்
பங்கி லொருசிறி தேதன் முடியிற் பரிந்தணிய
அங்கதைக் கண்டவர் யாருமதியென் றறைவர் கண்டாய்
பொங்கிய காஞ்சியிற் பச்சையப் பாவுன் புகழ்பரந்தே. (க)

ஏற்றமுடன் விளங்கத் திருமானத்தி யென்றதிலோர்
கூற்றினி லோர்சிறு தேதன் கரத்தினிற் கொண்டுநிற்பச்
சாற்றுவ ராங்கதை நத்தென யாவருந் தண்டமிழோர்
போற்றுறு காஞ்சியிற் பச்சையப் பாவுன் புகழ்பரந்தே. (உ)

வேத முணர்ந்தோ றமோர்ந்தய னவில் விளங்கக்கண்டு
மாதவர் யாவரு நாமக ளென்ன வழுத்தினரால்
பூதல மேற்கல்வி யீறக்கழகம் பொலிய வைத்த
போதங்கொள் காஞ்சியிற் பச்சையப் பாவன் புகழ்மகளே. (௩)

விருத்தம்.

பூமக ளிலவு காஞ்சியம் பதிவாழ்
புண்ணிய மால்பச்சை யப்பன்
பாமலி புகழா மொருதரு வானிற்
படர்ந்தரும் பாமலர் மலரக்
கோமலி யுடுவென் பாரதன் பிஞ்சைக்
குலவிய பிறையென்பர் கனியைத்
தூமதி யென்ப ரக்கனி ரசத்தைத் துலங்கு
வெண் ணிலவென்பர் சோர்ந்தே. (௪)

அண்ணலருட் கடல்படிந்தோ மாழ்கடலைக்
குடித்துவந்தோ மரிடசீரே
நன்றுதமிழ்க் கடல்கடந்தோங் காஞ்சிநகர்ப்
பச்சையப்ப நகலனீட்டும்
என்றுபுகழ்க் கடலெங்கும் பரந்ததிதை
யளவிடவு மேலாதென்னக்
கன்னியகத் தியமுனிபோய்க் குன்றேறி
யிருந்தனனாற் கவலைகொண்டே. (௫)

கலித்துறை.

பாவேறு சீர்க்கச்சிப் பச்சையப் பன்புகழ் பாவலர்த
நாவேறி யண்டத்து மேலேறி நிற்பதை நாடுதற்கே
மாவேறு மார்பனுவத் தாசையேற வளர்ந்துருவம்
பூவேறு வானண்டத் தப்புறத்தேறப் பொலிவுறுமே. (௬)

ஏனுற்ற காஞ்சியில் வாழ்பச்சை யப்பன்மு
னீட்டும்பொன்போல்
மானுற் றறம்பல செய்யாமை யாற்செம்பொன்
மால்வரை தான
சேணுற்றோர் கைதவ னுலடி பட்டுத்
திகைத்துப்பின்னு
நானுற்றுச் சாபமு மாய்க்கோணிப் பித்தன்கை
நண்ணியதே. (௭)

விருத்தம்.

திருவளருங் காஞ்சிநகர்ப் பச்சையப்பச்
செல்வன்கல் விச்சாலைத் தடத்திற்றோன்றும்

பொருவிலுயர் பலநூலாங் கமலஞ்சீர்சால்
புலமையரா மிரவிகளா லுண்ணெகிழ்ந்தே
அருமையுடன் மலரமகிழ் சிறுவரென்னு
மன்புமிகு மளியினங்க ளவற்றைமோர்ந்தந்
திருமைதரு மறமுதலா மினியதேனுண்
டியலிசைகள் பாடிமகிழ்ந் திருக்குமன்றே. (அ)

வளமுறு காஞ்சி நகர்ப்பச்சை யப்ப
வள்ளனற் குணப்பொதி யத்தில்
கிளர்வுறு புகழா மந்தமா ருதந்தான்
கிளக்குமாங் கவன்செய்நல் லறமாம்
பளகறு சந்தச் சோலையைச் சார்ந்து
பாரினிற் பரவநா வலர்தம்
உளமெனுஞ் சோலை தழைத்துணர் வரும்பி
யொண்கவி மலர்மலர்ந் ததுவே. (கூ)

வெண்பா.

வாழ்கமறை யந்தணர்கள் வாழ்கமுறை மன்னவர்கள்
வாழ்ககச்சிப் பச்சையப்ப வள்ளல்புகழ்—வாழ்கபுவி
மன்னுயிர்கள் வாழ்கசபை யோர்வாழ்க வாழ்கவறம்
பன்னுகல்வி வாழ்க பரிந்து. (க0)

தரங்காபுரம்

அஷ்டாவதானம். கதிர்வேல்கவிராயர் பாடியது.

பச்சையப்ப முதலியார் புகழ் குறட்பா.

பச்சையப்பன் களங்கம் பட்டானே காஞ்சியில்வாழ்
பச்சையப்பன் மாமுகத்தைப் பார்த்து. (க)

விருத்தம்.

அரும்பச்சை யினதுதந்தை நிகர்முகமும்
வரிவிழியு மிரதஞ் சாரும்
வரும்பச்சைக் கிளிமொழியுங் களிப்புறவே
கொழுநரொடு மடவா ரெல்லாம்
திரும்பச்சை யோகமது செய்துாட றவிர்காஞ்சி
சிறந்தே யன்பாய்த்
தரும்பச்சை யப்பாநின் பெரும்புகழான்
மூவர்களுந் தழைக்கின்றாரே. (உ)

வையமெல்லாம் புகழ்காஞ்சிப் பதியில்வாழும்
வளர்சிதிசேர் தனதனென வாழ்வின் மிக்கான்
பெய்புழுகிற் கரதலத்தான் குவளைமார்பான்
பேரடியார் குழுவிலொன்றாய்க் குலவு மன்பான்
பொய்யறுசீர்ப் பச்சையப்ப சுகுணதீபன்
புகழ்கேட்டு முடிதுளக்கம் புரிவா னென்றே
செய்யதிரை யுடுத்தநெடும் புவியைத்தாங்குஞ்
சேடனுக்குச் செவியை யயன் செய்திலானே. (ங)

தூமாலை யெனுங்கொன்றை யரன்புனைந்தான்
பார்புகழ்பைந் துளவமென்று
மாமாலை யரிபுனைந்தான் நான்மாலை யயன்
புனைந்தான் வளமையோங்கத்
தேமாலை புனைகின்ற திருக்காஞ்சி புரிதனிலே
செல்வமோங்கிப்
பாமாலை புனைகின்ற பச்சையப்பன் திருச்சமுகம்
பார்க்கத்தானே. (ச)

கலிவிருத்தம்.

கச்சிப்பச்சையப்பா கல்விகண்டரு
நிச்சையாநினையே நினைந்தேபிள்ளை
யிச்சகத்தினி லீன்றவுடன்பெயர்
பச்சைப்பிள்ளை யெனப்பகர்வார்களே. (ரு)

வெண்பா.

மெச்சுசினி வாசதுரை வேண்டிமுனை யாவிட்டால்
பச்சையப்பன் பணத்தைப் பார்ப்பவரார்—இச்சகத்திற்
பங்குனி யமாவாசைப் பாவலர்க்கோர் சுந்தாயம்
எங்குவரு மானே யியம்பு. (சா)

மால்வேலை யுற்றான் மலரயன்பூத் தானமுற்றான்
பால்வண்ணன் வாழ்வம் பலமுற்றான்—மால்கச்சிப்
பச்சையப்ப வள்ளலன்றிப் பாவலர்க்கு வேறுளரோ
விச்சகந் தன்னி லியம்பு. (எ)

கட்டளைக்கலிப்பா.

தீயர்க்கும்பெரு வாயர்க்கும் பொய்யர்க்கும்
தேடுமாதர்க்கும் டிஸ்கவண்டு செய்திடு
சேயர்க்கும்பல லாயர்க்கும் பொன்வைத்து
சிலசிறந்தது போலிற வாமலே

தூயர்க்குங் கல்விச்சாலைக்கும் விப்ரர்க்குந்
தூங்கவா லயத்திற்குந் தமிழ்க்கவி
ராயர்க்கும் பண்டுவைத்துப் புகழுற்றான்
ராஜகாஞ்சி புரபச்சை யப்பனே. (௮)

கலித்துறை.

பிறவா திருந்தவன் வேதாந்த நாயகன் பெட்பிலறந்
துறவா திருந்தவன் வள்ளுவ தேவனற் றாயனடி
மறவா திருந்தவன் பாக்கிய சாக்கியன் மாதிலைக்கி
லிறவா திருந்தவன் பச்சையப் பேந்திர னென்றென்றுமே. (௯)

கட்டளைக்கலித்துறை.

கதிக்கெய்து நற்புக ழைப்பெற்ற பூபதி கங்கைமுக
னதிக்கெய்து வோரும் தொழும் பச்சையப்ப நராதிபனே
ததிக்கெய்து பங்குனி யாமமா வாசை தனிலெவுற்றார்
பதிக்கெய்தி னோருந் திதிக்கெய்தி னருள் பாக்கியமே. (௧௦)

வெண்பா.

திருவாய் மொழித்தேனை ஜீவமுக்தா னென்னும்
வரிவண் டினமொய்க்கு மாப்போ—னிரைகச்சி
பச்சையப்பன் பண்புத்தே னைப்பாவ லாளிக
ளிச்சையுடன் மொய்க்கின்ற விங்கு. (௧௧)

கட்டளைக்கலிப்பா.

மண்கொடுத்தவன் மாபெலி மானுக்கு
மறைகொடுத்தவ னரனன் வேதர்க்குப்
பெண்கொடுத்தவன் சங்கரன் வாலிக்குப்
போர்கொடுத்தவன் அர்ச்சுன னண்ணார்க்குத்
தண்கொடுத்தவன் இந்திரன் பார்க்குநற்
றதியிலேயிந்து பாலகர்க் கேகல்விக்
கண்கொடுத்தவன் எழுலகம் புகழ்
காஞ்சிமாநகர்ப் பச்சையப்பனே. (௧௨)

திருப்புகழ்ச்சந்தம்.

வண்ணவிருத்தம்.

வானிருந்த பனியொப்ப முற்றிவலை
பாயமங்கையர் கருப்பநற் குழியில் விளையாலே
வாயுவந்ததி விருப்ப தொப்பமுது—
மாநிலந்தனி லுதித்துடற் பொருதி
பாலரென்று பெயர்பெற்று தக்கிமிக

தேனெனுஞ் சொன்மதிக்க சிற்சிறுவர்
கூடிவிந்தைகள் பெருக்க மிக்கவதி
சேடமங்கையரை நற்றி முற்றுமறி— விலராகி

தீயநங்குகளில் சித்தம் வைத்துமத
பேதர் தங்கள்வழி கிட்டியொட்டியிடர்
தேடியுண்டுகடை கெட்டு சிக்கிமிக— அலைமோதி

யீனரென்றுபலர் திட்ட தொட்டநிலை
தானகன்றுநெறி விட்டு ஆட்டநெறி
யேகியொன்று முயிர் தத்தளித்துடனு— மழியாமல்

ஈசனன்பின்வழி பட்டு பெற்றுவளர்
தாயர்தந்தையர் களிக்க நற்றதியி
லேதமென்பதை யகற்று வித்துவிழி— யருளாலே

நானமொன்றுபுய விக்ர மத்தரசர்
தாமகிழ்ந்துபுகழ் மெச்சு சற்சரிதை
நாளுமெங்கணு மிருக்க மெய்த்தரும— மெனவோதும்

ஞானபிம்பசுப மொத்த வித்தையதை
பாலர்கண்டறு படித்து சுத்தமுற
நாடுசெம்பொனருள் பச்சை யப்பவுயர்— பெருமாளே.

பச்சையப்பமுதலியார் பண்பு.

காப்பு.

கந்தார்த்தம்.

திருமேவு பாண்டியன்முன் சீர்பரத் துவமதைத்
திரமாக ஸ்தாபிதஞ் செய்து—நெறியால்
வரநீடு மற்புதம் வளர்கிழி யறுத்தநற்
பெரியாழ்வார் காப்புத்தானே—ஜகத்ரட்சகப்
பெரியாழ்வார் காப்புத்தானே.

சுரர்குல மொடுபல நரர்குல முமசர
சரகுலமு நலனுள் வரவரு ளரிஹரி
பெரியாழ்வார் காப்புத் தானே.

வாழி-கியால்.

வாழிவாழிநற் பச்சையப்ப மஹாநு
பாவனிதம் வாழியே
ஆமமவர்தர்ம கர்த்தர் சந்ததந் துலங்கி

மூர்த்தி மூவரும் வாழியே தினமூன்று
லோகமும் வாழியே
சீர்த்திபெருகிய ஷண்மகப் பயிர் சிறந்
துயர்க்கமே வாழியே
நண்ணுமடட்டுவோ கேட்டுஜெனரல் நாட்டன்
துரையவர் வாழியே
எண்ணுங் கோஸ்ரீந்தி வாசதுரைபல் லாண்டு
மின்பொடு வாழியே
வித்துவ வேங்கட பதியுதார விநோத
னன்புடன் வாழியே
சுத்த வீரா சாமியென்ற சுகோத்திர
னின்புடன் வாழியே
மாதவன்பதந் துதிசெய் சுந்தர ராமாநு
ஜேந்திரன் வாழியே
நீதமேவு மிராஜ ரத்தின நிதான
னூழொடு வாழியே
துங்கமேஜஸ் திரேட்டு சோம சுந்த
ரன்றினம் வாழியே
தங்கும் ஸ்ரீராமாநுஜேந்திரன் சந்த
தம்பெருகி வாழியே
கருணைபுரியுநல் லருணகிரி யெனுங் கர்த்தன்
மாண்பொடு வாழியே
விரகு பாங்கி வேங்கடாசல விக்ர
மன்றினம் வாழியே
அங்கமிகு லார்ட்யல் பின்ஸ்டோ னென்டர்
புகழ்ந்திட வாழியே
இங்கிலாண்டு விக்டோரி யாவெனு மிராணி
சந்ததம் வாழியே
தாவு பச்சையப்பேந்திரன் கல்விச்
சாலைநீடூழி வாழியே
மேவிப் படிக்கின்ற ஹிந்து பாலர்கள்
விக்ரமத்துடன் வாழியே
வேதமோதிய தூய்மை யாழ்வார்கள் விக்கிரமத்
துடன் வாழியே
நீதிதிவ்யப் பிரபந்த மென்றென்று நிலத்தில்
வளத்துடன் வாழியே
பொறுமை பெருகிய லஷ்டலட்சுமி புத்திரர்
நித்தியம் வாழியே
வறுமை யகன்றிந்த வுலகுளோர்களும் வண்மை

தருமமேவு மெய்ச் சியாதி சிருதுகள்
சாம்பிரதாயமாம் வாழியே
உருமைபரிசு கதிர் வேலனற்றமி ழுலகி
னீடூழி வாழியே.

வாழி.

வாழிவாழி பச்சையப்ப மால்புகழ் வாழிதிரு
மாதர்ம பரிபாலன மன்னர்வாழி
ஆழிசூ ழுலகம்வாழி மன்னுயிர் வாழிதிரு
ஹரியரபிர் மாதிதேவ ராமேனரும் வாழி வாழி வாழி. (க)

விண்டலமு மண்டலமுஞ் சந்ததம் வாழிசதுர்
வேதம்வாழி போதர்வாழி நீதமும் வாழி
கொண்டக்சேரிந்துதேசக் குடிகளும் வாழியெழில்
கொற்றவரும் வாழிவாழி நற்றவர் வாழி வாழிவாழி. (உ)

கற்குமிந்து பாலர்கல்விச் சாலைகள் வாழிபொளிர்
கலைமக ணிலமகண் மலர்மகள் வாழி
நற்கிரமயிக் கிலீசுராணி செங்கோலும் வாழிமறை
நாடும்பிராமணர் சொல்மந்திரம நாடோறும் வாழி வாழிவாழி. (ந)

இந்துஜனர் மீதிலபி மானமா யாளும்துரைவாழி
யெங்கள்கோ ஸ்ரீநிவாச நரேந்திரன் வாழி
மந்திரநர சிங்கராய மாதவன் வாழிமன்னர்
மண்ணிவாக்கஞ் சோமசுந்தர மன்னன்வாழி வாழிவாழி. (ச)

திரவேங் கடபதி சிரோமணி வாழியே
சிற்றேறி யருணகிரி செல்வனும் வாழி
வீர வேங்கடாசல விநோதனும் வாழி அருண்
மேவி ராஜரத்தின சுவிக்கிரமன் வாழிவாழி வாழி. (ரு)

சுந்தர ராமாநுஜ னென்னுந் தோன்றலும் வாழிநலந்
தோன்றும் விராசாமிபாஞ் சுலட்சணன் வாழி
வந்தனஞ்சேர் கதிர்வேலன் வண்டமிழ் வாழிஇதை
வாசிப்போருங் கேட்போரு மகிழ்ந்துமே வாழி. (சா)

திருதீர்மலை. கோபாலகிருஷ்ணபிள்ளை பாடியது.

ஆசிரிய விருத்தம்.

ஆலய மநந்தின் முறைமையாரு கைக்கொண்

பாலனை நோக்கி நின்றிடும் பச்சை
யப்பன்சித்திர வுருக்காணின்
ஞாலமேல் வறுமையுற் றவர்மகா று
நனிப்பல கலைதெரிந் தறிவுற்
றேனுயர் கடவுட் கன்புறப் பொருள்வைத்
திடுவனென் றுரைப்பதுபோலும். (௧)

சிலேடை-ஆசிரியவிருத்தம்.

அம்பரமேவிக் கல்விபூகங்கொண் டதிசயவிபவ
மார்ந்துலகிற்
பம்பவந்தரியா மித்திரமடைந்து பாவலர்புகழ்
தரக்கடற்சூழ்
இம்பர்சிர்படவிக் கிரகமுற்றிருந்த மியல்பிறை
னெடியமாலெலாம்
பைம்புயனிகர்கைக் காஞ்சிவாழ்பச்சை யப்பனும்
பார்த்திபன்றனையே. (௨)

திகரங்கோதை மருவவணிந் திரும்பங்கயக்
கையார்ந்திற்குந்
தகைகொள்படிக மணிதாங்கித் தண்ணொண்சுதைநேர்
வெண்ணிறமாய்ப்
பகரங்குலவும் வானகல்வாய் மேவிப்புலவர்
குழூஉப்பரவப்
பண்கொண் டோங்குஞ் செழுங்கல்விக் கிருப்பாய்
விளங்கும்பான்மையால்.
மகிமெய்ங்கனுஞ் சேர்புகழ்க்குரிய மன்னன்சினி
வாசனுறும்
வள்ளலாதி யொன்பதின்மர் வண்மைமருவக்
கட்டுவித்த
யுகங்கடோறு நிலைபொருந்த வறத்தைநிறுத்தும்
பச்சையப்பன்
உதாரக்கலையகங் கலைமகளென் றுரைக்கலாகு
மிதுதிடனே. (௩)

சேமங்கலம். நாராயணசாமிமுதலியார் பாடியது.

ஆசிரியவிருத்தங்கள்.

திருவனைய் தொட்டனரு ளிசைதிசை யெலாம்புகழ்

தரணி முழுதுங்கொண்டு விக்டோரி யாளெனுந்
தனியரசி யரசுசெய்நாள்
வெருவனைய னுட்டன்மரை நிலைநிறுப் பாளென
வெருளறக் கடவுளுக்கு
மேலோனாள் பச்சையப்பன் சொன்மொழி விறவும்
மேலவன் படமேறவுந்
திருவனைய னுட்டனிம சேதுபதி யந்தமுந்
திகழுறச் சாலைசெய்து
சீர்பெற்ற சீனிவா சப்புனித னனமது
செல்வமென் றுலகமகிழும்
ஒருவனைய னுட்டெனளிர் ஜார்ஜ் நார்ட்டன்றீண்டி
யோங்குவித் தருண்மாளிகை
யுயருமிர சிதமோங்க லாங்கொலோ புகழ்நிலைய
மாங்கொலோ வுணர்கிலோமே. (க)

சீரோங்கு தன்புவி யிடைப்பல வறங்களுஞ்
செய்துசெம் புகழுடனிறீஇத்
தேவருல கப்புகுந் தின்பம் புசித்தநீ
தேவராஜன் பொருட்டாற்
காரோங்கு பொழிலத்தி கிரிகனக கோபுரக்
கடையினிற் சீற லருள்சேர்
காவலன் சீனிவா சக்குரிசி லுனது பொருள்
கைக்கொண்டு நிதம்வளர்க்கும்
நீரோங்கு பேரறச் செம்மல்கண் டளவளாய்
நிற்றழை நீயுமன்னோன்
நிமலவொன் சிரமீது பங்கயச் செங்கையா
னீவிநெறி முறைகாட்டலாம்
பாரோங்கு தவளநெடு மாடத்தி னேவியப்
படிவத்தி லங்குநினது
பான்மைகண் டோர்த்துமோ நோன்மைகண் டிகலரசர்
பணிபச்சை யப்பமணியே. (உ)

துலங்குமெழிற் பெருந்திருவும் பலகலையுந்
தொடரறமுஞ் சுரத்தலாலே
நலங்குலவுந் திருமகளை நாமகளை
மலைமகளை வென்றுநாளும்
இலங்கொளிபா லவர்தோன்ற யிடனும்பாற்
கடல்கமலம் வெள்ளிவெற்பை
வலங்குறைய வென்றுகச்சிப் பச்சையப்பன்

கண்ணாலின் புலவரிற் காணிய விரும்புமன்
    புலவர்கருத்தை யோர்ந்தோ
எண்ணா நியமித்த வறம்பலவும் வழுவாம
    லியற்றி நாளும்
பண்ணாருந் தமிழ்வளர்க்குஞ் சீனிவா சனைக்காணப்
    பரிவுற் றேயோ
விண்ணாரும் பச்சையப்ப னிவ்வுழியிவ் வுருவின்வந்து
    விளங்கல் தானே. (௩)

சிலேடை-வெண்பா.

எஃகங்கை யேந்தாதலா லெண்புலவ ரின்புமுற
வெஃகுமையின் மீதே விளங்கலால்—அஃகாப்
பெருங்கொடையான் பச்சையப்பன் பெட்புறுமா மாடம்
இருங்குகனை நேராகு மே. (௪)

தரணி தனைமணந்து சங்கத்தைத் தாங்கி
உரிய சுதரிசன மொன்றி—மருவப்
பருத்தவள மாலெனவாம பச்சையப்பன் வைகுந்
திருத்தவள மாளிகையின் சீர். (௫)

பச்சையப்ப முதலியார்

சபாமண்டப மாளிகைவிஷயமாக

திருநீர்மலை. கோபாலகிருஷ்ணபிள்ளை பாடியது.

அறுபத்துநான்கடிச்சிந்து.

இராகம், தன்னியாசி. தாளம், ஆதி.

பல்லவி.

ஜார்ஜ் நார்ட்டன்முன் கைதொட முற்றுப்பெற்ற
    மாளிகையைப் பாரும்—அட்வோகேட் ஜெனரல்
ஜார்ஜ் நார்ட்டன்முன் கைதொட முற்றுப்பெற்ற
    மாளிகையைப் பாரும்— ஜார்ஜ்.

அனுபல்லவி.

ஆர்ஜ்ஜித முழுதுந் தர்மத்துக்காக வைத்த வுதாரன்
கோர்ச்சியா மெவர்க்குந்துற் கலிப்பகை யொழித்த சூரன்
வார்ச்சல்ய மிகுத்தகச்சிப் பச்சையப்பனு மொய்யாரன்
[illegible]

சரணங்கள்.

சகலபார்மதிமுகப் பிரகாசி—எவ்வுயிர்மீதும்
நிலையாயிருக்கும் விசுவாசி—மனுமுதலாம்
பலநூலெடுத்து விதிபேசி—இங்கிலாண்டிலிருந்
துலகோர் குடையிலாள் மகராசி—விக்டோரியாளிக்

காசினிமேல்வெகு நேசநிறுத்து பிரதாபன்—கவர்னர்ஜனரல்
கேசுமிகுத்திடும் யார்டாலோசு மகீபன்—மதராசுகவர்னர்
பூசிதமேவுசர் ஹென்றிபாடேஞ்சர் திலீபன்—இவர்கள்காலத்
தாசையதாகநன் னீதிநடத்திடு பூபன்—செய்யுந்தரும

காரியத்திலேயதிபிர யாசைப்பட்டு நிலைக்கச்செய்
யோக்கியன்—மிகுத்தவிவ
காரசட்டத்தாலெதிரி கீழ்ப்படச் செயித்திடுஞ்
சிலாக்கியன்—நம்பியேயடுத்
தோர்களிக்க வாதரிக்குஞ் ஜார்ஜ் நார்ட்டனென்னுஞ் சத்திய
வாக்கியன்—உதவிபெற்றோன்
தாபணிக்கட் டூர்வெட்கப் பேரறத்தைத் தான்வளர்க்கும்
பாக்கியன்—வறியவர்கள்

கண்டவுடனேமகிழ்வு கொண்டிடவவர்வறுமை
சிந்திடவபாரியாகச் செம்பொனீந்தருளசெயு
மௌதாரன்—ஜெயராஜர்கள்
மண்டலாதிபவருக வென்றுகைகொடுக்கவீறுந்
துங்கமேயுல்வுமக ளங்கநிறைதிங்கள்
முகசிரன்—சீனிவாசேந்திரன்
புண்டரீகபாதினருள் கொண்டதிவ்யபோகமுறு
திண்டிறல்வீராசாமியா மெண்டிசைபுகழ்மிகு
வசிரன்—மகானுபாவன்
வண்டுளவிறைஞ்சித்தொழுஞ் சுந்தரராமாநுஜவேள்
கொண்டல்போற்கொடைக்குப் பாரைவென்றிகொளிராமா
நுஜதீரன்—இராஜாததின

காவல னெனவொரு பேரிசை கூடும்
நாவலன் மாதவ னருள் சூடும்
மாவள நேர்சுப்ப ராயனு நீடும்
பாவன னிவர்செய நாடிக்கொண் டாடும்— சார்ஜ்.

தலமேலிருள்களெல்லா மேக்கும்—படியதிகப்

நலமாயஸ்திபாரத்திற் றுங்கும்—வகையாய்வைத்து
வலனூர்ந்திடவதன்மே லோக்கும்—முறைமருவச்

சட்டமதாகவே கற்களிழைத்துடன் கூட்டிச்—சுவரெழுப்பிப்
பட்டைகடூர்ந்தொளிர் வச்சிரஸ்தம்பங்கணாட்டி-இசைந்திருக்கத்
திட்டமுலாவுறுஞ் சித்திரபோதிகை மாட்டி-அணியணியாய்க்
கட்டமுகார்மணி யுத்திரமேலுற நீட்டி—மேல்தளஞ்செய்து

தாய்ச்சுவர்முதலாயிந்த மார்க்கமுடன்மேனிலைகள்
சேர்த்துப்—பலவடுக்கு
வாய்ச்சிடவழிகுலாவ மேற்புறங்கரும்பொனுற்கை
யார்த்து—வரிசையாக்கிக்
காய்ச்சியேயகலமொடு நீட்டமுறவேபதமாய்
வார்த்துச்—செய்தவீயப்பாய்
பாய்ச்சியேயிசைவுமேவப் பூட்டிமணிலையுலாவப்
போர்த்துச்—சுவர்முழுதும்

தத்தொளியுலாவவெள்ளை வைத்துப்பத்மராகவாயில்
அற்புதமாய்த்தோன்றவதில் பொற்பமர்மணிக்கபாடத்
தங்கப்—பூட்டிச்சன்னல்கள்
எத்திசையுமேவுற மணிப்பிரபைகுலாவிடவி
யற்றியேவெகுவினோத சித்திரப்படமிக
விளங்கக்—கட்டிப்பலமாய்
இத்தரையெலாம்விலைசெய் பற்பலநிறநிலாவும்
லஸ்தர்களனேகமாங் குலோப்புகளரசகுண்டுகள்
தொங்க—வால்சேட்டுகள்
பத்திப்பத்தியாகவே யிருக்குமேசைநாற்காலிநி
ரைத்திடும்பில்லர்சேட்டுகள் மெத்தவும்வேடிக்கையா
யிலங்கச்—சிங்காரங்கொண்டு

தபதிகள் விழிமன மனுதின நாட
விபவ மிகவுறவே பலர்சபை கூட
விபுதர்க டமக்கிலை யெனமனம் வாடக்
கபடமில் புலவர்சீர் மகிழ்வொடு பாட— ஜார்ஜ்.

அளவில்சிறுவர்கள் வாசிக்க—வுபாத்திமார்கள்
தெளிவாய்ப்பலபாஷை போதிக்கத்—தலைவரிருந்
தளவளாய்க்கூடியே யோசிக்க—செகிர்டெரிரைட்டர்
வளமாய்க்காரியங்களைப் பார்க்க—கவனர்ஜனரல்

ஆசையாய்வந்து விலாசம்விளங்க விருக்க—ஜார்ஜ்நார்ட்டன்விஸ்
வாசமுடன்முறை யாவுமிருந்து விதிக்க—மனமகிழ்ந்து
நேசமுறும்புல வோர்கவனங்கள் படிக்க—நிதமவர்க்குத்
தேசுலாவும்பெரு மானதனங்கள் கொடுக்கப்—பலசனங்கள்

அட்டியில்லாமல்வந்துவே டிக்கைபார்த்துளத்தில்
சந்தோஷிக்க—இடம்பிரிக்கப்

பட்டுச்சோபிதமிகு மிரத்னமயமாகவே
சொலிக்கச்—சோலைமலையை

ஒட்டியவோர்கோபுரத்தின்—கிட்டவெழிற்பால்
னெதிர்நிற்க—அவன்றலைமேல்

இட்டமாயோர்கையைவைத்தோர் புத்தகத்தைமற்றோர்
கைதரிக்க—விளங்குமிரும்

அற்புதமுகவசீர மற்புயவிசாலமார்பும்
பொற்புறவேகாணவொளிர் சித்திரரூபத்தில்மேவு
மாரன்—சேதுவிமய

வெற்புவரையும்முலாவு நற்புகழ்கொள்யோகசாலி
வித்தகன்மடந்தைமார்கள் மைக்கணளிதாவுமலர்த்
தாரன்—கல்வியிற்சேடன்

சொற்பனத்திலும்பொய்சொல்லாச் சத்தியசுசீலனுயர்
சக்கரப்பிரானமர்ந்த வத்தனைத்துதிசெய்சுகு
மாரன்—புலவர்மகிழ்

கற்பகக்கையான்முருக னெப்புறுசிங்காரன்வெகு
வித்தியாதானன்பகைத்த சத்துருக்களையடக்கும்
வீரன்—பச்சையப்பனுக்

கவனி மீதுவளர் புகழுட லென்ன
எவரு மாசையுட னேதுதி பன்ன
உவமை நீங்கிடவே மிகவொளி துன்ன
உவகை யோடுபல நவமணி மின்ன

ஜார்ஜ்நார்ட்டன்முன் கைதொடமுற்றுப்பெற்ற
மாளிகையைப் பாரும்—அட்வோகேட்ஜெனரல்
ஜார்ஜ்நார்ட்டன்முன் கைதொடமுற்றுப்பெற்ற
மாளிகையைப் பாரும்.

பச்சையப்பமுதலியார் கல்விச்சாலையின் சிறப்பு.

அஷ்டாவதானம். கதிர்வேல் கவிராயர் பாடியது.

சிந்து.

இராகம், புன்னாகவராளி, ஏகதாளம்.

பச்சையப்ப பூபன் கல்விச்சாலையினேற்
பாட்டையாரென்ன சொல்வேன்.

மூச்சகந் தனிலெதி ரில்லா வித்தியாதானன்
மூதண்ட கோடிகள் புகழும் பிரமக்கியானன்
மெச்சும் பிரபலமிந்து தேசத்தி னபிமானன்
விஜையசண் மதப்பயிர் விளைத்த ஜகப்பிரதானன்

விளங்கிய சென்னை நகரந் தன்னில்
வளங்கொள்ளும் பொன்னை மிகப் பொழிந்து
விலங்கு கணிகராகக் கலங்குஞ் சிறுவர்திட
குலங்கல்விப் பயிற்சியில் துலங்கும்படி ஸ்தாபித்து

விஜய சுபகுண மதுர நவரச
சகல கலைகளு முணர வதிகுண— பச்சை.

இந்து பாலருக்கே யிதென்று சொந்த முண்டாக்கி
இதரமதப் பிள்ளைகள் அதனுடன்சே ரமணீக்கி
விந்தையிங் கிலீஷ்கிளாசு நான்காகவே வகுத்து
விளங்கும் டிவிஷன்பதி னைந்தத னுட்டொகுத்து

மேற்றமி ழைந்து வகுப்புடன்
மேன்மையின் மூன்றதெ லுங்கினில்
சாற்றுநால் வகுப்புகளிற் படிக்கும்
சாஸ்திரத் தொகுப்புகளை நடத்தும்

ஏர்த்த செக்கிரிடெரி பார்த்த சாரதிபூமன்
நேத்திர ஆடிட்டர்வேத சாத்திர வேங்கட்டரங்கன்
ஆர்த்த அசிஸ்டாண்டு பாத்திர கோபாலபிள்ளை
பார்த்துத் திறமையுடன் காத்துக் கங்காணிக்க

எவரு மிதுவெகு பெருமை யெனவதி
சுகிர்த மொடுசிறு வரரு மகிழ்வுற— பச்சை.

மரீஸ்யிஸ் பெலின்புக்கு கிளீபட்டு ஜீயாக்கிரபி
வளரிலீ மென்ஸ்கிருமர் கேஸ்ஜீ யாக்கிரபி
பொருதும் அவுட்லயன்ஸ் ஸ்டோரியாப் இங்கிலாண்டு
புகழும் இங்லீஷ்ரீடர் டிம்மன்ஸ் ஜீயாக்கிரபியுண்டு

புகழும் பிரன்ஸ்பால் ருபார்ட்யூயிங்
பொருளா மிஸ்க்கொயர் மேல்விசாரணை
புகலும் ரிக்லேஷன்டாடி நடத்தும்
புனிதவுலாசன் திறமென்ன சொல்வன்

பொருதும் லாற்சுகிருமர் வரும்நல்ல யீஸாப்ஸ்பேபில்
விரியும் கெமிஸ்திரீகள் சரியாம் அர்த்தமிட்டீக்கல்
பெருந்தர்க்க வியாகரணம் அருநன்னூல் தொல்காப்பியம்
விரவிய பலகிரந்தம் துரிதமொடு கற்பித்து

புலவர் மகிழ்பெற வுலகி லதிசய
மருவ வெகுமதி சிறுவர் பெறவுயர்— பச்சை.

மணியடித்திடுந் திட்டப்படி பிள்ளைகளைக் கூட்டிவைத்து
மூன்று பாஷையின் டீச்சர்மார் கைநீட்டி
கணிதமுத லொழுங்கு களின்பாடங் களைச்சொல்ல
கருதும்டிக் கட்டுதந்து மாதமாதமு நல்ல

கவைவெகு மதியாய்சில புத்தகங்கை
யினிற் றுதியாய் மிகக் கொடுத்து
செவையாகக் காத்து பாலர் கண்களைத்
திறந்திடர் தீர்த்து கோமளீஸ்வர

க்ஷேத்திரன் பிரசிடெண்டு நேத்திரன் ஸ்ரீநிவாச
பாத்திரன் ஜார்ஜ்நார்ட்டன் தோத்திர மிகுந்தபௌவல்
சூத்திர கார்டனுடன் கோத்திர மெம்பர்களும்
ஆத்திர மின்றியுகந்து சாத்திர பரீட்சைசெய்து

சில மிதுவென நாலு திசைகளில்
கோல மிருகதிர் வேலன் மகிழ்வுற— பச்சை.

பதம்.

இராகம், செஞ்சுருட்டி, ஆதிதாளம்.

ஸ்ரீகாஞ்சி புரிவாழும் பச்சையப்ப சிரோமணியே
வாகாய் நலம்புரியும் சத்தியநித்திய வரோதயனே

வானமதித்திடு வாகையுளானே
தேனுமதித்திடு மீகையுளானே
வண்கொண்டண் டங்கெஞ்சும்
பொன்குன்றின் பண்புந்தங்கிய— ஸ்ரீகாஞ்சி.

பூமனே யுனக்குநிகர் பூதல மீதினிலேதுரையே
பூஜித சிவகைலாச பூதரமீதுறை மாதுரையே
காமனே காமனுக்குறும் கற்பகமொப்பிடு காதலனே
கலக்கத்தாமதி ராசுபெம்பாய் கவர்னரும் புகழ்பிரபலனே

கடாக்ஷிதந்திடு கண்மணியே
சாக்ஷியாய்புல வர்க்கணியே
கண்டெங்கும் சென்றஞ்சங்
தண்கொண்டுங் கண்டிஞ்சுஞ்செய— ஸ்ரீகாஞ்சி.

திருவரங்கம் பெரியகோயில் ஜம்புகேஸ்வர மாமதுரை
திருவண்ணாமலை யல்லிக்கேணி தில்லைமுல்லை வாயில்சுரர்
கருதும்பஞ்ச நதமாரூர் காழியும் ராமேசுரமுங்
காஞ்சிமாநகர் தஞ்சையாபுரி கடலொற்றிப்பதி முதனலமுங்

காணத்தரும நாடத்துமனே
சேணிற்பரவு புண்யாத்துமனே
கஞ்சந்தங்கும் பெண்டன்
றங்கங்கொண் டங்கம்பெருகிய— ஸ்ரீகாஞ்சி.

தர்மதேவ தாவதாரம் தானெனச்சொல வந்தவனே
சைவசமய துரந்தரனே சுபசாம்பிரதாய முவந்தவனே
தருணலார்ட் டெலிபநிஸ்டோன் சாற்றியகீர்த்தி துரந்தரனே
தழைக்கும் அட்வோகேட்ஜனரல் சாற்றுநார்ட்டன் சொற்றிரனே

சற்கதிர்வேலன் துதித்தனனே
பற்குணனேரெழில் விற்பனனே
சந்தங்கொஞ் சின்பந்தன்
சம்பின்றன் றென்பும்பெருகிய— ஸ்ரீகாஞ்சி.

சிந்து.

இராகம், புன்னாகவராளி, ஆதிதாளம்.

பிரபுடீகங்கேளீர்—பச்சையப் பேந்திரன்
பிரபுடீகங்கேளீர்.

திரமுல வியசைவ சமயசத் பாத்திரன்
திவ்ய மகிமைநிறை திருக்காஞ்சி புரக்ஷேத்திரன்
வரசிவ கணத்திலோ ருருவாய்வந்த சுகோத்திரன்
மகுடபதிகள் மெச்சுஞ் சுகிர்த கிர்பாநேத்திரன்

மணிமந்திர வாளன்—மேருசமான
திணிகொண்ட தோளன்—தீனதயாள்

வரதன் மிர்துவசன சுரதன் துஜமிலங்கு
மிரதன் விஜயசத்திய விரதன் பிரபலமிகும்— பிரபு.

சுவர்க்காதி புவனங்கள் முழுதும் புகழ்சிறந்தோன்
சுப்பிரதி பப்பிரகாச சுடரிற்றன்னை மறந்தோன்
சிவதர்ம பரிபால சோழனிகராப் பிறந்தோன்
திகழிந்து தேசத்தின் ஜெனர்கண்க ளொத்திறந்தோன்

தில்லைக்கோ புரமும்—அண்ணாமலை
ஜம்புகேஸ் வரமும்—திருமதுரை [பனந்தாள்

செல்ராமே சுரமும் அல்லிக்கேணி திருக்காஞ்சிபுரமும் திருப்
க்ஷேத்திரம் திருவையாற்று க்ஷேத்திரம் நற்சீகாழி
க்ஷேத்திரம் மருதூரென்னும் க்ஷேத்திரங் கும்பகோண
க்ஷேத்திரம் பஞ்சநத க்ஷேத்திரந் திருவரங்க
க்ஷேத்திரம் முல்லைவாயில் க்ஷேத்திரந் தஞ்சைநகர்

ஒற்றியூ ரிடத்துங்—கட்டளை தர்மம்
வெற்றியா நடத்தும்—மனுவிக்கியானன்

ஊரும் சத்திரதடாகம் தேருந் திருப்பணியு
நெரும்படி முடித்துப் பேரும் பிரக்காதியுஞ்சேர்— பிரபு.

சத்தியயாதவ கோத்திரன் கோமளீசுர நாடன்
தழைக்கு முனியப்பசங் கிராமனருள் விசேடன்
சுத்த சிவாஜிமஹா ராஜன்புகழ் கர்நாடன்
ஜொலிக்கும் ரத்நவைடூரியஞ் சிறந்த சொர்னகிரீடன்

சுதர்ம சொரூபன்—இந்துகளுக்கோர்
சூரியப் பிரதாபன்—ஜகத்சக்ரேசன்

கதிர்கொள் சலாபன்யூநி வர்சிட்டி கவர்னர்டிலியன்
கவர்ன்மெண்டு காட்டன்ஹான ரேபில்நார்ட்டன் வாட்டர்
யெல்லியாட்டன் பிலிட்டேறி லாங்குபாட்டன் காம்பிர்
மக்ளீன் போர்ட்டுவிசைய சூப்பிரீங்கோர்ட்டும் அவுடுயூ
குட்ஜெண்டில் மேனென்று லார்டும்ஷேக் காண்டுசெய்ய

வரகிர்பை பகர்வான்—ருக்மணிமனோ
கரன்றனை நிகர்வான்—கோஸ்ரீநிவாசு

மஹாராஜ போஜனை ஜகதலந் தனிலுள்ள
நகமுகமுமதிக்க மகிமைப்பிரசி டெண்டாக்கும்— பிரபு.

ஹானரிண்டர் பிரிட்டர் நரசிங்கருயர் யோகன்
அதிமேஜ ஸ்திரேட்டென்னுஞ் சோமசுந்தர நிர்வாகன்
தானதர்ம வேங்கிட பதியாம் வித்வசமோகன்
தருண மறிந்துதவும் அருணகிரி விவேகன்

சந்தத நேமன்—வேங்கடாசல
சம்பிரம சோமன்—ராஜரத்தின.

ஐந்தருகாமன்சுக் தராராமா நுஜபீமன் வீராசாமி
அத்த னுடனேதிட சித்தமுள்ள வொன்பது
சுத்த மெம்பர்களை நித்தந் தருமஞ்செய்ய
வைத்த மஹானுபாவன் கத்தனெனி பெனிஸ்டோன்
மெத்த புகழுவொரு மித்த யிங்கிலாண்டு

குயின் விக்டோரி—ருணிசெங்கோல்
செலுத்தும் விக்கிரமத்—திராணியுடையநாளில்

மேலன்புடனே கல்விச் சாலைக ளமைத்தனு
கூலமுடனே கதிர் வேலன் கவிக்குதவும்—

பிரபுடீகங்கேளீர்—பச்சையப்பேந்திரன்
பிரபுடீகங்கேளீர்.

அறுபத்துநான்கடிச்சிந்து.

இராகம் - நாதநாமக்கிரியை - ஆதி - தாளம்.

பல்லவி.

பச்சையப்ப பூபதிசெய் யுச்சித தருமங்களைக் கேளீர்
காஞ்சி நகர்வாழ்
பச்சையப்ப பூபதிசெய் யுச்சித தருமங்களைக் கேளீர்.

அனுபல்லவி.

செச்சையணியுபய புஜாசலபூபன்
செங்குவளைபுனையுந் திவ்வியசொரூபன்
மெச்சியநடேசரடி துதிசெய்சலாபன்
மிகுசிவகணத்திலோ ருருவாய்வரும்பிரதாபன்— பச்சை.

சரணங்கள்.

தண்டாமரை வதனமோகன்—பிரீடீஷ்கவர்ன்
மெண்டார்புகழ்ந்திடும் விவேகன்—சந்திரசடிலர்
தொண்டாக நாடுசிவயோகன்—பகைவர்முடி
செண்டாடவாள்தொடு நிர்வாகன்—கிருபாசமுத்திரன்
மேதையர்யாவரு மோதிய நீதகுபேரன்—சோடசகோண
பூதலமீதினி லுவலர் நாடுமுதாரன்—எதிர்நிருபர்
பாதலமேவ வதோகதி செய்திடுசூரன்—ஜகன்மோகன
சாதனவிங்கித மாமதனுன வஜீரன்—மேழிக்கேதனன்
நகைசெறி யரிவையர் நயமிகு வளர்தொண்டை நாடன்
மகானுபாவன்
தகதகவென நவமணி பரவியசு கிரீடன்—சதாநிதமும்

சுகபாரி மளமண மருவிய மரகதமீடன்—ஜயகர்நாடன்
விகசித சததள மலர்மகள் வளர்கொலுகூடன்—
சிதம்பரத்திற்
சித்திரமிகும் விசித்திர கோபுரங் கட்டுவித்த நிதானன்—
சிவகங்கையில்
உத்தமமிருந்த சுப்ரவிப்ரர் குலமகிழ் நித்தியஸ்நானன்—
நற்சமுஸ்தானன்
முத்தியுலகிற் புகுந்து முற்றுநுகர் புத்தமிர்தபானன்—
சோழனைப்போல
இத்தரைதனிற் பிறங்கும் இந்துஜனர்மீதி லபிமானன்—
மேருசமானன்

திதியினில் வருபவர் களுக்கனுகூலன்
செந்தமிழ் மாலைபுனை மார்பின் விசாலன்
பதியில் சகலகலை களையுணர் சீலன்
பாரும் பாரும் பலஸ்தல பரிபாலன்— பச்சை.

ஆரூர்க்குத் தேர்சமைத்த நாதன்—கும்பகோணத்தில்
திரையார் குளமமைத்த போதன்—மதுரைராமே
சுரமாரூர் தஞ்சைநகர்க்கு நீதன்—தென்றிசையிடை
மருதூரு நீடச்செய் விநோதன்—ஜம்புகேஸ்வரம்
அல்லிக்கேணி யரங்கமோ டொற்றியூர்தலமும்—
சுப்பம்மாள் சத்திரம்
செல்வத்திருமுல்லை வாயிலுங் காஞ்சிநனிலமும்—
சொற்சோலைமலை
நல்லதிருப் பனந்தாளுயர் பஞ்சநதம் வலமும்—மிகவிளங்கும்
வில்வத்திரு வையாறுன்னும் பற்பலசலமும்—சீகாழியூரும்
திருவண்ணமலைமுதல் ஸ்தலம்முழுவது முற்றுநாடி—
ஆலயந்தோறும்
கருதுமுபகரண வகைகளைத்துநல்கி நீடிப்—பிரபாவிநோதந்
தருபலதீபமு நிவேதனமுஞ்செய்து மகிழவாடிக்—கற்பூரதீபம்
பிரதிதினமுந்திரி காலமுங் கொடுத்துக் கதிகூடிச்—
சதாவிர்த்திகள்
சித்தத்தில் மதித்துப் பலவுத்தமர்க் களித்தருளுநேசன்—
நித்தியகட்டளை
புத்தியிற் செழிக்கஎட்டு லக்ஷத்தை யளித்திடுமுலாசன்—
துரைகள்மெச்சச்
சத்தியமோ டனந்தங்கோடி பொற்பொதி கொணர்ந்திடுநேசன்—
தினதயாளன்

மத்தகத் தனத்தியர்கள் சித்திர மடலெழுதும் விலாசன்—
அதிநிபுணன்

கபட மனதி லறியாத பிரசித்தன்
கல்விச் சாலைதனை யமைத்திடுஞ் சுத்தன்
அபயமென வருகிற வர்க்கரு ணித்தன்
ஆர்க்குங் கல்விக்கண்கள் கொடுத்திடுங் கர்த்தன்— பச்சை.

சுந்தரமிகும் யாதவகோத்ரன்—நற்சப்தகோடி
மந்திர கோமளேசுர க்ஷேத்திரன்—முனியப்பேந்திரன்

மைந்தனென வொளிருஞ் சத்பாத்திரன்—இந்து ஜனர்க்கோர்
சந்திரனாகிய கிருபாநேத்திரன்—இங்கிலாண்டிலுள்ள

ராஜராஜர்புகழ் போஜராஜ பிரபுடகன்—பிரசிடெண்டென்று
மீசுரமான சுபாஷித நயவனுபோகன்—எலிபெனிஸ்டோன்

நேசமதாய் விஷ்ணுவென வோதியயோகன்—தஞ்சைநகரில்
வாசராஜனிட மேகிவிருது பெறுவாகன்—கோஸ்ரீநிவாச

நரபதியுடன்மணி நகரினிலிசை புகழ்பூபன்—
மேஜிஸ்டிரேட்டாகி
வருமனுநெறி சோமசுந்தரப பிரக்கியாத சங்கிராமன்—
ஸுப்பிரிங்கோர்ட்டில்
நரசிங்கராயரென வருமிண்டர் பிரீடரென்னு நேமன்—
குளோதிங்குபோர்டின்
கருணைபுரி யருணகிரி துரையாம் வதனசோமன்—
கம்சேரியாபீஸ்

முற்றும்புகழ் வேங்கடபதிப் பிரதாபவற்புத விற்பன்னன்—
கோஸ்தாவர்த்தக
வெற்றி திருக்காமியொடு பாங்கிவெங்கடாசல சம்பன்னன்—
போர்ட்டார்கொண்டாடி

நத்துசுந்தர ராமானுஜநீரன் விக்கிரமகுப் பென்னுங்கன்னன்—
முதலானோரை
கற்றருமகாரிய விசாரணையில் முயலச்செய் தென்னன்—
மித்திரனென்றிந்த

நாட்டவர் கட்கிசை வாம்விபகாரன்
நல்லவர் சபைதனி லுறுமதிகாரன்
காட்டனார்ட்டன் துரைமார் மெச்சும்வீரன்
கவிகதிர் வேலனிதம் புகழுபகாரன்—
பச்சையப்ப பூபதிசெய் யுச்சிததருமங்களைக் கேளீர்
காஞ்சிநகர்வாழ்— பச்சை.

அஷ்டாவதானம்

வி. வீராசாமி செட்டியார் பாடியது.

பதம்.

இராகம், தோடி, அடதாளம்.

பல்லவி.

பச்சையப்பனைப் பாடும் பாக்யம்—பெறும்
பாவலர்க்கே வருஞ் சிலாக்யம்.

அனுபல்லவி.

நச்சகமும் புகழும் கச்சிப்பதி வாழ்சீலன்
நற்றமிழுந் தெரிந்த வித்தகர்க் கனுகூலன்
நச்சரவுக் கிணையாஞ் சத்துரு குலகாலன்
நம்புமவரைக் காக்குஞ் சம்பிரமஞ் சேர்விசாலன்

நலம்பெற்றக - ஊடங்குர்ச்சரம்
நெடும்பப்பரம் - விளங்கொட்டியம்
நவிலுமகதந - விடதமொடுவெகு
திசையிலரசுசெய் - நிருபர்புகழ்பவன்
நதியெனப்பெரு கருள்குலாவிய
மதிமுகத்திரு வழகுமேவிய— பச்சை.

சரணங்கள்.

தனியே மலையும்பெரு வனமுந் திரைகடலுந்
தாண்டி வாயுவேகமா யோடிச் சென்று
சக்கரம்போலே யெங்குஞ் சுற்றிக்கா லோய்ந்துளஞ்
சலிக்கத்திரிந் துடலம் வாடி
அநியாய மிதுவென்று நினையாம லெளியோர்க
ளனைவ ரிடத்திலும் வாதாடி
அஞ்சாம லவர்களை வஞ்சித் தநேககோடிக்
கதிகமாகவும் பொருள் தேடி

மனைநடு விற்புதைத்து வைத்துத்தாமு முண்ணாமல்
வறுமை யடைந்தவர்க்குச் சிறிதும் தானம்பண்ணாமல்
தனையர் பெண்டீர்களுக்குந் தரவேணு மென்றெண்ணாமல்
தனங்காத் திருக்கும்பேய்கள் தலைவாசலை நண்ணாமல்

தரங்கக்கடல்—புறஞ்சுற்றிய
பிரபஞ்சத்தினி—லுறும்பற்பலர்
தமதுமிடிகெட—அமரர்தருவொடு
பதுமநிதியொரு—வடிவுகொடுவரு

தகைபெனத்திகழ் தனகுபேரனை
முகைவிரித்தளி மருவுதாரனைப்— பச்சை.

அதர்மஞ் செயுமகா பாதகனைத் தர்மப்ரபு
வாமென்றுங் கனவிலுஞ் சாஸ்திரம் படித்
தறியாத மூடனை வித்யாசமுத்ர மென்று
மாருக்கு மோரணு மாத்ரம்
உதவும்படி நினையாப் பரமலுத் தனைக்கர்ண
னுதாரனீத்தா னென்றும் க்ஷாத்திரங் கொண்டே
ஊர்க்குட் சண்டைசெய்யு மூர்க்கனைச் சாதுவா
முத்தம னென்றும்பாத்ரா பாத்ரம்

எதுவு மறியாதுழல் பவனை வெறிகொளுமன்
என்னுமல் மநுவம்சத் தினிலுதித் தருள்ராமன்
பதமுடன் புலவர்கள் பகரன்ன தானச்சோமன்
படைகையிற் கொடுவெல்லுந் திடகாத்ரனும் வீமன்

பசும்பொற்சிமி—ழையுஞ்செப்பையு
மிகழ்ந்திட்டடி—பரந்தொப்பறு
பருவமுலையினர்—மயல்கொளசிலைமத
னைவுமொழியினு—மதிலொர்பயனிலை

பவளமொத்திடு மமுதவாயனைத்
தவளமெய்ப்பரி நடவுதூயனைப்— பச்சை.

துங்கமிகு சுந்தர மூர்த்திக்குப் பரவைபால்
தூதுபோய்ச் சிவந்திட்ட பாதர் காளி
தோற்க ஆலங்காட்டி லன்று காலைமேலே
தூக்கிக் கொண்டுபுரி வாதர்
பொங்கு மறையிற்புலித் தோலுடை தரித்தவர்
புனையுஞ் சங்கக்குழைக் காதர்நற்
புலிபதஞ் சலிகாண நடனஞ்செய் துயர்பை
பொழிறில்லைச் சிதம்பர நாதர்

கங்கை முடியர்சிவ காமிவா ழிடப்பாகர்
கல்லால நீழலிற் காணும் ஞானயோகர்
அங்கையில் மான்மழு வேந்து மானூர்த்தியாகர்
அருவுரு வாயொளி ரமலயாம் வைகிபாகர்

அடங்கத்திசை—நடுங்கக்கனை
முழங்கித்திரி—புரஞ்சுட்டவர்
அடியர்தமதுள—நளினமுறைபவர்
அனகர்மீதிரகி—யனலின்விழியினர்

அறுகொடக்கணி பரமர்தாள்பணி
மறுவில்பக்தப்ர பலசிரோமணிப்— பச்சை.

சக்ரேஸ்வரர்கள் மெய்ச்சுஞ் சிநிவாச குண
சார்வ பௌமனுங் கோமானும் ஞான
சாரந்தெளிந்து சத்யந் தவறுச் சோமசுந்தர
தர்மதுரை யாங்கன வானும்
தக்கவர்க் கினியனும் ப்ரபனன் வேங்கடபதி
சாம்ப்ர தாயனும் புவியும்வானும் சொல்லுந்
தன்யன் வீராசுவாமி வேளும் ராஜரத்ன
சாஸ்த்ர நிபுணனுஞ் சீமானும்

சற்குணன் சுந்தர ராமாநுஜ தீரனும்
தருணத் துதவும்போஜ னருணகிரி மாரனும்
முக்யன் பாங்கிவேங்க டாசல வீரனும்
முதல்வனும் ஸ்ரீராமா நுஜகாம் பீரனும்

முனைந்தச்சுதன்—அரன்பொற்பதி
தொறுங்கட்டளை—வழங்குற்சவம்
முழுதுமெளியவர்—சிறுவர்பலகலை
யறியும்வகைநிகழ்—தருமம்நிலைபெற

முறைநடாத்திட வுசிதகேசரி
இறைவனூர்ட்டனு முதவவேபுரி— பச்சை.

தஞ்சைமாநகரம்.

ஸ்ரீராம கவிராயர் பாடியது.

பதம்.

இராகம், தோடி, ஆதிதாளம்.

பல்லவி.

மகாபிரபல கனவா னிவர்தானையா
மகத்வ மிகுத்த ஜெகத்தில் கதித்த— மகா.

அநுபல்லவி.

சுகானு பவநிலை முழுமையுங் கண்ட
துகையிலாத மூட குறவினை விண்ட
அகவிரு ளினையொழித் திடுமாப்ர சண்ட
அற்புதப்பச்சையப்பனென் றுர்சிதப் பேர்கொண்ட—மகா

சரணங்கள்.

மண்டலத்திலுள புலவரெனும் பயிர்கள்
வாடி யுலர்ந்திடாமல்
மிகவருடாந்தரங்களிற் புகழ்பாவினஞ் சொலும்
வரிசை யறுகெடாமல்
உண்டானபடியே யொன்பது மெம்பர்கள்
தமதுறுதி யறுவிடாமல்
மனதூக்கமுற்று தேவாலய தருமங்க
ளொன்றுந் தடைபடாமல்
பண்டேதா னிருமித்தபடி செழிக்க
பரிவாயதின்வழியிற் சென்னைப் பவமொழிக்க
உண்டோ விவர்க்கிணை யுலகிற்
பொன் வாரியில்
உண்டுச்சொரியு மேகம்போற் கொண்டுச்
சொரியுஞ் சுதேக— மகா.

அளவிலாத நிதிதனில் குபேரனையு
மதிகதனத னாக்கினான்
பின்னையுந்தமிழிலாதி சேடனைப் பழித்தேயதில்
விஷவுண வாக்கினான்
களவிலாமல்தரும் கொடையாற் கர்னனையுங்
கதிக்கக்கன னாக்கினான்
எழிற்காட்டுமிருந்த சிங்காரத்தில் மதனையுங்
கடிந்தோனாரங்க னாக்கினான்.
இளமதி நுதல்விழி மடவார்கள்மயல்
கொளுமேமந்தல் கச்சி
நகர்க்கிசைந்தமா தவன்போலும் பிறந்துச்சிறந்து
விறந்தாலுமினி யிப்படி
பொருள் படைப்பாருமில்லை அருள்
படைப்பாரு மில்லை— மகா.

தேடரிதாம் பொன்னை யுலகிலனந்தவிதத்
திறமையுடனே படைத்து
தாஞ்செலவழிக் காமலே யுறுத்ததினத்திலதை
திருடர்கையினில் கொடுத்து
நாடிதருமஞ்செயும் பிரபுக்களைக் காணில்வெறி
நாய்போலே குலைத்து
பொன்னல் காவிடினுங்கொடுப் போரிடத்தில்றழை
நரிபோலிருந்து வலைத்து

பாடுங்கவிவாணர்க்குக் கொடுப்பதி லென்னபுகழ்
பகருமென்று கேழ்க்கும்
பாரோர்க் கெலாமகிழ் கூடவிசைந்தோதும்
ஸ்ரீராமன்சொல்லுக் குகந்த
கொற்றவச் சீனிவாசனே பச்சையப்ப
னாகி வந்த— மகா.

பதம்.

இராகம், தந்நியாசி, ஆதிதாளம்.

பல்லவி.

பச்சையப்பன்செய்பு முச்சித தருமம்போற்
பாரிலெங்கு முளதோ.

அனுபல்லவி.

முச்சகத் தோர்துதித் திடுங்கச்சி யார்ந்தே
மூதறிவோர் சொல்லு முறையினை யோர்ந்தே
அச்சுத னடியிணைக் கேயன்பு கூர்ந்தே
அவனியில் புகழுறு நிலையெனத் தேர்ந்தே— பச்சை.

சரணங்கள்.

கவலை கொண்டு வீணுட்கழி—யாமலே
கனதர்ம மார்க்கமோ கூத்தையழி—யாமலே
பவவினை யினில்விழுந் தேவிழி—யாமலே
பயன்படா தீமைதனைப் பலர்பழி யாமலே— பச்சை.

எங்கு முள்ளபுல வர்க்கிதங்—காட்டி
இதோதரு கிறேன்பொரு ளெனத்துச—நாட்டிப்
பங்கமி லாதமுத் தமிழ்ப்பு—னூட்டிப்
பாவலர் தமையொரு மிக்கவாக் கூட்டிப்— பச்சை.

ஆதியில் நிருமித்த முதலெனும்—பண்டு
அழிந்தி டாவகை தெரிந்துளங்—கொண்டு
ஓதுஞ் சீராமன்சொற் றமிழ்ச்சுவை—யுண்டு
உலகினி லெவர்களு மதித்திடக் கண்டு— பச்சை.

உ

திருநெல்வேலிஜில்லா
எட்டயபுரம் சமஸ்தான வித்வான்,
திருமயிலை-வி. சுந்தரமுதலியார் பாடியது.

மங்களம்.

இராகம், நாதநாமக்கிரியை, ஆதிதாளம்.

பல்லவி.

பச்சையப்பபூபதிக்கு ஜெயமங்களம் - தர்மபரி
பாலனசபையார்க்குச் சுபமங்களம்.

சரணங்கள்.

இச்சகத்தோர்கண்டுமிக - மெச்சுமூபார்கல்விச்சாலை
உச்சிதசிதம்பரத்தில் - கச்சிப்பதியில்வைத்த— பச்சை.

பவத்தையொழிக்குமுனம் - அவத்தைமறந்துசதா
சிவத்தைபணிந்துதர்மம் - தவத்தைப்புரியவந்த— பச்சை.

ஆஞ்சியில்லாமற்றிரு - வாஞ்சியந்தனிலரன்
பூஞ்சரணந்தொழக் - காஞ்சிப்பதியில்வந்த— பச்சை.

புண்ணியத்தலமெங்கும் - பண்ணும்பலதருமத்தால்
எண்ணியபலனெய்த - மண்ணிலுருவாய்வந்த— பச்சை.

குறையாமற்சதாவிர்த்தி - மறையவர்க்கக்ராரம்
முறையாய்த்தம்பதிபூசை - நிறையாகச்செய்துவரும்— பச்சை.

நிதமுங்கட்டளைவிழா - விதமாயாபரணந்தேர்
இதமாய்க்கோபுரஞ்சிதம் - பரமாந்தலத்திற்செயும்— பச்சை.

இந்துசனசமூகத்தார் - மைந்தருக்குச்சென்னையிலும்
சொந்தக்கலாசாலைவைத்து - விந்தைசபாமண்டபஞ்செய்—பச்சை.

பச்சையப்பபூபதிக்கு ஜெயமங்களம் - தர்மபரி
பாலனசபையார்க்குச் சுபமங்களம்.

ஷை வித்வான்,

திருமயிலை-வி. சுந்தரமுதலியார் பாடியது.

வாழ்த்து - விருத்தம்.

பச்சையப்ப னற்புகழைப் பரவச் செய்யும்
பதிகோம ளீசுரன்பேட் டைக்கதிப னிங்கு
பெடச்சுகன வான்சீனி வாசதுரை யன்பு
மிகக்கலா சாலைமதி மேவுதிருச் சபையும்
உச்சிதசற் குணஜார்ஜ் நார்ட்டனுடன் கூடி
உயிலின்வழி கவரன்மெண்ட் டாருவகை யாக
இச்சையுறத் தாபனஞ்செய் யிருவர்குலம் வாழி
இனியதமிழ்க் கவிவாண ரிசையுநிதம் வாழி.

இதுவுமது.

தருமகுண தயாநிதியாந் தனதன் காஞ்சித்
தலப்பச்சை யப்பன்சிர் தழைத்து வாழி
அருமைபெறு மவன்கல்விச் சாலை யெங்கும்
அமர்ந்துகலை கற்குமா ணவரும் வாழி
ஒருமைமிகும் பிரின்சிபல் லுபாத்தி யாயர்
ஒன்பதின்ம ராஞ்சபையா ருலகில் வாழி
பெருமைசெறி தனிகளற்பே ரறங்க ளோங்கிப்
பிரபலமா யெஞ்ஞான்றும் பிறங்க வாழி.

தமிழ்ப்பாக்கள்

முற்றிற்று.

59322

72

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1